வளர்தமிழ்

# உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்

தமிழண்ணல்

EyeCatcher

வளர்தமிழ்

# உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்

தமிழண்ணல்

<u>விற்பனை உரிமை</u>

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.
தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517
ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

புதிய முதற் பதிப்பு : திவ.ஆண்டு 2039. ஆகஸ்டு, 2008

உரிமை ஆசிரியர்க்கு

விலை : ரூ.80.00

## நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்** |
| ஆசிரியர் | : | தமிழண்ணல் |
| நூலின் தன்மை | : | நடைமுறை இலக்கணம் |
| முதற் பதிப்பு | : | ஆகஸ்டு, 2008 |
| விலை | : | ரூ. 80.00 |
| பக்கங்கள் | : | 216 |
| எழுத்து | : | 11 புள்ளிகள் |
| நூல் அளவு | : | டெம்மி |
| நூல் கட்டுமாளம் | : | அட்டைக் கட்டு |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| ஒளி அச்சு | : | ஆதவன் பிரிண்டர்ஸ் |
| அச்சிட்டோர் | : | மோனார்க் கிராபிக்ஸ், சென்னை. |

**SELLING RIGHTS**

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.

☎ Off : 2345971 Resi : 2560517

E-Mail: meenakshiputhakam@hotmail.com

# நன்றியுரை

புகழ் பெற்ற தமிழ் நாளிதழாகிய '*தினமணி*' யில் வளர் தமிழ்ப் பகுதியில் 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற தலைப்பில் தொடர்ந்து எழுத வாய்ப்பளித்த 'தினமணி' நிறுவனத்திற்கு என் நன்றி உரியதாகும். குறிப்பாக இன்றைய மறுமலர்ச்சிக்கு ஏற்பத் 'தினமணியை' நடை பயில வைத்துத் தமிழ் வளர்ச்சிக்கு வழி வகுத்த அதன் ஆசிரியர் அறிஞர் **ஐராவதம் மகாதேவன்** அவர்களுக்கு என் நன்றிக் கடப்பாடு பெரிது. அன்னார் இந்திய ஆட்சிப் பணியில் சிறப்புறப் பணியாற்றிய திறமை மிக்க நிருவாகி; தொல்பொருளாய்விலும் கல் வெட்டியலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்; வடமொழியிலும் புலமை சான்றவர்; தொலைநோக்கும் பெருந்தகைமையும் பொருந்தியவர். இன்று தமிழ் இதழியல் துறையிலேயே அவர் ஒரு புதிய மாற்றத்தை, விளைவை ஏற்படுத்தினார். அவர் 'தினமணி' வாயிலாகத் தமிழுக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன. அன்னார்க்கு யான் என் நெஞ்சார்ந்த நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன். இதில் என்னுடன் சேர்ந்து தமிழ் கூறும் நல்லுலகமும் பெருமிதம் அடையலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக என் மொழிச் சிந்தனைகளைப் படித்துக் கலந்துரையாடியும், மறுத்தும் போற்றியும் இந்நூலைப் பாடமாக வைத்தும் என்னை ஊக்குவித்து வரும் அனைவருக்கும் என் நன்றி என்றென்றும் உரியதாகும்..

- தமிழண்ணல்

# உள்ளுறை

## இயல்பகுப்பும் உட்தலைப்புகளும்


**1. அடிப்படைத்தமிழ் – பொது அறிமுகம் 1-19**

1.தமிழ் இனிமை 2. தமிழ் எழுத்துக்கள் 3. தனி நிற்கும் எழுத்து 4. சார்பெழுத்து 5. பொருள் அடிப்படை எழுத்து 6. சொல் உருவாகும் விதம் 7. தமிழ்ச்சொல் வகை 8. புணர்மொழிகள் 9.தொடர் வகை 10. பகுபதம் 11. சொல்லாக்கம் 12. திணை பால் எண் இடம் 13. பெயர்ச்சொல் 14 வினைச்சொல் 15. இடைச்சொல் 16.உரிச்சொல், 17.ஆகுபெயர் 18.மரபு 19. தொடர்கள் 20. இருவகை வழக்கு.

**2. சித்திரமும் கைப்பழக்கம்**
**செந்தமிழும் நாப்பழக்கம் 20-29**

**3. உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் 30-40**

1. உங்கள் பிள்ளையைப் பார்த்தீர்களா 2. அறிந்து கொள்ளுதலும் தெரிந்து கொள்ளுதலும் 3. புரிந்து கொள்ளுதல் 4.மொழியோடு நெருங்கிப் பழக வேண்டும் 5. விளையாட்டுப்போல் பயில வேண்டும் 6. பலநூற்றாண்டுகள், பல படிகள் 7.இலக்கணமும் ஆராய்ச்சியும் 8. கருத்துரையும் ஆய்வுரையும் 9. ஒவ்வொரு மொழிக்கும் பொதுப்பண்பும் தனி இயல்பும் 10. ஆங்கிலமொழியில் உச்சரிப்புப் போராட்டம் 11. அழைப்பிதழ்த் தமிழ் 12.நல்ல பெயரிடுதலும் தமிழ்த்தொண்டுதான்.

**4. சொல்லும் பொருளும் 41-51**

1. ஒருமைப்பாடும் ஒற்றுமையும் 2. அமைச்சரும் மந்திரியும் 3. வணிகரும் வாணிகமும் 4. முன்னாள் தலைவரும் முந்நாள் தலைவரும் 5. தன்னலமும் தந்நலமும் 6. எத்தனை, எத்துணை? 7.தேநீரும் தேனீரும் 8.தின்னுதல் 9. தின்னுட்டுப் போ 10. செல்வமும் உடைமையும் 11.பகர்தல் 12. குமரியும் செல்வியும் 13. கண்ணீரும் கம்பலையும் 14. எண்ணும் எழுத்தும் 15. ஒரே சொல்லுக்கு எதிரெதிரான இருபொருள் அமைதல்.

## 5. சொல்நயமும் சொற்சுவையும் 52-62

1. மட்டந்தட்டுதல் 2.பூசிமெழுகுவது எப்போது? 3.எதனையும் மழுப்பலாமா? 4. கட்டாயம் வேண்டுமா? 5. கண்டபடி தூற்றுதல் 6. மலை ஏற்று, நல்லா வை 7. கட்டவிழ்த்துவிட்ட நிலை, சரமாரி, கொட்டத்தை அடக்க வேண்டும் 9. சங்கீதம் படிக்காத இசைக்கலைஞர்கள் 10 குறுக்குச்சால் ஓட்டாதீர் 11. செலவில்லாமல் காது குத்துவது 12. கட்லோடிகளின் முன்னோடிகள் 13. ஏற்றுமதியான நாகரிகம் 14. கயிறு திரிப்பதும் நல்லதே 15. தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 6. சொல்நுட்பமும் சொல்லாய்வும் 63-97

1. மெல்ல மெல்ல 2. பதற்றம் 3. பிழைப்பு 4. தவறும் பிழையும் 5. பிழை 6. தப்பும் தவறும் 7.குறையும் குற்றமும் 8.கேடும் கெடுதியும் 9. தெளிவுச் சொல் தரும் தெளிவு 10. மூதலித்தல் 11. முகத்தலும் மோத்தலும் 12. எதற்கும் மினுக்கிட்டால்தான் நடக்கும் 13. திருவைத் தேடுவோமா? 14. நனவும் நினைவும் 15.நினைவும் நினைப்பும் 16.சாவடிக்குச் சீட்டுக் கேட்கலாமா. 17. விளம்பரம் 18. ஒக்கிடுதல் 19. கோளாறு 20. கூடையும் மூடையும் 21. குட்டு வெளிப்படுகிறது 22. துப்பு துலக்கப்படுகிறது 23. புலன் விசாரிக்கப்படுகிறது 24.போக்கற்றவனும் வக்கற்றவனும் 25. உள்ளத்தைக் கவரும் உறவுப் பெயர்கள் 26.மருமகளும் மருமகனும் 27.உங்களுக்கு வயது என்ன? 28. தலையும் தலாவும் 29. தேர்-தேர்வு - தேர்தல் மூன்று படி நிலைகள் 30. தேறிய தேங்காய் 31. தேறினான்.

## 7. நல்லதமிழில் எழுதுவோம் 98-116

1. அருகில் புகுந்த ஆமை 2. மிகைத்திருத்தம் - நூல்கள், பொருள்கள் 3.பிழை திருத்தம் 4. நாட்கள், நாள்கள் 5. வளமோடு, வளமுடன் 6. சிலவும் செலவும் 7. முயல்வோம் - முயற்சிக்கல் ஏன்? 8. தவறுக்கு மேல் தவறு 9. காஞ்சிபுரம் வாழ்க 10.நாகரிகமா, நாகரீகமா?- காந்தியம், தேசியம் 11.செல்வரும் தனவந்தரும் 12.வாய்பாடும் வாய்ப்பாடும் 13. யாதும் ஊரே யாவரும் கேளிர் 14. மரியாதைப் பன்மை கேட்கும் ஆறுகள் 15. அடையாறு - அடையார் 16. தமிழக அரசும் தமிழ்நாட்டரசும் 17.நினைவு கூர்தல் நல்லது; நினைவு கூறவேண்டியதில்லை 18.தடைபடாமல் தமிழ்வளர...

19.திருவளர்செல்வி 20. புனைபெயரா, புனைப்பெயரா? 21.கழிவறையா, கழிப்பறையா. 22. ஆத்திசூடி 23.அங்கயற்கண்ணிதான் காக்க வேண்டும் 24. மனதிலா மனத்திலா 25. பேருந்தா? பேரூந்தா? 26. மேன்மேலும்

8. இதுவா, அதுவா – ஐயமும் தெளிவும் 117-129

1. பழனியா, பழநியா? 2. சுவரில், சுவற்றில்? 3.சீயக்காய் சீகைக்காய் 4.வெந்நீரா, வென்னீரா? 5.ஆர்க்காடு, ஆற்காடு அன்று 6. நம்மைப் பொறுத்தவரை எது சரி 7. ஒருகால், ஒருக்கால்? 8.சிவப்பா சிகப்பா? - சிவப்பும் செக்கரும் - கருப்பா, கறுப்பா? 9. கோவையும் கோர்வையும், 10. நடத்துநர், நடத்துனர் 11. வேளாங்கன்னியா, வேளாங்கண்ணியா? 12. கம்பராமாயணமா, கம்பனிராமாயணமா, 13. கூருகெட்டவனா, கூறுகெட்டவனா, 14. என்பதன், என்பதின் - எது சரி? 15.அன்றியும் இன்றியும் 16. சிலை திறப்பா, சிலைத்திறப்பா?

9. சொல்லை ஆளும் திறன் 130-136

1. ஆகிய, முதலிய 2 என், என்றும், எனப்படும் 3. என - எண்ணிடைச்சொல் 4. என்கிற, என்னும், என்ற 5. தொல்காப்பியர் காட்டும் வழி 6. என்று, என்ற 7.என்பது, என்பவர் 8 வாசிப்பவர் வள்ளிநாயகம் 9. உள்ளிட்ட, உள்பட

10. மணிமிடை பவளம் 137-159

தமிழில் பிறமொழிச் சொற்கள்

1.பிறமொழிச் சொற்கலப்பு 2.பண்பாட்டுக் கலப்பும் சொற்கலப்பும் 3.சமஸ்கிருதமும் வடமொழியும் 4.மாற்றங்களே நிலைபேற்றுக்கு அறிகுறி 5. மிஷனரீசும் மிசியோனாரிகளும் 6.அவசியம் அவசியமா? 7.அதிகம் தமிழில் அதிகமா? 8.தகராறில்லாத தகராறு 9. பரவாயில்லையே 10. சரளமாகப் பேசிப் பழகுங்கள் 11.தமிழே என்று தீர்மானிப்போம் 12. ஆஞ்சநேயர் ஆஞ்ஜநேயராவது அவசியமா? 13.பிரச்சனையில் ஒரு பிரச்சினை 14.ஆகட்டு, ஆகஸ்டு - எதைப் பயன்படுத்தலாம்? 15 காபியா? குளம்பியா? 16.சேரும் டேபிளும் 17.பொன்னும் பவுனும் 18.அநுபவம், அனுபவம் 19.தொந்தரவால் வந்த தொந்தரவு 20.அரசு,

அரசாங்கம் 21.வரதட்சிணை ஒழிப்பு- சித்திரிப்பு, சித்தரிப்பு 22.மிலேச்சர் 23.புத்திசாலியும் திறமைசாலியும் 24. காரன், காரி 25.பணக்காரனும் வேலைக்காரனும் 26. இனி ஒரு விதி செய்வோம் 27. நான்குபடி நிலைகள் 28. அடுத்த இரண்டு படிகள் அவசியம் தேவை 29.நான்காம்படி

**11. ஆங்கில நடைத்தாக்கம் 160-164**

1.ஆங்கிலத் தமிழும் அன்னைத் தமிழும் 2. ஆங்கிலத் தமிழ் 3. நடைக்கலப்பு 4. மொழியும் வாக்கிய அமைப்பும் 5.அறிக்கையும் அறிவிக்கையும் 6.முடிவு செய்வது நல்லதா, முடிவு எடுப்பது நல்லதா?

**12. இனிய தமிழ்மொழியின் இயல்புகள் 165-176**

1.எழுத்து என்பது என்ன? 2. பொருள் வேறுபாடும் புணர்ச்சி வேறுபாடும் 3. உயிர்மெய் அல்லன மொழி முதலாகா 4. சொல்லில் அமையும் எழுத்து நிலைகள் 5.உயிர்மெய் - வரிவடிவமும் ஒலி வடிவமும் 6. ஞ, ங எழுத்து வரிசைகள் 7. மரபும் மாற்றமும் 8.தனிநிற்கும் எழுத்தும் சொல்லிடை நிற்கும் எழுத்தும் 9. தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை 10 தமிழில் மொழிக்கு முதலில் தனிமெய் வராது 11. உயிரும் உயிர்மெய்யும் 12. தொல்காப்பியரின் தொலைநோக்கு 13. தனிமெய் எப்போது முதலாகிறது 14. டிரைவர் பெருமாளின் விடுமுறைக் கடிதம் 15. லட்டு, ரயில் என்று டமாரம் அடிக்கலாமா? 16. புதிய ஆத்தி சூடி 17. மீன்குழம்பும் ர கர, ற க்ர வேறுபாடும்.

**13. வாழ்க்கையும் இலக்கணமும் 177-181**

1.இலக்கணம் மொழிக்கா, வாழ்க்கைக்கா? 2. வேற்றுமை எவ்வாறு உணர்த்தப்படுகிறது? 3. பேருந்து நிலையத்தில் வேற்றுமை 4. பத்திரமும் வேற்றுமையும் 5. எனது மகனா? எனக்கு மகனா? 6.வேற்றுமை என்றால் என்ன? 7.எனக்கு மகன் 8. அது உருப்பும் அஃறிணையும்

**14. இலக்கணமும் பொருளுணர்ச்சியும் 182-191**

1. கைமாறும் கைம்மாறும் 2. மெய்ம்மையும் பொய்ம்மையும் 3. ஆடு ஆடு, கட்டுக்கட்டு 4. செயப்பாட்டுவினையும் செய்வினையும் 5. பிரிக்காமல் பழகிவிட்ட இடங்கள் 6.பண்புத்தொகைகள், அடைமொழிகள் 7.பிரித்து உச்சரித்தலும் இடம்விட்டு எழுதுதலும் 8:கொழுநன் தொழுது எழலாமா? 9.பிரித்துப் பழகிவிட்ட இடங்கள் 10.சேர்த்தெழுதுதல் 11.பிரித்தெழுதினால் தெளிவுபடும் இடங்கள் 12.பிரித்தெழுதுதல் 13. விளக்குமாற்றால் விளக்குவோம்.

**15. பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும் 192-200**

1.வளியும் சூறாவளியும் 2. தாவிலையா? 3. பரிதலும் புரிவியும் 4. நிரம்பவே ரொம்பி விட்டது 5. தொட்டி மகிழ்ந்ததைப் பார்த்தீர்களா? 6.புதிய வழக்கும் பழைய மரபும் 7.வாயிலும் வாசலும் 8.யாட்டு - யாண்டு - ஆண்டு 9. முப்பது - நுப்பது 10. பொருள் விளங்குவதற்கே மொழி 11. ஒரு பெரிய போராட்டம் 12.சமனிலைப்பாடு.

**16. மரபும் மாற்றமும் 201-212**

1.மரபா? அறிவா? கள் விகுதி காட்டும் வழி 2. மரபும் வளர்ச்சியும் 3. இலக்கியமா, இலக்கணமா? 4. வந்ததும் சென்றதும் 5. ஈ என இரத்தல் 6. ஒருவனும் ஒருத்தியும் ஆருயிரும் அருஞ்செல்வமும் 8. பேரணியும் பெருந்தலைவரும் - சீரணியும் சீருடையும் 9.ஓர், ஒரு 10.ஈருடல், ஓருயிர் 11.மூவுலகும் முத்தமிழும் 12. ஆங்கில மரபும் தமிழ் மரபும் 13. கருப்பஞ்சாறும் இருப்புப் பாதையும் 14.மாமல்லபுரம் - பழைய பெயரும் புதிய பெயரும் 15.திருக்கடவூர்-பழைய பெயரும் மாறிய பெயரும் 16.புல்லும் கல்லும் 17.தந்தையும் தாயும் 18.பைந்தமிழும் பல்வகைத் தமிழும் 19.துறைச் சொற்கள், கலைச்சொற்கள்.

# 1

# அடிப்படைத் தமிழ் – பொது அறிமுகம்

## 1. தமிழ் — இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்

- பிங்கலந்தை நிகண்டு

தமிழ் இனிமையானது; மென்மையானது, எளிமையானது. தமிழ்மொழி அதனால்தான் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலும் ஒரே சீராக வாழ்ந்து வருகிறது.

தமிழ் பேசுபவர்களும் நீண்டநாள் வாழ்கின்றனர். வலிந்து வயிற்றினடியிலிருந்து வருவதுபோல், முயற்சிமிகுந்து ஒலிக்கப்படுவனவும் திடீரென்று நிறுத்தும் வல்லோசைகளும் தமிழில் இல்லை.

தமிழில், ஆய்தஎழுத்து, தமிழ்ஒலிப்பை மென்மைப்படுத்துகிறது; குற்றியலுகரம் வல்லோசையை மென்மையாக்கும் முயற்சியேயாகும்.

## 2. தமிழ் எழுத்துக்கள்

தமிழ் எழுத்துக்கள் முப்பது மட்டுமே. உயிர் 12, மெய்-18. உயிரில் குறில்-5, நெடில்-7. மெய்யில் வல்லினம்-6, மெல்லினம்-6, இடையினம்-6.

## 3. தனியே நிற்கும் எழுத்து, மொழியிடையே வரும் எழுத்து

இவ்வாறு இரண்டாகப் பிரிக்கலாம். மொழியைச் சார்ந்து வந்து வெவ்வேறு வகைப்படுவதால் அவை சார்பெழுத்துக்கள் என்றும் 'பொருளடிப்படை எழுத்துக்கள்' என்றும், வகைமைப் படக் கூடியன.

ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள்தானே உள்ளன என்பர். தமிழில் கூடுதலாக 247 எழுத்துக்கள் இருப்பதாகக் கூறி மருட்சி ஏற்படுத்துவர்.

ஆங்கிலத்தில் 'A' என்பதை முதல் எழுத்து எனக்கொள்வோம். Bat -'ஆ'. Date -ஏ; that -அ. அ-தவிர்த்தவை என்ன எழுத்துக்கள் (ஆ,ஏ என ஒலிப்பன). Colonise, colonize என S, Z இரண்டும் வருவதை என்ன சொல்வது? எழுத்துப் போலி என்பதா?

அவர்கள் இவ்வாறு வரும் நுற்றுக்கணக்கான மாற்றங்களைப் பழக்கத்திற்கு விட்டுவிட்டனர். You என்பதும் வெறுமனே U என்பதும் ஒரே தன்மையில் ஒலிப்பதற்கெல்லாம் இலக்கணம் வகுக்கவில்லை. தமிழில் இம் மாற்றம் அனைத்திற்கும் பெயர் கொடுத்து இலக்கணம் வகுத்துவிட்டனர். அவ்வளவே!

உயிரும் மெய்யுமாகிய முப்பது மட்டுமே தமிழ் எழுத்துக்களாகும். மற்றவை ஆங்கிலத்திற்போல மொழியிடையே வரும் எழுத்துக்கள்.

**4. சார்பெழுத்துக்கள்**

மொழியிடையே வரும் எழுத்துக்களின் வகைகளையும் பெயர்களையும் பயன்பாட்டையும் தெரிந்து கொண்டால் தமிழின் எளிமை விளங்கும்.

**உயிர்மெய் எழுத்து :**

**உயிரும் மெய்யும் ஒலிவடிவம் — தனி எழுத்துக்கள்**

எழுத்துக்களை உயிர் என்றும் மெய் என்றும் 'உயிர்மெய்' என்றும் பெயரிட்டு வகைப்படுத்தியிருப்பது, மிக நுட்பமான இலக்கணமாகும். 'மெய்' - உடம்பு தனித்து இயங்காது; உயிருடன் சேர்ந்தே இயங்கும். உயிர் தனித்து இயங்கும்; மெய்யுடன் சேர்ந்து அதை இயக்கும்.

**உயிர்மெய் — எழுத்து வடிவம்; தனி எழுத்தன்று**

உயிர்மெய் - புதிய எழுத்தன்று. முன்பே உள்ள உயிரும் மெய்யும் சேர்ந்து, ஒரு வடிவம் பெற்றதுதான் அது. உயிர்மெய் 216 (உயிர் 12 x மெய் 18 = 216) எழுத்துக்களும் வரிவடிவங்களே. ஆங்கிலத்தில் KA, TA, VU, L - என்று கடவுள் என எழுதவேண்டும். தமிழில் க, ட, வு என்று இவை ஒவ்வோர் எழுத்தாகி விடுகிறது. அதாவது உயிரும் மெய்யும் சேர்ந்த மனிதன் ஓருருப் பெறுவது போல, 'க', 'ட' என ஒரெழுத்து வடிவம் பெற்று விடுகின்றன இவை. உயிர்மெய் வரிவடிவங்கள் தமிழுக்குக் கிடைத்த பேறு என மகிழவேண்டும். இவற்றைச் சொல்லிடையே பயன்படுத்தும் பொழுது, ஒரே எழுத்தாக எண்ணுவதும் உண்டு; இரண்டாகப் பகுத்து நினைப்பதும் உண்டு.

## அளபெடைகளும் குறுக்கங்களும்

முதல் எழுத்துக்கள் நீட்டி ஒலித்தால் - அதாவது தமக்குரிய ஒலி அளவு - மாத்திரையின் மிக்கு ஒலித்தால் அளபெடை என்றும் குறைந்து ஒலித்தால் குறுக்கம் என்றும் கூறப்பட்டன.

நீண்டொலிப்பன : உயிரளபெடை, ஒற்றளபெடை : குறுகி ஒலிப்பன : குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்பன.

ஆய்த எழுத்து, தனித்து நிற்கின்றது. அது உயிரெழுத்தும் அன்று; மெய்யெழுத்தும் அன்று. தனித்து நின்று, கசடதபற என்ற வல்லெழுத்துக்களின் வல்லோசையை மென்மைப் படுத்த வருகிறது. ஆய்தம்-உள்ளதன் நுணுக்கம் என்பது தொல்காப்பியம். அது - அஃது; எது-எஃது என வரும்; பொருள் ஒன்றே. கஃசு - காற்பலம், எஃகு - வலிய இரும்பு என இவ்வாறு சில சொற்கள் மட்டும் உள. இதுபோலக் குற்றியலிகரமும் பொருள் வேறுபடுமிடம் சில உண்டு (நாடு+யாது=நாடியாது வேறு; நாடி + யாது வேறு) காட்டு + யானை = காட்டியானை. முன்பு சேர்த்து ஒலிக்கும் போது அல்லது பாடல்களில் இவ்வாறு உகரம் திரிந்து வந்த இகரமே குற்றியலிகரம். குற்றியலுகரமும் பொருள் வேறுபடுமிடம் உண்டு. கட்டு எனப் பெயராகும் அதுவே 'கட்டு!' என ஏவவும் பயன்படலாம். பொருள் வேறு. இதனால் ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் மூன்றையும் எழுத்தாகும் தன்மையுடையன என்றனர். இவை தனி எழுத்துக்களல்ல; ஆயினும் புணர்ச்சி வேறுபாடும், பொருள் வேறுபாடும், தருமிடமும் இருப்பதால், இவற்றைத் தொல்காப்பியர் சார்பெழுத்துக்கள் என்றார்.

அளபெடைகளும் குறுக்கங்களும் ஒலிஅளவு நீட்டி ஒலிப்பனவும் குறுகி ஒலிப்பனவும் மட்டுமே; தனி எழுத்துக்கள் அல்ல. நன்னூலாரே இவற்றையும் சார்பெழுத்து என்றார்.

உயிரும் மெய்யும் மட்டுமே தனியே நின்று, வழங்கும் எழுத்துக்கள். உயிர்மெய் அவை இரண்டும் ஒருங்கிணைந்து ஒலிப்பதைக் காட்டும் வரிவடிவம். மற்றவை எல்லாம் சொற்களைச் சார்ந்து ஒலிக்கும் எழுத்துக்கள்.

எனவே தமிழ் எழுத்துக்கள் முப்பது என்பதே அடிப்படை உண்மையாகும்.

## 5. பொருளடிப்படைப் பெயர்கள்

### சுட்டெழுத்து

அ, இ, உ மூன்றும் ஒன்றைச் சுட்டிக் கூறப் பயன்படும். அது இது, உது, அப்புத்தகம், இவ்வீடு, உவ்வுலகம் (மேலுலகம்)

### வினா எழுத்து

எ, யா; ஆ, ஓ; ஏ என்பன ஒன்றைப் பற்றி வினவப் பயன்படும். எது, யாவன், அவனா, நன்றோ, ஏது.

## 6. சொல் உருவாகும் விதம்

தமிழில் ஓரெழுத்துச் சொற்கள் மிகுதி. அவை தமிழின் தொன்மையைக் காட்டுவன என்பர். வா, போ, நீ, கா, தா, ஈ என வருபவை சைகை மொழியிலிருந்து வந்தனபோல் உள்ளன. அடுத்து ஈரெழுத்துச் சொற்களும் கணக்கற்றவை. படி, நட, எடு, களை, மலை, தலை, உலா, பலா என வரும். இவற்றுள் வினை அடிச் சொற்கள் மிகுதி. மூன்றெழுத்தாலானவையும் மிகுதி. அதற்கு மேலும் பல எழுத்துக்களால் சொற்கள் உள.

இவற்றைப் பகுபதம், பகாப்பதம், எனப் பிரிப்பர். நட, படி, தலை என்றாற் போல்வன பகாப்பதம். அவற்றைப் பிரிக்க முடியாது. நடத்தை, நடப்பு, தலைமை, அறிஞன் என வருவன பல பிரிக்கக் கூடியன. அவை பகுபதம் எனப்படும்.

## 7. தமிழ்ச்சொல் வகை

அடிப்படை வகை : பெயர்ச்சொல், வினைச்சொல் அவற்றுடன் சேர்ந்து வழங்குவன இடைச்சொல், உரிச்சொல். இவை நான்குமே அடிப்படை வகைகள்.

இலக்கியத்தில் மேலே கூறியவை இயற்சொல் எனப்படும். புலவர்கள் இலக்கியத்தில் வழங்கும் சிலசொற்கள் திரிசொல் எனப்படும். திசைச்சொல் - வட்டார வழக்குச் சொல். வட சொல் - சமஸ்கிருதச் சொல்லும் பிறமொழிச்சொற்களும் தமிழில் வந்து - தமிழ் ஒலிவடிவமாகி வழங்குவன. இவ்வாறு இலக்கியத்தில் வழங்கும் சொற்களும். நான்கு வகையாகும்.

## 8. கூட்டுச் சொற்கள் / புணர் மொழிகள் / தொடர்ச்சொற்கள்

சிறு சிறு சொற்கள் கூடி, முழுமையான தொடர்ச் சொற்களாக வழங்கும் மரபு தமிழில் மிகுதி. ஆங்கிலம் முதலியவற்றில் தனித்தனியே நிற்பன, இங்கு ஏதேனும் ஒரு வகையில் இணைந்து அல்லது கூடிப் புணர்ந்து ஒன்றாகிவிடும். சொல்லிலும் அவ்வாறு; தொடரிலும் அவ்வாறே.

கல் கோயில் - கற்கோயில், தலை+முடி=தலைமுடி. நற்றாள், நாடுரி, வாணாள், பாட்டாளி, அலைகடல், மலைமுகடு, பற்பொடி, பைந்தமிழ், மாவிலை, வேலையாள், தேரோட்டி, பாலாடை என இவ்வாறு பல நூறு வகையாகச் சேர்ந்து வரும். இதனாலேயே தமிழில் 'புணர்ச்சி இலக்கணம்' என ஒன்று கூடுதலான இடம் பெறுகிறது. ஆங்கிலத்தில் Tooth Powder என இருசொல்லில் அமைவதை, தமிழில் பற்பொடி என ஒரு சொல் போல இணைத்துவிடுகின்றோம். Into the house - தனியே மூன்று சொற்களாக வெளிப்பட நிற்கின்றன. வீட்டிற்குள் எனத்தமிழில் அவை இணைந்து ஒன்றுபோல் ஆகிவிடுகின்றன.

## 9. தமிழ்த் தொடர்கள்

தொடர்கள் இரண்டு பெரும்பிரிவில் அடங்கும். ஒன்று; வேற்றுமைத் தொடர்கள். இவை பெயர், வினைகள் கூடி அமைவன. சிலையைத் திறந்தனர், மலையின்வீழ் அருவி. இவை போல் பலவகையாக விரிக்கக் கூடிய வேற்றுமைத் தொடர்களை எட்டு வேற்றுமை என அடக்கிக் காட்டுவர். எனினும் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உருபும் பயனும் தொக்கும் விரிந்தும் வரும். இவை தவிர்த்தவை அனைத்தும் அல்வழித் தொடர்கள் எனப்படும். வேற்றுமை அல்லாத வழித் தொடர்வன என்பது பொருள். அல்வழித் தொடர்கள் பதினான்கு என அடக்கிக் காட்டுவர்.

### வேற்றுமைத் தொடர்கள் எட்டு

| வேற்றுமைத் தொடர் | தொக்குநிற்பது | உருபு விரிந்து நிற்பது |
|---|---|---|
| 1. முருகன் வந்தான் | உருபு இல்லை | (அல்வழியிற் சேரும்) |
| 2. புத்தகம் தந்தான் | புத்தகம் தந்தான் | புத்தகத்தைத் தந்தான் |
| 3. அறிவு சிறந்தவன் | அறிவு சிறந்தவன் | அறிவாற் சிறந்தவன் |

| | | |
|---|---|---|
| 4. வள்ளி கணவன் | வள்ளி கணவன் | வள்ளிக்குக் கணவன் |
| 5. திருச்சி வண்டி | திருச்சி வண்டி | திருச்சியிலிருந்து வரும் வண்டி |
| 6. என் புத்தகம் | என் புத்தகம் | எனது புத்தகம் |
| 7. மதுரைக் கடை | மதுரைக் கடை | மதுரைக்கண் உள்ள கடை |
| 8. முருகா வா | உருபு இல்லை | (அல்வழி ஆகும்) |

வேற்றுமை எட்டு என்றாலும் தமக்கென உருபில்லாத முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் அல்வழியிற் சேர்க்கப்படும்.

### அல்வழித் தொடர்கள் பதினான்கு

1. முருகன் வந்தான் - எழுவாய்த் தொடர்
2. முருகா வா - விளித் தொடர்
3. வந்தான் நண்பன் - தெரிநிலை வினைமுற்றுத் தொடர்
4. நல்லவன் - குறிப்பு வினை முற்றுத் தொடர்
5. வந்த நண்பன் - பெயரெச்சத் தொடர்
6. வந்து சென்றான் - வினையெச்சத் தொடர்
7. வருகதில் - இடைச்சொல் தொடர்
8. நனி பெரிது - உரிச்சொல் தொடர்
9. நன்றுநன்று - அடுக்குத் தொடர்

(இவை ஒன்பதும் இடையில் எதுவும் தொகாத தொகாநிலைத் தொடர்கள், இனி வருவன ஐந்தும் தொகைநிலைத் தொடர்கள்)

10. ஊறுகாய் - வினைத் தொகை
11. கடுங்குளிர் - பண்புத் தொகை
12. பால் நிலா - உவமைத் தொகை
13. காய்கறி - உம்மைத் தொகை
14. பொற்றொடி - அன்மொழித்தொகை.

### 10. பகுபத உறுப்புக்கள்

தமிழின் தனிச்சிறப்பு, சொற்களின் கட்டமைப்பு. வேறு எம்

மொழியிலும் இத்துணைக் கட்டமைப்பான சொற்களைக் காண்பதரிது. ஒரு சொல்லின் உறுப்புக்கள் ஆறு : பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம். கூனன் - கூன் + அன் இரண்டே உறுப்புக்கள் உள்ளன. முதனிலையும் (பகுதி) இறுதிநிலையும் (விகுதி).

பாடினான்: பாடு + இன் + ஆன். பகுதி + இடைநிலை + விகுதி. பாடுகின்றனன்:பாடு + கின்று + அன் + அன். இதில் இறுதி நிலைக்கு முந்தியது 'சாரியை' எனப்படும். படித்தனன்: படி+த்+த்+அன்+அன். படி - முதனிலை (பகுதி) த் (சந்தி என்பர்), த்- இடைநிலை, அன் - சாரியை, அன் - இறுதிநிலை (விகுதி)

வந்தனன் - இதில் வா என்ற முதனிலை வ - எனக் குறுகியது, முதனிலை திரிந்த விகாரம். அடுத்து 'த்' சந்தி, 'ந்' என மாறியிருப்பது, சந்தி திரிந்த விகாரம். இவ்வாறு சந்தி, விகாரம், சாரியை என வருவன புணர்ச்சி விதிகளை ஒத்தனவே.

முதனிலை (பகுதி), இடைநிலை, இறுதிநிலை (விகுதி) என்பனவே, அடிப்படை உறுப்புக்கள். இவ்வாறு பெயரிலும் வினையிலும் உறுப்புக்களாகப் பிரிக்கவும் பின்பு சேர்க்கவும் முடியும். வினைச் சொல் உறுப்புக்களுக்குக் காலம் காட்டுதல் போன்ற பொருளுண்டு. இறுதி நிலைகளும் திணை, பால், எண், இடம், காட்டும்.

## 11. சொல்வாக்க மரபுகள்

மொழி முதலாக இன்ன இன்ன எழுத்துக்கள்தான் வரலாம் என்றும் இன்ன இன்னவை வரக்கூடாதென்றும் மொழியிடையே இன்ன இன்ன எழுத்துக்கள் சேர்ந்து வரும் அல்லது சேர்ந்து வராது என்றும் விதிகள் உள. சொல் இறுதியிலும் வரக்கூடிய எழுத்துக்களுக்கு வரையறை உண்டு. இவை தமிழ்ச் சொற்களை இனம் காட்டிவிடும். மொழி முதலில் தனிமெய் வராது. ப்ரியா - பிரியா ஆகும். ப்ரோகிராம் - புரோகிராம் ஆகும்.

மொழியிடையேயும் பக்தி - என்பது பத்தி ஆகும்; பாக்யா - பாக்கியம் ஆகும். சீதா - தமிழன்று; சீதை - தமிழாக மாறும். ஆனந்த் தமிழனல்லன் - ஆனந்தன் தமிழன். த்யாகம் - தமிழ் அன்று; அது தியாகம் ஆகிவிடும்.

இவ்வாறு வருவன தமிழின் இயல்பு என்பது மட்டுமன்றி, பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஆள மொழியாக்க மரபுகளாகவும் இவை உள்ளன.

## 12. திணை, பால், எண், இடம்

1. திணை - இரண்டு

மக்கள் உயர்திணை, மற்ற எல்லாம் அஃறிணை.

2. பால் - ஐந்து

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால். அஃறிணை விலங்கு, பறவைகளுக்கு ஆண், பெண் மரபு சுட்டப்படுவதில்லை. ஆனால் அவற்றிற்கும் ஆண் பெயர்கள், பெண் பெயர்கள், இளமைப் பெயர்கள் உண்டு.

3. எண் - இரண்டு

ஒருமை, பன்மை (அது, அவை அல்லது அவன், அவர்கள்)

4. இடம் - மூன்று

தன்மை, முன்னிலை, படர்க்கை. (நான், நீ, அவன்) இவை வாக்கியத்தில் இயைபுபட வர வேண்டும். அவன் வந்தான், அவள் படித்தாள், அவர்கள் கூடினார்கள், அது பறந்தது, அவை பறந்தன. நான் பார்த்தேன், நீ பார்த்தாய், அவன் பார்த்தான்.

| | | |
|---|---|---|
| அவன் படித்தான் | - | ஒருமை |
| அவர்கள் வந்தார்கள் | - | பன்மை |
| மங்கை வந்தாள் | - | பெண்பால் |
| மன்னன் வந்தான் | - | ஆண்பால் |
| அது வந்தது | - | ஒன்றன்பால் |
| மாடுகள் வந்தன | - | பலவின்பால் |

அஃறிணையில் ஆண்பால், பெண்பால் இல்லை. ஒன்றன்பால், பலவின்பால் உண்டு. (மாடு, மாடுகள்). பெரும்பாலும் வினைச் சொற்களை வைத்தே 'திணை பால் எண் இட இயைபு' உணரப்படும். வந்தான் - உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை என அறியலாம்.

## 13. பெயர்ச் சொற்கள்

ஒரு பொருளைக் குறிப்பது பெயர்ச்சொல். ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள், விரவுப் பெயர்கள்.

(பாண்டியன் வந்தான் - உயர்திணை. பாண்டியன் வந்தது - அஃறிணை (இரயில்) இருதிணைக்கும் பொதுப்பெயரே - விரவுப் பெயர்.

பெயர்ச்சொல் காலம் காட்டாது, வேற்றமை ஏற்கும். வினைச்சொல் காலம் காட்டும்; வேற்றுமை ஏற்காது.

## 14. வினைச்சொற்கள்

தெரிநிலை வினைமுற்று - காலம் காட்டும். அவன் வருகின்றான்

குறிப்பு வினைமுற்று - காலம் காட்டாது. அவன் நல்லவன்.

வந்து போனான் - வினையுடன் முடியும் வினையெச்சம்

வந்த பையன் - பெயருடன் முடியும் பெயரெச்சம்

வருதல், பாடுதல், இருக்கை, நடத்தை, வரவு, செலவு - தொழிற்பெயர். வந்தவனைக் காணோம், பழகியவனே தீங்கு செய்தான் - இவை வினையாலணையும் பெயர்கள்.

## 15. இடைச்சொல்

இது தனித்து வழங்காது. பெயர், வினைகளைச் சார்ந்து வழங்கும்.

கரடியைப் பார்த்தேன் - ஐ வேற்றுமை உருபு. இடைச்சொல்.
ஓடினான் - (ஓடு) இன், ஆன்.

இடைநிலை, இறுதி நிலை ஆகிய இவை உறுப்பு இடைச் சொற்கள்.

அன்னம் போன்ற நடை - போன்ற உவம உருபு. இடைச்சொல்.

மரத்தை - மரம் + அத்து + ஐ. இதில் அத்து சாரியை இடைச்சொல்

ஏ, ஓ, உம் போல்வன தனி இடைச் சொற்கள்.

முருகனே நல்லவன் - ஏ தேற்றேகாரம்.

நாயோ கடித்தது - ஓ வினா

காயும் கறியும் - உம் எண்ணும்மை.

பெயர், வினைகளின் பொருளை வேறுபடுத்த, இடைச் சொற்கள் உதவுகின்றன.

**16. உரிச்சொல்**

அருஞ்சொல் - அடைமொழியாய் வரும் - அடிச்சொல்லாகவும் இருக்கும் - இலக்கியத்தில் (செய்யுளில்) மிகுதியும் வரும் - நேர் பொருளைவிட நிழற்பொருளையும் தரும்.

சால நின்று - மிகவும் நன்று.

கடிமணம் - திருமணம்.

ஒரே சொல் பல பொருள் தருதல் - பல சொற்கள் ஒரு பொருள் தருதல் - ஒரு சொல் அதன் நேர் பொருளைவிட்டு, நிழற் பொருளை மிகவும் அழுத்தமாய்த் தருதல்

இவை போல் பயன்படுவன இவை.

**17. ஆகு பெயர்**

தொன்றுதொட்டு வழங்கி வருவது, ஒன்றைச் சொல்ல அது தொடர்புடைய மற்றொன்றைக் குறிப்பது, விரைந்து செயற்பட உதவுவது.

சலவை கொண்டு வந்தான் - உருப்படி. 'இரண்டு' பெட்டி கொடுத்தார்களாம் - பணம் (கையூட்டு). நான்கு முழம் இருக்கிறதா? (வேட்டி) இதன் பயன்பாடு அன்றாட வாழ்வில் மிகுதி.

**18. மரபு**

தமிழில் உள்ள சொற்களை ஆளும் மரபு அழுத்தமானது. உயிரினங்களில் ஆணைக் குறிப்பன, பெண்ணைக் குறிப்பன, இளமைப் பெயர்கள் மரபு மாறாமல் கூறப்படுகின்றன. யானைப் பாகன்; மாடு மேய்ப்பவன் - இருவரும் ஒரே பணி செய்தாலும் மாட்டுப் பாகன் என மாற்றிச் சொல்வதில்லை. ஏறு, போத்து, கலை - ஆணுக்குரியன. (கலைமான் போல). மந்தி (குரங்கு), பேடை, பிடி (யானை) பெண்ணுக்குரியன.

உண்டான், தின்றான், சாப்பிட்டர்ன், பருகினான், அருந்தினான் - இவற்றிடையே மரபுப்படி சொற்பொருள் வேறுபாடுண்டு. இது மேலும் விரிவான பலசொற் களஞ்சியமாகக் கூடியது.

**19. தொடர்கள்**

| | | |
|---|---|---|
| 1. மரபுத் தொடர் | : | கை கழுவி விட்டேன், மூக்குடைந்து போனான், அவனிடம் பருப்பு வேகாது. |
| 2. இணைத் தொடர் | : | வலிவும் பொலிவும், கண்ணும் கருத்தும், வாட்ட சாட்டமாக. |
| 3. அடுக்குத் தொடர் | : | கேட்டுக் கேட்டுப் பார்த்தேன், கூவிக் கூவி அழுகின்றான், திருடித் திருடிப் பழகிவிட்டான். |
| 4. ஒலிக்குறிப்புத் தொடர் அல்லது இரட்டைக் கிளவி | : | பொல பொலவென்று கண்ணீர் விட்டான், கலகலப்பாகப் பேசுகின்றான், சலசலப்பு வேண்டாம். |

**20. இருவகை வழக்கு.**

தமிழ்மொழி அது வழங்கத் தொடங்கிய காலந்தொட்டு, பேசுவது ஒரு வழக்கு; எழுதுவது செம்மையான வழக்கு. பேசுவதுபோல் எழுதுவதில்லை; எழுதுவது போல் பேசுவதில்லை. எழுத்துத் தமிழே கட்டளைத் தமிழ். எழுதும் போது கொச்சைப் பேச்சை, பிழைபட்டதை, ஒலித்திரிபுகளை, பிறமொழிச்சொற்களைக் கலக்கக் கூடாது. வெள்ளாடுறான், வெள்ளாடுகிறான், விளையாட்றான், விளையாடுறானுங்க, விளையாடுறானுக இவை (விளையாடுகிறான்) - விளையாடுகிறார்கள், என்றே எழுதப்பட வேண்டும்.

பேச்சுத் தமிழைப் பேச்சோடு
நிறுத்திக் கொள்ள வேண்டும்.
எழுத்தில் கொண்டுவரக்
கூடாது.

இன்று பலர் தத்தம் வட்டார ஒலித்திரிபுக் கொச்சைச் சொற்கள், குறுமொழிகள், பிழைபட்டவை, பிறமொழிச் சொற்கள் என எல்லாவற்றையும் கலந்து தமிழை அறவே ஒழிக்கப் பார்க்கின்றனர்.

கட்டளைத் தமிழாகிய எழுத்துத் தமிழை நாம் கைவிட்டால், தமிழ் சிதைந்து போகும்.

# 2

# சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் மனப்பழக்கம்

ஔவையின் வாக்காகக் குறிக்கப்படும் பாடல் ஒன்று அடிக்கடி நினைவுக்கு வரும். காரணம் சில பாடல்கள் 'முதற் சந்திப்புத்' தொடங்கி, நமக்கு மிகவும் பிடித்துப் போவதுண்டு. நம் செவிகளின் அருகே வந்து, அவை எப்பொழுதும் 'ரீங்காரமிட்டுக்' கொண்டே இருக்கும். அவற்றின் மீது நாம் 'காதலாகி நெகிழ்ந்து கண்ணீர் மல்கிப்' போவோம்! அத்தகைய பாடல்களுள் ஒன்று இது :

**சித்திரமும் கைப்பழக்கம்**
**செந்தமிழும் நாப்பழக்கம்**
**வைத்ததொரு கல்வி**
**மனப்பழக்கம் - நித்தம்**
**நடையும் நடைப்பழக்கம்**
**நட்பும் தயையும்**
**கொடையும் பிறவிக் குணம்!**

'கல்வி' என்பது மனத்தினால் சிந்திக்கக் கற்றுக் கொள்ளும் பழக்கமேயாகும். சித்திரம் எழுதிஎழுதிப் பயில வேண்டும்; செந்தமிழை ல, ள, ழ வேற்றுமை தெரியுமாறு; ர, ற வேற்றுமை புலப்படுமாறு ந, ண, ன, வேற்றுமை அறியுமாறு ஒலித்து ஒலித்துப் பழக வேண்டும். சிலர் உச்சரிக்க வராமல் ஒலியை 'ஒளி' த்தும் 'ஒழி' த்தும் பழகுவார்கள்! தொலைக்காட்சியிலும் வானொலியிலும் சிலர் தமிழை 'ஒழிக்கும்' போது 'செந்தமிழும் நாப் பழக்கம்' என்ற அடி நினைவு வரும். நடை என்பது ஒழுக்கமாகும். நித்தம் - நாள்தோறும். ஒழுங்காக நடப்பதும் ஒருவிதப் பயிற்சியால், மனப்பழக்கத்தால் அமைவதாகும். அவ்வாறு ஒழுங்காக நடப்பதன் மூலமே ஒழுக்கம் கைகூடும். இங்கும் 'மொழி நடைகூட எழுதிஎழுதியே கைவரப்பெறும்' என்றும் கூடுதலாக ஒருபொருள் கொள்ளலாம். நட்புடைமை, தயை பிறர்பால் இரக்கமுடைமை, கொடைக்குணம் - இவை பிறவியில் அமைவன.

எங்ஙனம் நோக்கினாலும் நல்லதமிழில் எழுதவேண்டும் என்ற - அவ்வாறு எழுதத் தூண்டுகிற மனப்பழக்கத்தை ஏற்படுத்துவதே, இந்நூலில் எடுத்துணர்த்தப்படும் செய்தியாகும். ஆங்கிலத்தில் ஒன்றை எழுதுமுன் பலமுறை யோசிக்கும் அதே தமிழன்தான் 'நான் ஒன்றும் பண்டிதனில்லை' என்றும் 'இவை எல்லாம் பண்டிதர்க்குரியன' என்றும் ஒதுக்கித் தள்ளுவதுடன், தமிழில் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் என்ற மனப்பான்மையைப் பரவலாக - ஆழமாக வளர்த்துக் கொண்டிருக்கிறான்.

செந்தமிழாக எழுத நினைக்கும்போது வருகிற சிக்கல்களும் பலவாகும். அதனாலும் பலர் கூசியும், வெட்கியும் 'நான் ஒன்றும் தமிழில் அதிகம் படித்தவனல்லன், என்ற முன்னுரையுடன் எதையும் தொடங்கக் காண்கிறோம். இந்த நிலைகள் எல்லாம் மாற வேண்டும். தமிழைப் பேசவோ, எழுதவோ எண்ணுகிறவர்கள் 'தமிழ்தானே' 'தாய்மொழி தானே' என்று அலட்சியப்படுத்தாமலும். 'அது மிகவும் கடினம், பண்டிதர் தமிழ் பல்லை உடைக்கும்' என்றெல்லாம் பேசிப் புறக்கணிக்காமலும் நல்ல தமிழைப் பற்றிச் சிந்தித்துப் பெருமித நடையில், செறிவாக - இனிதாக - எளிதாகப் பொருந்திய சிறந்த சொற்களை ஆண்டு எழுதுமாறு பழக்குவதே நம் பணியாகும்.

**மனப்பழக்கம்**

'மனப் பழக்கம்' என்பது என்ன? சிந்திப்பது.

சிந்திப்பது என்றால் எதைப்பற்றி? ஒன்றை எழுது முன் இச்சொல் இங்குப் பொருந்தி வருமா? இதன் சரியான வடிவம் இதுதானா? இவ்வாறு எழுதுவதனால் அழுத்தம் கிடைக்குமா? என்பன போலச் சிந்தித்துச் சிந்தித்து எழுதுதல்.

ஒரு பெயர்ப்பலகை எழுதி வைக்கும் கடைக்காரர், அதிலுள்ள வாசகத்தைத் தெரிந்தவரிடம் கேட்டும், தாமும் சிந்தித்தும் பிழையின்றி எழுதிவைப்பதில்லையே?

பலரறிய, பலர் கேட்கத் தமிழை ஒலி - ஒளி பரப்பிகளில் கையாள்கிறவர்கள், அதை நன்கு முன்பே திட்டமிட்டுக் கொண்டு, பிழைபடாது, நல்ல நடையில் கையாள்வதில்லையே? ஆங்கிலத்திற்குச் செய்யும் ஆயத்தத்தில், பத்தில் ஒரு பங்கு தாய்மொழிக்குச் செய்தால் போதுமே?

# 2

# சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் மனப்பழக்கம்

ஔவையின் வாக்காகக் குறிக்கப்படும் பாடல் ஒன்று அடிக்கடி நினைவுக்கு வரும். காரணம் சில பாடல்கள் 'முதற் சந்திப்புத்' தொடங்கி, நமக்கு மிகவும் பிடித்துப் போவதுண்டு. நம் செவிகளின் அருகே வந்து, அவை எப்பொழுதும் 'ரீங்காரமிட்டுக்' கொண்டே இருக்கும். அவற்றின் மீது நாம் 'காதலாகி நெகிழ்ந்து கண்ணீர் மல்கிப்' போவோம்! அத்தகைய பாடல்களுள் ஒன்று இது :

**சித்திரமும் கைப்பழக்கம்**
**செந்தமிழும் நாப்பழக்கம்**
**வைத்ததொரு கல்வி**
**மனப்பழக்கம் - நித்தம்**
**நடையும் நடைப்பழக்கம்**
**நட்பும் தயையும்**
**கொடையும் பிறவிக் குணம்!**

'கல்வி' என்பது மனத்தினால் சிந்திக்கக் கற்றுக் கொள்ளும் பழக்கமேயாகும். சித்திரம் எழுதிஎழுதிப் பயில வேண்டும்; செந்தமிழை ல, ள, ழ வேற்றுமை தெரியுமாறு; ர, ற வேற்றுமை புலப்படுமாறு ந, ண, ன, வேற்றுமை அறியுமாறு ஒலித்து ஒலித்துப் பழக வேண்டும். சிலர் உச்சரிக்க வராமல் ஒலியை 'ஔி' த்தும் 'ஒழி' த்தும் பழகுவார்கள்! தொலைக்காட்சியிலும் வானொலியிலும் சிலர் தமிழை 'ஒழிக்கும்' போது 'செந்தமிழும் நாப் பழக்கம்' என்ற அடி நினைவு வரும். நடை என்பது ஒழுக்கமாகும். நித்தம் - நாள்தோறும். ஒழுங்காக நடப்பதும் ஒருவிதப் பயிற்சியால், மனப்பழக்கத்தால் அமைவதாகும். அவ்வாறு ஒழுங்காக நடப்பதன் மூலமே ஒழுக்கம் கைகூடும். இங்கும் 'மொழி நடைகூட எழுதிஎழுதியே கைவரப்பெறும்' என்றும் கூடுதலாக ஒருபொருள் கொள்ளலாம். நட்புடைமை, தயை பிறர்பால் இரக்கமுடைமை, கொடைக்குணம் - இவை பிறவியில் அமைவன.

எங்ஙனம் நோக்கினாலும் நல்லதமிழில் எழுதவேண்டும் என்ற - அவ்வாறு எழுதத் தூண்டுகிற மனப்பழக்கத்தை ஏற்படுத்துவதே, இந்நூலில் எடுத்துணர்த்தப்படும் செய்தியாகும். ஆங்கிலத்தில் ஒன்றை எழுதுமுன் பலமுறை யோசிக்கும் அதே தமிழன்தான் 'நான் ஒன்றும் பண்டிதனில்லை' என்றும் 'இவை எல்லாம் பண்டிதர்க்குரியன' என்றும் ஒதுக்கித் தள்ளுவதுடன், தமிழில் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் என்ற மனப்பான்மையைப் பரவலாக - ஆழமாக வளர்த்துக் கொண்டிருக்கிறான்.

செந்தமிழாக எழுத நினைக்கும்போது வருகிற சிக்கல்களும் பலவாகும். அதனாலும் பலர் கூசியும், வெட்கியும் 'நான் ஒன்றும் தமிழில் அதிகம் படித்தவனல்லன், என்ற முன்னுரையுடன் எதையும் தொடங்கக் காண்கிறோம். இந்த நிலைகள் எல்லாம் மாற வேண்டும். தமிழைப் பேசவோ, எழுதவோ எண்ணுகிறவர்கள் 'தமிழ்தானே' 'தாய்மொழி தானே' என்று அலட்சியப்படுத்தாமலும். 'அது மிகவும் கடினம், பண்டிதர் தமிழ் பல்லை உடைக்கும்' என்றெல்லாம் பேசிப் புறக்கணிக்காமலும் நல்ல தமிழைப் பற்றிச் சிந்தித்துப் பெருமித நடையில், செறிவாக - இனிதாக - எளிதாகப் பொருந்திய சிறந்த சொற்களை ஆண்டு எழுதுமாறு பழக்குவதே நம் பணியாகும்.

**மனப்பழக்கம்**

'மனப் பழக்கம்' என்பது என்ன? சிந்திப்பது.

சிந்திப்பது என்றால் எதைப்பற்றி? ஒன்றை எழுது முன் இச்சொல் இங்குப் பொருந்தி வருமா? இதன் சரியான வடிவம் இதுதானா? இவ்வாறு எழுதுவதனால் அழுத்தம் கிடைக்குமா? என்பன போலச் சிந்தித்துச் சிந்தித்து எழுதுதல்.

ஒரு பெயர்ப்பலகை எழுதி வைக்கும் கடைக்காரர், அதிலுள்ள வாசகத்தைத் தெரிந்தவரிடம் கேட்டும், தாமும் சிந்தித்தும் பிழையின்றி எழுதிவைப்பதில்லையே?

பலரறிய, பலர் கேட்கத் தமிழை ஒலி - ஒளி பரப்பிகளில் கையாள்கிறவர்கள், அதை நன்கு முன்பே திட்டமிட்டுக் கொண்டு, பிழைபடாது, நல்ல நடையில் கையாள்வதில்லையே? ஆங்கிலத்திற்குச் செய்யும் ஆயத்தத்தில், பத்தில் ஒரு பங்கு தாய்மொழிக்குச் செய்தால் போதுமே?

இவ்வாறே எண்ணிப் பார்த்தால் கதைநீளும். இன்று தமிழராகிய நாம் தமிழ்த்தாய்க்குச் செய்யும் பணியெல்லாம் வாயார வாழ்த்துவதுதான். 'தமிழ் வாழ்க' என்று குரல் எழுப்புகிறோம்; கவிதை பாடுகிறோம். உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு - அதிலெல்லாம் குறைவே இல்லை. 'சாவில் தமிழ்படித்துச் சாகவேண்டும், சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்'.

என்னைக் கேட்டால் யாரும் தேவையின்றித் தமிழுக்கு உயிரைக் கொடுக்க வேண்டாம்; ஒரு சில நொடிகள் சிந்தித்துச் சிந்தித்துத் தமிழைப் பயன்படுத்தினாலே, செந்தமிழைக் கம்பர் பாடியது போல 'என்றுமுள்ள தென்தமிழ்' ஆகக் காப்பாற்றலாம். அதற்கு மட்டும் நமக்கு நேரமில்லை; ஆனால் உயிரைக் கொடுக்கப் பறக்கிறோம்.

பிழையின்றி ஒரு வாசகம் எழுதுவது நமக்குக் கடினமாக இருக்கிறது; உயிரைக் கொடுப்பது எளிதாக இருக்கிறது!.

'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ள வைக்கும்' இந்நூல் இதில் மனமாற்றத்தை ஏற்படுத்தி, உங்களைச் செயற்படத் தூண்டுகிறது.

தமிழைப் பற்றிச் சிந்திக்கவும் கருத்துக் கூறவும் கருத்து வேறுபடவும் கருத்தை அலசி ஆராயவும் இது தூண்டுகிறது.

இவ்வளர்தமிழ்ப் பகுதிகள், நடைமுறைத் தமிழை - இன்றைக்கு நாம் பயன்படுத்தும் தமிழை - நம் முன்னுள்ள தமிழை அன்றாடப்பயன்பாட்டுத் தமிழைப்பற்றி -முன்னும் பின்னுமாக அரிமா நோக்குடன் சிந்திக்கவைக்கிறது. ஒருவழியாகப் பார்த்தால் எண்ணிய பயன் கைகூடுகிறது. தமிழைப்பற்றிச் சிந்திக்கும் மனப்பழக்கம் ஏற்பட்டு, அதுவே ஓர் இயல்பாகத் தழிழனிடம் குடிகொள்கிறது.

**கருத்துக் கிளர்ச்சி**

**கருத்து வேறுபாடு**

மனப்பழக்கத்தை ஏற்படுத்தும் போது, சிந்திக்கத் தொடங்குவதால் பல்வேறு கருத்துக்கள் உருவாகின்றன. இதனால் கருத்து வேறுபாடுகளும் முளைவிடுகின்றன. ஒரு மொழியைப் பயன்படுத்தும் போது, நாம் ஒத்துப்போகிற இடங்களும் உள என்பதை மறந்துவிட வேண்டாம். இத்தகைய கருத்துக் கிளர்ச்சியே தமிழுக்கு நல்லது.

பலவற்றில் சரி எது, தவறு எது என முடிவுக்கு வரக்கூடும்; சிலவற்றில் கருத்துவேறுபாடு எளிதில் தீராது; சிறிது காலம் செல்லச் செல்ல - சிந்திக்கச் சிந்திக்கத் தெளிவடைவனவும் உள. சிலபோது ஒருவர் கருத்தை மற்றவர் ஏற்க வேண்டி வரும்; சிலபோது இரண்டும் சரியே என்பது போல் ஓர் ஊசலாட்டம் ஏற்படும்.

முன்பே 'வழு' என்று கண்டவர்கள் தான் 'வழுவமைதி' என்றும் ஒன்றைக் கொண்டார்கள்! 'இவ்வாறு வரவேண்டும்' என 'விதி' வகுத்தவர்கள்தான் 'உறழ்ந்தும் வரும்', 'புறனடை' என்றும் நெகிழ்ந்து கொடுத்தார்கள். வழு - குற்றம், வழு வமைதி - குற்றமாயினும் ஏற்கக்கூடியது. உறழ்ந்து வருதல் - இரண்டு விதமாகவும் வருதல். புறனடை - விதிக்கு மேலாகவும் புறம்பாகவும் வரக்கூடிய சில.

சென்னையிலுள்ள 'அடையாறு' என்பதை, ஆங்கிலத்தில் 'Adaiyar' ஆக்கித் தமிழில் 'அடையார்' ஆக்கும் போக்கு மாறவேண்டும். தமிழகத்தில் நடக்கும் ஆங்கில நாளேடுகளும் Adaiyaru, Kaviriyaru என்று தான் போட வேண்டும். ஆங்கிலேயன் அவ்வாறு அவனது முறைப்படிதான் போடுவான். இங்குள்ள 'ஆங்கிலிகள்' ஆங்கிலத்தின் அடிமைகள், ஆங்கிலேயனைப் பின்பற்றுவதில்லை.

இவ்வாறு தமிழுக்கு நாம் இது வரை என்ன செய்தோம்? இனி என்ன செய்யவேண்டும்? எவ்வாறு செயலாற்ற வேண்டும்? என்பனவற்றை இந்நூல் பல்வேறு கோணங்களில் எடுத்துக்காட்டும்.

## தமிழ் இலக்கணத்தை எளிமைப்படுத்திக் கற்பிக்கவேண்டும்.

'அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார், அஆகுடுதுறு...' என்னும் (140) வினைவிகுதிகள் பற்றிய நன்னூல் சூத்திரத்தை எடுத்துக்காட்டி, முன்பு சிலர் தமிழ்இலக்கணம் கடினம் என்றனர்.

பவணந்தி முனிவர் அச்சூத்திரத்தில் சொல்வனவற்றை ஒரு சிறு ஆய்வேடாகவே (Thesis) எழுதலாம் என எண்ணுமளவு, அந்த நூற்பா மிகச்சிறந்த செறிவுடையதாகும். சத்துக்களையெல்லாம் ஒன்று திரட்டித் தருகின்ற சிறு குழல்மாத்திரை (Capsule) போன்றது அது. இதைப்போய்க் கடினம் எனலாமா? ஏனெனில் அந் நூற்பா ஒன்றிற்கே அவருக்கு முனைவர் - டாக்டர் பட்டம் தரலாம் என்பது என் கருத்து. அதை இன்று பல பக்கங்களில் எளிமைப்படுத்தலாம். அதுவே முறை.

தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்காகத் தனித்தனியே தமிழ் இலக்கணம் எழுதப்படவேண்டும். தமிழை முதற்பாகத்தில் படிப்பவர்களிடம் நன்னூல் சூத்திரத்தை ஒப்பிக்கவேண்டியதில்லை. ஆறு, ஏழாம் வகுப்பிலேயே 'அன் ஆன் அள் ஆள்' நூற்பா தேவையில்லை. தான். அவை எல்லாம் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்து இளங்கலையில் பயில்வதற்கு உரியன. சின்னஞ்சிறு மாணவர்களுக்கு எற்ற வகையில், இலக்கணத்தைக் கற்பித்திருந்தால், தமிழ் இலக்கணத்தின் மீது அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்காது. இளமையிலேயே அவர்களுக்குக் கடும் வெறுப்பை விளைவித்துவிடுவதால், காலமெல்லாம் தமிழ் இலக்கணம் பற்றிய கசப்புணர்வையே நாம் பரம்பரையாக வளர்த்து வந்திருக்கிறோம். தமிழ்மொழியின் கட்டுக் குலைவுக்கு இதுவும் ஒரு காரணம் என்பதை உணர்ந்து, தமிழக அரசு, புதிய இலக்கணப்பாடத்திட்டங்கள் வகுத்து, புதிய இலக்கண நூல்களை உருவாக்கித் தமிழ் படிக்கும் மாணவர்களையும் தமிழையும் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது.

இளம் மாணவர்களுக்கு 'இலக்கணம்' என்றே கூறாமல், மொழியின் மரபு, அமைப்பு, கட்டுக் கோப்பைச் சான்றுகளின் வழி - மறை முகமாகக் கற்பித்து மனத்தில் சென்று படியச்செய்ய வேண்டும்.

'காக்கையிற் கரிது களம்பழம்' 'மலையின்வீழ் அருவி', 'பனியத்துக் கொண்டான்', 'ஆடிக்குக் கொண்டான்' - இலக்கண நூல்களில் இவ்வாறு வரும் பழைய உதாரணங்களையே கூறுகிறோம். சினையாகுபெயரா - 'வெற்றிலை நட்டான்'; தானியாகு பெயரா - 'விளக்கு ஒடிந்தது'. ஆறாம் வகுப்புத் தொடங்கி, ஆராய்ச்சி வகுப்பு முடிய வெற்றிலையையே நட்டு, விளக்கையே ஒடித்துக்கொண்டிருப்பதால் மாணவர்கள் "இந்த இலக்கணத்திற்கும் தங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் இந்தத் தமிழாசிரியர்கள் தங்கள் பிழைப்புக்காக இதை வைத்துக் கொண்டு காலந்தள்ளுகிறார்கள் என்றும்" இலக்கணம் கவைக்கு உதவாது என்றும், மிகத் தீர்க்கமாக முடிவுகட்டி விட்டார்கள்.

உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியர்களை மாணவர்கள் கேலி செய்தார்கள் என்றால், இலக்கண வகுப்பைப் புறக்கணித்தார்கள்

என்றால், அதற்கு அவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் சொன்ன இலக்கணத்தையே சொல்லி, சொன்ன உதாரணத்தையே மீளவும் சொல்லிக் கொண்டிருந்ததுதான் காரணமாகும்.

ஆங்கிலத்தில் இத்தகைய பயன்பாட்டு மொழியறிவு நூல்கள் ஒரு நூலகம் வைக்குமளவு பல்கிப் பெருகியுள்ளன. அவற்றுள் நமக்கு வழிகாட்டக்கூடிய பல நெறிமுறைகள் காணப்படுகின்றன. இனியேனும் தமிழறிஞர்கள் இத்தகைய ஆக்கவழிகளில் செயற்படலாம். புதிய எடுத்துக்காட்டுக்களையும் உதாரணங்களையும் தேடும்போதுதான் அதிலுள்ள இடர்ப்பாடு தெரியவரும்.

**நல்லதமிழ் முன்னோடிகள்**

'தினமணிக்'கும் நல்ல தமிழ் நடைபற்றிய சிந்தனைக்கும் நெடிய தொடர்பு உண்டு. 1945 இல், தினமணி வெளியீடு 21 ஆக 'இன்றைய தமிழ் வசன நடை' என்ற நூல், ஒரு ரூபாய் விலையில் (டெமி அளவு 182 பக்கம்) வெளியாகியது. ஆசிரியர்: மு.அருணாசலம். பதிப்பாசிரியர் பி.ஸ்ரீ.மு.அருணாசலம் அவர்கள் எழுதிய 'சொற்சுவை' என்ற நூலும் (1978) குறிப்பிடத்தக்கதாகும்.

பைந்தமிழ்ப் பாவலர் அ.கி. பரந்தாமனார் அவர்கள் நல்லதமிழ் எழுதவேண்டுமா? என்ற நூலை 1955 இல் வெளியிட்டார். அந்நூல் இத்துறையில் குறிப்பிடத்தக்க சிறப்புக்குரியதாகும். இதுகாறும் அந்நூல் பல பதிப்புக்களைக் கண்டு தமிழ்மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளது.

அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் தமிழுக்குப் பணி செய்வதற்கென்றே 'வளர்தமிழ் மன்றம்' என்ற ஓரமைப்பை உருவாக்கிச் செயற்படுத்தி வருகிறது. அதன் முன்னைத் துணைவேந்தர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அதைத் தொடங்கி வைத்தார்.

தினமணி ஆசிரியர் முனைவர் ஐ.மகாதேவன் அவர்கள் தமிழ்ச்சொல் ஆய்வில் ஈடுபாடு மிக்கவர். கல்வெட்டுத் தொடர்பாகவும் சங்க இலக்கிய அடிப்படையிலும் வடமொழிப்புலமைகொண்டும் அவர் சில அடிப்படையாய்வுகள் செய்து கட்டுரைகள் எழுதியுள்ளார்.

முனைவர் தி.முத்துக்கண்ணப்பர் அவர்கள் இத்துறையில்

பேரார்வம் உடையவர். வானொலி, தொலைக்காட்சி வழியாக அவர் தொடர்ந்து, தவறுநீக்கி எழுத வழிகாட்டி யதுடன், இது தொடர்பாகக் கட்டுரைகளும் நூல்களும் வெளியிட்டுள்ளார்.

மறைந்த தமிழ்ப்பேராசிரியர், கோவை பூ.சா. கோ. கலை, அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த முனைவர் வீ.இராசமாணிக்கம் அவர்கள் "எப்படி எழுதுவது?" என்ற சிறு நூலை எழுதி 1982-இல் வெளியிட்டார். பேராசிரியர் மா.நன்னன் தொலைக்காட்சி மூலமாகவும் நூல்கள் பல எழுதியும் இத்துறையில் பெரும்பணி ஆற்றியுள்ளார். மருதூர் அரங்கராசன் இத்துறையில் தொடர்ந்து எழுதி வருகிறார். இவ்வாறு புதிய தமிழ் இலக்கணம் எழுதுமாறு இன்று பேரறிஞர் பலர் பணியாற்றியுள்ளமையும் .இன்றும் பலர் பணியாற்றி வருகின்றமையும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

### வளர்தமிழ் நெறிமுறைகள்

சில நெறிமுறைகளுக்குட்பட்டு, இவை ஆராயப்படுவதாலும் இந்நூல் எழுதப்படுவதாலும் அவற்றையும் மனத்தில் பதியவைத்துக் கொள்வது வளர்தமிழுடன் நாமும் வளர வழிவகுப்பதாகும்:

1. பிறமொழி வெறுப்பால் வளர்வதைவிடத் தாய்மொழி ஆக்கத்தால் வளர்வதே ஆக்கப்பணியாகும்; நிலையான நன்மை விளையும். அங்ஙனமாயின் தமிழ் மொழிக்காகக் கடுமையாக உழைக்கவேண்டியிருக்கும்.
2. பிறமொழிச் சொற்கலப்பு என்பது பாவமன்று; குறையுமன்று. வழக்காற்றிலுள்ள மொழிகளில் எல்லாம் பிற மொழிச்சொற்கலப்பு ஏற்படும். அதை நெறிமுறைப்படுத்த வேண்டும். அதை விட்டுவிட்டுச் சிலர் தமிழைக் கலப்படமாக்கிக் களியாட்டம் போடுவது தவறு. தேங்கிக் கிடக்கும் குளம் குட்டையில் எதுவும் கலக்காது. வழக்கிறந்த மொழியில் கலப்பதற்கு வழி ஏது?
3. நன்னூலார் குறிப்பிடும் 'வடமொழி ஆக்கம்' என்பது, சமஸ்கிருதச் சொல்லைத் தமிழின் உள்வகைகளுள் ஒன்றான வடசொல்லாக ஆக்கிக் கொள்வதாகும். பிற மொழிச் சொல்லைத் தமிழாக்கம் செய்துகொள்ளும் மரபு தொன்றுதொட்டு நிலவிவருவது. ஆங்கிலம் இங்ஙனம் பிறமொழிச் சொற்களைத் தன்வயப்படுத்திக் கொண்டுள்ளது.

அந்நெறியையே தமிழும் பின்பற்றியுள்ளது. இனியும் அதே வழியைத்தான் பின்பற்ற வேண்டும்.

4. இன்றைய அறிவியல் தமிழ், பொறியியல் தமிழ் போன்றவற்றில், பிறமொழிச் சொற்களை ஏற்பதில் தூயதமிழில் மொழிபெயர்த்தல், தன்வயப்படுத்திக் கொள்ளுதல், அவ்வாறே வழங்குதல் என்ற படிநிலைகளை இடமறிந்து பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

5. பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும் என்றும் ஒன்றாக இருந்ததில்லை. ஆனால் அவற்றினிடையே ஒரு சமனிலைப்பாடு பேணப்பட்டு வந்துள்ளது. இச் சமனிலைப்பாடுதான் தமிழை என்றுமுள தென்தமிழாக இளமையுடன் வாழவைத்திருக்கிறது. தொல்காப்பியர் வழக்கியல் மருங்கு, செய்யுள் மருங்கு என்று மொழியின் இருபக்கங்களாக இதைக் குறிப்பிடுகிறார்.

   கால்டுவெல் உலகவழக்குத் தமிழும் இலக்கிய வழக்குத் தமிழும் மிகத் தொன்றுதொட்ட காலமுதல் பிரிந்தே வழங்கி வந்துள்ளன என நிறுவுகிறார்.

   வீரமாமுனிவர் பேச்சுத் தமிழுக்குக் 'கொடுந்தமிழ் இலக்கணம்' என்றும் எழுத்து வழக்கிற்குச் 'செந்தமிழ் இலக்கணம்' என்றும் தனித்தனி இலக்கணம் எழுதினார்.

   இன்று இவை இரண்டையும் பேணி, எல்லோருக்கும் பயன்படுமாறு பொதுத்தமிழை - கட்டளைத் தமிழை - செந்தமிழை - எழுத்துவழக்குத் தமிழைப் போற்றுவதே நம் கடமையாகும். பேசுவது போலவே எழுதவேண்டும் என்பது தற்கொலைக்கு ஒப்பாகும். பேசுவது போல, அதிலுள்ள ஒலித்திரிபுகள், கொச்சைமொழி, குறுமொழி, பிழைமொழிகளைப் பயன்படுத்துகின்றவர்களுக்குக் கடுந்தண்டனை தரவேண்டும்.

6. நம் ஆய்வுகள், சிந்தனைகள் தமிழை மேம்படுத்துவனவாக இருக்க வேண்டும். தமிழன் தன்வெளிப்பாட்டிலேயே அதிக அக்கறை உடையவன். அவன் உண்மையைக் காணவேண்டும் என்று புறப்படாமல், தன்னை வெளிப்படுத்திக்கொள்ளவே முந்தும் பழக்கமுடையவன். இந்த நிலை மாறவேண்டும்.

ஐரோப்பியர், பிற நாட்டவர் போல 'உண்மையைக் காணும் வேட்கை', பெருக வேண்டும்; உண்மை கண்டவிடத்து அதை ஏற்றுப் போற்றும் பெற்றி சிறக்க வேண்டும்.

7. இலக்கணத்தை வாழ்வுடனும் இணைத்துப் பார்க்க வேண்டும். பெரும்பான்மையான இலக்கண வரையறைகள் வாழ்க்கையுடன் தொடர்புடையனவேயாம். மேற்கோள்கள், எடுத்துக் காட்டுக்கள், சான்றுகள் எல்லாம் அன்றாட வாழ்க்கையிலிருந்தே, எடுத்துக் காட்டப்படவேண்டும்.

8. தமிழ்மொழியின் இயல்புகளாக, அதன் மரபுகளையும் வரையறைகளையும் காணப் பழக வேண்டும். மனிதர்களுடன் பழகிப்பழகி அவர்களின் இயல்புகளை அறிவது போல, மொழியுடன் நெருங்கிப் பழக வேண்டும். முன்னைய சிறந்த நூல்களையெல்லாம் படிக்க வேண்டும். சிறந்தவற்றையே படித்துச் சிறந்தவற்றையே கேட்டு, சிறந்த முறையிலேயே பேசி, எழுதிப் பழகவேண்டும். மொழி வளர்ச்சி செம்மையை நோக்கியதாக, முன்னேற்றத்தைக் கருதுவதாக, பிழையற்ற தன்மையுடையதாக அமையவேண்டும். பிற எல்லாம் தமிழ் வளர்ச்சி ஆகா.

9. மொழி பற்றிய சிந்தனையில் சரி, தவறு எனச் சுட்டுவது மருந்துபோல் பயன்படலாம். நூற்றுக்கணக்கான, நடைமுறை உதாரணங்களின் வழியேதான் உண்மையை உணர்த்த வேண்டும்.

சரியானவற்றையும் உண்மையையும் பின்பற்றத்தக்கன வற்றையும் சான்றுகளின் வழிப் பழக்கித் தாமாக உணருமாறு செய்து நெறிப்படுத்தும் முறையையே பின்பற்ற வேண்டும். இலக்கணத்தைக் கற்பவர் மனத்தில் ஆழமாகப் பதியும்படி செய்ய, புதியபுதிய நெறிமுறைகளை நாடிக் கருத்துக்களை வெளியிட வேண்டும்.

10. மரபுகள் மாறும் போது, அவை பூத்துக் குலுங்கும் புதுமையாக மாறவேண்டும். பழையன கழிதல் வேண்டும். புதியன தாமே புகுதல் வேண்டும். கழித்தலும் புகுத்தலும் வேண்டா.

மரபுமாற்றம், வளர்ச்சிகள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை.

எதனாலும் தடைப்படுவதில்லை. அவை தாமாக நிகழ்கின்றன. நாம் செய்வதெல்லாம் விமரிசனமே தவிர, வேறன்று.

இவ்விமரிசனம் காலப்போக்கில் நீராகவும், உரமாகவும், சிலபோது வேலியாகவும் உதவும் என்பது உண்மையே.

இத்தகைய எண்ணங்களால் சூழப்பட்ட வளர்தமிழ் எல்லோருக்கும் அவரவர் அளவிலான தமிழை நினைவூட்டிச் சிந்திக்கவைக்கும். புலர் காலைப்பொழுதில், புல் நுனியில் தேங்கி நிற்கும் பனித் திவலை அளவே இந்நூல் வழிகாட்டுகிறது.

சூரியஒளியால், வயிரம்போல் மின்னி, எதிரே நிற்கும் நீண்ட பனை மரத்தையும் காட்டுவதால் சின்னஞ்சிறிய பனித்துளிக்கும் ஒருநொடி பெருமிதம் வந்துவிடுகிறது என்பது உண்மைதானே!

# 3

# 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்'

## 'உங்கள் பிள்ளையைப் பார்த்தீர்களா?'

ஒரு பெண் தன் சிறு குழந்தை துள்ளிக் குதிப்பதைப் பார்த்து, 'உங்க பிள்ளையைப் பார்த்திங்களா?' என்று தன் கணவனிடம் சுட்டிக்காட்டிக் கழிபேருவகை கொள்வாள்! 'நம்ம பிள்ளையை' என்று அவள் பெரிதும் சொல்வதில்லை. முன்னிலைப்படுத்திச் சொல்வதில் ஓர் உரிமையன்பு - கணவனுக்கும் உரிமைப்படுத்தும் இரட்டிப்புப் பாசம் வெளிப்படுகிறது.

'உங்கள் நாட்டைக் காக்கும் நேரம் வந்திருக்கிறது' என்று படைவீரர்களிடம் தளபதி முழங்கும்போது, 'நமது நாட்டை' என்று கூறத் தெரியாமல் கூறவில்லை, தேச உணர்வைக் கனலாக மூட்டிவிடும் வார்த்தைகள் அவை.

'உங்கள் சமயத்தை நீங்களே விளங்கிக் கொள்ளவில்லையே?' என்னும் சமயத் தலைவர், மறந்திருக்கும் மக்களிடம் அவர்கள் உடைமையை - உரிமையை அங்ஙனம் நினைவுபடுத்துகிறார்.

'உங்களுடைய வங்கி' என்று, அடிக்கடி ஒரு வங்கியின் வானொலி விளம்பரத்தைக் கேட்டதில்லையா, நீங்கள்? மக்களுக்கு அதை 'நம்முடையது' என உணரவைக்கும் முயற்சி தான் அது. 'உங்கள் தொலைக்காட்சியில்...' என்று அதிர முழங்குகிறார்களே,

இப்படித்தான் 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற தலைப்பு இந்நூலுக்குத் தரப்பட்டுள்ளது.!

## அறிந்து கொள்ளுதலும்
## தெரிந்து கொள்ளுதலும்

அறிந்துகொள்ளுதலுக்கும் தெரிந்துகொள்ளுதலுக்கும் என்ன வேறுபாடு ?

அறிந்துகொள்ளுதல் என்பது புதியதாக ஒன்றை அறிதல்; நன்மை தீமையைப் பகுத்தறிதல்; நுட்பமாகவும், ஆழமாகவும் அறிதல். ஒருவரது மனக்குறிப்பையும் அவையின் குறிப்பையும்

அறிந்துகொள்கிறோம். அறிவுடைமை என்பது புதிய புதிய உண்மைகளை, நுட்பங்களை அறிந்துகொள்வதாகும்.

அறிதல், தெரிதல் ஒரு பொருட்சொற்கள் போல் தோன்றினாலும், இவை தம்முள் நுட்பமான வேறுபாடிருப்பதைத் தெரிந்துகொள்வது நல்லது. வேறொருவிதமாகப் பார்த்தால் அறிதல் - மனத்தால் அறிதலாகும்; தெரிதல் - கட்புலனுக்குத் தெரிவதாகும். மதி மண்டலம் பற்றி ஆராய்ந்து பல உண்மைகளை அறிகிறோம்; மதியில் உள்ளமறுகண்ணுக்குத் தெரிகிறது. தெரிதல் என்பது அறிதலுக்கு மேல் சிந்தித்தல், ஆராய்தல், தெளிதல் எனப்பொருள் வளர்ச்சி கண்டுள்ளது. ஒன்றை "அறிந்து கொண்டேன்" என்றால் இருப்பதை அறிதலாகும்; "தெரிந்து கொண்டேன்" என்றால் விளங்கிக் கொண்டேன் என்பதாகும்.

முன் தெரியாதவரை "அறிமுகம் செய்கிறோம்" பழக்கமானவரைப் பற்றி "இவரைத் தெரியுமே" என்கிறோம். முதலாவது பார்ப்பது அறிமுகமாகவும், திரும்பப் பார்ப்பது தெரிதலாகவும் இருப்பதைச் சிந்தியுங்கள்.

திருவள்ளுவர் "பகைத்திறம் தெரிதல்", "தெரிந்து தெளிதல்" போன்ற அதிகாரங்களில் நன்கு ஆராய்ந்து, சிந்தித்து முடிவுக்கு வருதலைச் சுட்டும்போது "தெரிதலைப்" பயன்படுத்துகிறார். "எதிரதாக் காக்கும் அறிவு", அறிதோறும் அறியாமை கண்டற்றால் "மெய்ப்பொருள் காண்பது அறிவு" போன்ற தொடர்களால், திருவள்ளுவர் நுட்பமான, புதுவரவான, கண்டுபிடிக்கிற ஒன்றையே அறிவொடு சார்த்திப் பேசுகிறார்.

"இந்தப் பாட்டுக்குப் பொருள் இதுவென்று அறிந்து கொண்டேன்" என்றால், பொருளை அறிவதாகும். ஆனால் அதனையே "தெரிந்துகொண்டேன்" என்றால் "நன்கு சிந்தித்துத் தெளிந்தேன்- விளங்கிக்கொண்டேன்" எனப்பொருள் கூடுகிறது. அறிந்துகொண்டதை நாம் மேலும் தெரிந்து கொள்ளலாம். "உனக்கு ஆங்கிலம் தெரியுமா?" என்றால் பேச, எழுத, விளங்கிக்கொள்ளப் பழக்கமுண்டா என்ற அளவு ஆழமாகக் கேட்பதாகும். தாய்மொழியாம் தமிழை அறிந்துகொண்டால் போதாது; நன்கு பழகித் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழைத் தாய்மொழி என அறிந்து போற்றுபவர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளார்கள். ஆனால் அத்தமிழை நன்கு தெரிந்து கொண்டவர்கள் தொகைதான் மிகமிகக் குறைவாக இருக்கிறது.

## புரிந்துகொள்ளுதல்

திருமணம் புரிந்து கொண்டான், இறைவன் அருள் புரிவார், நலம்புரிந்து வாழ்க!

"புரிந்து" என்ற சொல் விரும்பி என்ற பொருளிலேயே முன்பு மிகுதியாக ஆளப்பட்டது. 'இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார்'- இறைவனது புகழை விரும்பினார் (குறள்-5) 'புகழ் புரிந்த இல்' - புகழை விரும்பிய மனைவி (குறள் -59). பின்னர் அது விரும்பிச் செய்தல் என்று கூறவேண்டிய இடங்களில் மட்டும் இடம் பெற்றது. திருமணம் புரிந்து கொண்டான் என்றால் விரும்பிச் செய்து கொண்டான் என்றாகும். புரிவு -விரும்பி. புரிவுண்ட புணர்ச்சி- இருவரும் ஒருவர்மீது ஒருவர் அன்பு செலுத்தும் காதல். இவ்வாறு சங்கப்பாடல்களில் காணலாம். ஒளி உண்டாகச் செய்தல், தங்கம் அணிகலனாகச் செய்யப்படுதல் என்ற பொருளிலும் சங்கப்பாடல்களில் இச்சொல் காணப்படுகிறது. "ஒள்ளழல் புரிந்த தாமரை" (புறம் 11), "அழல் புரிந்த தாமரை" (புறம் 29) என்றால் "அழலில் ஆக்கப்பட்ட பொன் தாமரை" என்பார் பழைய உரைகாரர்.

புரி என்றால் முறுக்கு. புரி அவிழ்பூ - முறுக்கவிழும் பூ, புரி - யாழ் நரம்பையும் குறித்தது, அது முறுக்கிவிடப்படுவதாகலின். புரியுண்ட நரம்பு இனிய இசை தரும். அதிலிருந்தே புரி என்ற சொல் காதலுடன் இணைந்து காதல் புரிதல் ஆயிற்று, விரும்பி மேற்கொள்ளப்படும் புனிதமான பிற செயல்களையும் குறிக்கத் தொடங்கியது. 'தீத் திறம் புரிந்தோன்' (சிலம்பு11.57) 'தானம் புரிந்தோன்' (சிலம்பு 15.30). புரி என்ற சொல்லின் வரலாறு தமிழுக்கு இசையிலிருந்த பிடிப்பையும் நுட்பத்தையும் காட்டவல்லது.

இன்று, "இதுவரை சொன்னது புரிகிறதா?" என்று கேட்கிறேன். "விளங்குகிறதா" என்ற பொருளில் இதனை உலக வழக்கில் ஆள்கிறோம். பழைய இலக்கியங்களில் புரிந்தது, புரியவில்லை என்பன இப்பொருளில் வழங்கியதாக ஓரிடத்தில் கூடக் காணப்படவில்லை. சிக்கலான புதிரான (முறுக்குண்ட) ஒன்றையே சொல்லிப் "புரிகிறதா?" என்று கேட்கிறோம். மிகுந்த தத்துவ நடை நமக்குப் புரிவதில்லை. புதிரான விடுகதைக்கு விடை புரிகிறதா என்று கேட்பதுண்டு. இங்கும் முறுக்குண்டு, சிக்கலான ஒன்று நெகிழ்வுற்று விடுபடுகிறதா என்ற பொருள் நுட்பமே

காணப்படுகிறது. பழந்தமிழ் நூல்களில் காணப்படாததாலேயே புரிதலை (விளங்குதலை) விட்டுவிடலாம் என்றால், நீங்கள் என்னைப் புரியாதவன் என்பீர்கள். “அறியாதவனோடு வாழலாம், புரியாதவனோடு வாழ முடியுமா?” என்பது ஒரு பழமொழி. இங்கு “விளங்காதவனோடு, நன்மை தீமை அறியாதவனோடு” என்று நாம் இன்று கருதுகிற பொருள் இல்லை. “காதல் செய்யாதவனோடு எப்படி வாழ முடியும்?” என்ற கேள்வி அது. நான் சொன்னவற்றை நன்கு புரிந்து கொண்டால், நீங்கள் புரியும் (விரும்பிச் செய்யும்) தமிழ்ப்பணி சிறக்கும்!. புரிதல் - விரும்புதல், விரும்பிச் செய்தல், அழகு பொருந்தச் செய்தல், சிறிது சிறிதாக விளங்கிக் கொள்ளுதல், அன்பு செய்தல், எனப் பல பொருள் தரும்.

**மொழியோடு நெருங்கிப் பழக வேண்டும்.**

நண்பர்களுடன் நெடுங்காலம் தொடர்ந்து பழகினால் நட்பு வேரூன்றும், மொழியோடும் அவ்வாறு பழகவேண்டும். மொழி ஆர்வத்தைவிட, பற்றுப்பாசத்தைவிட, அந்த மொழியோடு பழகுவதுதான் நல்லது, இனிமையானது, பயனுள்ளது. பலர் மொழியுடன் நெருங்கிப் பழகாததால் அவர்கட்கு மொழியின் தன்மை புலப்படுவதில்லை. இலக்கண, இலக்கியம் படிக்கவேண்டும். அதுமட்டும் போதாது. உலகில் இன்றைய நடைமுறையிலுள்ள வழக்குகளையும் அறிந்து, தெரிந்து பலமுறை பழகவேண்டும். 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்று பழக்கத்தை அவ்வையார் வற்புறுத்தினார். இலக்கணத்தின் அடிப்படை கூட, மொழியோடு நன்கு பழகியவர்களுக்குத்தான் விளங்குகிறது. மற்றவர்கள் ஏதோ தத்துவம் போல் - தத்துவத்தைப் பலர் வாழ்க்கையோடு தொடர்பு படுத்தாமல் பேசி நம்மைத் திகைக்கவைப்பது போல் இலக்கணத்தையும் ஆக்கிவிடுகிறார்கள்.

தமிழைப் போற்றுபவர்கள் அதிகம்; தமிழை உயிரென்று கூவிப் பற்று, பாசத்தைப் பொழிபவர்கள் மிக அதிகம். ஆனால் தமிழோடு பழகுபவர்கள் - ஒன்றி உணர்ந்து ஒட்டி நட்புக்கொண்டு வாழ்பவர்கள் மிகமிகக்குறைவு. போற்றுபவர்களையும் பாசத்தைப் பொழிபவர்களையும் விட, ஒன்றிய உணர்வினோடும் படித்தும் கேட்டும் ஒட்டி உறவாடிப் பழகுபவர்களாலேதான் பயன்படுத்துபவர்களாலேதான் தமிழ் அன்றும் வாழ்ந்தது-இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

### விளையாட்டுப் போலப் பயில வேண்டும்

மொழியை விளையாட்டுப் போலக் கற்பிக்க நாம் பற்பல வழிவகைகள் காணவேண்டும். சின்னஞ்சிறார்க்கு நாம் பழைய மாதிரி சூத்திரம் சொல்லி, பதவுரை, மொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை, விரிவுரை எல்லாம் சொல்லிக் கொண்டே போவது இன்று நல்லதன்று. கடைசியில் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய அடிப்படை உண்மையை அவர்கள் மறந்து விடுகிறார்கள். ஒவ்வொரு நிலையிலும் இலக்கணத்தைக் கற்பிக்க நாம் வெவ்வேறு திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்; வெவ்வேறு நெறிமுறைகளைக் கண்டு பிடிக்க வேண்டும்.

மக்கள் அறியாமையால் தவறி வழங்குபவைகளில் சில வார்த்தைகளைச் சொல்லி, அதாவது அவற்றின் திருந்திய வடிவங்களை மட்டும் சொல்லிப் பழக்கிப் பின்பு அவற்றை மாற்றி உச்சரிப்பதால் பொருள் விளங்காமல் போவதை உணர வைக்க வேண்டும். உதாரணத்திற்கு 'முடவைத்திய சாலை' பற்றி விளக்கலாம். முடம், முடமாதல், மூட்டு, முடக்குதல், பள்ளிகளில் முடம் போடச் செய்தல், காலை மடக்கி உட்கார்வது வேறு - முடக்கி உட்கார்வது வேறு, கால் முடம் கைமுடமாதல் என்றெல்லாம் இதுபோல விளக்கினால் 'முடம்' என்ற சொல் நன்கு விளங்கும். பிறகு நாட்டில் பல இடங்களில் 'நுடவைத்திய சாலை' என்று பெயர்ப்பலகை இருப்பதைச் சுட்டிக்கூறி, அது 'முட வைத்திய சாலை' என்று இருந்தால் எவ்வளவு எளிதில் பொருள் விளங்கும் என விளக்கினால் இளம் உள்ளங்கள் நல்லதை இறுகப்பற்றிக் கொள்ளும். இங்ஙனம் மொழியை விளையாட்டுப் போல, எளிதில் கற்பிக்க முயல வேண்டும். ஆங்கிலத்தில் மொழியையும் மொழி நடையையும் கற்பிக்க ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுவேறு புதிய நெறிகளைக் கண்டு, ஆயிரக்கணக்கில் நூல்கள் எழுதியுள்ளனர். நம் இலக்கணப்புலவர்களுக்கோ, மொழியியல் அறிஞர்களுக்கோ இதற்கு நேரமே கிடைப்பதில்லை. வேண்டாத ஆராய்ச்சிகளில் இறங்கித் தவிப்பவர்களே இங்கு அதிகம்.

தமிழன் முடம்பட்டால் தமிழும் முடம்படத்தானே செய்யும்! இதற்கு முடமருத்துவ சாலைக்கு எங்கே போவது?

### பலநூற்றாண்டுகள் — பல படிகள்

ஒரு மொழி பல நூற்றாண்டுகளில் பலபடி நிலைகளில் வளர்ச்சி

பெற்று வருகிறது. பல்வேறு விதமான வழக்குகளும் தோன்றி வாழ்ந்து மாறி மறைவதுண்டு. வாழும் மொழிக்கு இவை இயல்பே. எது சரி என்பதன்று கேள்வி. எக்காலத்தில் எவ்வழக்கு, ஏன் எழுந்தது என அறியும் முயற்சியைப் பாராட்ட வேண்டும்.

'ஆர்க்காடு' என்பது தொன்மை வழக்கு. அதைத் தவறாக 'ஆறு காடென'க் கொண்டு ஷடாரண்யம் என்ற வழக்குப் பிற்காலத்தில் வந்தது. ரா.பி.சேதுப்பிள்ளை 'ஆறும்காடும்' சேர்ந்ததால் வந்ததென்பது சங்கப்பாடல்களில் 'ஆர்க்காடு' என வந்திருப்பதை நினைவுபடுத்தாததால் ஏற்பட்ட தவறான கருத்து.

வேலை செய்பவர்க்குக் 'கூலம்' கொடுக்கப்பட்டது. அதுவே கூலி ஆனது. சொற்பொருத்தம் பற்றிய சிந்தனை இது; பழைமையானது. திருவள்ளுவர் 'கூலி தரும்' என்ற இடத்தில் 'பயன்தரும்' என்ற பொருளிலேயே ஆள்கிறார். துரோகம் செய்பவர்களைப் பார்த்துக் 'கடவுள் கூலியைக் கொடுப்பாரு' என்று இன்றும் பேசப்படுவதை நினைத்துப் பாருங்கள். இன்று கூலி, வேலை பார்த்ததற்குத் தரும் பணத்தைக் குறிக்கிறது.

பொதினி - பழனி -பழநியானதும் வெவ்வேறு காலத்தின் விளைவுகளே. படிநிலை மாற்றங்களை (Stages) அறிவது ஒன்று; ஏற்புடையதைக் கையாள்வது பிறிதொன்று. இதில் பழநி - தவறு. பழனியை ஏற்கலாம். ஏனெனில் பொதினி என இனி மாற்றமுடியாது.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை

1. பழமரபுக்காலம்
2. முடிமன்னர் மூவேந்தராண்ட சங்க காலம்
3. தன்னாட்சி தளர்ந்த சங்கப்பிற்காலம் (இருண்டகாலம்)
4. பல்லவர் ஆண்ட சமயவளர்ச்சிக் காலம்
5. சோழர்கள் எழுச்சிதந்த காப்பியகாலம்
6. மராட்டியரும் மற்றவரும் சூழத் தெற்கே மரபு மறைந்து விடாமல் காத்த பிற்காலப் பாண்டியர்காலம்
7. சிற்றிலக்கியங்கள் பூத்துக்குலுங்கிய நாயக்கர் காலம்
8. இடையில் புகுந்த மகமதியர் காலம்

9. மொழி, இலக்கியத்தில் புதிய மாற்றங்களுக்கு வித்திட்ட ஐரோப்பியர் காலம்

10. மறுமலர்ச்சி வளர்ச்சிகண்ட சுதந்திரப் போராட்டக்காலம், குடியாட்சிக்காலம், தனித்தமிழ் இயக்கக்காலம் என அடிப்படை மாற்றங்களை விளைவித்த காலப்பகுதிகள் கணக்கிடப்பட வேண்டும்.

## இலக்கணமும் ஆராய்ச்சியும்

மொழிப்பழக்கம் நடைமுறையில் காலங்காலமாகப் பயன்படுத்தியும் கேட்டும் உணர்ந்தும் இயல்பாக அமைகிறது. மூச்சுவிடுவது போன்றது மொழிப்பழக்கம். சிலர் 'பிராணாயாமம்' செய்வர்; தவம் யோகம் செய்து மூச்சை அடக்குவர். கடிய இலக்கணம், மொழியியல் போல்வன சாதாரணப் பயிற்சியிலிருந்து கடும் பயிற்சிவரை கற்பிக்கக்கூடும்.

ஒருவருடன் பழகும்போழுது இயல்பாகப் பழகினால்தான் உறவு நீடிக்கும். வழக்காறுகளை அறிய அறிய இலக்கண உணர்வும், மொழியறிவும்தானே அமையும். சராசரி மனிதன் தமிழை நன்கு தெரிந்து கொள்ள அது போதும். அதிலிருந்தே இலக்கணமும் கற்கவேண்டும்.

சில போது இலக்கணம் புலியாவதுண்டு; 'இலக்கணத்திற்காக இலக்கணம்' என்று போய்விடுவதுண்டு. சில சமயம் ஆராய்ச்சி பூனையாவதுமுண்டு; கண்ணை மூடிக்கொண்டால் உலகமே இருண்டதாகத் தோன்றுவது போலக் கற்பனையில் மூழ்கிவிடுவதுண்டு. நாம் புலியாக மாறினாலும் பூனையாகிவிட்டாலும் மொழியுடன் பழகுவது தடைப்படும்.

இயல்பாக, மிக இயல்பாக மொழி வழக்காறுகளை, நடைமுறை மொழிப் பயன்பாடுகளைத் தெரிந்து கொண்டு போவது நல்ல பயன்தரும்.

இடையிடையே இலக்கண உணர்வு, மொழியறிவு பளிச்சிடும்; தோன்றவே செய்யும். அவை மொழிப் பழக்கத்தை நட்பை - கேண்மையை உறுதிப்படுத்துமளவுக்கு அமைதல் நல்லது.

இலக்கணமும் ஆராய்ச்சியும் வேண்டாம் என்பதன்று கருத்து, முதலில் நன்கு அறிந்து, தெரிந்து அடிப்படைகளை

உணர்ந்தபிறகுதான் அங்கே போக வேண்டும். பெரும்பான்மையான மக்களுக்கு அவற்றின் பயனைத் தந்தால் போதுமானது. அன்றாட வாழ்விலிருந்து எடுத்துக்காட்டுக்கள், உதாரணங்கள், சான்றுகள் நூற்றுக்கணக்கில் தரப்படவேண்டும்.

## ஒவ்வொரு மொழிக்கும் பொதுப்பண்பும்

## தனி இயல்பும்

மொழிகள் எல்லாம் மனிதன் படைத்தவை. அம் மனிதனிடம் உலகப் பொதுவான பண்புகள், இயல்புகள் காணப்படுவது போல் அவன் தோற்றுவித்த மொழிகளிடையேயும் பொதுக்கூறுகள் மிகுதி. உலகமொழிகள் எல்லாம் 'அ' கரத்தையே முதலாகக் கொண்டிருப்பது ஒரு பொதுக்கூறு அல்லவா? வாயைத் திறந்ததும் (அங்காத்தல்) 'அ' ஒலி தானே பிறப்பதால், அதுவே அனைத்திற்கும் முதல் ஒலியாயிற்று.

மனிதனிடம் மனித இனப்பொதுப் பண்பைக் காண்பது போல், அவன் பிறந்த நிலம், தட்பவெப்பம், இயற்கைச் சூழல், சமூக அமைப்புகட்கு ஏற்பத் தனி இயல்புகளும் சாயல்களும் தோற்றங்களும் பழக்கவழக்கங்களும் பண்புகளும் காணப்படுகின்றன. ஒருவரைப் பார்த்தும் அவர் இன்னவராக இருக்கலாம் என நாம் நினைப்பது, அவருடைய தனிப்பாங்கை வைத்துத்தான். மொழிகளுக்கு இத்தகைய தனி இயல்பு, சாயல், பாணி உண்டு.

ஒவ்வொரு மொழியும் அதனதன் சூழலில், இயல்பில் மிகச் சிறந்ததுதான், இனிமையுடையதுதான், ஒப்பற்றதுதான். தமிழைப் பயன்படுத்துகிறவர்கள் தமிழின் இயல்புகளையும் நன்கு தெரிந்து கொள்ள முயல வேண்டும். இதற்கு, மனிதர்களோடு பழகுவது போல, மொழியோடும் பேசியும் எழுதியும் சிந்தித்தும் - பழக வேண்டும்.

## ஆங்கில மொழியில் உச்சரிப்புப் போராட்டம்

ஆங்கில மொழியில் <u>உச்சரிப்புப்</u> போராட்டம் பெரிது. உதாரணம் ஒன்று போதும், Cut -கட்-'அ' ஒலி பெறுகிறது; Put-புட் இங்கு 'உ' ஒலி பெறுகிறது. Duty- ஊ என ஒலிக்கிறது. Tension, Attention - இவற்றில் Sion, tion இரண்டும் ஒரே மாதிரி ஒலிக்கப்படுவது

ஏன்? இங்ஙனம் நூற்றுக்கணக்கில் மாற்றம் இருப்பதால், இதற்கெனத் தனிக்குறியீடுகள் உள்ளன. தனி அகராதிகளும் தொகுக்கப்பட்டுள்ளன. கவனமாக உச்சரிக்க வேண்டும் என உறுத்திக் கொண்டே இருப்பதால், மொழி நலம் பேணும் மனப்பான்மை இயல்பாகவே பழக்கமாகி விடுகிறது. குறையே மொழிக்கு ஆக்கமாகி விடுகிறது.

வடமொழியில் சதுர்வருக்க எழுத்துக்கள் இருப்பதால், உச்சரிப்புக் கடினம் எனச்சிலர் அதை ஒரு குறையாகக் கருதுவர். மொழியைக் கவனமாக ஆளவேண்டும் என்ற நினைவை. ஊட்டிக்கொண்டே இருப்பதால், அதுவே பிறிதொரு வகையில் நிறைவாக ஆகிவிடுகிறது. வடமொழியில் வேதம் முதலியன ஓதும்போது, அதில் மனம் ஈடுபட்டு ஈர்க்கப்படுவதற்கும், ஒன்றுவதற்கும் இந்த 'இழுமெனும் ஓசை' (Rhythm) ஒரு காரணம். காலையில் 'சுப்பிரபாதம்' இசைத்தட்டு ஒலிக்கும் போது, பொருள் தெரியாத நிலையிலும், அதைக் கேட்கும் மனம் அதில் ஈடுபடுகிறதே? ஆம், நாம் குறையெனக் கருதும் ஒன்றே நிறையாவது மட்டுமன்றிச் சிறப்பும் படைக்கிறது. இவையெல்லாம் மொழிகளின் தனித்தனி நீர்மைகள்; சீர்மைகள். அவ்வம் மொழிகளைச் சிறப்போடு, கருத்தோடு, கவனத்தோடு வாழவைப்பன. தமிழில் மூன்று போராட்டங்கள் அன்றும் இன்றும் நடந்தவண்ணம் உள்ளன.

1. சேர்த்தும் பிரித்தும் எழுதுவதிலுள்ள சிக்கல், சந்தி இலக்கணம். ஒற்று மிகுமா, மிகாதா என்பது அதில் பெரிய சிக்கல்.

2. பேச்சு மொழிக்கும் எழுத்து வழக்குக்கும் உள்ள போராட்டம். உலக வழக்கு இலக்கிய வழக்கு என்றும் கொடுந்தமிழ் செந்தமிழ் எனறும் இப்போராட்டம் தமிழின் தொன்மைக்காலம் தொட்டே தொடங்கி, இன்றும் பெரும் போராட்டத்திற்கு உட்பட்டிருக்கிறது.

3. பிறமொழிச்சொற்கள் கலத்தல். இதற்கான நெறிமுறைகள் ஆங்கிலத்தில் இயல்பாக அமைந்தது போல் தமிழிலும் இயல்பாக அமைந்திருந்தது. ஆனால் இன்று பலரும் அதைத் தம் விருப்பு வெறுப்பால் குழப்புகின்றனர். இவ்வாறு இப்போராட்டங்கள் தமிழுக்கு இடையூறாக உள்ளன என எண்ணுதல் கூடாது. இவையே தமிழ் வளர்க்கும் ஊக்க

உணர்வாகுமாறு நடைமுறைப்படுத்தப்பட்டும் வந்துள்ளன. மேலும் திட்ப நுட்பம் மிக்க நெறிமுறைகளால், இவற்றைத் தமிழ் வளர்க்கும் சாதனங்களாக்கிவிட வாய்ப்பிருக்கிறது.

## அழைப்பிதழ்த் தமிழ்

தமிழில் எத்தனையோ அழைப்பிதழ்களை எழுதுகிறோம். அப்போதெல்லாம் வரும் ஓர் ஐயப்பாடு என்ன தெரியுமா?

அரங்கில் நிகழுமா? அரங்கின்கண் நிகழுமா?

1987ம் ஆண்டு. 1987 ஆம் ஆண்டு, 1987 -ம் ஆண்டு இவற்றில் எது சரி

1987ல். 1987இல், 1987-ல் இவற்றில் எது முறையானது?

ஆறாவது மாநாடு என்பதை 6வது எனப் போடுவதா? '6ஆவது மாநாடு' என்று போடலாமா? ஆறாம் மாநாடு - என்பதா?

இப்படியே ஐயங்கள் தோன்றும்.

'பங்குகொள்ள வேண்டுகிறோம்', 'கலந்துகொள்ள வேண்டுகிறோம்', 'வருகைதர வேண்டுகிறோம்', 'வர வேண்டுகிறோம்', 'வந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்' இவற்றுள் எவ்வாசகம் முறையானது?

தமிழில் உருபுகள் பல உள்ளன. முழு உருபுகளையே சேர்த்து வழங்குவதுதான் நல்ல மரபு. அந்த வழியில் பார்த்தால் 1987 ஆம் ஆண்டு என்பதும் 1987 இல் என்பதும் நல்ல வடிவங்கள். உருபைக் குறைத்தால் கோடு அல்லது மேற்கோட் குறி இடவேண்டும். 1987-ம் ஆண்டு அல்லது 1987-ல் என எழுத வேண்டும்.

சாதாரணக் கூட்டம் எனில், 'கழகக்கட்டடத்தில் நிகழும்' எனல் போதும். மாநாடும் பெரிது, அரங்கும் பெரிது - பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவது என்றால் பல்கலை நகரில் மு.வ. அரங்கின்கண் நிகழும் என்பதே பெருமித நடையுடையதாகும்.

இவ்வாறு அழைப்பிதழ் எழுதும்போது கூட, எண்ணி எண்ணித் தெரிந்தவர்களைக் கேட்டுக் கேட்டுச் செவ்விய சீரிய கூரிய செழுந்தமிழில் திருந்திய தமிழில் எழுதப் பழகவேண்டும். வளருந்தமிழுக்குச் சிறிது நேரத்தைச் செலவழியுங்கள்

## நல்ல பெயரிடுதலும் தமிழ்த் தொண்டுதான்

எங்கள் ஊரில் ஒருகடை. 'முடிவெட்டும் இடம்' - Hair Cutting Saloon என்பதன் பெயர்ப்பு இது.

முடியை 'வெட்டுவது' சிலரால் முடிவதுதான்! அதற்காக அதைப் பெயர்ப்பலகையிலேயே விளம்பரப்படுத்த வேண்டுமா? கடைப்பெயர்களை அழகிய தமிழில் போட முயற்சி செய்யலாம். 'முடி திருத்தகம்' எவ்வளவு அழகாக இருக்கிறது? 'முடி ஒப்பனை' என்றும் போடலாமே. அழகு மாளிகை, ஒப்பனை வளாகம், என்றெல்லாம் வெளிநாடுகளில் பெயரிடுகிறார்களே இவ்வாறே சிந்தித்துச் சிந்தித்து எழுத முயன்றால்தான் கடைக்காரர்களுக்கும் தமிழில் எழுதி வைக்க ஆசை பிறக்கும்.

பெயர்ப்பலகைகளைத் தமிழில் எழுதி வைக்க வேண்டும், தமிழிலும் எழுதி வைக்கவேண்டும் என்பது அரசாங்க ஆணையாகும். முதலில் தமிழ், பிறகு ஆங்கிலம், வேண்டு மேல் அதனடியில் விரும்பும் மொழி - இவ்வாறு பெயர்கள் எழுதப்பட வேண்டும். அளவில் கூடத் தமிழே பெரிதாக இருக்க வேண்டும்.

இப்படியே பல்வேறு கடைகளுக்குத் தமிழில் பெயர் வைக்க எண்ணிப் பாருங்கள்! அதுவே பெரிய தமிழ்த் தொண்டுதான். தேவைப்படும் போது தமிழுக்காக உயிரையும் கொடுக்கிறோம். ஆனால் அதற்காகச் சிந்தித்து எழுதவோ, கேட்டுத் திருத்திக் கொள்ளவோ, நல்ல நடையில் பிழையின்றி எழுத முயற்சி செய்யவோ எம்மால் இயலாது எனக் கூறலாமா?

# 4

# சொல்லும் பொருளும்

## ஒருமைப்பாடும் ஒற்றுமையும்

தேசிய ஒருமைப்பாடு, தேசிய ஒற்றுமை இரண்டிற்கும் பொருள் ஒன்றா, வேறா? இரண்டிற்கும் பொருள் வேறு.

இந்திய இலக்கியம், கலை, சமயம், பழக்கவழக்கம், நம்பிக்கைகளில், பல கூறுகளில் ஒருமை இழை - ஒன்று போன்ற தன்மை காணப்படுகின்றது. இதைக் குறிப்பதே ஒருமைப்பாடு என்பதாகும். இந்த ஒருமைப்பாடுகளை உணர வைத்தால் ஒற்றுமை வளரும். வேற்றுமையை மறந்து ஒன்றுபடுவது ஒற்றுமை. வேற்றுமை இருக்குமிடத்தில் ஒற்றுமை தேவை. ஒருமை என்பது பிரித்தறிய ஒண்ணாத, ஒன்றாம் தன்மை. பாலும் நீரும் கலக்கும் போது ஒருமையாகிறது. விரல்கள் சேரும்போது ஒற்றுமை பிறக்கிறது. ஒற்றுமை காலப்போக்கில் ஒருமையை உண்டாக்கும். ஒருமையுள்ள இடத்திலேதான் ஒற்றுமை வளரும் என்றாலும் ஒருமை வேறு ஒற்றுமை வேறு.

இந்திய மொழிகள், இலக்கியங்கள், பண்பாடு, நாகரிகத்தில் எல்லாம் ஒருமைக்கூறுகள் உள்ளன. இந்தியர்கள்தான் அதை எண்ணி ஒற்றுமையாக வாழ வேண்டும்.

திருமணச்சடங்கு, நீத்தார் கடன் போன்றவற்றில் ஆராய்ந்து பார்த்தால் சாதிகளிடையே நிரம்ப ஒருமைப்பாடுகள் உள. ஆனால் வெவ்வேறு சாதியினர் கூடி ஒற்றுமையாக வாழ்வதில்லை.

## அமைச்சரும் மந்திரியும்

அமைச்சர், மந்திரி ஆகிய சொற்களுக்குப் பொருள் ஒன்றா?

திருவள்ளுவர் "அமைச்சு," என அதிகாரம் அமைத்து, "அமைச்சரை" ஆண்டுள்ளார். சிலப்பதிகாரத்திலும் "அமைச்சர்" வருகிறார். (5:130, 26:3). பதினெண்கீழ்க்கணக்கு நீதிநூல்களிலும் "அமைச்சர்" இடம்பெறுகிறார்.

சங்க இலக்கியத்தில் "அமைச்சர்" சொல் காணப்படவில்லை.

"உறுதி உழையிருந்தான் கூறல் கடன்" (638) என்ற குறளுக்குப்

பரிமேலழகர் "உழையிருந்தான் எனப் பெயர் கொடுத்தார். அமாத்தியர் என்னும் வடமொழிப் பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின்" என விளக்கம் எழுதுகிறார். "அமாத்தியர்" என்ற வடசொல், பாகதமொழி மூலமாக "அமைச்சர்" என்று தமிழில் முன்பே வந்து வழங்கியது என்பர். அரசனுக்கு ஆலோசனை கூற அமைந்தவராதலின். "அமைச்சர்", தமிழ்ச் சொல்லாக்கம் பெற்றுள்ளது.

"மந்திரி" என்ற சொல் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் (639) இடம்பெறுகிறதே தவிரச் சங்கப்பாடல்களில் காணப்படவில்லை.

"மந்திரச்சுற்றம்" என்று சிலம்பிலும் (16.137) மணி மேகலையிலும். (28,184) இடம்பெறக் காணலாம். 'கோத் தொழிலாளர்' என்றும் சிலம்பில் இவர்கள் குறிக்கப்படுகின்றனர். புறப்பாடல்களில் சுற்றம் என்பது மந்திரிச் சுற்றத்தை, மந்திரி பிரதானியரைக் குறிக்க வழங்குகிறது(புறம் 2-19, 184-8, 285-7). "வேந்து தொழில் அயரும் அருந்தலைச் சுற்றம்" எனப்படுதலால், சுற்றம் என்ற சொல் சுற்றத்தார். என்ற பொதுப்பொருளோடு அரசனைச் சுற்றியிருந்து ஆலோசனை கூறும் அமைச்சர்களையும் குறித்தமை பெறப்படும். "மந்த்ரம்" என்ற வடசொல் ஆலோசனைச் சபை, மறை மொழி எனப் பல பொருள்படும். மந்திரி ஆலோசனையாளர் ஆவார். "சூழ்வார் கண்ணாக ஒழுகலான்" (445) என்ற இடத்தில் திருவள்ளுவர் மந்திரியை ஆலோசனை கூறுபவர் என்ற கருத்தில் ஆளுதல் காணலாம். சூழ்தல் - ஆலோசித்தல்; சூழ்வார் - ஆலோசிக்கப்படுபவர், மந்திரி. அரசனைச் சுற்றியிருந்து ஆலோசனை கூறுவதனாலேதான் இவர்கள் அமைச்சர், மந்திரி எனப்படுகின்றனர். இன்று அரசியலமைப்புச் சட்டப்படி "கவர்னரை" ஆளுநராகவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களை அவருக்குக் கருத்துரை வழங்குபவர்களாகவும் கொள்வதால் அமைச்சர், மந்திரி என்பன ஒரே பொருளில் வழங்கப்படுகின்றன.

**வணிகனும் வாணிகமும்**

வாணிகம், வணிகம் என்ற சொல் வடிவங்களில் எது சரியானது?

'வாணிகம் செய்வார்க்கு வாணிகம்' (120) என்பது திருக்குறள். 'அறவிலை வணிகன் ஆய் அலன்' (134) என்பது புறநானூறு.

பரிபாடல் திரட்டு முதற்பாடலில் 'வணிகர்' காணப்படுகிறது. இதிலிருந்து வணிகன் செய்யும் தொழில் வாணிகம் என்றாகிறது.

வடமொழியில் 'வணிக்' என்பது வணிகனைக் (Merchant) குறிக்கும்; 'வாணிஜ்ய' என்பது வியாபாரத்தைக் (Trade) குறிக்கும். இரண்டு மொழிகளிலும் இச்சொற்கள் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன. 'எண்ணெய் வாணியர்' என உலக வழக்கிலுள்ளது. இவர்களை வணிகர் என்றும் அழைக்கலாம். எழுத்தில் வணிகர் என்றும் அவர்கள் தொழிலை வாணிகம் என்றும் குறிப்பது பொருத்தமாய்ப்படுகிறது.

**முன்னாள் தலைவரும் முந்நாள் தலைவரும்**

முன்னாள் தலைவர் என்பது முன்பு தலைவராக இருந்து பின்பு அப்பதவியை விட்டுவிட்டவரைக் குறிக்கும். அவர் முன்னைய தலைவர். இன்றைய தலைவர் வேறு ஒருவர்.

முந் + நாள் என்றால் மூன்று நாள். மூன்று நாட்களுக்கு மட்டும் தலைவர் என்று ஒருவரைக் கேலி செய்யலாமா? 'முந்நாள் தலைவர்' என்றால் அது தான் பொருள்.

'என்னாடு' என்று கூறினால் என்னுடைய நாடாகும். 'எந்நாடு என்பது 'எந்த நாடு?' என வினவுவது. இ+நாளில், இ+நாட்டில் என்பன இந்நாளில், இந்நாட்டில் என்றே வரும். அந்நாள் கூட அப்படித்தான். முன்+நாள் = முன்னாள். எனவே எந்நாளும் நாம் முன்னாள், முந்நாள் வேறுபாட்டை மறக்கவே கூடாது; அதுவே தமிழருக்கு நன்னாள் (நல்+நாள்); நல்ல பொன்னாள் (பொன்+நாள்) ஆகும்.

**தன்னலமும் தந்நலமும்**

தன் +நலம் = தன்னலம், ஒருமை. தம்+நலம் = தந்நலம், பன்மை ஆகும். நாம் தந்நலம் உடையவர்களாக இருத்தல் கூடாது. தன்னலம் உடையவன் எவனும் முன்னேறமாட்டான். நாட்டுக்காக, மொழிக்காக உயிரை விடுவதாகக் கூறும் பலர் 'தன்னலமுடையவர்களாக' இருப்பது நல்லதன்று, ஒருவன் தன்னலமுடையவனாக இருந்து கொண்டு, பொதுநலமும் பேசுவதுதான் ஆபத்து! He is singing, They are singing என்று ஏன் இரண்டு 'தொடர்வினை' போடுகிறோம். ஒருமை, பன்மை வேறுபாடிருப்பது பல சமயங்களில் உதவி

செய்யும். ஒருமையா, பன்மையா என்று குழம்புமானால் 'சுயநலம்' என்று கூறிவிடலாம். அதில் ஒருமை பன்மை மயக்கம் வராது. இதை நான் என் தன்னலத்திற்காகத் சொல்லவில்லை. மொழிப்பயன்பாடு என்ற பொது நலத்திற்காகச் சொல்கிறேன். சரிதானே?

ஆனால் இன்று 'தன்னலம்' என்பதைப் 'பால்பகா அஃறிணை போலக்' கொண்டு, ஒருமை பன்மை வேறுபாடின்றிப் பயன்படுத்துகிறோம். தமிழர்கள் எல்லோரும் தன்னலம் உடையவர்களாக இருக்கிறார்கள் என எழுதி விடுகிறோம். அதை இப்போது யாரும் தவறெனக் கொள்வதில்லை. ஒவ்வொருவர் .தன்னலமும் அதில் சேர்கிறது.

**எத்தனை, எத்துணை?**

இச்சொற்களை இடமறிந்து பயன்படுத்தினால் நன்றாக இருக்கும். எண்ணிக்கையைக் குறிக்குமிடங்களில் எத்தனை ஆட்கள்? எத்தனை சாமான்கள்? எத்தனை பழங்கள்? என்றும், எண்ணிக்கையில்லாத அளவு, குணம், நிறம் போன்றவற்றைச் சுட்டும் பொழுது 'எத்துணைப் பெரியது', 'எத்துணை நல்லவர், 'எத்துணைச்சிவப்பு' என்றும் பயன்படுத்தலாம். 'எத்துணை' என்பதை எவ்வளவு என்று இன்று கூறுகிறோம்.

எத்தனை எண்ணிக்கையைக் குறிக்கும்; எத்துணை அளவு, பண்பைக் குறிக்கும். ஆனால் எல்லா இடத்திலும் எத்தனை பழம், எத்தனை பெரிய வீடு எத்துணை பெரியது என்று ஒரே மாதிரியாக ஆள்கிறோம். அது எத்துணைப்பெரிய தவறு என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரிகிறது.?

**தேநீரும் தேனீரும்**

தேநீர் தேயிலை மூலம் கிடைக்கும் பானம். தேனீர் என்றால் தேன் +நீர் என்றாகிவிடும். தேன் போன்று இனித்தாலும் தேநீர் நன்றாயிராது. 'தே' என்ற சொல் 'டீ' என்பதன் தமிழாக்கம். அண்மையில் தினமணியில் டில்லி என்பது தில்லி எனவே வெளிவருவதைப் பார்த்திருப்பீர்கள். இந்தியில் தில்லிதான் அது. ஆங்கிலேயரே 'டில்லி' என்றனர். 'Date' என்ற ஆங்கிலச் சொல்லைத் 'தேதி' எனத் தமிழில் தந்த தமிழனை நினைத்துப் பாருங்கள். சித்திரை ஆறாம் நாள் திருமணம் நடைபெறும். இதை ஆறாம்

தேதி என்றும் போடுகின்றனர். தேதி, தில்லி, தே (Tea), (தே+இலை= தேயிலை) என்ற சொற்களைத் தமிழல்ல என்று சொல்லலாமா? அறிவியல் சொல்லாக்கம் செய்பவர்கள் இவ்வாறு தமிழாக்கம் செய்வதை நினைவிற் கொள்ளலாம். சிலர் 'திதி' எனும் வடசொல்லே தேதி ஆயிற்று என்று கூறுகின்றனர்.

தேநீர் கிடைக்குமிடத்தைக் கடை, அகம், இல்லம், மனை, நிலையம் என இவ்வாறு ஏதேனும் ஒன்றை இணைத்துக் குறிப்பிடலாம். இப்படியே சிந்தித்தால் இன்னும் அழகான பெயர்களும் கிடைக்கலாம். டீ ஸ்டால், காபி பார் (Bar) என எழுதி வைப்பதை இனிமேல் வேண்டுமேல் ஆங்கில எழுத்தில் அடைப்புக் குறிக்குள் எழுதி வைக்கலாம். அதன்மேல் தமிழில் அதைவிடப் பெரிதாகத் தமிழ்ப் பெயர்களை எழுதிவைக்க வேண்டும். தேநீர்க்கடை, தேநீர் இல்லம், தேநீர்ப்பக்கம், காபி மாளிகை, காபி முற்றம், காபி நிலையம் என இவ்வாறு எழுதி வைக்க வற்புறுத்த வேண்டும். தமிழ்ச் சொற்களையே ஆள வேண்டும். சில போது தமிழாக்கச் சொற்களை, தமிழ் ஒலிப்புக்கு மாறுபடாதவற்றை ஆளலாம் என்பது குற்றமன்று.

**தின்னுதல்**

ஒருவரைப் பார்த்துச் 'சாப்பாட்டைத் தின்னு விட்டுப் போங்கள்' என்று கூறக்கூடாது. 'மாடு புல்லைத் தின்னும்' அல்லது 'மேயும்' என்பது பாலபாடம்.

மனிதர்கள் கூட வெற்றிலையைத் தின்னலாம். 'தின்னும் வெற்றிலையும் கண்ணனாவான்' என்பது ஆழ்வார் பாடல்.

நம் உணவில் சோற்றை அள்ளி உண்ணவேண்டும்; காய்கறியை மென்று தின்னவேண்டும்; பாயசத்தைப் பருகவேண்டும்; ஊறுகாயைத் தொட்டுக் கொள்ளவேண்டும்; பழத்தைச் சாப்பிட வேண்டும். இவ்வாறு பசியாற வேண்டும். சிங்கப்பூர்த் தமிழர்கள் 'பசியாறியாச்சா?' என்றுதான் வினவுகிறார்கள். நாம் 'சாப்பிட்டாச்சா' என்றே கேட்கிறோம். எல்லாவற்றையும் சுகமாகச் சப்பிட்டுச் சாப்பிட்டு நமக்குப் பழக்கமாகி விட்டது. தண்ணீரைக் குடிக்கவேண்டும்.

சுவைத்துப் பருகுவதற்கும் ஒரேயடியாகக் குடிப்பதற்கும் வேறுபாடுண்டு தானே? அவ்வாறே உண்ணுவதற்கும் தின்னுவதற்கும்

வேறுபாடிருக்கிறது. வினைச்சொற்கள் வழியாகச் சாப்பிடுகிற முறையே தெரியவில்லையா? அருந்துதலும் சிறிது சிறிதாகப் பருகுவதேயாம்.

### தின்னுட்டுப் போ எனலாமா?

வேலையில்லாத ஊதாரி மகனைத் தாய் சாப்பாட்டை வச்சுத் 'தின்னுட்டுப் போ' என்று கூறுகிறாள். 'உண்ணுட்டுப் போ', என்றுதான் பொருள். என்றாலும் 'தின்னு' என்பதில் ஏளனம். கடுப்புத் தொக்கி நிற்கிறது. திருவள்ளுவர், இறைச்சி சாப்பிடுவதை உண்ணுதல், தின்னுதல் என இரண்டு சொற்களாலும் குறிக்கிறார். 'தின்னுதல்' என ஆளும் போது ஏளனம் தொனிக்கவே செய்கிறது. புலால் மென்று தின்னுவதற்குரியது. ஆதலால், கறி தின்றான், இறைச்சி தின்றான் என்ற வழக்கும் இருந்திருக்கிறது. புலால் மறுத்தல் அதிகாரத்தில் அருளாட்சி ஆங்கில்லை ஊன் தின்பவர்க்கு (252) என்று, அதை உண்பவர்களைத் தின்பவர் என்றும் வள்ளுவர் கூறுவதில், சற்றே ஏளனப்படுத்தும் குரல் ஒலிக்கிறது.

### செல்வமும் உடைமையும்

செல்வம் பொது; உடைமை ஒருவருக்கு உரிமையானது. செல்வமும் ஒருவருக்கு உரிமையானதைச் சுட்டும் போது மட்டும் உடைமையாகிவிடும். காசு, பணத்தை விட, ஒருவரது மாடுமனை வீடு வயல்களைத்தான் அவரது உடைமைகள் என்கின்றனர். அத்தகைய ஒரு பொருட் சொற்களிடையே நுட்பமான 'சாயல் வேறுபாடுகள்' (Shades) இருப்பதை அறிந்து பயன்படுத்தினால், மொழியை ஆள்பவருடைய புத்திக் கூர்மை போற்றப்படும்.

'அவங்க உடைமையெல்லாம் இழந்திட்டாங்க', 'உங்க உடைமையை ஏன் விட்டுக் கொடுக்கிறீங்க' என்று உலகில் 'உடைமை'ப் பேச்சுத்தான் அதிகம். திருவள்ளுவர் அன்புடைமை, பண்புடைமை, ஊக்கமுடைமை என ஒருவரது இயல்புகளாக அமைவனவற்றை 'உடைமை' எனவே ஆளுதல் காணலாம்.

கல்வி கற்றுக்கற்றுப் பெற வேண்டியதால் கல்விச் செல்வம் எனவும், கேள்வி வெளியிலிருந்து கேட்கப்பெறுவதால் 'கேள்விச்செல்வம்' எனவும் திருவள்ளுவரால் குறிக்கப்படுவதைச் சிந்தியுங்கள். உடைமைக்கு மறுதலை இன்மை, வறுமையாகும். 'உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை நில்லாது

நீங்கிவிடும்' (592) என்ற குறள் ஊக்க உணர்வு 'ஒருவரிடமிருந்து பிரிக்கமுடியாதது' என்பதைத் தானே 'உடைமை'ச் சொல்லால் காட்டுகிறது. ஒருவரைச் 'செல்வர்' என்கிறோம். முன்பு நிலங்கள், வீடுமனைகள், உடையவரை 'உடையார்' என்றனர். நிலபுலம் கணக்கின்றி உடையவரை நிலக்கிழார் (நிலத்துக்குரியவர்) அல்லது கிழார் என்றே அழைத்தனர். நாம் அனைவரும் இறைவனுடைய உடைமை ஆதலால், அவ்விறைவனை 'உடையாய்!' என அழைத்தனர். "உடையாய், என்னைக் கண்டுகொள்ளே" என்று கெஞ்சுகிறார் மாணிக்கவாசகர்.

**பகர்தல்**

முன்பு கடையை விரித்து வைத்து விலைபகர்வர். விலை கூறுதலே பகர்தல். ஒருவரை முன்னிறுத்திச் சொல்வது கூறுதல். விலைப்பொருட்களைக் காட்டி, இன்னஇன்ன விலை என அவற்றின் விலையைச் சொல்வது பகர்தல். மாதவியின் மாலையைக் கையில் கொடுத்துக் கூனியைப்புகார் நகரக் கடைத்தெருவில் 'பகர்வனர் போல்வதோர் பான்மை'யின் நிறுத்தினார்கள். பகர்வனர், பலருமறிய விலை கூறுகின்றவர்கள். இன்று அரசியல்வாதிகள் தங்கள் கொள்கைகளை மக்களிடம் பகர்கின்றனர்.

**குமரியும் செல்வியும்**

குமரி என்பது தமிழ்ச் சொல்லாக இருக்கும் போது (கன்னியாகுமரி, குமரிக்கண்டம் போல்வன), செல்வி சுதா என்பதைக் குமரி சுதா என்றால் என்ன?

குமர், குமரன், குமரி என்பன வடமொழியிற் காணப்பட்டுத் தமிழில் வழங்கும் சொல் என்பர். வடமொழியில் குமார, குமாரீ என்று வழங்கும். தமிழிலும் இச் சொல் தொன்று தொட்டுக் காணப்படுகின்றது. குமரியம் பெருந்துறை, குமரிக்கோடு போன்ற நிலப்பகுதிகள், தெற்கே இருந்தமை பற்றிப் புறநானூறு (67), சிலப்பதிகாரம், கலித்தொகை போன்ற சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. குமரி வாழை (சிலம்பு 16-42) ஈனாத வாழை, குமரி ஞாழல் (நற்.54), குமரி வாகை(குறு.347) என்று இளமையான மரங்கள் குறிக்கப்படுகின்றன. 'குமரி மூத்த' (பெரும்.247) என்பதற்கு நச்சினார்க்கினியர் 'அழியாத் தன்மையவாய் முதிர்ந்த' என்று

பொருள் எழுதுகிறார். புறநானூறு (311) 'குமரி மகளிர்' என்று திருமணமாகாத மகளிரைக் குறிக்கிறது.

'செல்வி' முன்பு வெற்றித் தெய்வமாகிய கொற்றவையைக் குறிக்க வழங்கியது. (அகம்.345, சிலம்பு : 12-16), கண்ணகி 'செல்வி' எனச் சிறப்பித்து அழைக்கப்படுவதும், அவள் தெய்வநிலையுறுதலை நோக்கியேயாம் (சிலப்.12-47. 16-91). செல்வி என்பதில் பருவக் குறிப்பு வெளிப்படையாக இல்லை.

இன்று கலியாணமாகாதவர்களைக் குறிக்கும் பொது அடைமொழியாகவும் (செல்வன், செல்வி), சிறுவன் சிறுமியைச் சுட்டும் சொல்லாகவும், செல்லமாகச் செல்வத்திருவுடையவர்கள் எனச் சிறப்பித்துக் கூற இது பெரிதும் பயன்படுகிறது. செல்வி திருமணமானதும் திருமதி ஆகிறாள். இவையெல்லாம் ஆங்கில மரபை ஒட்டி வளர்ந்தவை. குமாரன், குமாரி என்பன முறையே மகனையும் மகளையும் சுட்டவும் வழங்கப்படுகின்றன. என் இளைய குமாரன் கார்வண்ணனுக்கு, என இவ்வாறு எழுதுவர்.

குமரன் குமரியில் இளமைக்குறிப்பும் செல்வன் செல்வியில் செல்வமாகக் கருதும் செல்லக்குறிப்பும் உள்ளன.

### கண்ணீரும் கம்பலையும்

கண்ணீரும் கம்பலையுமாக என்ற தொடரில் கம்பலை என்பது சோகம் தழுவிய ஆரவாரம். கம்பல், கம்பலை என்ற சொற்கள் சங்க இலக்கியம் முதல் காணப்படுகின்றன. போரில் புண்பட்டு வருந்தும் வீரர்களைக் கொண்ட ஊரையும் காதலர்களைப் புறம்கூறி அலர் பேசும் ஊரையும் கம்பலை மூதூர் எனக் குறிப்பதுண்டு. கண்ணீருடன் வாயால் அழுது புலம்பிக்கொண்டும் கையை அசைத்து ஆட்டிக்கொண்டும் மெய்ப்பாட்டுடன் வருவதைக் கண்ணீரும் கம்பலையும் என்ற இணைத்தொடர் குறிக்கிறது.

சங்ககாலந் தொட்டு இன்று வரை 'கம்பலை' என்னவோ போகாமல் இருந்து கொண்டே இருக்கிறது.

### எண்ணும் எழுத்தும்

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது கொன்றை வேந்தன். 'எண்ணென்ப, ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' (392) என்பது குறள்.

'எண்ணெழுத் திகழேல்' என்பது ஆத்திசூடி. இவ்வாறு பல இடங்களில் ஆளப்படுவதால் 'எண்ணும் எழுத்தும்' என்பது உலகிலும் வழங்கிய தொடராதல் கூடும் என உணரலாம்.

எண் என்பதற்குக் காலிங்கர் 'உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக் கொள்வது' என உரைத்தார். மீண்டும் அவரே 'மற்று இவ்வாறன்றிக் கணக்கு நிலை ஆகிய சிற்றெண்ணும் பேரெண்ணும் நிறை எண்ணும் நிலவெண்ணும் பிறவுமாகிய நுண்குறி எண்' எனவும் பிறர் கருத்தை ஏற்று விளக்கிச் சொல்கிறார். பரிதியார் 'எண்ணாகிய சோதிடமும்' என்று கூறியுள்ளார். பரிமேலழகர் 'எண் என்பது கணிதம்; அது கருவியும் செய்கையும் என இருவகைப்படும்' என்று விளக்குகிறார். ஆத்திசூடி, கொன்றை வேந்தனுக்கு உரையெழுதிய காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு எண் என்பதைத் தருக்க நூல் என விளக்குகிறார்.

எழுத்து என்பதைப் பரிமேலழகர் விளக்குகையில் 'எழுத்து எனவே அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று' என்பதாலும் 'எழுத்தறியத் தீரும் இழிதகைமை' என்ற வெண்பாவை அடுத்து, அவர் எடுத்துக்காட்டுவதாலும் எழுத்து என்பதற்கு இலக்கணம் என்றே கொண்டார் எனத் தோற்றுகிறது. பிற உரையாசிரியர்களும் அவ்வாறே உரைக்கின்றனர்.

திருவள்ளுவர் எக்காலத்திற்கும் பொருந்துமாறு அடிப்படைகளை மட்டுமே சுட்டிச் செல்லும் மரபை இங்கும் காண்கிறோம். எண் : எண்ணுதல்; சிந்தித்தல்; சிந்தித்து உணரும் தருக்க நூலையும் அது குறிக்கும். எண் என்பது கணிதம். உலக அறிவியல்கள் அனைத்தும் கணக்கையே அடிப்படையாகக் கொண்டன. எனவே, கணித்தறிதல் சார்ந்த தருக்கம், வானநூல், சோதிடம் முதலிய பழைய அறிவியல்களையும் இன்றைய புதிய அறிவியல்களையும் எண் என்பது சுட்டி நிற்கிறது.

எனவே முன்னயை மரபின்படி 'எண்' என்பதற்குக் கணிதம், ஆராய்ச்சி, அறிவியல் எனப்பொருள் கூற வேண்டும்.

எழுத்து என்பது இலக்கணம். இலக்கியம் உள்ளிட்ட கல்வியறிவைக் குறிக்கிறது. 'எழுத்தறிவில்லாதவன்', என்னும் போது எழுதப்படிக்கத் தெரியாதவன் என்று கொள்கிறோம். எனவே

எழுதப்படிக்க அறிதலாகிய எழுத்தறிவும் அதனாலாய அறிவியலறிவாகிய எண்ணறிவும் இருகண்கள் எனப்படுகின்றன.. எண்ணை முன்வைத்த காரணம் எழுத்தறிவின் பயனாகிய கலை, அறிவியல், தத்துவம், அனைத்திற்கும் நம்மை உரிமையுடையவராக்கிக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதற்கேயாம்.

## ஒரே சொல்லுக்கு எதிரெதிரான இரு பொருள் அமைதல்

'ஒரு சொல் இருவேறு முரண்பட்ட பொருள்களில் ஒரு சேர ஒரே காலத்தில் மக்களிடை வழங்குவதுண்டு'.

கோளாறு என்ற சொல் முதலில் (கோளின் போக்கு, கோளின் அமைப்பு) நல்ல பொருளில் வழங்கி, பிறகு 'கிரகக் கோளாறு' எனத் துன்பம் என்ற பொருளிலேயே வழங்கலாயிற்று.

சில சொற்கள் இங்ஙனம் எதிரான பொருள்களில் ஒரே காலத்திலேயே ஆளப்படுகின்றன. சில சொற்களில் இத்தகைய பொருள் மாற்றங்கள் காலப்போக்கில் நடைபெறுகின்றன. சம காலத்திலேயே பொருள் மாற்றமுறும்போது, ஒன்று பெருவழக்காகவும் மற்றது குறுகிய வழக்காகவும் காணப்படும். காலம் செல்லச் செல்லக் குறுகிய வழக்காக இருந்தது, பெருவழக்காகிவிடும்.

'நந்த' என்ற சொல் பெருக, மல்க, உண்டாக என்ற பொருளில், சங்க நூல்களில் பல இடங்களில் ஆளப்படுகிறது (பதிற்று. 69-16, அகம் 398-18). ஆயினும் அதே சொல் மறைய, அவிய என்ற பொருளிலும் சங்க நூல்களிலேயே ஆளப்படுதல் காணலாம். நந்துதொறும் - அவியும் தோறும் (முல்லை 49). நந்தாவிளக்கு - அவியாத, அணையாத விளக்கு (பட்டின.247).

படு, படுதல் என்ற சொற்கள் தோன்றுதல், மறைதல் என்ற இரு பொருள்களிலும் சங்க நூல்களில் பரக்க வழங்குகின்றன. படுசுடர் (அகம். 213-12) என்னும்போது மறையும் சூரியனையும் படுதிரை (குறு.166-1) என்னும்போது, தோன்றும் அலையையும் ஒரே அடைமொழி சுட்டுவதைக் காணலாம். எற்பாடு என்பது சூரியன் மறையும் சாயுங்காலம் என்றே தொல்காப்பியர் காலம் தொட்டுப் பொருள்படுகிறது. சிவஞான முனிவர் தம்தொல்காப்பிய முதற்சூத்திர

விருத்தியில் 'எற்பாடு - நாள் வெயிற்காலை; சூரியன் உதயமாகும் பொழுது' என விவாதிப்பதற்கு இக் குழப்பமே காரணமாகும்.

நாற்றம் என்ற சொல் முதலில் நறுமணத்தைக் குறித்து, பிறகு கெட்ட நாற்றத்தைக் குறிப்பது காலப்போக்கில் 'எதிரான' பொருளிற்கு மாறியதாகும். மாண்ட, மாண்டார், மாண்டு என்னும் சொற்கள் மாட்சிமையையே முற்காலத்தில் சுட்டின; பிறகு இறந்துபோன எனப் பொருள்படலாயின. சங்ககாலத்தில் 'நீண்டவழியில் இறந்த தலைமகனைப்' பற்றிப் படிக்கின்றோம். 'நெடுஞ்சுரம் இறந்தான்' என்றால், கடந்தான் என்று பொருள். இன்று சாலை வழியே 'இறந்தான்' என்றால் 'என்ன விபத்து' என்று கேட்பார்கள்! ஒரு குறிப்பிட்ட பொருள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் முடிந்து, அடுத்த பொருள் அது முடிந்தபின் தொடங்கும் என்பதில்லை. எனவே சமகாலத்தில் இரு பொருள்கள் - எதிரான பொருள்கள் அருகிக் காணப்படுதல் இயற்கையேயாம்.

இறத்தல் - கடந்து செல்லுதல் என்றும் சாதல் என்றும் பொருள்படுகின்றது. சங்க காலத்தில் 'தலைமகன் பாலை வழியில் இறந்தான்' - என்றால், அவ்வழியைக் கடந்து சென்றான் என்று பொருள்.

# 5

# சொல்நயமும் சொற்சுவையும்

## மட்டந்தட்டுதல்

ஒரே துறையிலுள்ளவர்கள் அடிக்கடி 'என்னை மட்டந்தட்டப் பார்க்காதே' என்று சண்டையிடுவதைப் பார்த்திருக்கிறோம். தனக்குப் பிடிக்காதவர்கள் கொஞ்சம் உயர்வாக இருந்தாலும் அவர்களை மட்டந்தட்டுவது ஒரு பழக்கம். யாரும் மிஞ்சிவிடக் கூடாதென்று 'சிலர் மற்றவர்களை மட்டந்தட்டிக் கொண்டே இருப்பார்கள். இந்தச் சொல் எங்கிருந்து வந்தது?

கொத்தனார் 'சித்தாள்களை'ப் பார்த்து (சிற்றாள்) முதலில் குறிப்பிட்ட ஓர் இடத்தை மட்டந்தட்டச் சொல்வார். (செங்கற்களைப் பொறுக்கித்தருவது, மணலை அள்ளித் தருவது போலும் சிறிய வேலைகளைச் செய்பவர்கள் சிற்றாள் - சித்தாள் எனப்படுவர். அவர்களைவிடக் கூடுதலாகக் கனமான வேலை பார்ப்பவர்கள் 'நிமிர்ந்தாள்' எனப்படுவர். பெரிதும் சிற்றாள்கள் பெண்களாக இருப்பர்.) பிறகுதான் அச்சமதரையில் தளம் போடமுடியும். மேடுபள்ளமாயிருப்பதைச் 'சமதரை ஆக்க' மேடுகளை மட்டந்தட்டுவது, அவரைப் பொறுத்தவரை நல்லதுதான். நிச்சயமாக இந்தச்சொல் அவரிடமிருந்து நாம் பெற்றதுதான். ஆமாம், அவரிடம்தானே 'மட்டப்பலகை' இருக்கிறது. அவரைப் பார்த்து, நாமும் மனிதர்களை மட்டந்தட்டக்கற்றுக் கொண்டதுதான் மோசமானது. ஆனாலும் மட்டப்பலகை இல்லாமலே மட்டந்தட்டும் நாம் அவரைவிடத் திறமையானவர்கள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

## பூசி மெழுகுவது எப்போது?

கொத்தனார் தரையில் தளம் போட்டதும் பூசி மெழுகுவார். அப்போதுதான், தளம் சொரசொரப்பின்றி வழுவழு வென்றாகும். நடக்க, புழங்க வேண்டுமேல் தளத்தைக் கொத்துக் கரண்டியால் நன்கு சிமிந்தியையோ, சாந்தையோ இட்டுப்பூசி, சிமிந்திப் பாலை ஊற்றி மெழுகியும் விட வேண்டும். அதனால் சிறிது பளபளப்பும்

உண்டாகும். பூசி மெழுகிய பிற்பாடுதான் தளம் போடும் வேலை முடிவடையும்.

நாமும் ஒரு இரகசியத்தை மறைக்க, குற்றங்குறையைப் பிறரறியாமல் செய்ய வாய்ப் பேச்சாலேயே பூசி மெழுகி விடுவோம். காவல்துறையினர் மீது ஊழல் புகார்கள் என்று கேட்டால், மேலதிகாரிகள் சரியாகப் பதில் சொல்லாமல் பூசி மெழுகிவிடக்கூடும், பூசிமெழுகும்போது தூசி தும்புகள், சிறுகற்கள் யாவும் உள்ளே போய் மறைந்து மேலே சமமாகவும் நன்றாகவும் தெரிவது போல், குற்றங்குறைகளை அமிழ்த்த, மறைக்க, அமுத்திவிட, உலகக் கண்களுக்குத் தெரியாமல் போக்கிவிடப் 'பூசிமெழுகும்' பேச்சுப் பயன்படுகிறது. ஆனாலும் உண்மையையும் உள்ளே வைத்துப் பூசி மெழுகுவது தான் ஆபத்து; என்றேனும் ஒரு நாள் வெடிப்புத் தோன்றாமல் போகாது.

**எதனையும் மழுப்பலாமா?**

ஏதாவது கூர்மையான கேள்வி கேட்டால், சிலர் அதை மழுப்பிவிடுவார்கள். பூசி மெழுகுவது போன்றதுதான் இதுவும். "உங்களுடைய அரசியல் வாழ்க்கையில் பொய்யே பேசியதில்லையா? நீங்கள் கட்சிக்காகக் கையூட்டு வாங்காவிட்டாலும் அன்பளிப்பாகவாவது வாங்கிய தில்லையா?" என்றெல்லாம் வினவினால் சிலர் இலேசாகச் சிரித்துச் சரியான பதில் சொல்லாமல் மழுப்பிவிடப் பார்ப்பார்கள்.

கொத்தனார் திண்ணை ஓரத்தையோ, சிறுசிறு 'நகாசு' வேலைகள் செய்யும் போதோ சில பகுதிகளைக் கூராக்கும்படியும், சிலவற்றை மழுப்பிவிடும்படியும் தன் வேலையாட்களிடம் கூறுவார். 'அந்த ஓரத்தை இன்னும் கொஞ்சம் மழுப்பு' என்பார். அவர் நல்லதற்கு மழுப்பச் சொல்வதைப் பார்த்து நாம் உண்மையை மறைக்கப் பேசி மழுப்பினால், அதற்கு அவரென்ன செய்வார் பாவம்? இப்போதெல்லாம் 'மழுப்பல்' தொழில் கொத்தனாரைவிட, மற்றவர்களிடம்தான் அதிகம் என்கிறார்கள்!.

**கட்டாயம் வேண்டுமா?**

கட்டாயக் கல் வரிசை இரண்டு சுவர்கள் கூடுமிடத்தில் குறுக்காகக் கடடும் செங்கல் வரிசையாகும். கட்டு + ஆயம் + கல் எனப்பிரியும். இதில் குறுக்கு நெடுக்காக வைக்கும்போது

இடைவெளி இல்லாமல் வைக்கும் கல்லே கட்டாயக்கல். அது சரியாக, அசையாமல் இறுக்கமாக மிகச் செறிவாக ஒன்றோடோன்று பொருந்தும்படிக் கல்வரிசை அமையப்பயன்படும். இல்லையென்றால் சுவரின் மூலையில் விரிசல் கண்டு, சுவர் வலுப்படாது போய்விடும். எனவேதான் கட்டாயக்கல் (Cornerstone) வைப்பதில் மிகக் கவனமாக இருக்கவேண்டுமென்று கருதப்பட்டது. அது முக்கியமாக இன்றியமையாது. செய்ய வேண்டியதாகும். எனவே இவ்வாறு இடைவெளி தோன்றாமல் வைக்கும் கல்லே கட்டாயக்கல் ஆகும். அது மிக இன்றியமையாத கட்டுமானக் கல்லென்பது கருத்து. இவ்வாறல்லாமல், சுவரை எழுப்ப, செங்கற்களைச் செங்குத்தாக அடுக்கிப் போவதை நெட்டாயம் என்பர். கட்டாயம் X நெட்டாயம் = எதிர்ச்சொற்கள் என்று தமிழ்ப்பேரகராதி குறிப்பிடுகிறது.

கூரை மேல்பகுதி கூடுபோல் அமையக் கட்டுவதை 'மோந்தாயம் என்பர். அதில் வரிசையாக அடுக்கிப் பொருந்தும் நீளக்கட்டைகளை 'வரிச்சு' என்பர். இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிற் கலைச் சொற்கள் வழக்கிழந்தும் பொருளிழந்தும் வருகின்றன. இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான கட்டிடக் கலைச்சொற்களை, அத்தொழிலில் ஈடுபடுபவர்களே மறந்து வருகிறார்கள். ஆங்கிலம் கற்ற பொறியாளர்களின் ஊடுருவலால், தமிழனின் கட்டிடக்கலைச்சொற்கள் மறக்கடிக்கப்படுகின்றன. புதிய ஆங்கிலச் சொற்கள் அந்தந்த இடங்களில் புகுந்து கொள்வதால் இந்த நிலை ஏற்படுகிறது. இவ்வகைச் சொற்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தொகுப்பது கட்டாயமாகச் செய்ய வேண்டிய பணி அல்லவா?

தமிழர்கள் மேடை ஏறித் தமிழை வாழ்த்தி மணிக்கணக்கில் சொற்பொழிவு ஆற்றுவார்கள். இப்படிப்பட்ட பயனுள்ள பணியைச் சொன்னால், ஒதுங்கிப் போய்விடுவார்கள்.

### கண்டபடி தூற்றுதல்

பயிர்களை அறுவடை செய்து, பொலி தூற்றும் போது வேண்டாதனவெல்லாம் பறந்து புறத்தே போய்விழும்; நெல்மணிகள் பிரித்தெடுக்கப்படும். இந்த உழவுத் தொழிலிலிருந்து தான் 'அவன் கண்டபடி தூற்றுகிறான்', 'இப்படி ஒருவனைப் பற்றிப் பழி தூற்றலாமா?' என்பன போன்ற வழக்குகள் தோன்றியுள்ளன. புகழ்

பரப்புதலைத் தூற்றுதல் என்று குறிப்பதில்லை. தூற்றும்போது வேண்டாதவைகள்தான் காற்றில் கலந்து வெளியில் பறக்கின்றன. அதுபோல உலகிலும் குற்றம் குறைகளே தூற்றப்படுகின்றன. 'போற்றுபவர் போற்றட்டும்; புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்' என்பார் கண்ணதாசனும்!

குமரகுருபரர் தம் நீதிநெறி விளக்கத்தில் (20) "பிறர் பிறர் சீர் எல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காக்க" வேண்டும் என்பார். பிறரது சிறப்பைப் பரப்ப வேண்டும்; அவர் சிறுமையை வெளித்தெரியாமல் காக்க வேண்டுமாம். 'துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்' என்பார் திருவள்ளுவர் (துன்னியார் - நெருங்கிய நண்பர்) நண்பர்களையே சிலர் பழிகூறித் தூற்றுவார்களாம். இன்றோ பிறர் பிறர் சீர் எல்லாம் மறைத்து, அவர்களின் சிறுமைகளையே உலகறியத் தூற்றுகிறார்கள்.

உழவன் தூற்றுவதால் மணிகள் குவிந்தன; மனிதன் 'தூற்றும்' போது சிறுமைகள் குவிந்தன. 'தூற்றுதல்' என்பதற்கு நல்லனவற்றைப் பரப்புதல் என்ற பொருளை மாற்றிக் 'குறைகளைப் பரப்புதல்' என்று இன்று பொருளாகி விட்டது. உழவுத் தொழிலில் வழங்கும் கலைச்சொற்கள், பழமொழிகள், தொடர்கள், பட்டறிவு வகைகள் ஆயிரம் உள. இவற்றைத் தொகுக்கவும் நூற்றுக்கணக்கானவர் முயலவேண்டும்.

**மலை ஏற்று, நல்லா வை**

வட்டார வழக்கு என்பது பேச்சுத் தமிழில் ஓரிடத்திலோ, ஒரு குலத்திலோ குழுவிலோ மட்டும் வழக்கிலிருப்பது. புதுவடிவம் அல்லது புதுப்பொருளில் வழங்கும். ஆங்கிலத்தில் போல மரபுத்தொடர்களை (Idioms and Phrases) நாம் பேச்சு வழக்கில்தான் மிகுதியாகக் காணலாம். அவை இலக்கியத்தில் கற்பனை வளத்தை மிகுதிப்படுத்தவும் சிறந்த இலக்கிய உத்தியாகவும் பயன்படும். 'விளக்கை அணை' என்று கிராம மக்கள் கூறமாட்டார்கள். 'விளக்கை நல்லா வை', 'விளக்கைச் சரியா வை', விளக்கை மலையேற்று என்பார்கள். இத்தொடர்கள் மக்களின் பண்பாடு, நாகரிகத்தையும் காட்டுவன. இவற்றுக்காகத் தனி அகராதிகள் ஆங்கிலத்தில் உண்டு. தமிழில் முழுமையான, பெரிய அகராதிகள் இன்னும் வெளிவரவில்லை.

இத்தகைய அழகான மரபுத்தொடர்கள், 'குறியீட்டுச் சொற்கள் - 'படிமங்கள்' தமிழில் பல்லாயிரம் உள்ளன.

**கட்டவிழ்த்து விட்டநிலை**

'கூட்டத்தினர் மேல் காவலர் பட்டாளம் கட்டவிழ்த்து விடப்பட்டது' என்று தலைப்புச் செய்தி. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது; திருட்டும் கொள்ளையும் கட்டவிழ்த்து விடப்பட்டுவிட்டன. மக்கள் திகிலடைந்துள்ளார்கள் என்றும் செய்தி வெளியிடப்படுகிறது.

தொழுவத்தில் கட்டிக்கிடக்கும் மாடுகளைக் கட்டவிழ்த்து விட்டால், அவை நாலா பக்கமும் சிதறி ஓடும். வண்டியில் பூட்டிய மாட்டைக் கட்டவிழ்த்துவிட்டால் பிறகு தடத்திலேயே போகின்ற நிலை ஒழிந்தது; எங்கு வேண்டுமானாலும் தறிகெட்டுத் திரியலாம். கட்டுத் தறியிலிருந்து மாட்டை அவிழ்த்து விட்ட நிலைதான், 'தறிகெட்டநிலை'. இன்று தறிகெட்டுப்போச்சு என்கிறோம். இவை எல்லாம் கட்டுப்பாடற்ற நிலையைக் காட்டவந்த சொற்கள். ஆடுமாடு மேய்க்கும் தொழிலிருந்து இன்று சட்டப் பேரவைக்குள்ளும் 'கட்டவிழ்த்த நிலை' புகுந்துவிட்டது. அதனால் நம் அரசியல் 'தறிகெட்டுப்' போய் விட்டது. (தறி - கட்டுத்தறி, மாடு கட்டும் கம்பு போல்வன)

**சரமாரி**

சரமாரியாகக் கேள்வி கேட்கிறார்கள் என்றாலும் சட்டப்பேரவைகளில் யாரும் சரியாகப் பதில் சொல்வதில்லை. சரம் - அம்பு, மாரி-மழை-அம்பு மழைபோல் கேள்விக் கணைகளைத் தொடுப்பதை இது குறிக்கிறது. அன்று போரில், சரமாரி பொழிந்தார்கள்; இன்று விவாத மேடைகளில் பட்டிமன்றங்களில் சரமாரியான கேள்விக்கணைகளைத் தொடுக்கிறார்கள். இது ஒரு மரபுத்தொடர்.

**கொட்டத்தை அடக்க வேண்டும்.**

பிள்ளைகள் ஆடிப்பாடி ஒரே ஆர்ப்பாட்டமாயிருக்கும் போது இப்படிக் 'கொட்டம் பரப்புகிறார்களே' என்பதுண்டு. காது செவிடுபட ஒலி பெருக்கிகளை வைத்துப் பக்கத்துத் தெருவில் ஏதும் நிகழ்ச்சிகள் நடத்தினால் கொட்டமடிக்கிறதைப் பாருங்க, குடியிருக்க விடமாட்டாங்க போலிருக்கே என்று வருத்தப்படுவதைப்

பார்த்திருக்கிறோம். சிலர் இவர்கள் 'ஆடுற ஆட்டத்தைப் பார்த்தீர்களா? இவங்க கொட்டத்தை அடக்க வேண்டும்' என்று கண்டிப்பாகக் கூறுவார்கள்

கொட்டம் என்பது கொட்டு + அம்; அதாவது கொட்டி ஆடும் ஆட்டம். 'கொட்டு' - தோற்கருவிகளைக் கொட்டி முழக்குவதால், அவ்வாறு இசைக்கும் கருவிகளுக்கும் இசைப்பதற்கும் கொட்டு என்று பெயர். 'அங்கே என்ன? கொட்டுக் கேட்கிறதே' என்பார்கள். வெற்றி பெற்றவர்கள் தங்கள் மகிழ்ச்சியைக் 'கொட்டு' மூலம் உலகறிய முழக்கி மகிழ்வார்கள். 'கொட்டாட்டப்பாட்டு' என்பது நிருத்த கீதவாச்சியம். கைகொட்டி ஆடுவது, இசைக்கருவிகைளக் கொட்டி முழக்கி ஆடுவது யாவும் இதில் அடங்கும். 'கொட்டம்' - கொட்டி முழக்கி ஆடுதல் - அந்தக் காலத்தில் கொற்றம் (வெற்றி) பெற்றவர்கள் 'கொட்டம்' ஆடுவார்கள். அதைப் பார்த்த, கேள்விப்பட்ட எதிரிகள் 'இவர்கள் கொட்டத்தை அடக்க வேண்டும்' என்பார்கள். இன்றும் அரசியலில்தான் 'கொட்டமடிப்பதும்' 'கொட்டத்தை அடக்கத் துடிப்பதும்' நடைபெற்ற வண்ணம் உள்ளன.

### சங்கீதம் படிக்காத இசைக் கலைஞர்கள்

உங்களுக்குத் தெரியுமா? சங்கீதக் கலையில் பயிற்சி பெறாமலே அதற்குரிய பல கலைகளைத் திறமையோடு வாசிப்பவர்கள் இருக்கிறார்கள். சிலர் 'ஒத்தூதுவதில்' மிக வல்லவர்களாயிருப்பார்கள்; சிலர் நன்றாகச் சுருதி பிசகாமல் தாளம் போடுவார்கள்; சிலர் எப்போதும் ஜால்ராத் தட்டிய மணியமாயிருப்பார்கள்; ஒருசிலர் தங்களைப் பற்றித் தம்பட்டமடிப்பார்கள்; சிலர் பேச்சு அடிக்கடி அபசுரமாயிருக்கும். ஆனால் இவர்கள் யாரும் இசையை முறையாகக் கற்காமலேயே அன்றாட வாழ்க்கையில் - பேச்சில் இப்படித் தங்கள் நடத்தையை வெளிப்படுத்துகிறார்கள். இவை அத்தனையும் மரபுத்தொடர்கள்.

இவ்வாறே தமிழில் வழங்கும்படியான தொழிற்கலைச் சொற்களையும் படிமங்களாகிய மரபுத் தொடர்களையும், இணைச்சொற்களையும், அடுக்குத் தொடர்களையும், இரட்டைக் கிளவிகளையும், வட்டார வழக்குச் சொற்களையும் தொகுத்தால் தனித்தனி அகராதி ஆகும்.

குறியீடுகளாக, படிமங்களாக உட்பொருளோடு பயன்படுத்தப்படுபவை மிக அழுத்தமான மெய்ப்பாட்டுடன் கருத்தை வெளிப்படுத்த உதவுகின்றன. அப்போதுதான் இரசபாவனை - உள்மன ஆழ்நிலை உணர்வு புறத்தே தெரிவிக்கப்படுகிறது. "அடுத்த தெருவில் இரண்டு நாள்களாக ஆடிப்பாடி ஆரவாரம் செய்கிறார்கள்" என்று சொல்வதற்கும் "அடுத்த தெருவில் இரண்டு நாளாகக் கொட்டமடிக்கிறார்கள்" என்பதற்கும் எவ்வளவு வேறுபாடிருக்கிறது என்பதைப் பயன்படுத்திப் பார்த்தால்தான் தெரியும்.

## குறுக்குச்சால் ஓட்டாதீர்

அண்மையில் ஒரு கட்டுரையில் 'நூற்கள்' என எழுதியிருக்கக் கண்டேன். காலின் பன்மை கால்கள்; வேலின் பன்மை வேல்கள். அது போல நூலின் பன்மை நூல்களாகத்தான் இருக்கமுடியுமே தவிர 'நூற்கள்' ஆக இயலாது. நூற்பொருள் நூற்கோவை என ஒலிப்பது சரியே. அப்பழக்கத்தால், வல்லின முதல் மொழியான கள் சேரும்போது நூற்கள் என்றுதானே வருமென விவாதிக்கலாம். அவ்வாறெனில் காற்கள், வேற்கள் எனப் பிறவற்றையும் மாற்றலாமா?கள் விகுதி சேரும்போது இயல்பாக இருப்பதே நலம். சால்களின் மீதே ஏர் ஓடவேண்டும். சாற்கள் ஆக்கிக் குறுக்குச்சால் ஓட்டக்கூடாது.

சால் என்பது உழுததடம். சால்மீதே பின்னே போகும் ஏர்களும் உழவேண்டும். ஒருவன்மட்டும் குறுக்கே உழுது போனால், நிலம் பாழ்ப்பட்டுப் போகும். வரிசைப்படி நாற்றுநட, பாத்திகட்டி நீர்பாய்ச்ச முடியாது. அதுபோல, எச்செயலையும் ஒழுங்காகச் செய்ய விடாது, குறுக்கே மறித்துத் தடை ஏற்படுத்துவதைக் குறுக்குச் சால் ஓட்டுவதென்பர்.

## செலவில்லாமல் காது குத்துவது

யாராவது நம்மை ஏமாற்றுவது போல் பேசினால், "சும்மா காது குத்தாதே", ஏற்கெனவே துளை இருக்குப் பாரு என்று எதிர்த்துப் பேசுகிறோம். ஒரு முசுலீமை இந்துவாக ஏமாற்றி, மாற்றிவிட முயல்வதை முதலில் இது குறித்தது. "எனக்கு என்ன குல்லாப் போடப் பார்க்கிறியா?" என்று சீற்றத்தோடு கத்துகிறோம். முதலில் ஓர் இந்துவை மடக்கி முசுலீமாக்க முயன்றபோது வந்த சொல் இது.

"என்னை எமாற்றி மொட்டை அடிக்கப் பார்க்கிறான்" என்னும்போது, முற்காலத்தில் ஒருவனைச் சமணனாக்கிய தந்திரத்தைச் சுட்டியதே, இன்று செலவில்லாமல் பலர் மற்றவர்களை மொட்டை அடிக்கும் தந்திரத்தைக் குறிக்கிறது. "நாமம் போட்டுவிடடான்" என்பதும் "பட்டை அடித்துவிட்டான்" என்பதும் கட்டாயப்படுத்திச் செய்யப்பட்ட வைணவ, சைவசமய மாற்றங்களையே குறிக்கின்றன. "காதிலே பூ வைக்காதே" என்பதும் பிற சமயத்தவனை இந்துவாக்கிவிடும் முயற்சியைக் குறிக்கிறது. இவையெல்லாம் காலங்கடந்த காலத்தில் இன்று வெறுமனே "மரபுத் தொடர்களாய்" விட்டன. ஏமாற்றுதல், தந்திரம் செய்து கவர்தல் என்ற பொதுப்பொருளில் மட்டுமே வழங்குகின்றன.

முன்பு ஒருமுறை கி.வா.ஜகந்நாதன் அவர்கள் இத்தொடர்களின் பொருளை இவ்வாறு விளக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய "மரபுத் தொடர்கள்" (Idioms and phrases) தமிழில் ஆயிரக்கணக்கில், தனி அகராதி தொகுக்குமளவுக்கு வழங்குகின்றன. யார் தொகுப்பது, யார் வெளியிடுவது என்பதை விட, அப்படி முயன்று செலவழித்து வெளியிட்டால் எத்தனைபேர் வாங்கிப் படிப்பார்கள் என்பதுதான் பெரிய பிரச்சினையாக உள்ளது. வெளியிட்டவனை "மொட்டையடித்து விடுவார்கள்" என்னும்போது, நான் ஒன்றும் உங்களுக்குக் "காது குத்தவில்லை"; உண்மையைத்தான் சொல்கிறேன்!

"உங்களுக்கென்ன வெளியிடுங்கள்" என்று நீங்கள் என் காதில் பூச் சுற்ற நினைக்கலாம். அதை நம்பி நான் ஆற்றில் இறங்கிவிட மாட்டேன். ஏனெனில் இந்தத் தமிழர்களை நம்பினால், நம்மை நட்டாற்றில் விட்டுவிடுவார்கள்! நம் மரபுத்தொடர்ச் செல்வம் விளங்குகிறதா?

### கடலோடிகளின் முன்னோடிகள்

'கட்டமரம்' (கட்டுமரம்) என்ற சொல்லும் 'Catamaran' என ஆங்கில வழக்கிலேறி, அம்மொழி அகராதிகளில் புகுந்துள்ளது. கடல் கடப்பதில் தமிழர்கள் முன்னோடிகளாக இருந்ததால்தான் 'கட்டமரான்' என இச்சொல் அங்குச் சென்று கலந்துள்ளது. அதன் பிறகு நாவாய், கலம், வங்கம் எல்லாம் கண்டு வளர்ந்தாலும் 'கட்டுமரம்' தான் முன்னதாகப் பரவியது. நம் கட்டுமரம் பாய்கட்டிய மரமாகிப் பாய்மரக் கலம், நாவாய் ஆனது. கலம் – என்றாலே

கப்பலைக் குறித்தது. கிரேக்க நாட்டவர்களும் வேகமாக வளர்ந்து கலங்கள் கண்டனர். 'வினைமாண் நன் கலம்' என அழகழகான, பெரிய பாய்மரக் கப்பல்களை அப்போதே செய்யத் தொடங்கிவிட்டனர் எனத் தெரிகிறது. எனினும் நம் நாவாய் என்பதுதான், கிரேக்கம், இலத்தின் மொழிகளின் வழியாகப் பரவி, ஆங்கிலத்தில் நேவி (Navy) ஆனது.

சந்தன மரம் தமிழகத்திலும் கேரளம் மற்றும் கருநாடகத்திலும் மிகுதியாகக் காணப்படுவது. 'சாந்தில் தொடுத்த தீந்தேன்' எனச் சந்தன மரம் 'சாந்து' என்று நற்றிணையில் இடம் பெறும். தமிழிலும் வடமொழியிலும் காணப்படும் சந்தனச் சொல் ஆங்கிலத்தில் (sandal Wood) என்று வழங்குகிறது. இதிலிருந்து தெரியும் உண்மை என்ன? நம்மிட மிருந்து பொருள்கள் போனால், நம் சொற்களும் போகும் என்பது தெரிகிறதல்லவா?

நம்மிடமிருந்து பொருள்கள் ஏற்றுமதியானால் நம் சொற்களும் அங்கே ஏறும். இன்று நாம் பிறர் உருவாக்கிய பொருள்களையே மிகக்கூடுதலாக வாங்கிப் பயன்படுத்துவதால், அச்சொற்களும் தாமாக வந்து நம் மொழியில் ஏறுகின்றன. இதைத் தடுத்து நிறுத்த நாம் வளர வேண்டும். ஆனாலும் நாம் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கும் நம் குழுமங்களுக்கும் கூட நாம் தமிழ்ப்பெயர் வைப்பதில்லையே.

### ஏற்றுமதியான நாகரிகம்

தமிழில் 'கறி' என்ற சொல் மிளகைக் குறித்தது. அந்தக் காலத்தில் குழம்பு, இரசம் போன்றவற்றில் மிளகைத்தான் பயன்படுத்தினார்கள். பின்பு மிளகுபோல் குழம்பில் சுவை சேர்க்கப்பயன்பட்ட, புதிதாக வந்த காயை மிளகாய் என்றார்கள். சங்க காலத்தில் உலககெங்கும் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது. (மிளகு+காய்= மிளகாய்) யவனர்கள் பொன்னைக் கொடுத்துவிட்டு மிளகை வாங்கிக்கொண்டு பாய்மரக் கப்பல்களில் சென்றதைச் சங்கப் பாடல்களால் அறிகிறோம்.

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளம் கெழுமுசிறி" (அகம்.149)

(வினை-தொழில் நுட்பம். கலம் - பாய்மரக்கப்பல், நாவாய்)

இதனால் 'கறி' என்ற சொல்லும் பிற மொழிகளில் இடம் பெற்றது. ஆங்கிலத்தில் எந்த அகராதியிலும் (Curry' என்ற சொல்லைப் பார்க்கலாம். இச்சொல் நம் நாகரிகத்தின் சிறப்பைக் காட்டுவது போல் பல மொழிகளிலும் சென்று இவ்வாறு வழங்கப்படுகிறது.

ஆங்கில அகராதிகளில் 'கூலி' (coolie, Cooly) என்ற சொல்லையும் தவறாது காணலாம். 'கூலம்' என்ற சொல் தானியத்தைக் குறிக்கும். அதனையே வேலைக்குத் தரும் பணமாகக் கொடுத்ததால், கூலி வந்தது. பின்பு கூலிக்குக் காசுக்கு வேலை செய்து அங்ஙனம் வாங்கும் பணத்தைக் குறித்தது. பின் அங்ஙனம் வேலை செய்பவனையே குறித்தது. திருவள்ளுவர் மெய்வருத்தக் கூலி தரும் என்றது, பயன்தரும் என்ற பொருளிலாகும். இந்தச் சொல்லும் தமிழன் கூலியாளாய்ச் சென்ற எல்லா மொழிகளிலும் சென்று வழங்குகிறுது. கறி, கூலி போன்ற சொற்களுக்குக் கீழே (Tamil) என்று அடைப்பில் போட்டிருப்பதைச் 'சேம்பர்ஸ்' அகராதியில் பார்க்கலாம். வெளிநாட்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் உடலுழைப்பு வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்ட வேலையாட்கள், வெளி நாட்டவர்க்கு அடிமை வேலை பார்க்கும் இந்திய வேலைக்காரர்கள் எனஇச் சொல்லுக்குப் பொருள் எழுதப்பட்டிருக்கும். இச்சொல் நம் நாகரிகம் இறங்கி வந்ததைக் காட்டுகிறது.

## 'கயிறு' திரிப்பதும் நல்லதே

'சும்மா கயிறு திரிக்காதே' என்கிறோம். 'மணலைக் கயிறாகத் திரிக்க' வல்லவர்களைப் பற்றிப் பேசுகிறோம். உண்மையான கயிறு திரிக்கத் தென்னை நார் – தேங்காய் நார் மிகவும் பயன்பட்டிருக்கிறது. கல்வெட்டுகளில் 'கயர்' காணப்படுகிறது. உலக வழக்கில் கயறு, வயறு என்பதைக் 'கயற்' (உ), வயற் (உ) என்று குற்றியலுகரமாக உச்சரிக்கும் பழக்கம் உளது. மலையாளத்தில் இப்பேச்சு வழக்குவடிவமே காணப்படுகிறது. தகழி எழுதிய ஞானபீடப் பரிசு பெற்ற நாவலுக்குக் 'கயறு' என்று பெயர். இங்கிருந்து இத் தொழில் பிற நாடுகளில் பரவியதால், ஆங்கில அகராதிகளில் 'காய்ர்'- coir என்ற சொல் (Coconut Fibre) இன்றும் காணப்படுகிறது. சங்கப் பாடல், திருக்குறள், சிலம்பிலெல்லாம் காணப்படும் கயிறு, சேர நாடாம் கேரளம் வழியாக இவ்வாறு காயர் ஆகி வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகியுளது. சில உதிரிச்செய்திகளை வைத்துக் கொண்டு, பொய்க் கதையாக வடிவம் கொடுப்பதையே 'கயிறு திரிக்கிறான்'

என்று குறிப்பிடுகிறோம். கெட்டதைத் திரிப்பது குற்றம். அதனால் பொய்யாக் 'கயிறு திரிப்பதை' நாம் விட்டுவிட வேண்டும். இதனை 'ரீல் (reel) விடுகிறான்' என்று கொச்சையாக்கிக் கயிறு திரிக்கும் தமிழனை என்ன சொல்வது?

**'தங்களுக்குத்' தெரிவித்துக் கொள்கிறேன்.**

எதிரே உள்ளவரிடம் நேரே பேசாமல் 'தங்களுக்கு இது தெரியுமா?' என்று மரியாதையாகக் கேட்கிறோம். 'தங்களைத் தலைவராக அழைக்க முடிவு செய்தோம்' என்று கவுரவப்படுத்திப் பேசுகிறோம். 'தாங்கள்தான்' 'தங்கள்' சமூகத்திற்கு விண்ணப்பம், ''தன்னிடம் ஒன்று கேட்க வந்தேன்' என்று முன்னிலையாரிடம் பேசும் சிலவழக்காறுகள் உள்ளன. பேசும்போது 'ஐயா கிட்ட ஒரு காரியமாக வந்தோம்', 'சாருகிட்டே ஒரு விண்ணப்பம்' என்று தொடங்குவதும் ஒரு மரபாக உள்ளது. His Highness, His Excellency என்பனவற்றைப் பார்த்து வந்தனவல்ல இவை. கடித இறுதியில் Yours faithfully, Yours lovingly என்பனவற்றைத் தமிழில் 'தங்கள் நம்பிக்கைக்குரிய', 'தங்கள் அன்புள்ள' என்றுதான் எழுதுகிறோம். மாதவி கோவலனுக்குக் கடிதம் எழுதும் போது "அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்" என்று தொடங்கினாள். 'அடிகளாகிய தங்கள் முன்' என்று பொருள். சிவபெருமான் சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுகப் பாசுரத்தில் "செருமா உகைக்கும் சேரலன் காண்க" சேரமன்னர் காண்க எனப் படர்க்கைப்படுத்தியே கடிதத்தைத் தொடங்குகிறார். திருவருட்பிரகாச வள்ளலார் தம் திருமுகங்களில் - கடிதங்களில் - முன்னிலைப்படுத்திப் பேசவேண்டிய இடங்களில் எல்லாம் 'தங்களிடம் அனுப்புகிறேன்', 'தங்களுடையவும் க்ஷேம சரித்திரங்களைத் தெரிவியுங்கள்' என்றிவ்வாறே, மிகமரியாதையுடன் எழுதுகிறார். எனவே மரியாதை மிகமிகக் குறைந்துவரும் இந்நாளில், மிக்க மரியாதையுடன் தங்களிடம் இதைத் தெரிவிப்பதில், மகிழ்ச்சியடைகிறேன்.

# 6

# சொல்நுட்பமும் சொல்லாய்வும்

## மெல்ல மெல்ல

'மெல்லநட மெல்லநட உன் மேனி என்னாகும்' என்று திரைப்படப் பாடல் ஒன்று இசைக்கிறது. மெல்ல என்பதற்கும் மெள்ள என்பதற்கும் என்ன வேறுபாடு? 'மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி' என்பது புறநானூறு (73). 'மெல்லப் பேசு' என்று மெல்லியலைக் கேட்பது இன்றைய திரையிசை. இச்சொல் அழுத்திப் பேசி 'மெள்ள' வாகி விட்டது. இப்போது மெல்ல என்பது மகளிர் நடப்பது போல் மென்மையாக என்றும் 'மெள்ள' என்பது விரைவின்றி என்றும் பொருள்தருவன போல் தோன்றுகின்றன. உண்மை அஃதன்று. மெல்ல என்பதே மென்மைப் பண்பையும் விரைவுக் குறைவையும் உணர்த்தும். 'மெல்லப்பேசு' என்றால் சத்தமின்றி என்றும் 'மெல்ல நட' என்றால் விரைவின்றி மெதுவாக என்றும், இதுபோல் இடம் நோக்கிப் பொருள்படும். பேச்சில் 'மெள்ளவா, மொள்ள வா, மொள்ளமா வா' என்று திரிக்க முடிந்த அளவு திரிப்பதைப் பார்க்கலாம். இவற்றை மெல்ல மெல்லத் திருத்தியாக வேண்டும். 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்று எவனோ ஒரு பேதை கூறினதாகப் பாடிய பாரதி, புலவர்களின் தவவலியாலும் இறையருளாலும் தமிழ்த்தாய், இவ்வுலகில் என்றும் நான் நிலைபெற்றிருப்பேன் என்று கூறியதாகப் பாடலை முடித்துள்ளார். ஆனால் நம் நாட்டுப் பேதைகள் பலர் மெல்லத் தமிழினிச்சாகும் என்றே, பாரதி பாடி விட்டதாகக் கூறி, தாம் செத்து மடிகின்றனர்.

மென்மையிலிருந்து பிறந்த மெல்ல, எவ்வாறோ மெள்ளவாகி விட்டது!

சோளிங்கர் கே.கே. தாதாசாரி கூறும் கருத்தும் சிந்திக்கத் தூண்டுவதாக உள்ளது.

மெல்ல என்ற சொல்லை அழுத்திப் பேசி 'மெள்ள' வாகி விட்டது என்று கூறப்பட்டுள்ளது சரியல்ல. இந்த இரு

சொற்களுக்கும் வேறுபாடு உண்டு. திருப்பாவை ஆறாம் பாசுரத்தில் 'மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம்' .. என்று வருவதைக் காண்க. திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழி 8ஆம் பத்து 10 ஆம் திருமொழி 7ஆம் பாசுரத்தில் 'துள்ளுநீர்' மெள்ளத் துயின்ற பெருமானே, என்று வருகிறது. இவற்றினை மெல்ல எனத் திருத்த முடியுமா? ஆகவே மெல்ல, மெள்ள எனும் இரு சொற்களும் தமிழில் உண்டு.

இதிலிருந்து மங்கலம் மங்களம் ஆனது போல மெல்லவும் மெள்ளவானதாகக் கொள்ள வேண்டியுள்ளது. எனினும் 'மெல்ல' - என்பதே மூலச் சொல். அது 'மெள்ள' ஆனது திரிபுச் சொல்.

**பதற்றம்**

'பதறுகிறது நெஞ்சம்' என்கிறோம். 'சும்மா பதறாதே' என்று சொல்கிறோம். பதறு +அம் பதற்றமாகும். 'வடக்கு மாகாணத்தில் பதற்ற நிலை' என்பதுதான் சரி. பதட்டம் என்பது பதற்றத்தில் தப்பாக வந்து விட்டது. பதடு, பதட்டம் என்று சொற்களில்லை. தமிழைச் சிறிது கவனித்து எழுதினால் பதற்ற நிலை தணியும்; அமைதி தவழும். பதற்றத்தைப் பேச்சு வழக்கில் பதட்டமாக்கி நாளேடுகள் 'பதட்டநிலை' என்று தலைப்பிடுவதால், இன்னும் தமிழ்வளர்ச்சியில் 'பதற்ற நிலையே' நீடிக்கிறது! எத்தனை முறை எழுதினாலும் சில தமிழ்க்கொலை ஊடகங்ள 'பதட்டம்' என்ற, தப்பான சொல்லையே பயன்படுத்துகின்றன. அவற்றுக்கு நாம் பதறாமல் நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்.

**பிழைப்பு**

முன்பெல்லாம் பிழைத்தல். பிழைப்பு என்ற சொற்கள் பிழை செய்துவிடுதல், தவறிவிடுதல் என்ற பொருள்களிலேயே வழங்கின. கம்பராமாயணத்தில் பரதனை முதலில் கண்டதும் கடும் சீற்றம் கொண்ட குகன், பிறகு "எம் பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு?" (30) என ஆறுதலடையக் காண்கிறோம். இங்குப் பிழைப்பு - தீங்கு எனப்பொருள் தருகிறது.

ஆனால் இன்று 'பிழைப்பு' என்றால் உயிர்வாழ்தல் என்றாகிவிட்டது. 'என்ன அவரு பிழைப்பாரா, உயிர் பிழைக்குமா?' என்றெல்லாம், கேட்கிறோம். 'ஏதாவது பிழைப்புக்கு வழி பார்'

என்று தூண்டுகிறோம். உயிர் வாழ்தல், வாழ வழி தேடுதல் என்ற பொருள் பிறப்பட்டதாகும்.

'வயிற்றுப்பிழைப்பு' என்றால் இன்றைய நிலைப்படி 'உணவுண்டு' வாழ்வதைக் குறிக்கிறது. 'நான் பிழைக்க வந்தேன்' என்று முன்பு சொன்னால் உதைப்பார்கள்; இன்று பலரும் ஒருங்குகூடிப் பிழைக்கப்போகிறோம்.

அம்பு குறி பிழைப்பது அம்பு, குறிதவறுவது தப்பாகிவிடுவது. இதனால் குறிதப்பிப் பிழைத்துப்போகிறது, மான். பிறகு எப்படிப் 'பிழைப்பு' உயிர் வாழ்வதானது? காலப்போக்கில் பிழைத்துப் போதல், குற்றம் குறை, பாவங்களினின்றும் உயிர் தப்பிப் போவதைக் குறிக்கலாயிற்று. அதிலிருந்து அச்சொற்பொருள் வளர்ச்சி பெற்று, பிழைத்தல் - வறுமையிலிருந்து தப்பித்தல், விடுபடுதல் என்றாகி, பின்னரும் அது பிழைத்தல் - உயிர் வாழ்தல் என்று பொருள் தந்தது. அவர் 'உயிர் பிழைப்பாரா?' - என்றால், நோயினின்று விடுபட்டு, தப்பித்து மீண்டும் உயிர் பெறுவாரா, வாழ்வாரா என்றானது. பிழை செய்தலையே குறித்துப் 'பிழை' - 'பிழைத்தல்' - 'பிழைப்பு' என வழங்கிய பழஞ்சொல், உயிர் பிழைத்தலாகி, வாழ்தல் என்ற பொருளுக்கு வந்தது, ஒரு சொற்பொருள் எவ்வாறெல்லாம் காலந்தோறும் வளரக் கூடும் என்ற விந்தையைக் காட்டுகிறது.

**தவறும் பிழையும்**

தவறு எனலாமா? பிழை எனலாமா? எனக்கேட்டால், 'இரண்டும் தப்பில்லை' என்று சொல்லிவிடலாம். என்றாலும் அவற்றிடையே காணப்படும் நுட்பமான பொருள் இழைகளை நினைவுபடுத்தலாம். உலக வழக்கில் பலமுறை பயன்படுத்தி, நுட்பமான பொருள் வேறுபாடுகள் தாமே அமைகின்றன. அத்தகைய நுண்கருத்துக்களை நம் மனம் உணர்ந்தாலும் சொல்ல வருவதில்லை; சிலவற்றில் சொல்லத் தெரிவதில்லை. சொற்களின் பொருள் அவற்றின் வேரில் மட்டுமில்லை; வழக்காறு ஆட்சியிலும் இருக்கிறது.

ஒரு பொருள் காணாமல் போனதைத் 'தவறிவிட்டது' என்கிறோம். 'தவறி விழுந்து விட்டார்' என்பதற்கும் 'இடறி விழுந்து விட்டார்' என்பதற்கும் வேறுபாடுண்டு. தன்னை அறியாமல் தடுமாறி விழுவதையே முன்னது குறிக்கும். ஒன்றில் எதையேனும் சோர்ந்து,

அயர்ந்து, மயங்கி விட்டுவிடுவதே 'தவறுதல்'. ஒருவர் அகால மரணமடைந்ததைத் 'தவறி விட்டார்' என்பர். 'அவர் தவறி நாளாகி விட்டதே' என்றால், வெறுமனே இறந்தார் என்று மட்டும் ஆகாது. இடையில் காலமாகி விட்டதையே அவ்வாறு குறிப்பர். 'வாய் தவறிச் சொல்லி விட்டேன்' என்றால் ஏதோ தடுமாறிப் பேசிவிட்டதாக (Slip) ஆகும். சிலர் 'வழி தவறிப்' போய்விடுவர்.

யானைக்கும் அடி சறுக்கும். ஒருவரிடம் தவறு காண்பது எளிது. 'காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால், காணேன் தவறல்லவை' (1286) என்ற குறளில், கணவனிடம் தவறு காணும் தலைமகளைப் பார்க்கிறோம், "நீயும் தவறில்லை; உன்னை வெளியே அனுப்பிய .நுமரும் தவறிலர்; நீ வருவதைப் பறை அறைந்து முன்கூட்டி அறிவிக்காத அரசனே தவறுடையான்" என்று, காதலன் ஒருவன் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவளைப் பார்த்துக் கூறுவதாகக் கலித்தொகையில் ஒரு பாடல் இடம்பெறுகிறது (56) முன்பு 'தவல்' என்ற சொல் தவறு என்ற பொருளில் வழங்கியதையும் சங்கப்பாடல்களில் காணலாம். பிழை என்பதும் 'தவறு' தான் என்றாலும், வழக்கில் இடம்பெறும்போது, சற்று ஆழமான கூடுதலான தப்பினைச் சுட்டிக் கூறப் பயன்படுகிறது.

## பிழை

பிழை என்பதும் தவறுதல் என்ற பொருளில் ஆளப்பட்டது தான். 'யானை பிழைத்த வேல்' (குறள் 772) என்றால், யானைமேல் எய்த வேல் பிழைத்துவிட்டது - குறி தவறி விட்டது என்பது பொருள். 'செந்தொடை பிழையா வீரர்' பற்றிப் புறநானூறு(3) பேசுகிறது. எய்யும் அம்பு பிழையாதவர்களாம். இன்றும் ஒரு நாயைக் கல்லால் அடிப்பவன் அது தப்பி ஓடிவிட்டால் 'பிழைச்சிப் போச்சு' என்கிறான். இன்று அதை 'உயிரோடு போய்விட்டதாக' மாற்றிப் பொருள் கொள்கிறோம். நாம் எறிந்த கல்தான் பிழைத்து விட்டது - குறி தவறி விட்டது.

பிழ்ையா வானம், பிழையா விளையுள் என்னும்போது தவறாது பயன்தரும் மழையையும் பயிரையும் குறிப்பிடுவர். கற்புடை மகளிர் வாழும் நாட்டில் வானம் பிழையாது என்பர். தவறாது பெய்யும் என்ற பொருளிலிருந்துதான், பிழை செய்யாது என்ற பொருள் வளர்ந்தது.

பிழை என்பது கடும் தவறு; அறிந்து செய்யும் தவற்றையே அது பெரிதும் சுட்டும். வானம் பிழைத்தால் உயிர்கள் மாள்வதுபோல், கடும் விளைவுகளை ஏற்படுத்தும் ஒன்றைப் 'பிழை செய்ததாக'க் குறிக்கலாயினர். 'பிழை உயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்' (சிலம்பு 25:101) என்னும் போது மழையின்மையால் ஏற்படும் தீங்கு மிகுதியே அவ்வாறு கூறப்படுகிறது. தாமப்பல்கண்ணனார் சோழமன்னனுடன் வட்டாடிய பொழுது புலவர் காயை மறைக்க முயன்றாராம். அங்ஙனம் தாம் பிழை செய்திருக்கவும் மன்னன் நாணியதாக அவர் பாடுகிறார். "நின் யான் பிழைத்தது நோவாய் எனினும், நீ பிழைத்தாய் போல் நனி நாணினையே" (43) என்பது தாமப் பல்கண்ணனார் பாடிய புறப்பாட்டு. பட்டினத்தார் திருவேகம்ப மாலையில் 'கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் முதலிய எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்' என இறைவனிடம் வேண்டுகிறார். 'பெரியாரைப் பிழையாமை' திருக்குறள் அதிகாரங்களில் ஒன்று.

எனவே தவறு, சோர்ந்து விட்டுவிடுவது என்றும், பிழை, வலிந்து செய்வதென்றும் விளக்கலாம்.

இவ்வாறு எழுதும்போது ஏதும் தவறு ஏற்படலாம் - விடுபடலாம், ஆனால் பிழை ஏற்படக்கூடாது. தவறு நேரும் போது, வாசகர்கள் கடிதம் மூலம் அதை நிரப்ப முயல்வதைக் கவனிக்க வேண்டும். ஏனெனில் பிழை போலக் கருதி விவாதிக்கும்போதுதான் கருத்து வேறுபடும். எனவே தவறு வேறு, பிழை வேறு என்றால் அது தவறாகாதுதானே?

'வாய்தவறி வந்துவிட்டது', தட்டச்சில் தவறுகள் பல உள்ளன என எதிர்பாராது, சோர்வினால் நேர்வனவே குறிக்கப்படுகின்றன. இப்பொழுது சொல்லுங்கள் : பிழை வராமல் காக்க வேண்டும்; தவறு நேராமல் பார்க்க வேண்டும்.

### தப்பும் தவறும்

தப்பு என்ற சொல்லும் முதலில் தவறி விட்டமையையே சுட்டியது. 'மருந்தாகித் தப்பா மரம்' (குறள் 217) என்றால் தவறாமல் பயன்தரும் மரம் ஆகும். 'துய்ப்பேம் எனினே தப்புந பலவே' (189) என்ற புறப்பாட்டு, கைவிட்டுத் தப்பிப் போகும்- தவறிப்போகும் செல்வத்தைக் குறிக்கிறது. விபத்தினின்றும் அவர் தப்பி விட்டார் என்றால் அகப்படாமல் விடு பட்டார் என்ற நிழற்பொருளுக்கு அது நீளுகிறது.

அதன்பிறகு தப்பு - தீங்கு என்ற பொருளிலும் ஆளப்பட்டது. 'பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்' (புறம் 34) என்றால் அந்தணருக்குத் தீங்கிழைத்த என்று பொருள். இச்சொல் 'தப்பல்' என்றும் வழங்கியது. எந்தத் 'தப்பும்' செய்யாதே - தீங்கு செய்யாதே. நெறிமுறையினின்றும் தவறுவது என்றாகி அது பிறகு குற்றம், தீமை, தீங்கு என்ற பொருளுக்கு நீட்சி பெற்று விட்டது. தப்பித்தான் என்றால் தவறு செய்தவன் என்ற கருத்திலேயே முன்பு ஆளப்பட்டது. (கலி 149)

இன்று தப்பினான், தப்பிவிட்டான் என்றால் அகப்படாமல் ஓடிவிட்டான், சிறையிலிருந்து தப்பிவிட்டான் என்றும் பொருள்படும். ஒருவர் இறந்ததைத் தவறிவிட்டார் என்பது போல், இன்னாருடைய தாய் தப்பி விட்டார் என்றும் உலகில் பேசுவதுண்டு.

மேலும் நாம் இன்று சிறுசிறு பிழைகளையே தப்பு என்கிறோம். 'தப்பும் தவறுமாய்' என்ற தொடராலும் இதை அறியலாம். சிறு குழந்தைகள் விடும் எழுத்துப் பிழைகளை ஆசிரியர் தப்பு என்கிறார். ஏதேனும் ஒன்றை முறையாகச் செய்யாவிட்டால், அதைப் பார்ப்பவர்கள் 'தப்பு தப்பு' என்பார்கள். ஒரு கணக்குக்கு விடை சரியாக வராவிட்டால் 'தப்பாகப் போய்விட்டது' என்கிறோம். ஆயினும் பெரியவர்கள் விடும் எழுத்துத் தவறுதலை 'எழுத்துப்பிழை' என்கிறோம். எழுத்தில் தப்புவிடுவதைப் பெரிய குற்றமாக நம் பெரியவர்கள் கருதியுள்ளார்கள். 'எந்தத் தப்பும் செய்யாதே' என்னும் போது, எல்லாக் குற்றங்களையும் குறிக்கின்றோம். தவறுவது - அறியாமல் நிகழ்ந்து விடுவது, தப்புவது - அறிந்தும் செய்வது; அறியாமையாலும் செய்வது.

தப்புதல் - துணி துவைத்தலையும் இன்று குறிக்கிறது. துணியிலுள்ள அழுக்கைப் போக்குவதால் இங்ஙனம் குறித்தனர். அழுக்குப்போகுமாறு 'தப்புவது' ஒருமுறை. சிலர் அடித்துத் துவைப்பார்கள். அதனால் வேட்டி கிழிந்து விடும். தப்புவது மென்மையாகக் குலுக்கிக் குலுக்கி மோதித் துவைப்பது.

தப்பை, தப்பு - ஒரு வகைப்பறை, தோற்கருவி. தப்புதல் - அடித்தலுமாம்.

தவறு, பிழை, தப்பு என்பன ஒரு பொருட் சொற்கள் போல் தோன்றினாலும் சிற சிறு கருத்திழை வேறுபாடுண்டு. நாம் தவறின்றிச் செயற்படவும் பிழையின்றி வாழவும் தப்பின்றி எழுதவும்

முயலவேண்டும். இவ்வாறு சில இடங்களுக்கே சில சொல்லாட்சிகள் மிகவும் பொருத்தமாயுள்ளன என அறியலாம். இங்ஙனம் இடமறிந்து வெவ்வேறு சொற்களை ஆளும் திறன் வளர்ந்தால்தான் தமிழ்மொழி நடை சிறக்கும். ஒரு சொல் பொருள் நீண்டு, எத்தனை விதமான நிழற்பொருள்களைத் தரக்கூடும் என்பதற்குத் தப்பு ஓர் எடுத்துக்காட்டு.

**குறையும் குற்றமும்**

குறை தவிர்க்கக் கூடியது; குற்றம் தண்டிக்கப்பட வேண்டியது. குறை ஏதோ ஒன்று நம்மிடம் இல்லாமையைச் சுட்டுகிறது; குற்றம் வலிந்து செய்த பிழையை உணர்த்துகிறது. நம்மிடம் மனக்குறை உண்டாகும், நமக்குத் தரவேண்டிய பாகத்தை, பதவியைத் தராத போது பிறர் பாகத்தை வல்லடி வழக்கால் எடுத்துக் கொள்வது குற்றமாகும். பண்புக் குறை தரக்குறை எல்லாம் நிரப்பப்பட வேண்டியன. அஃதாவது அவற்றிலுள்ள குறைகளைக் களைந்து, நல்லவற்றால் நிறைவு செய்ய வேண்டும்.

சங்ககாலத்தில் மது அருந்துதல், பரத்தைமை எல்லாம் குறையாகக் கருதப்பட்டன; குற்றமாகக் கருதப்படவில்லை. திருவள்ளுவர்தான் முதன்முதல் அவற்றைத் தண்டிக்கவேண்டிய குற்றங்களாக்கி எழுதினார்.

குறை - வெட்டிக் குறைப்பது, ஒன்றன் அளவைச் சிறி தாக்குவது. குறை - வெட்டப்பட்ட மரக்கிளை, இறைச்சித்துண்டு எனவும் பொருள்படும். அதாவது பெரிதைச் சிறிதாக்குவது; குறைப்பது. அதன்படி 'குறை கூறுதல்' என்பது முதலில் தமது செல்வம் முதலியன குறைந்த வறுமையைக் குறிப்பதையே சுட்டியது. இப்போது மருமகளைப் பற்றி மாமியார் எப்போதும் குறை கூறிக் கொண்டிருக்கிறாள். அஃதாவது மருமகள் செய்ய வேண்டியதைச் செய்யவில்லை, அப்படி நடக்கவில்லை என்று கூறுவது. காரியத்தை முழுவதும் முடிக்காமல், குறை வைப்பதையும் இது குறிக்கும். 'அவன் என்னைக் குறை சொல்கிறான்' என்பர். 'வினைக்குறை' என்பது திருக்குறள். சிலர் சாமி குறையோ, பூதத்தின் குறையோ ஏற்பட்டதாகக் கூறுவர். சாமிக்குச் செய்ய வேண்டிய வழிபாடுகளைச் சரியாகச் செய்யவில்லை என்றும் அதனால் சாமி குறை கேட்கிறது என்றும் கூறுவார்கள். 'நான் எழுதியதில் ஏதும் குறை இருக்கலாம்' என்று, ஏதும் விடுபட்டிருக்கலாம் என்பதைக் குறிப்பர். 'குற்றங்குறை'

தீர வேண்டும் என்னும்போது பெரிய, சிறிய பிழைகளைத் தீர்த்து, மன்னித்தருளுமாறு வேண்டுவதாகும்.

ஒருவர் மிகமுயன்று எழுதிய ஒன்றில் நாம் குறை கண்டு பிடிக்கிறோம். கட்டிய வீட்டில் சில குறைகள் உள்ளன என்றுதான் சொல்லவேண்டும்; குற்றங்கள் உள்ளன என்று கூறக்கூடாது. இப்படியே எவ்வளவோ சொல்லிக்கொண்டு போனாலும் குறை பற்றிய செய்திகளிலும் ஏதாவது குறை இருக்கும். நிறையும் குறையும் – நிறை குறை; இணைத் தொடர். அரசன் தன்னிடம் குறை கூறுவார்க்கும் முறைவேண்டுவார்க்கும் தீர்வு காண வேண்டும். இதில் முன்னது ஒருவரின் வறுமை பற்றியதாகும்.

## பிழையும் பிழை திருத்தமும்

எழுத்தில் தப்பு விடுகிறோம்; சில சமயம் வாக்கியத்தில் தவறு விழுகிறது. இவற்றையெல்லாம் எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப் பிழை என்று நம் முன்னோர் குறித்தார்கள். அஃதாவது அவற்றை அவர்கள் குறையாகக் கருதாமல் குற்றமெனவே கொண்டார்கள். அதனால் பிழை விட அஞ்சினார்கள். நாமோ 'ஏதோ சிறு தவறுதானே', 'சின்னத் தப்புத்தானே' என்று அக்குற்றங்களைக் குவித்துக் கொண்டிருக்கிறோம். பிழையைத் திருத்துவதையே 'பிழை திருத்தம்' என்று போடாமல் 'பிழைத் திருத்தம்' என்று போடும் நமக்குப் பிழையின் மேல் மிகுபிரியம் இருக்கிறது. அதாவது பிழையைத் திருத்தும்போதே, அதில் ஒரு பிழை விடுகிறோம்.

## கேடும் கெடுதியும்

ஒரு தலைமையாசிரியர் காலையில் பள்ளி தொடங்கும் போது நடைபெறும் கடவுள் வணக்கக் கூட்டத்தில் மாணவர்களுக்கு ஓர் அறிவிப்பு விடுத்தார். "யாரும் பார்க்கர் பேனா கெட்டுப்போனவர்கள் ஆபிசில் வந்து பெற்றுக் கொள்ளலாம்" என்று அவர் கூறியது வியப்பைத் தந்தது. சில வட்டாரங்களில் கெட்டுப்போதல் என்பது காணாமல் போனதைக் குறிக்க வழங்குகிறது.

பழைய இலக்கியங்களில் இந்தப் பொருளிலும் இச்சொல் வழங்கி வந்திருக்கிறது. அகத்திணையில் 'கெடுதி வினாதல்' என்பது ஒரு துறை. தலைமகன் வேட்டையாடிக் கொண்டு வந்தவன், தன்னிடமிருந்து தப்பிப்போன யானையைத் தேடிக்கொண்டு தினைப்புனம் பக்கம் வருவான். அங்கிருக்கும் தலைவி/ தோழியிடம்

'இப் பக்கமாக என்னிடமிருந்து தப்பி ஓடிய விலங்கு வந்ததா?' என்று அவன் கேட்பதற்குத் தான் 'கெடுதி வினாதல்' என்று பெயர். கெடுதல் அல்லது கெடுதி என்றால் தப்பி ஓடுதல் என்று பொருள்படுதலைக் காணலாம். இன்று கெடுதி என்பதைக் கேடு என்ற பொருளிலேயே ஆள்கிறோம். இதன்படி, கெடுத்தல் - போக்குதல், கெடுதல் - தோன்றாமல் மறைந்து போதல் என்றாகும். குறிஞ்சிப்பாட்டில், தலைவன் 'இறந்த கெடுதியும் உடையேன்' என்கிறான் (142). 'ஓடிப்போன விலங்கொன்றை உடையேன்' என்பது அதைத் தேடிவந்துள்ளேன் என்பதைச் சுட்டும். எனவே 'கெட்டுப்போதல்' - காணாமற் போதல். இது முன்பு இலக்கிய வழக்கு; இன்று வட்டார வழக்கு.

கெடு - அழி, கேடு- அழிவு எனவும் பொருள்படும். 'கடிகாரம் கெட்டுவிட்டது' என்கிறோம். 'ஒரு பெண் கெட்டுப்போன' தாகவும் 'பையன் கெட்டுப் போனான்' என்றும் குறிக்கும் போது ஒழுக்கக் கேட்டையே பெரிதும் நினைக்கிறோம். 'உனக்கு என்ன கேடு', நமக்கு என்ன கெடுதிவருமோ என்றெல்லாம் பேசுகின்றனர். முன்பிருந்த செல்வநிலையிலிருந்து தளர்வதையும் 'கெட்டுப்போனார்' என்பதுண்டு.

எனவே கேடும் தப்பிப் போன ஒன்றைச் சுட்டி, பிறகு தப்பையே - தீங்கையே குறித்தது என்பது இதனால் புலனாகும். 'கேடிலியப்பர்' என இறைவனுக்கு ஒரு பெயருண்டு. அழிவற்றவர் அல்லவா அவர்; நம் கேடுகைள நீக்குபவருமாம்.

### தெளிவுச் சொல் தரும் தெளிவு

"விலை தெளிச்சாச்சு" என்று தங்களுக்குள் வணிகர்கள் அடிக்கடி பேசிக்கொள்வர். இஃது ஓர் அருமையான சொல்.

இச்சொல் தொல்காப்பியர் காலம் தொடங்கி இன்று வரை வழங்கிவருகிறது. ஒரு சொல்லின் பொருள் விரிவடைந்து செல்வதை (Extension of meaning) இச்சொற்பொருள் வளர்ச்சிமூலம் விளக்கலாம்.

### வேர்ச்சொல் — அடிச்சொல்

தெளிதல் - கலங்கிய நீர் சிறிது சிறிதாகத் தெளிவடைதல். இதன் வேர்ச்சொல் தெள், தெள்ளுதல் ஆகிப் பல சொற்களுக்கு அடிச்சொல்லாகிவிட்டது. தெளித்தல் - கொழித்தல். பதரைத் தெள்ளி

மணிகளைச் சேர்க்க, முறத்தில், வைத்துத் தெளிப்பார்கள். அதைப்போலத் தண்ணீரைச் சிதறுவதும் தெளித்தலாயிற்று, இன்று.

கலங்கிய நீர், நீரோட்டத்தில் அழுக்கு, குப்பைகளை வண்டலாக ஒதுக்கிவிட்டுத் தெளிவடைந்து ஓடும் இயல்புடையது. சங்கப்பாடல்களில் தெள் ஒளி, தெள்விளி, தெள் அறல், தெள்ளிசை என்று நூற்றுக்ககணக்கான இடங்களில் 'தெள்' அடைமொழி இடம் பெறுகிறது. கம்பர் கோதாவரி ஆற்றுக்குச் சான்றோர் கவியை உவமை கூறுமிடத்துச் 'சவியுறத் தெளிந்து' என்று கூறுகிறார். இதற்கு 'ஆற்றின் ஆழத்திலே உள்ள பொருளும் நன்கு தெரியும்படித் தெளிதல்' என்று பொருள். இதைக் கவிதைக்கும் பொருத்திச் சொல்லலாம்.

### தெளிவடையும் இடங்கள்

நீர் தெளிவதைப் போன்றதே ஐயம் தெளிதல். படிப்பில் பயின்று பயின்று இருள் நீங்கி அறிவாகிய ஒளியை அடைவதே தெளிதலாகும். மயக்கம் தெளிதல், நோய் நீங்கித் தெளிதல், ஆராய்ந்து தெளிதல் என இது விரிவடைகிறது. 'நோயால் துன்புற்றுக் கிடந்தவரை' 'இப்போது தெளிவாயிருக்கிறார்' என்பதுண்டு.

### தெளிவு — ஞானம்

'நிலம் தெளிய வருகிறேன்' என்னும் போது தெளிய 'கொஞ்சம் கொஞ்சமாக இருள் நீங்க' என்பதாகும். தெளிவு - அறியாமை இருள் நீங்கி அறிவுறுதல். தெள்ளியர் - அறிவுடையார். தெளிவு - ஞானம். மிகவும் சீரிய அறிவுடையவரைத் 'தெளிவானவர்' என்பது பேச்சிலும் உண்டு. நன்னூல் பாயிரம் 'கலை பயில் தெளிவு' பற்றிக் கூறும்.

### தெளிதல் — நம்புதல்

ஒருவரைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பழகி நம்புதலைத் 'தெளிதல்' என்பர். திருவள்ளுவர் 'தெரிந்து தெளிதல்' என அதிகாரம் வகுத்தார். அரசர் தம் அதிகாரிகளைச் சிறிது சிறிதாக நுட்பமுடன் நன்கு ஆராய்ந்து நம்புதலை இது குறித்தது. இதனுடன் தொடர்புடைய பல சொற்களைத் திருவள்ளுவர் ஆண்டுள்ளார். தெளித்த சொல் நம்பிக்கை ஊட்டின சொல் (குறள்:154). தெளிந்தார்

- தன்மீது நம்பிக்கை வைத்தவர் (143) தெளிந்தான் - பிறனை நம்பினவன் (508). தெளிந்தான்கண் - யாரை நம்பினோமோ அவனிடம் (510). தெளிவு - நம்புதல் (513). சிலம்பிலும் 'தெய்வம் தெளிமின் - நம்புங்கள்' என வரும் (30-187).

சங்கப்பாடல்களிலும் இச்சொல்லாட்சி உண்டு. தெளிப்ப(நற்.164). தெளிவு - நம்பிக்கை (நற்.345) தெளிந்தனம் - நம்பினோம் (நற்.197) தெளித்த - நம்பிக்கை ஊட்டின (நற்99).

'தெளிந்தான்' நம்பினவனையும் நம்பப்பட்டவனையும் இடம் நோக்கிக் குறித்தது. தெளிதல் - நாம் நம்புதல் (தன்வினை). தெளித்தல் - பிறரை நம்பவைத்தல் (பிறவினை); சூள் இடுதல் அல்லது சபதம் செய்து உறுதி கூறுதல்.

**விலை தெளிதல்**

பேரம் பேசி விலை தெளிப்பதும் தெளித்தலாயிற்று. இக்கால வழக்கு இது. பலவாறு குழப்பமான நிலைநீங்கி, ஓர் உறுதிப்பாடு வந்ததை இது சுட்டும். பேரம் பேசும்போது குழப்பமாயிருக்கும்; ஒரு முடிவுக்கு வரின் அது தெளிவடையும். விலையைத் தெளியுங்கள், விலை தெளியட்டும், விலை தெளிச்சாச்சு என்பர். விலை, கூலி, வட்டி, கழிவு முதலியன பேசிப்பேசிச் சிறிது சிறிதாக ஒரு முடிவுக்கு வருபவை. எனவே இங்கெல்லாம் தெளிய வேண்டிய நிலை உண்டு. வட்டித்தொகை, கழிவுத்தொகை தெளிந்தால்தான் வாணிகம் சீராக நடக்கும். "விலை திகைஞ்சாச்சு", "விலையைத் திகைக்க வேண்டும்" என்றெல்லாம் வழங்கும் முறைகளும் உள. திகைதல் - இங்கு தெளிதல் என்று பொருள்.

**மூதலித்தல்**

கிராமப்புறத்தில் 'நான் திருடினதாச் சொல்றியே. உன்னாலே மூதலிக்கமுடியுமா?' என்று சண்டை போடுவார்கள், 'நானா உன்னைக் கோமாளின்னு சொன்னேன். யாரு சொன்னா? எங்கே அவங்களை நேரே கூட்டிவந்து மூதலி பார்க்கலாம்' என்று சீறுவார்கள். மூதலித்தல் என்றால்முன் நின்று, நேருக்கு நேர் தன்னிடம் குற்றமில்லை என்று சான்றுடன் நிறுவுதல் - மெய்ப்பித்தல். சில சமயம் கடவுளைக்கூடச் சான்றுக்கு அழைப்பார்கள். சூடத்தை எரிய விட்டு, கையால் அணைத்துச் சத்தியம் செய்வதெல்லாம் உண்டு. குறுக்கே துண்டைப் போட்டுத் தாண்டுவார்கள். இங்கே

மூதலிப்பது, தம்மைக் குற்றம் கூறியவர்களை முன்நிறுத்தி, சாட்சிகளை அழைத்து வந்து, சான்றுகளைக் காட்டியும் தெய்வங்கள் மீது சத்தியம் செய்தும் குற்றம் இல்லை என்று தெளிவிப்பது.

'தெளித்தல்' என்றால் முற்காலத்தில் 'சூளுறவு' செய்தல். தலைவன் தலைவியிடம் உன்னைக் கைவிடமாட்டேன் என்று, களவுக் காலத்தில் சூளுறவு செய்வான். அதற்கே 'தெளித்தல்' என்று பெயர். கலித்தொகையில் ஒரு காட்சி. தலைவன் பரத்தை வீட்டிலிருந்து வந்த போது, அவன் உடம்பிலுள்ள அடையாளங்களைக் காட்டித்தலைவி "உன் தவறுகளுக்கு இவை சாட்சியல்லவா?" என்று ஊடல் கொள்கிறாள். அதற்கு அவன் "என் குற்றமின்மையை நான் தெளிவிப்பேன், அறிவாயாக" - "தேற்றக்கண்டு ஈயாய் தெளிக்கு" (கலி.23.16); "தீதின்மை தெய்வத்தால் கண்டீ தெளிக்கு"(கலி.91.8) என்றெல்லாம் பேசி அவள் மனத்தை மாற்ற முயல்கிறான். தெளிக்கு- தெளிவிப்பேன். என்னிடம் குற்ற மில்லை என்று தெய்வசாட்சியாக மெய்ப்பிப்பேன் என்று பேசுகிறான். இவ்வாறு முன்நின்று 'தெளித்தலைப்' பற்றிப் பல இடங்களில் வருவதால், மூதலித்தல் - மூதெளித்தலோ என ஐயம் ஏற்படுகிறது.

வாசகர்கள் வேறு அடிப்படை சொன்னால் அது பற்றி 'மூதலிக்க' வேண்டியிருக்கும்; சான்று காட்டி நிறுவ வேண்டும்.

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் கி.நாச்சிமுத்து குறிப்பிட்டவை கருதத்தக்கனவாகும் :

மூதலித்தல் என்ற சொல் திவ்வியப் பிரபந்த ஈட்டுரையில் (1.10,5) இடம் பெறுகிறது. இது, உங்கள் மூப்புச்சொம் எனக்குத் தந்தால் மூதலியடி (152) என்று முக்கூடற்பள்ளிலும் இடம் பெறுகிறது. தெலுங்கில் மூதலித்சு என்றும் கன்னடத்தில் மூதலிசு, என்றும் இதற்கு இனச்சொற்கள் உள்ளன. இவ்வழக்குகளையும் ஒப்பிட்டு ஆய வேண்டும். இவை எல்லாம் 'மூதெளித்தலின்' - திரிபு வடிங்களே என்பது தான் தெளிவுபடுகிறது.

## முகத்தலும் மோத்தலும்

முகத்தல், தண்ணீரை வாளியில் நிரப்பி எடுத்தல், 'தண்ணீரை மோந்துக்கிட்டு வா' என்கிறோம். முகந்து கொண்டு வா என்பதையே பேச்சில் அவ்வாறு உச்சரிக்கிறோம். படியில் முகந்து நிறைத்து அளப்பதை முகத்தலளவை என்கிறோம். 'முகவை' என்பது

நீர் இறைக்கும் வாளியைக் குறிக்கும் (பதிற்று.22). 'முகவைப்பாட்டு' என்பது ஏற்றப்பாட்டைக் குறிக்கச் சிலப்பதிகாரத்தில் வருகிறது (10-137). குடத்திலிருந்து குவளையில் 'தண்ணீரை மோந்துக்கிட்டு வா', என்கிறோம். இவ்வாறு பேச்சில் 'மோத்தல்', 'மோக்க வேண்டும்', 'மோந்துகுடி' என்றெல்லாம் வழங்கும்.

முகத்தலிலிருந்துதான் மோத்தல் வருகிறது. மூக்கால் மணத்தை நுகர்தலை 'மோந்து பார்த்தல்' என்றனர். இங்கும் மோந்து, மோத்தல் மோப்பம் என்ற சொற்கள் உருவாயின. கலித்தொகையில் 'மோக்கலும் மோந்தனன்', (54-8) என்று வருகிறது. மதுரைக் காஞ்சி 'மோந்தன்ன', (567) எனச் சுட்டுகிறது. அகநானூற்றில் 'மோயினள் உயிர்த்த காலை' - மோந்து பார்த்துப் பெருமூச்செறிந்த போது (5-24) என இடம்பெறுகிறது. திருக்குறள் 'மோப்பக்குழையும் அனிச்சம்', (80) என்று கூறுகிறது.

மோ என்பது 'முக' என்பதிலிருந்து நீண்டது. பாத்திரத்தினால்முகத்தலும் மூக்கால் முகத்தலும் (மணத்தை உள்வாங்குதல்) ஒன்றே. ஆயினும் தண்ணீரை முகப்பது, பூவை மோப்பது என்றே வேறுபடுத்தி வழங்கலாயிற்று. நாய் மோப்பம் பிடிப்பதில் வல்லது. (பேச்சில் முக - மோ எனமாறும்) பகுத்தல் - பாத்தல்; தொகுப்பு - தோப்பு என மாறுதல் காணலாம்.

இன்று சிலர் 'முகர்தல்' என மணம் நுகர்தலைக் குறிப்பர். தண்ணீரை மோக்க வேண்டும். பூவை முகர வேண்டும் என்பது அவர்கள் கருத்து, முகர்தல் உயர்வழக்கன்று. இலக்கியங்களில் இடம்பெறவில்லை. நுகர்தல் (அனுபவித்தல்) போல, 'முகர்தல்' சொல் வழக்கில் வந்து விட்டது. அவன் மோந்து பார்த்தான் என்பதை முகர்ந்து பார்த்தான் என்று கூறுவர். இதனால் அகராதிகளிலும் 'முகர்'தல் இடம் பெற்று விட்டது. முகத்தலையும் மோத்தல் என்கிறோம். மூக்காலும் மோத்தல் என்கிறோம். முகத்தல், பேச்சில் மோத்தலாவதால் குழப்பமுண்டாகிறது. இதனால் முகர்தல் ஆட்சி இன்று கூடிவிட்டது. மோப்பக் குழையும் அனிச்சம் (90) என்பது போல, மோத்தலே பொருந்தும். மலரின் மணத்தை மோந்து பார்த்து மகிழ்தலை முகர்ந்து பார்ப்பதாக, இன்று கூறுவது, ஒப்புமையாக்கத்தால் வந்து விட்டது. மோத்தல் - தண்ணீருக்கும் வருதலால், முதர்தல் மலருக்கே என நிலைத்து விட்டது.

## எதற்கும் மினுக்கிட்டால்தான் நடக்கும்

ஒருவர் நம்மைத் தேடிவந்தால் 'ஏன் மெனக்கிட்டு வர்றீங்க, ஒரு வார்த்தை சொல்லியனுப்பினா நானே வந்திருப்பேனே' என்கிறோம். 'இதுக்குன்னு மெனக்கிட்டுப் போனியா' என்று கேட்பதுண்டு, பெரும்பாலும் வருவது போவதற்குத்தான் 'மெனக்கிட்டு வந்தியா, மெனக்கிட்டுப் போனியா' என்று கேட்பர். 'இதை மெனக்கிட்டுச் செய்யணுமா' என்று, ஒரு காரியத்தை அதே கவனமாகச் செய்வதற்கும் கூறுவதுண்டு.

'என்னிடம் வந்தால் மெனக்கிடுமோ?' என்பது அக்காலத்தில் இரம்பையின் மீது காதல் கொண்ட தியாகராச பாகவதர் பாடிய பாட்டு. இதனை, 'வின்னகெட்டு' என்பதே இவ்வாறு மருவிவிட்டதென்று கருதுபவர் உண்டு. உலக வழக்கில் காணப்படும் இச்சொல் 'மினுக்கிடுதல்' என்பதன் திரிபேயாகும். சீவி முடித்துச் சிங்காரித்துப் புறப்படுதலே மினுக்கிடுதலாகும். சற்றுக் கூடுதலாக, மிகையாக அலங்கரித்துக் கொண்டு ஒருவருள்ளத்தைக் கவர நினைப்பது இது. ஒன்றுக்குமுதவாத, அல்லது தேவையற்ற ஒரு காரியத்துக்காக மிகவும் ஆயத்தம் செய்வதை 'மினுக்கிடுதல்' என்ற சொல்லால், படிமம் அல்லது குறியீட்டுப் பொருள்படக் கூறினர். மினுக்குதல், மினுக்கிடுதல் - ஒப்பனை செய்து கொள்ளுதல். ஒருத்தி மிகவும் குலுக்கி மினுக்கித் திரிவதைக் கிண்டலாகக் குறிப்பதுண்டு. 'ரொம்ப மினுக்கிடுகிறாள்' என்றும் கூறுவர். இச்சொல் காலப்போக்கில், குறியீட்டுச் சொல்லாகி, அவ்வளவு அவசியமில்லாத இடத்தில் தேவையின்றி முயன்று செயல்படுவதை இதுக்குப்போய் மினுக்கிடலாமா? (மெனக்கிடலாமா?) என்று கேட்கப்பட்டது. நானும் மெனக்கிட்டு இவ்வளவு தூரம் விளக்கியிருக்கிறேன். 'ஒன்றும் புரிய வில்லையே' என்று கூறிவிடாதீர்கள்! பிறகு நான் மினுக்கிட்டதற்கு அர்த்தமில்லாமல் போய்விடும்!*

---

*'மினுக்கிடுதல்' என்பது குறியீடாகி, ஒன்றன் பொருட்டு மிக ஆயத்தமாக, முயன்று பிறவற்றை ஒதுக்கிவிட்டு வருவதையோ, செய்வதையோ குறித்த தென்பதே விளக்கப்பட்டது. அறிஞர் கு.தாணுசுப்பிரமணியனுக்கும் அதுவே கருத்து. 'அவசியமில்லாத முயற்சி' 'அற்பக்காரியத்துக்காக முயலுதல்' எனப்பொருள் கொண்டு, அவர் காட்டும் உதாரணங்கள் : 'இதற்காவேலை மெனக்கிட்டு வந்தாய்?', உன்னால் எனக்கு வேலை மெனக்கிட்டுப் போச்சு, அவன் 'மெனக்கிட்டு' (வெறுமனே) உட்கார்ந்திருக்கிறான்? இதற்கு அரசம்பட்டி என்.எஸ்.ராஜா உழவுத் தொடர்பான சொல் என எடுத்துக்காட்டி விளக்கியிருப்பது மேலும் பொருத்தம் போல் உளது;

## 'திரு'வைத் தேடுவோமா

பழங்கவிஞர்களைத் 'திரு' அடைமொழி போட்டு அழைப்பதில்லை, ஏன்? 'திரு' செல்வம், சிறப்பைக் குறிக்கும் சொல்லாகத் தொல்காப்பியம், சங்க இலக்கியத்தில் இடம்பெறுகிறது. நூற்றுக்கணக்கான இடங்களில் செல்வத்தை, சிறப்பைக் குறிக்கவரும் இத் 'திரு' அடைமொழியாக அமைந்தது, காலம் செல்லச்செல்ல உருவான பழக்கமாகப்படுகிறது. பழங்காலத்தில் திரு அடைமொழியாக இடம் பெறல் அருகிய வழக்காகக் காணப்படுகிறது. 'திருத்தாமனார்' (புறம். 398) என ஒரே ஒரு சங்கப்புலவர் பெயரில் தான் திரு அடை ஒட்டிக்கொண்டுள்ளது. இன்று பெயர் அறியப்படும் 473 சங்கப் புலவர்களில் இவர் ஒருவர் மட்டும் தனித்து நிற்கிறார். பிற புலவர்கள் மட்டுமன்றி மன்னர்களின் பெயர்களிலும் திரு அடைமொழி இல்லை. எனினும் 'திருமாவுண்ணி' என்பது, அவலமுற்ற ஒரு பெண்ணின் பெயராகக் குறிக்கப்படுகிறது(நற்.216). கரிகாலனைப் பட்டினப்பாலை 'திருமாவளவன்' (அடி.299) எனச் சுட்டுகிறது. மதுரையிலிருந்த 'திருமருத முன்துறை' பற்றிப் பரிபாடல், கலித்தொகையில் குறிப்புகள் உள்ளன. காதலியைத் 'திருநுதல்' என அடைமொழி சேர்ந்த ஆகுபெயரால் சுட்டுமிடம் குறளில் இரண்டுள(1011, 1123).

திருவள்ளுவ மாலையில் கூட 'வள்ளுவன்' என்ற சொல்லே திரும்பத் திரும்ப வருகிறது. ஓரிரு இடங்களில் தான் 'திருவள்ளுவர்' என அடைமொழியுடன் வரக்காண்கிறோம். திருமுருகாற்றுப் படையில், உள்வரும் படைவீடுகள்யாவும் பரங்குன்று, சீரலைவாய், ஆவின்நன்குடி என இவ்வாறு அடைமொழியின்றியே

---

'வளர்தமிழ்'ப் பகுதியில் 'மெனக்கிடுதல்' எனும் சொல்பற்றி எழுதப்பட்டுள்ளது. அந்தச் சொல் 'மெனைகெடுதல்' ஆகும். வயல்களில் நாற்று நடவு, களையெடுப்பு, அறுவடை ஆகிய பணிகள் செய்யும்போது வரிசையாக நின்று 'மெனையேறி' செல்வார்கள். அப்பணிகளின் போது பாட்டு, கதை, கேலி ஆகிய கேளிக்கைகளில் ஈடுபடுவர். அப்போது இணைந்து பாடவோ. அருகேயிருந்து கதை கேட்கவோ, தன் மெனை விட்டு வேறு மெனைக்கு ஆள் மாறுவதுண்டு. அப்போது 'கண்காணி' முதலானோர் 'மெனை கெடாதே', 'மெனை கெட்டு வேறு பக்கம் போகாதே' என்று கடிந்து கொள்வர். வரிசையாக நிற்பது 'மெனை பிடித்தல்' என்றும், மெனையில் முன்னேறிச் செல்லுதல், மெனையேறுதல் என்றும், மெனை விடுபடுதல் மெனை கெடுதல் என்றும் வழங்கப்பெறும்.

மேலே உள்ள சொற்களில் 'மெனை' என்பது, 'வினை' என்பதன் திரிபோ என ஐயம் ஏற்படுகிறது. இப்போது மினுக்கிடுதல் வேறு; வினைகெடுதல் வேறு என இரு சொற்கள் புலனாகின்றன.

ஆளப்படுகின்றன. இதிலிருந்து 'திரு' அடைமொழியாகக் காலம் செல்லச் செல்லவே இடம் பெறத் தொடங்கியிருக்க வேண்டும் என அறிகிறோம்.

## சங்கப்புலவர் பெயருக்கு வழங்கிய அடைமொழிகள்

சங்க காலத்தில் வேறுசில அடைமொழிகள் 'திரு'வுக்குரிய இடத்தில் வழங்கின. 'நல்' அடைமொழி பல்வேறு விதத்தில் அடையாக வருகிறது. நல்+அந்துவன்-நல்லந்துவன், நல்+வெள்ளியார் - நல்வெள்ளியார். நல்+நாகன்-நன்னாகன். நல்+கீரன்- நற்கீரன், நக்கீரன். 'மா' அடைமொழி வருகிறது. மா+மிலாடன், மா+மூலன், 'பெரும்' அடைமொழி இடம்பெறுகிறது. பெரும் + சித்திரனார், பெரும் + கௌசிகனார், முதுகூத்தன், இளங்கூத்தன் என அண்ணன் தம்பியரைக் குறிக்கும் பெயர்கள் காணப்படுகின்றன. ஆங்கிலத்தில் Senior, Junior என அண்ணன் தம்பியரைச் சுட்டும் வழக்கு இன்றும் உளது. 'திரு' அடைமொழி முன்பு பெருவழக்காக இல்லை.

## பக்தி இயக்க காலத்தில் பெருவழக்காகிய திரு

சமண பௌத்த மதக்காலத்தும் சைவ வைணவ சமய எழுச்சியுற்ற காலத்தும் திரு அடைமொழி பெருவழக்காகியுள்ளது. மணிமேகலையில் புத்தன் திருஅறமூர்த்தி என்றும், புத்தமதம் திருவறம் என்றும் குறிக்கப்படுகின்றன. திருமால், திருவின் கேள்வனாதலால் திருமறுமார்பன் ஆகின்றான். திருக்குறிப்பு, திருவடி, திருவேட்களம் என இவ்வாறு பாடலினுள் வரும் அடைமொழிச் சொற்கள் பலவாகும். பல தலங்கள் திருப்பதி, திருத்தோணிபுரம் என இவ்வாறு அடைமொழி புணர்ந்தமைந்தன. முன்னைய பெயர்களுட் சிலவும் திரு அடைமொழி ஏற்றது இக் காலத்திலேயே ஆகும்.

## இன்றைய நிலையும் ஆங்கில மரபும்

இன்று திருவாளர், திருமதி என்பனவும் திரு என்பதும் ஆங்கில மரபு வழி நாம் பயன்படுத்துவன. திருவாளர் என்பதன் சுருக்கமன்று திரு. திரு, திருவாளர் என இரு மாதிரியாகவும் கூறலாம்.

ஆங்கில மரபில் Mister, Mistress என வழங்கிய முறைகட்கு ஏற்ப ஸ்ரீமான், ஸ்ரீமதி என வழங்கினர். பின்பு திருவாளர், திருமதி என்ற வழக்கு மிகுந்தது. திரு என்பதை இங்ஙனம் அடையாகச்

சேர்க்கும் மரபு, பக்திக்கால மரபினின்றும் சற்றே வேறுபட்டது. அங்கு பெயருடன் ஒன்றிய அடைகளாகவே விளங்கின (திருவள்ளுவர், திருஞானசம்பந்தர்). இப்போது தனித்து நிற்கும் அடைகளாக உள்ளன. திரு என்று போட்டதன்பின் புள்ளி வைத்தல் கூடாது என்பதும் ஆங்கில மரபேயாகும். ஏனெனில் அது தனி அடைமொழியே தவிரச் சுருக்கமன்று.

ஆணுக்கும் பெண்ணுக்கும் 'திரு' என்றே போடலாம் என்பது மு.வ. அவர்கள் கருத்தாகும். எனினும் திரு.மு.மாணிக்கம் என்றும் திருமதி பா.மாணிக்கம் என்றும் ஒரே பெயர் இரு பாலர்க்கும் வழங்கும் போது வேறுபாடறிய உதவும். இன்று பெரு வழக்காகி விட்ட இவற்றை, இட மறிந்து பயன்படுத்தலாம்.

**நனவும் நினைவும்**

நனவும் நினைவும் வேறுபாடடென்ன? நனவு பகலில் விழித்திருக்கும் பொழுது நடப்பது. நினைவு சென்ற காலத்தைத் திரும்ப எண்ணிப் பார்ப்பது. கனவுக்கு மறுதலையானது நனவு. மறதிக்கு எதிரானது நினைவு. 'பட்டப்பகலில் பாவலர்க்குத் தோன்றுவதாம் நெட்டைக்கனவு' எனப் பாரதி பாடியது பகற்கனவு. கவிஞரும் ஆசை மிகுந்தவர்களும் பகற்கனவு காண்பதுண்டு. நினைவு மனநிகழ்ச்சியை மட்டுமே சுட்டும். நனவு எதிரில் நடப்பதைக் குறிக்கும். நாமெல்லாம் நனவுலகில் வாழ்கிறோம். பழைய நினைவுகள் நமக்கு உரமாக அமைகின்றன; ஆயினும் எதிர்காலம் பற்றிய கனவுகளே நம்பிக்கையூட்டி நம்மை வாழ வைக்கின்றன. நினைவு போல் கனவும் மன நிகழ்ச்சியே. நனவுதான் நடக்கும் உண்மை. நாவலில் நனவோட்டம் (stream of consciousness) என்று ஓர் உத்தி உண்டு. முன்பு எப்போதோ, எங்கோ நடந்த நிகழ்ச்சிகளை, நினைவிற்குக் கொண்டுவந்து, நனவில் நடப்பது போல் அசைபோட்டுப் பார்ப்பது நனவோட்டம். இங்கே நினைவுகள் நனவுபோல் மாற முயல்வதைக் காணலாம். அவை தொடர்புற அமையாமல் சிந்திச் சிதறி, காலமும் இடமும் மாறி, முன்பின்னாகி நெஞ்ச அலைகளில் மிதந்துபோய்க் கொண்டிருக்கும். நினைவுக்குத் தொடர்ச்சியும் இயைபும் உண்டு. நினைவாற்றலே கவிஞர், புலவர், கலைஞர்களை உருவாக்குகிறது.

## நினைவும் நினைப்பும்

'நினைவு' என்பது பிறிதொன்றை நாம் நினைப்பதாகும்; 'நினைப்பு' என்பது நம்மிடம் இருக்கும் உணர்வாகும்.

நினைவுமண்டபம் கட்டுகிறோம். நினைப்பு மண்டபம் கட்டுவதில்லை. நினைப்பற்ற மக்களிடம் நினைவுச் சின்னம் எழுப்பும் எண்ணம் தோற்றாது. 'என்னை நினைவிருக்கிறதா?' என்று கேட்கிறோம். 'உங்களுக்கு நினைப்பே இல்லை' என்று கண்டிக்கிறோம். நினைப்பு என்பதை (Remembrance) என்றும், நினைவு என்பதை (Memory) என்றும் குறிக்கலாம். நினைவு, நினைப்பு இரண்டும் ஒரே பொருள் தரும் அடிச் சொல்லிலிருந்து பிறந்தவை. 'வு', 'பு' என்ற தொழிற்பெயர் விகுதி வேறுபாட்டால் இங்ஙனம் சிறிது சிறிது பொருள் வேறுபடுவதை உய்த்துணர வேண்டும்.

## சாவடிக்குச் சீட்டுக் கேட்கலாமா?

மதுரையில் 'சாவடி' என்று சில பேருந்து நிறுத்தங்கள் உள்ளன. தெற்குமாசி வீதியில் மறவர் சாவடியும், மேற்கே கோச்சடை போகும் வழியில் மற்றொரு சாவடியும் உள்ளன. பேருந்துப் பயணிகள் பலர் சாவடிக்குச் சீட்டுக்கேட்டு வாங்குகின்றனர். இது நியாயமா என்றால் நியாயமே. அஃதொன்றும் தவறான சொல்லன்று. கல்வெட்டுக்களில் ஒருவரோடொருவர் அளவளாவும் இடங்களைக் குறிப்பிடும்பொழுது உசாவடி என்ற சொல் வருகிறது. உசாவுதல் - நலமா என விசாரித்து அளவளாவுதல். இங்ஙனம் பொழுதுபோக்கும் இடங்களைக் குறித்த 'உசாவடி' என்ற சொல் காலப்போக்கில் 'உ' கரம் மறைந்து 'சாவடி' என்றே ஆகிவிட்டது. பின்னர் மாட்டுச் சாவடி, வாக்குச் சாவடி என்று குறிப்பிட்ட இடங்களைச் சுட்டும் சொல்லாகிவிட்டது. பொழுதுபோகாதபொழுது உசாவடிக்குப் போய்ப் பேசிக் கொண்டிருப்பார்கள்; காலப்போக்கில் குறிப்பிட்ட இடத்தை மட்டுமே சுட்டும் சொல்லாகிவிட்டது. மறவராயினும் பிறராயினும் இளைப்பாறப் பேசிக் கொண்டிருக்க ஓர் இடம் வேண்டுமன்றோ

## விளம்பரம்

'விளம்புதல்' - கூறுதல் என்னும் பொதுப்பொருளுடையது. ஆயினும் அழுத்தமாகச் சொல்லுதல், விளக்கிச் சொல்லுதல், திருப்பித் திருப்பிச் சொல்லுதல் என இது பொருள் தரும்.

மணிமேகலையில் சமய உண்மைகளை இங்ஙனம் கூறலின், இச் சொல்லாட்சி விளம்பில் (29:129), விளம்பின் (29:275), விளம்பலுறுவோன் (27:170) என இவ்வாறு பல இடங்களில் காணப்படுகிறது. பலருமறிய விளக்குவதை இது குறிக்கிறது. சமய உண்மைகளை இவ்வாறு திருப்பித் திருப்பிச் சொல்லி விளக்கியிருக்கிறார்கள்.

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் முன்பு முறைவைத்து ஆனா ஆவன்னா என்று கூறிக்கொண்டே, மணலில் அவ்வரிவடிவத்தை விளம்புவார்கள். ஒன்றன்மேல் திரும்பத் திரும்ப எழுதுவதையே விளம்புதல் என்பர். இன்றும், வரிகள் ஒன்றின்மேல் ஒன்றாக எழுதிவைத்திருந்தால், "என்ன இப்படி விளம்பி வைச்சிருக்கே" என்று கேட்பார்கள். திரும்பச் சொல்லுதலும் திரும்ப எழுதுதலும் இங்ஙனம் விளம்புதலாயின. 'உடையது விளம்பேல்' - என்பது ஆத்தி சூடி. நம் உடைமைகளைப் பலருமறிய விளம்பரப்படுத்துவது போல் கூறவும் கூடாது; நகைகளைத் தங்கம் விற்கும் கடைகள்போல் பெண்கள் நிரம்ப அணிந்து விளம்பரப்படுத்தவும் கூடாது. இதிலிருந்துதான் பலருமறியக் கூறியும், திரும்பத் திரும்பக் கூறியும் பரப்புதலை 'விளம்பரம்' என்று சொல்லாக்கம் செய்து, Advertisement என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாக வழங்குகிறோம். இன்றோ விளம்பரம் ஆக்கவும் அழிக்கவும் வல்ல கலையாகிவிட்டது. விளம்பரத்தைப் பற்றி இதுகாறும் விளம்பியவை போதுமெனக் கருதுகிறேன்.

### ஒக்கிடுதல்

'கடிகாரத்தை ஒக்கிட்டீர்களா?' என்று கேட்கிறோம். பழுதுபார்த்தல், சீர்படுத்துதல், சரிசெய்தல் என்றெல்லாம் பல சொற்கள் உள்ளன. சீரமைக்கும் இவ் வேலையை ஒக்கிடுதல் என்று பல வட்டாரத்தினர் குறிக்கின்றனர். ஆங்கில மொழிப் பழக்கத்திற்குப் பிறகு 'Repair' என்ற சொல்லின் மொழி பெயர்ப்பாக வழங்குகிறது. முதலில் கடிகாரம் முதலிய பொறிகளின் பழுதான பாகங்களை எடுத்துவிட்டு, அவற்றிற்கு இணையானவற்றை இட்டு நிரப்புதலே 'Re+Pair' எனப்பட்டது. அதுபோல் 'ஒக்க இடுதல்' ஒக்கிடுதல் ஆகும். பழுதான பாகங்களுக்குச் சமமானவற்றை இட்டு நிரப்புதல் எனப் பொருள்படும். இச் சொல்லை உருவாக்கிய தமிழனை வாழ்த்தி வணங்கலாம். சிலர் 'ஒக்கிடுதல்' என்ற பேச்சு வழக்குச் சொல்லைக்

கொச்சைச் சொல் என்று நினைத்துக் கொண்டு புறக்கணிக்கின்றனர். அவர்கள் மனத்தைக் கொஞ்சம் ஒக்கிட வேண்டும். அ.சி.செட்டியாரின் ஆங்கில-தமிழ் அகராதியில் 'Repair' என்பதற்கு 'ஒக்கிடுதல்' என்பதும் பொருளாகத் தரப்பட்டுள்ளது.

**கோளாறு**

'மின்தடை கோளாறு காரணமாக வருந்துகிறோம்' என்று தொலைக்காட்சியில் குறிப்பிடக்கண்டிருப்பீர்கள். 'கோளாறு' தமிழ்ச் சொல்லா?

கோளாறு என்ற சொல்லைப் பயன்படுத்துவதில் கோளாறு எதுவும் இல்லை. ஏனெனில் உலக வழக்கில் மட்டுமே மிகுதியாகப் பேசப்பட்டுவந்த இச் சொல் மிக உயர்ந்த பொருள் பொதிந்த சொல்லாகக் காணப்படுகிறது. கோள் என்பது கிரகம்.

கோள் + ஆறு = 'கிரகங்கள்' செல்லும் நெறி. சூரியன், மதியம் முதலிய கிரகங்கள் தத்தம் நெறியினின்றும் அணுவளவும் பிசகாது செல்வதனாலேதான் அண்டகோளங்கள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாமல் இரவு பகல், பருவ மாறுதல்கள் எல்லாம் இயல்பாக நிகழ்கின்றன. ஒரு வானநூல் (Astronomy) கலைச் சொல் இது.

சில வட்டாரத்தில் 'போகிற இடத்தில் கோளாறா நடந்துக்கப்பா' என்று அறிவுரை கூறுவார்கள். ஒரு தச்சர் தம் கீழ் வேலை செய்பவரைப் பார்த்துக் 'கோளாறா வெட்டு' என்னும்போது, கோடு போட்டபடி நெறி பிசகாமல் வெட்ட வேண்டும் என்பதைக் குறிக்கிறார். இங்குக் கோளாறுபோல, நெறி பிறழாமல் செயல்படுகின்ற பொருளைக் குறிப்பதை அறியலாம். இங்ஙனம் இச்சொல் நல்ல பொருளிலும் வழங்குகிறது.

சோதிடர்கள் (கணியர்கள்) கோள் ஆறு என்ன என்று பார்த்து, அதற்கு ஏற்ப வாழ்க்கையில் பலன்கள் நடப்பதைக் கணித்து, 'கிரகக் கோளாறு' இருப்பதாகக் கூறினர். 'கவர்க்கூடு' என்பது போல 'கிரகக் கோள்' இரு மொழி ஒட்டாயினும் பொருள் ஒன்றே. ஒருவர் துன்பம் வந்ததற்குக் காரணம் என்ன என்று கேட்க, அதற்குச் சோதிடர் 'கோளாறுதான்' காரணம் என்று கூறக் காலப்போக்கில் 'கோளாறு' என்றாலே துன்பம் என்றாகிவிட்டது. கிரகக் கோளாறில் தொடங்கி,

வயிற்றுக் கோளாறு, யந்திரத்தில் கோளாறு, தொழிலில் கோளாறு எல்லாம் வந்துவிட்டன.

திருஞானசம்பந்தர் 'வேயுறு தோளிபங்கன்' எனத் தொடங்கும் பதிகத்தில் கோள்கள் அடியவர்களுக்கு நல்லனவே செய்யும் எனப் பாடினார். அதனால் அப் பதிகம் 'கோளறு பதிகம்' என அழைக்கப்படுகிறது. கோள் ஆறு காரணமாக வரும் தீங்கை நீக்குவதே கோள் அறு பதிகம். கோளாறு நன்மையும் தரும்; தீமையும் தரும். அதுவே குறியீட்டுச் சொல்லாகி நல்ல பொருளிலும் தீங்கு என்ற பொருளிலும் வழங்குகிறது. பிறகு அது உடல் கோளாறிலிருந்து புத்திக் கோளாறுவரை சுட்டுவது பொருள் நீட்சியேயாம். எனவே கோளாறின்றி வாழ்வதற்குக் 'கோளாறு'. வழிகாட்டுகிறது என்று சொல்லலாம் அல்லவா?*

## கூடையும் மூடையும்

உட்குழிந்து கூடு ஆக இருப்பது கூடை (கூடு+ஐ). மேலே போர்ப்பதுபோல் மூடி வைப்பது மூடை (மூடு+ஐ). மரத்தின் வேர் சுற்றிப் படர்ந்து மேடாகக் காணப்படுகிறதை மூடு என்பதுண்டு. சாமான் பை, பொதிப் பை என்பனவும் இதனால் மூடை எனப்பட்டன. இங்கெல்லாம் 'ஐ' வினை முதல் விகுதியாகும். அவ்வவ் வடிவுடைய பொருள்களைச் சுட்டும் பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை போன்றவற்றில் 'காலின் வந்த கருங்கறி மூடை போன்ற' பல மூடைகள் பேசப்படுகின்றன (பட். 137, 186. பொருந. 245). திராவிட மொழிகளிலும் மூடா, மூடே என்றுதான் இச் சொல் வழங்குகிறது.

'ஐ' வேற்றுமை உருபாக வந்து சேர்ந்தால் கூடு+ஐ=கூட்டை என்றும், மூடு+ஐ=மூட்டை என்றும் ஆகும். ஆனால் இங்கு ஐ உருபன்று; மூடு+ஐ=மூடை. இதிலுற்ற ஐ பகுதிப்பொருள் விகுதி. அதாவது இறுதி ஒட்டு. மூடை, மூட்டையாகாது, பேச்சுவழக்கில் மூட்டை மூட்டையாகச் சரக்கு வந்ததென்று கதையளக்கிறோம். எத்தனை மூடை அரிசி வந்ததென்று தான் கேட்கவேண்டும்.

---

*இதன் மாற்று வடிவமான கோளாட்டு பிற திராவிட மொழிகளில் வழங்கி வருகிறது, என்று அறிஞர் இரா.மதிவாணன் குறிப்பிடுகிறார்.

சீனி மூடை, அரிசி மூடை, நூறு மூடைகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

### குட்டு வெளிப்படுகிறது

'குட்டு வெளிப்பட்டுவிட்டது; குட்டை உடைத்துவிட்டான்' என்று வழங்கும்போது ஒருவனுடைய கமுக்கமான செயல் உலகுக்குத் தெரிந்துவிடுவதைக் குறிக்கப்பயன்படுத்தப்படுகிறது.

குட்டு - குட்டுகை, இரகசியம், மானம் என்று அகராதி கூறுகிறது.

தலையில் கைமுட்டியால் இடிப்பதே குட்டுவதாகும். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பாடம் ஒப்பிக்காதவனையும் தப்புச் செய்பவனையும் தலையில் குட்டித் தண்டிப்பது அந்தக் கால வழக்கம். முட்டாளாயிருக்கும் மாணவன், அடிக்கடி குட்டுப்படுவான். இதனால், குட்டுப்படுவது அவமானமாகக் கருதப்பட்டது. யாரேனும் இங்ஙனம் குட்டுப்பட்டால், அதை வெளியே தெரியாமல் மறைக்கவே விரும்பினார்கள். அது வெளிப்பட்டபோது இரகசியம் வெளிப்பட்டுவிட்டதே என்று மனமுடைந்தார்கள். இவ்வாறு 'குட்டு'ச் சொல்லுக்குத் தலையில் இடித்தல், அவமானம், இரகசியம் எனப் பொருள் நீட்சி ஏற்பட்டது.

### 'குட்டுணி' யார்?

குட்டு+உணி=குட்டுண்பவன், அதாவது குட்டுப்படுபவன். அந்தக் காலத்தில் 'குட்டுணி' என்ற ஒரு சொல் வழங்கியது. இங்ஙனம் குட்டுப்பட்டு அவமானப்படுபவர்களை அது குறித்தது. அறிவின்றிப் பிறரால் தண்டனைக்கு ஆட்படுவர்களைக் 'குட்டுணி' என்றார்கள். இவ்வாறே காலப்போக்கில் 'குட்டு' என்ற சொல்லுக்குத் துன்பம், இடர், அனுபவம் என்றெல்லாம் குறியீட்டுப் பொருள்கள் ஏற்படலாயின. விவரம் தெரியாமல் ஒரு தொழிலைத் தொடங்கிவிட்டுத் தவிப்பவர்களைப் பார்த்துக் 'குட்டுப்பட்டால்தான் புத்திவரும்' எனப் பேசுவார்கள். ஒன்றைத் தொடங்கித் துயரப்பட்டு அனுபவப்படுவதும் இதில் குறிக்கப்படுகிறது. மிகவும் வாழ்வில் அடிபட்டுவிட்டவனை 'நல்லாக் குட்டுப்பட்டுவிட்டான்' என்று கூறி இரக்கப் படுவார்கள்.

ஒருவனைத் துன்பப்படுத்திக் கொண்டேயிருப்பதையும் 'குட்டுவதாகக்' கூறுவதுண்டு. "குட்டக் குட்டக் குனிகிறவனும்

முட்டாள், குனியக் குனியக் குட்டுகிறவனும் முட்டாள்" என்ற பழமொழியில் இக் குறியீட்டுப் பொருளை முழுமையாகக் காணலாம்.

"குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்" என்பதும் ஒரு குறியீட்டுப் பழமொழியாகும் கண்டிக்கப்படுதல், தண்டிக்கப்படுதல் எதுவாயினும் நம்மை விட உயர்ந்தவர்களால், தக்கவர்களால் நடந்தால் குறையில்லை. போயும் போயும் நம்மைவிட மட்டமானவர்கள் நம்மைக் கண்டிக்க நேர்ந்தால், அது மிகவும் அவமானமல்லவா?

முன்னைக் காலத்தில் தமிழ் நூல்களை அரங்கேற்றும் பழக்கம் இருந்தது. நூலைப் படைப்பவர், பிறர் எழுப்பும் ஐயங்களுக்கு விடைகூறி, மனநிறைவை ஏற்படுத்தினால்தான் அந்நூல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில், பிழைபட எழுதுபவர்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டனர், இதை, 'குட்டுவதற்கோ பிள்ளைப்பாண்டியன் ஈங்கில்லை' என்று தொடங்கும் தனிப்பாடல் ஒன்றால் அறியலாம். தவறு செய்யும் மாணவனை ஆசிரியர் குட்டுவது போல், பிழைபட எழுதும் நூலாசிரியர்களும் குட்டுப்பட்ட செய்தியை இது காட்டுகிறது.

**மானம், மறைபொருள்**

ஒருவன் குட்டுப்படுவது மானம் போகிற செய்தி. அது வெளிப்படாமல் இருக்கிறவரை நல்ல்து. ஒருவர் பெரிய செல்வராக மானம் மதிப்புடன் வாழ்கிறார். அவரைத் திடீரென்று 'கடத்தல்காரர்' என்று கைது செய்துவிடுகிறார்கள். உடனே உலகம் என்ன சொல்லும்? குட்டு வெளிப்பட்டு விட்டது. பார்த்தாயா? என்பார்கள். இங்கு குட்டு என்ற சொல் இரகசியம் என்ற பொருளைத் தருகிறது. ஒருவன் 'குட்டுப்பட்ட' செய்தி வெளிப்படுவது, மறைவாக நடந்த செய்தி வெளிப்படுவது என்ற நிலையில் பொருள் தந்து இரகசியம், மறைபொருள் வெளிப்படுவதென்ற பொருளுக்கே போவதைக் கவனியுங்கள். அதனால் மானம் போவதால், மானம் என்ற பொருளையும் அதே சொல் தருவது கருதத்தக்கது.

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இவ்வாறு ஏதாவது 'குட்டு' இருக்கும். அதனால் தான் ஒருவருக்கொருவர் மோதல் வரும் போது 'குட்டை உடைத்துவிடுவேன்' என்று சீறுகிறார்கள். இரகசியத்தை

வெடிப்பதுபோல் பலரறிய வெளிப்படுத்துவதால், அதைப் போட்டு உடைப்பதாகக் கூறுகிறார்கள்.

### குட்டம்-குட்டை-குட்டு

'குட்டம்' என்றால் பள்ளம், ஆழம், குளம் என்று பொருளுண்டு. குளங்குட்டை என்ற தொடரில் குட்டை சிறு பள்ளத்தைக் குறிக்கிறது. குட்டமிடல்-தோண்டுதல் என்று சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளையின் இலக்கியச் சொல்லகராதியில் காணப்படுகிறது. தலையுச்சியிலும் முன் நெற்றிமேலும் பள்ளம் பறிப்பதுபோல் கைமுட்டியால் அழுத்திக் குத்துவதால், 'குட்டுதல்' வந்திருக்கவேண்டும்.

### துப்பு துலக்கப்படுகிறது

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை' (12) என்ற வான்சிறப்புக் குறளில், துப்பு என்ற சொல் ஐந்துமுறை திரும்ப வருகிறது. உணவு என்பது இதன் பொருள். துப்பார்க்கு - உண்பவருக்கு, துப்பாய - உண்பதற்குரியனவாகிய, துப்பு ஆக்கி - உணவுகளை உளவாக்கி. அதுமட்டுமல்லாமல், அவ்வாறு உண்பவருக்குத் தானும் உணவாவதும் மழையேயாகும். அஃதாவது தண்ணீர்தான் பிற உணவுகளையும் விளைவித்துத் தருகிறது; தானும் உணவாகிறது. நீரின் இன்றியமையாமையை இங்ஙனம் விளக்குகிறது திருக்குறள். தமிழில் 'து' என்றாலே உண் என்று பொருள். நொ - நொந்துபோ, கா - காப்பாற்று. இங்ஙனம் வரும் ஓரெழுத்தொரு மொழிகளில் 'து' வும் ஒன்று.

'துப்புக் கெட்டவன்' என்று ஒருவனைத் திட்டும் பொழுது, ஒருவேளைச் சாப்பாட்டுக்குக் கூட வழியற்றவன் என அவனுடைய ஏழ்மையைக் குறிப்பிடுகிறோம். அதிலிருந்து, அவன் திமிராகப் பேசுவதைக் கண்டிப்பதற்காக 'மானங்கெட்டவன்', 'சொரணை அற்றவன்' என்றெல்லாம் பொருள்படுமாறு, அச் சொல்லைப் பயன்படுத்துகிறோம். போக்கற்றவன், வக்கற்றவன் என்பன போல, 'துப்புக் கெட்டவன்', 'துப்பிலி' என்ற சொற்களும் எவ்வித வசதியும் வாய்ப்புமின்றி, உண்ண உணவுகூட் இல்லாமல், மானமின்றி அலைபவரை - முயற்சியற்றவரைக் குறிக்கின்றன.

## துப்பு -- பொருள் வளர்ச்சி

துப்பு - துணை, ஊன்றுகோல், வலிமை என்றெல்லாம் பொருள் வளர்ச்சி கண்டது. 'துன்பத்துள் துப்பாயார் நட்பு' (106) என்றால், துணையாக ஊன்றுகோல் போல உதவுபவர்களைக் குறிக்கிறது.

'து' என்ற அடிச்சொல்லிலிருந்துதான் இவ்வாறு பல சொற்கள் உருவாகியுள்ளன. துவ்வாதவர் - நுகர்வதற்கு எதுவும் இல்லாதவர்கள். துவ்வாமை - வறுமை. துவ்வான் - வலிமை இல்லாதவன், நுகரமாட்டாதவன் (சாப்பாட்டிற்கில்லாதவன்). துய்ப்பு - நுகர்தல், அனுபவித்தல். து - உண். து - உணவு. அதிலிருந்தே துய், துய்ப்பு வந்தன. உண்ணல், நுகர்தல், அனுபவித்தல் எனப் பொருள் நீண்டது. "ஒருகணக்கு வகையாகப் போடத்துப்பில்லை" என்று திட்டினால், துப்பு-திறமை என்றாகும். துப்பு என்றால் 'குற்றம்' எனவும் பொருளுண்டு என்பது, தொனிப் பொருளாகும்.

'துப்புத் துலக்குதல்' என்றால், ஒருவனுடைய துய்ப்பு - நுகர்வுச் சூழலை, துறை வலிமையை ஆராய்தல் எனத் தொடங்கி, ஒரு கொலை அல்லது குற்றச் செயல் நடந்துவிட்டால் அது நடந்த விதத்தைச் சோதித்தறிதல் -ஆராய்ந்து கண்டுபிடித்தல் என்றாகியிருக்கிறது. 'துப்பறிதல்' உளவறிதலாகும்.

துப்பு, 'பவளம்' என்றும் பொருள்படுமிடம் உண்டு. துவர் - செந்நிறம், பவளம்.

எச்சிலைத் துப்புவதையும் கவனிக்கலாம். ஒன்றைக் கடித்துத் துப்புவது, எச்சிலைக் கண்ட இடத்தில் துப்புவது நமக்குக் கைவந்த பழக்கம். 'தூஉ' என்று துப்புவது அது. அவை வேறு சொற்கள்.

## துப்புரவு

'துப்புரவு' வாரம் கொண்டாடினோமே தெரியுமா உங்களுக்கு? அதற்குப் பிறகு நாடே துப்புரவு ஆகிவிட்டது! எப்படி? திருவள்ளுவர் காலத்தில் துப்புரவு என்ற சொல் உணவைக் குறிக்கவே வழங்கியது. 'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல் மற்றையவர்கள் தவம்' (263) என்ற குறளில் துப்புரவு என்ற தொழிற்பெயர் நல்குரவு, தாக்குரவுபோல நின்று, உணவுண்ணுதலைக் குறிக்கிறது. பரிமேலழகர் இதற்கு 'உண்டியும் மருந்தும் உறையுளும் உதவல்' என்றும் துப்புரவு -

அனுபவிக்கப்படுவன என்றும் உரை எழுதுகிறார். 'துப்புரவு இல்லார் துவரத் துறவாமை, உப்பிற்கும் காடிக்கும் கூற்று' (1050) என்னும்போது, உண்பதற்கு எதுவுமே இல்லாதவர்களைக் குறிக்கிறது. இங்கும் பரிமேலழகர் 'நுகரப்படும் பொருள்கள் இல்லாதார்' என்றே எழுதுகிறார். 'துப்புரவா எதுவுமில்லை' என்றால் மற்ற வசதிகள் இல்லை என்பது மட்டுமன்றி உண்பதற்குக் கூட எதுவுமே இல்லை என்பது பொருள். மேற்சுட்டிய திருக்குறளிலும் துப்புரவு இல்லார் - துப்புரவாக இல்லாதவர் துறவறத்தை மேற்கொள்ளாமலிருந்தால், அது பிறர் வீட்டு உப்புக்கும் கழுநீர்த் தண்ணீருக்கும் கேடு என்று பொருள்படுகிறது. இந்த உப்பையும் காடியையும் குடித்துக் கொண்டு வாழும் வாழ்வு ஒரு கேடா? அவர்கள் ஏன் துறவை மேற்கொள்ளக்கூடாது என்று 'நல்குரவு' அதிகாரத்தில் திருவள்ளுவர் கேட்கும்பொழுது, வறுமையில் செம்மை வேண்டுமேல் இல்லாததற்காகப் போய் இரந்துகேட்காமல், இருப்பதைக்கொண்டு வீட்டினுள் அடக்கமாய் வாழ வேண்டும்; கிடைக்காதவற்றிற்கு ஆசைப்படாமல் துறவு மனம் கொள்ள வேண்டும் என்று இதன் கருத்துப் படர்கிறது.

## திருவள்ளுவரின் உலகவழக்குநடை

திருவள்ளுவர் பல இடங்களில் சங்க இலக்கிய நடையை ஒத்து எழுதிச் செல்கிறார். ஆயினும் தாம் எழுதுவது கூடுதலான மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்று கருதி, மக்கள் வழக்கில் உள்ள பல தொடர்களையும நடைப் போக்கையும் அவர் ஆள்கின்றார் என்பதை, இங்ஙனம் நுட்பமாய்க் கண்டு அறியலாம்.

'துப்புரவா ஒன்றுமே இல்லை' என்று இன்று ஒருவர் சொல்கிறார் என்றால், உண்பதற்கு என்று வீட்டிலே ஒன்று கூட இல்லை என்பது பொருள். அது பிறகு 'முழுவதும்' 'ஒன்றுகூட இல்லாமல்' எனப் பொருள்பட்டது. 'துப்புரவாக் கூட்டு' என்றால் 'ஒரு குப்பை செத்தைகூட இல்லாமல் கூட்டித் தூய்மைப்படுத்து' என்று இன்று பொருள்படுகிறது. திருவள்ளுவர் 'துப்புரவு இல்லார்' என்னும்போது, மற்ற வசதிகளெல்லாம் இல்லாதது மட்டுமன்றி, முழுவதுமாக உண்பதற்குக்கூட ஒன்றுமே இல்லாதவர், ஏன் துறவறத்தை மேற்கொண்டேனும் மானத்தோடு வாழக்கூடாது என்பது பொருள். திருவள்ளுவர் உலக வழக்கைத் தழுவியே தம் தொடரை அமைத்துள்ளமை இதனால் விளங்கும்.

இன்று 'துப்புரவு' செய்தல் என்பது நன்கு முழுமையாகச் சுத்தம் செய்தல் என்ற பொருளில் வழங்குகிறது. இதுவரை சொன்னது 'துப்புரவா' விளங்கவில்லை என்று சொல்லிவிடாதீர்கள்!

**புலன் விசாரிக்கப்படுகிறது**

புலன் விசாரித்தால் துப்புத் துலங்கும்; ஒருவரது குட்டு வெளிப்படும். கொலை, திருட்டு வழக்குகளில் புலன் விசாரணை செய்கிறார்கள். கொலை செய்யப்பட்ட இடத்திற்குச் சென்று போலீசார் புலன் விசாரணை செய்வதாகச் செய்தி கூறுகிறது. இந்தப் புலன் விசாரணை எங்கிருந்து வந்தது?

**ஐம்பொறியும் ஐம்புலனும்**

மெய் (உடம்பு), வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தும் உலகைக் கண்டு, கேட்டு, அனுபவிக்கும் கருவிகளாதலின் ஐம் 'பொறிகள்' (கருவிகள்) எனப்படும். இவற்றால் அனுபவிக்கப்படுகிற, நுகரப்படுகிற பொருள்கள் - இடங்கள் 'புலம்' எனப்படும். கண்ணால் காண்பது ஒளி, காதால் கேட்பது ஒலி, ஓசை. இவையே புலம் எனப்படுகின்றன - சுவை (நா), ஒளி (கண்), ஊறு (தொடும் உணர்வு - உடம்பு) ஓசை (செவி), நாற்றம் (மணம்-மூக்கு) என ஐம்பொறிகளால் நுகரப்படுவனவற்றை ஐம்புலன்கள் என்பர். ஒளி தரும் பொருள்களும் ஒலி எழுப்பும் பொருள்களும் சுவைக்கப்படுவனவும் முகரப்படுவனவும் தொட்டறியப்படுவனவும் என அனைத்தும் 'புலன்களே' யாகும். புலனடக்கம் என்பது ஐம்பொறிகளையும் அவை சென்று துய்க்கும் புலன்கள் மேல் செல்லவிடாமல் அடக்குவதாகும்.

**புலம்—புலமை—புலவர்**

ஐம்பொறிகளால் அறியும் புலனறிவே ஒருவருக்கு முதன்மையான கல்வியாகும். நூல்களைக் கண்ணால் பார்த்துப் படிப்பதாலும் காதால் கேட்டுப் பயில்வதாலும், பெரிதும் நூற்கல்வியும் புலம் எனப்பட்டது. இதனால் ஐம்பொறிகளாலும் கற்கும் கல்வியும் நூலறிவும் ஆறாவதாக மனத்தால் அறிவதும் புலம் எனப்பட்டன. அதனையுடையார் புலவர் எனப்பட்டனர்.

'புலப்படுகிறதா' என்று கேட்டால் கண்ணுக்குத் தெரிகிறதா என்பதுடன், கருத்துக்கு விளங்குகிறதா, விடை அறியப்படுகிறதா

எனவும் வினவுவதாகும். 'புலப்படவில்லை' என்றால் கண்ணுக்குத் தென்படவில்லை. அறிவுக்கு அகப்படவில்லை; விடை தெரியவில்லை என்றாகிறது. புலப்படுத்துதல் - பிறருக்கு விளங்கப் பண்ணுதல். 'நானும் நினைச்சு நினைச்சுப் பார்க்கிறேன்; ஒன்றும் புலப்பட மாட்டேங்குதே' என்று நினைவுகூர்வார்கள். ஐம்பொறிகளாலும் துருவித் துருவி, தோண்டித் தோண்டி நுகர்ந்து அனுபவித்து அறியப்படுவனவே 'புலமா' தலைக் கூர்ந்து நோக்கி அறியலாம்.

## புலனறிதல், புலனறி சிறப்பு

தொல்காப்பியம் பகைவர் நாட்டில்போய் உளவறிதலை வேய், ஒற்று என்று குறிப்பிடும். புறப்பொருள் வெண்பா மாலை அவற்றுடன் 'புலனறிசிறப்பு' என்ற ஒன்றையும் சுட்டுகிறது. புலம் புலன் என்றால் இடம் எனவும் பொருள் தருதலின், பகைவர் நாட்டில் சென்று அங்குள்ள நிலையை உளவறிந்து வருதலே புலனறிதல் எனப்பட்டது. அங்ஙனம் புலனறிந்து வந்தவருக்குச் சிறப்புச்செய்தலே புலன் அறி சிறப்பு எனப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவே இன்று புலன் விசாரித்தல் என்ற சொல் உருவாகியிருக்கிறது. ஒரு விபத்தைப் பார்த்ததும் குற்றவாளி யார் என்பது புலப்படாது. அந்த இடத்திற்குப் போய் விசாரிக்க விசாரிக்க உண்மை புலனாகிக் கொண்டே வரும்.

"காவலர் கொலை நடந்த இடத்திற்கு விரைந்தனர். கொலையாளி கைது செய்யப்பட்டான். தொடர்ந்து புலன் விசாரணை நடைபெறுகிறது" என்ற வாசகம் உணர்த்துவதென்ன? அறிவுபூர்வமான விசாரணை; சம்பந்தப்பட்டவரது துய்ப்பு, பழக்கம், பின்னணி போன்றவற்றைத் துப்புத் துலக்குதல்; தொடர்புள்ள இடத்திற்கே சென்று ஆராய்தல்; சம்பந்தப்பட்டவர்களை விசாரித்தல் என அனைத்தும் இதில் அடங்கக் காணலாம். புலன் என்றால் ஐம்பொறிகளால் துய்ப்பன, அறிவு, இடம் என்று பல பொருள்படுகிறதல்லவா? 'புலன் விசாரணை' என்பதிலும், காலந்தோறும் தோன்றி வளர்ந்த இப் பொருளனைத்தும் அடங்கியுள்ளன. 'புலன் விசாரணை' இத்துடன் ஒத்தி வைக்கப்படுகிறது!

## போக்கற்றவனும் வக்கற்றவனும்

அண்மைக் காலத்தில் வக்கற்றவன், 'போக்கற்றவன்' என்ற தொடர்கள் வழங்கி வருகின்றன. வக்கற்றவன், போக்கற்றவன், துப்புக் கெட்டவன்: இவை வறுமையை இழித்துப் பேசும் சொற்களாகத் தொடங்கிப் பொதுவாக ஒருவனது மானமழிந்த தன்மையைச் சுட்டுவனவாய் ஆகிவிட்டன.

போக்கு - போக்கிடம், புகலிடம், ஒருவனுக்குப் புகலிடமிருந்தால் வறுமை நீங்க வாய்ப்புண்டு. வறுமை வந்து விட்டால் யாரிடமும் சென்று எதுவும் அடைய முடியாத நிலை தோன்றும். 'அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவை போல்' சுற்றமெல்லாம் நீங்கி விலகும் நேரம் அது. யாரும் பேச, பார்க்கக்கூட அஞ்சி ஒதுங்குவார்கள். வறுமை வந்தவனுக்குத்தான் வறுமையின் அனுபவம் தெரியும். திருவள்ளுவரும் 'இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின், இன்மையே இன்னாதது' (1041) என்றார். அவனைப் போக்கிடமற்றவன் என்பதோடு, வக்கற்றவன் என்றும் பழிப்பர். 'வக்கு' என்ற பிற்கால வழக்குச் சொல் பதப்படுத்து, வதக்கு எனப் பொருள்பட்டது. சமைத்த உணவு - கஞ்சிகூட இல்லாதவனை இது குறிக்கிறது. துப்பு - உணவு. துப்புக் கெடுதல் - அடுத்த வேளைக்கு உண்ண உணவுகூட இன்றிப் போதல் துய்ப்பதற்கு என எதுவுமே இல்லாத நிலை. வறுமை வந்தாலே மானம் போகிறது. வறுமையை விட மானக் கேடானது பிறிதொன்றில்லை என்பதை உணர்த்த வந்த இச்சொற்கள் பொதுவாக மானக்கேட்டையே குறிக்கவும் வழங்குகின்ற சொற்களாகி விட்டன.

## உள்ளத்தைக் கவரும் உறவுப் பெயர்கள்

'ஓர்பிடியாள், ஓரகத்தி, மருமகள், அம்மான், ஆயாள், தாதை, போன்ற பல உறவுச் சொற்கள் வழங்கி வருகின்றன. உண்மையிலேயே உறவுப் பெயர்களை நாம் தெரிந்து நன்கு விளங்கிக் கொள்வதால் தமிழுடன் கொண்டுள்ள உறவு மேலும் வலுப்படும். இந்த உறவுப் பெயர்கள் கால காலமாக வழங்கி வருபவை. மிகமிகத் தொன்று தொட்டுக் காணப்படுவதால் மொழியாராய்ச்சிக்கும் மிகவும் உதவக் கூடியவை. சமூகவாரியான உறவுப்பெயர்கள், வட்டார வாரியான உறவுப் பெயர்கள், சமய அடிப்படை சார்ந்தவை, இலக்கிய வழக்கில் ஏறியவை என இது

பலதிறப்படும். சமூக மரியாதை, உறவு மனப்பான்மை, சமூகத்தர நிலைகள், உளவியல், நாட்டுப் புறவியல், பண்பாட்டு மானுடவியல் போன்ற பல கோணங்களிலும் சொல்லாய்வு அடிப்படையிலும் நோக்க இதில் நிறைய வாய்ப்புள்ளது.

### மருமகளும் மருமகனும்

'மருமகனா, மறுமகனா' எனவும் சிலர் ஐயம்கொள்வர். 'மருமகன் மருமகள்' என்பனவே பொருந்திய வடிவங்கள். அவர்கள்மேல் 'மறுவைச்' (களங்கம்) சுமத்துவது கூடாது.

### மகனும் மருமகனும்

இச்சொல்லுடன் தொடர்புபடப் பல சொற்கள் வழங்குகின்றன. அவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்தால்தான் உண்மை விளங்கும். மகனும் மகளும் தன் மக்கள்; மருமகனும் மருமகளும் சகோதரியின் அல்லது மனைவிக்குச் சகோதரனின் மக்கள். அல்லது மகனுக்கு மனைவியாக வந்தவளை மருமகள் என்றனர். மகளின் கணவனாக வாய்த்தவனை மருமகன் என்றும் கூறுகிறோம். உறவு முறைப்படி மகன், மகள் போலவே மருமகன் மருமகளும் ஒருவருக்குக் கால்வழியினர் ஆகின்றனர்.

சில இடங்களில் மகனைப் பிள்ளை என்பார்கள்; மருமகனை மாப்பிள்ளை என்பார்கள். மா + பிள்ளை என்றால் சிறந்த, பெருமையுள்ள பிள்ளை என்றாகிறது. அதுபோல மரு என்றாலும் சிறந்த என்று பொருளுண்டு.

கேரளத்திலும் நாஞ்சில் நாட்டிலும் 'மருமக்கள் தாயமுறை' வழக்கிலிருந்தது. அதன்படி ஒருவனுக்குத் தான் பெற்ற மகனைவிட, உடன்பிறந்தாள் மகனாகிய மருமகனுக்கே கடமைப்பட நேர்ந்தது. மருமகனுக்கே சொத்துரிமை என்பது விதி. அதனால் நேர்ந்த குடும்ப இன்னல்கள் பல. அதைப்பற்றிக் கவிமணி அவர்கள் 'மருமக்கள் வழி மான்மியம்' எழுதினார்.

### வழக்குச் சொற்கள்

சில சமயங்களில் சொற்கள் உலக வழக்கில் உருத்திரிந்து வழங்கும். ஆனாலும் அவை உண்மை காணப் பயன்படும். சில சமூகத்தவர் மருமான், மருமாள் என்றும் கூறுவர். சில போது மருகர், மருகி எனவும் குறிப்பிடுவர்.

மருமான், மருமகன் என்பதன் திரிபேயாகும். மகன் 'மான்' எனத் திரியும். சிறுபாணாற்றுப் படையில் மூவேந்தரையும் குறிக்க, 'குடபுலம் காவலர் மருமான், தென்புலம் காவலர் மருமான், குணபுலம் காவலர் மருமான்' (47, 63, 79) என அந்த அந்தக் கால்வழியில் வந்தவன் என இச்சொல் இடம்பெறுகிறது.

'மருகன்' என்ற சொல் பழந்தமிழில் வழித்தோன்றலைக் குறிக்கப் பல இடங்கில் வழங்கியது. 'நன்னன் மருகன்' (புறம், 151). 'கவுரியர் மருக' (புறம், 5), அதே சொல் மருமகனைக் குறிப்பதையும் காண்கிறோம். 'மாஅல் மருகன்' (19 - 57) என்று பரிபாடல் முருகன் திருமாலின் மருமகன் என்று சுட்டுகிறது. திருமுருகாற்றுப்படை வெண்பாவில் முருகன் சிவபெருமானுக்கு மகனாகவும் திருமாலுக்கு மருமகனாகவும் விளங்குகிற செய்தி 'மாயோன் மருகனே ஈசன் மகனே' எனக் குறிக்கப்படுகிறது. 'மருகு' என்றால் குடிவழி, வமிசம். அதன்வழி வந்தவன் மருகன். திருமண உறவால் அல்லது மருமக்கள் தாயமுறைபோலும் உரிமைப் படி மருகனாகும் காரணத்தால் மருமகன் வந்திருத்தல் கூடும் எனவும் எண்ண இடமுள்ளது.

எங்ஙனம் பார்த்தாலும் 'மருமகனுக்கே' எல்லாப்பொருத்தமும் பொருந்திவருகிறது! மருமகளும் திருமண உறவால், குடிவழி உரிமையுடையவளாக வந்தவளே

**மகன் மான் ஆன வரலாறு**

மலையாளத்தில் மகன் என்பது 'மான்' 'மன்' 'மோன்' எனத் திரியும். ஓமனே நீயுறங்கு என்பது மலையாளத் தாலாட்டு. 'மகனே தான் மனே' ஆகிவிட்டது. அங்கு 'ஏ மோனே' என்று மகனையும் 'ஏ, மோளே' என்று மகளையும் கூப்பிடுவார்கள்.

அதேபோல, சேரமன்னர்களின் பெயர்களில் மட்டும் பெரும்பான்மையாகச் 'சேரமான்' எனக் குறிப்பிடுவர். சேரன் மகனே சேரமான் ஆனது. அதற்குச் சேரர் குடியினன் என்பது பொருள். தொண்டைமான், அதியமான் எனக் குடிப்பெயருடன் இந்த மான் (மகன்) ஒட்டிக்கொள்வதைக் காணலாம். சேரமான் இரும்பொறை என்றால் சேரன் மகன் என்பதே அவ்வாறு திரிகிறது என்பதை கே. என். சிவராசபிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

தமிழிலும் 'எம் பெருமான் செய்திட்ட விச்சை' என்னும் போது, (மாணிக்கவாசகர்) 'பெருமகன்' என்பதே அவ்வாறு திரிகிறது. மேலும்

அது சுருங்கி 'பெம்மான்' ஆவதுண்டு. 'பெம்மான் இவனன்றே' என்று சம்பந்தர் சுட்டிக் காட்டுகிறார் அல்லவா? பெருமான் பிரான் எனச் சுருங்குவதும் உண்டு. 'எம்பிரான்' என இறைவனைக் குறிப்பர். பெருமகள் - பெருமாட்டி - பிராட்டி ஆவதும் இது போன்று சுருங்குவதேயாம். மதுரை மீனாட்சி தடாதகைப் பிராட்டியாராக அவதரித்ததை அறிவோமல்லவா? மிக அதிகமாக உலகில் வழங்கிய சொற்களே இங்ஙனம் உருமாறுகின்றன. கூடுதலாகப் புழங்கப் பாத்திரம் தேய்வதில்லையா? பெருமகன் - பெருமான் - பெம்மான்- பிரான். அதுபோலவே பெருமகளும் பெருமாட்டி ஆகிப் பிராட்டி ஆகின்றாள்.

**உங்களுக்கு வயது என்ன**

இவ்வாறு கேட்டால் 'நாற்பது வயதாகிறது' என்பது தவறாகுமா? 'நாற்பது ஆண்டுகள்' என்பதுதான் சரியான பதில். ஆயினும் 'என் பிள்ளைக்கு ஏழுவயசு'; 'பெரியவருக்கு அறுபத்தைந்து வயது' என்று பேசுகிறார்கள். 'கண்ணுசாமிக்கு அப்போது 23 வயது நடந்த' தாகக் கதை எழுதுகிறார்கள். 'காணாமல் போன சிறுமிக்கு ஏழு வயது' என்று அறிவிக்கிறார்கள்.

**அகவை**

வயது என்ற சொல்லுக்கு முன்பு 'அகவை' என்ற சொல் வழக்கிலிருந்தது-கண்ணகிக்கு ஈராறு ஆண்டு (12) அகவையும் கோவலனுக்கு ஈரெட்டாண்டு (16) அகவையும் ஆன போது திருமணம் நடந்ததாகச் சிலப்பதிகாரம் ஒன்றில்தான் வயது குறிப்பிட்டு வருகிறது. (1 : 24. 34).

வயது ஒருவகை ஆகு பெயராக ஆண்டு எண்ணிக்கையையும் சுட்டுவது, நீண்ட நாள்களாகக் காணப்பட்டு வருகிறது. 'பதினாறு வயதினிலே' என்பது ஒரு திரைப்படத் தலைப்பு. 'வயது பதினாறிருக்கும் இள வயது மங்கை' என்று 'மங்கியதோர் நிலவினில்' பாரதியார் பாடியுள்ளார். 'நினைத்தேன் வந்தாய் நூறு வயசு' என்பது திரைப்படப்பாட்டு. என்றும் பதினாறாக உங்கள் அகவை இருக்கட்டும். என வாழ்த்துகிறேன். இருவகையாகவும் சொல்வது தவறில்லை என்பதால்!

## தலையும் தலாவும்

'தலா' என்ற சொல் உருதுச்சொல்லா? அல்லது தமிழ்ச் சொல்தானா? 'தலா' என்ற சொல் தமிழ்ப் பேரகராதியில் காணப்படவில்லை. தமிழில் வந்து வழங்கும் வடமொழி, உருது போன்ற பிறமொழிச் சொற்பட்டியல்களிலும் காணப்படவில்லை.

'தலைத்தலை' என்ற தொடர், முன்பு இடந்தோறும், ஆள்தோறும், மேன்மேலும் என்ற் பொருள்களில் வழங்கியுள்ளது. உலக வழக்கில் ஒரு குடியில் உறவினர், பங்காளிகளின் எண்ணிக்கைக் கூடுதலைச் சுட்ட 'தலைக்கட்டு மிகுதி' என்பர். 'தலைக்கு ஐந்து ரூபாய் கொடுத்தால் போதும்' எனக் கூறுவர். தலை என்ற சொல்லிலிருந்துதான் 'தலா' என்ற சொல் பேச்சுவழக்கில் வந்திருக்கவேண்டும். வடையை 'வடா' என்றும் தோசையைத் 'தோசா' என்றும் இவ்வாறு பிற மொழியினர் பேசுவதைப் பார்த்துத் தமிழன் 'தலைக்கு ஒரு புடவை' என்பதைத் 'தலா ஒரு புடவை' என நீட்டிவிட்டான்போலும்! நல்லவேளை, தலைக்கு வந்தது தலாப்பாகையோடு போயிற்று!

## தேர் — தேர்வு — தேர்தல் மூன்று படிநிலைகள்

மொழிக்கும் வாழ்க்கை உண்டு. சொற்கள் பல தோன்றுகின்றன; வாழ்கின்றன; வளர்கின்றன; உருமாறுகின்றன; மறைகின்றன; மறுபிறப்பெடுக்கின்றன. சொற்கள் காலத்துக்கேற்ற (பொருள்) உடை அணிந்து கொள்வதுண்டு; (குறிப்புப் பொருள்) அலங்காரங்கள் பூணுவதுண்டு.

தேர், தேரினும், தேரான், தேர்ந்து, தேர்ச்சி என்று பழம் பாடல்களில் எல்லாம் 'ஆராய்தல்' என்ற பொருளிலேயே இச்சொல் ஆட்சி பெற்றிருக்கிறது. 'தேரா மன்னா' என்று பாண்டியனைக் கண்ணகி அழைக்கும்போது ஆராய்ந்து செயற்படாதவன் என்பதைக் குறிக்கிறாள்.

ஐரோப்பிய வழிக் கல்வியை நாம் ஏற்றபிறகே 'பரீட்சை முறை' வரலாயிற்று. அதனால் 'தேர்வு' என்ற புதிய தொழிற்பெயர் தோன்றியது. அதிலிருந்து தேர்ச்சி, தேர்ந்தான், தேர்வு முடிவு எனச் சொற்கள்பல வழக்கிற்கு வந்தன.

'தேர்தல்' வந்தபிறகு-சுதந்திரத்துக்குப்பின் இச்சொல் மூன்றாம் நிலையை அடைந்தது. அதனால் ஆராய்ந்து எடுத்தல், பொறுக்கி எடுத்தல், தேர்ந்துஎடுத்தல் என மேலும் ஒரு பொருள் கூடியது. தேர், தேர்வு, தேர்தல் என்ற மூன்றில் முதலாவதில் ஆராய்தல் மட்டும் உளது. 'வு', 'தல்' என்ற தொழிற்பெயர் விகுதி வேறுபாட்டால் இவை வகுப்பில் தேர்வாகவும், நாட்டில் தேர்தலாகவும் ஆயின. அடிப்படைப் பொருள் ஒன்றே-வேர் ஒன்றே ஆயினும் இவை கிளைபிரிந்து விட்டன. 'ஆண்டிப்பட்டியில் தேர்வு நடக்கிறது' என்றாலும் பத்தாம் வகுப்பில் இறுதித் தேர்தல் நடக்கிறது என்றாலும் சிரிப்புக்கிடமாகும் இன்று!

**தேற்றிய தேங்காய்**

வகுப்பில் ஒருவனாவது மிகத் திறமையுள்ளவனாக இருப்பானா என்று தேடினேன்; ஒருவன்கூடத் தேறவில்லை.

என் கணிப்புப்படி இந்த நூல்களில் ஒன்றுகூடத் தேறாது போல் இருக்கிறது.

அந்தப் பணக்காரருக்குச் 'சொத்துப்பத்து', எவ்வளவு தேறும்?

'தொழிலில் கடைசியா என்ன தேறும்? ஏதாவது தேறுமா' தேறாதா?

'ஆறு மாதமாகப் படுக்கையிலே தாத்தா கிடக்கிறாராமே?' 'இது தேறுமா டாக்டர்?'

காய்கள் முற்றியதாதலை 'நல்லாத் தேறின காய்' என்பது உலக வழக்கு. தேறின தேங்காயாக இருந்தால், பொரியல் மேலே அதன் திருகலைத் தூவிவிடலாம்.

'இவர் ரொம்பத் தேறின ஆளுங்க' என்று ஊரில் அனுபவம் மிக்கவரைச் சுட்டுவதுண்டு.

வகுப்பிலே தேறினான் என்றால் சோதனையில் வென்றான்; அடுத்த வகுப்புக்குத் தகுதி பெற்றான் என்ற பொருள் வந்துவிடுகிறது.

**தேறினான்**

ஆறுதல் கூறுவது, தேறுதல் கூறுவது எல்லாம் ஒருவரைத் தெளிவிப்பதாகும். 'அவன் எல்லாவற்றையும் இழந்து, தவித்து,

இப்போது தேறிவருகிறான்' என்று கூறலாம். 'நோய் நீங்கி உடம்பு தேறிவருகிறது' என்று சொல்லலாம். 'அவன் புலம்புகிறான். தேற்றுங்கள்' (ஆறுதல் கூறுங்கள், தெளிவியுங்கள்) எனலாம். 'காலாண்டுத் தேர்வில் அவன் தேறினான்' என்றால், வெற்றி பெற்றான் என்றாகிறது.

பயணித்தான், சொற்பொழிந்தான் என்பன போலத் தேர்வில், 'தேரினான்' எனலாமா என்றால் அது தவறு; தேறினான் என்பதே மரபு. மொழி மரபை விட்டுக் கொடுக்காது; மரபே மொழியின் உயிர்.

# 7

# நல்ல தமிழில் எழுதுவோம்

### அருகில் புருந்த ஆமை

எங்கள் வீட்டிற்கு அருகில், சிவன் கோயிலுக்கு அருகில் என்று கூறவேண்டிய இடங்களில் அருகாமையில் என்று எழுதுகிறார்கள். செந்தமிழாக எழுதுகிற நினைப்பு; எங்கிருந்து இந்த ஆமை 'அருகில்' வந்ததென்று தெரியவில்லை. கல்லாமை, அழுக்காறாமை, வெஃகாமை, விளங்காமை போன்ற எதிர்மறைத் தொழிற் பெயர்கள் பலவுள. அருகாமையில் எதிர்மறை எதுவும் இல்லை. அருகுதல் சுருங்குதல்; அருகாமை - சுருங்காமை என்றால் அத் தொழிற்பெயர் வேறு. இனிமேல் நம் அருகில் இந்த ஆமை வராமல் காக்கவேண்டும். 'அருகாமை' - தவறு. அவ்வாறு எழுத வேண்டாம்.

'அண்மையிலுள்ளது; அண்மையில் நிகழும்' என இட அணிமையும் கால அணிமையும் குறிக்கப்படுகின்றன. "பசிப்பிணி மருத்துவன் பண்ணன் இல்லம், அணித்தோ, சேய்த்தோ", என்பது புறப்பாட்டு (புறம் 173). அருகே என்பதை இடச் சுருக்கத்தை மட்டும் சுட்டவும், 'அண்மை' 'அணிமையை' இடம், காலம் இரண்டிற்கும் பயன்படுத்தவும் பழகியுள்ளோம். எங்கள்வீடு அருகில்தான் இருக்கிறது; கோயிலுக்கு அருகில் குளம் உளது (இடம்) குடியரசு நாள் அணிமையில் வருகிறது. அவருக்கு அண்மையில் திருமணமானது (காலம்)

### மிகைத்திருத்தம்

சரியாக இருப்பதைத் தவறுபடத் திருத்துவது மிகைப்பட்ட செயலாகும். மிகைத்திருத்தம் என்பது செந்தமிழாக எழுதுகிறோம் என நினைத்துக் கொண்டு தவறு செய்வது. அவற்றுள் முக்கியமான சிலவற்றை நினைவுகூர்வோம்.

### நூல்கள்

நூல்களே முறையாகும். செந்தமிழில் எழுதுவ்தாக எண்ணிக்கொண்டு நூற்கள் எனப் பலர் எழுதிவிடுகின்றனர். நமது கால்களைக் காற்கள் ஆக்கலாமா? உழுகின்ற சால்களை

சாற்களாக்குவதா? கால்கள், வேல்கள், தோல்கள் இருக்கவும் நூல்கள் நூற்களாவது மிக நன்றாக எழுதுவதாக எண்ணிக் கொண்டு செய்யும் தவறு! அதைத் தவிர்க்கவேண்டும். நூல்கள் - என்றே எழுதவேண்டும். பெரியவர்களே செய்தாலும் தவறு, தவறே!

## பொருள்கள்

பொருள்கள்தான் சரி. ஆனால் பொருட்களை, பொருட்களுக்கு. என்றே எழுதக் காரணம் பொருட்சிறப்பு, பொருட்பேறு, பொருட்குறை எனப் பிற இடங்களில் விகாரப்படுவதால், இதிலும் அவ்வாறே ஒலித்துவிடும் பழக்கமாகும். பொருள்களை எடுத்து வை, அங்கு எத்தனை பொருள்கள் உள்ளன என்பதே முறையாகும்.

இவையெல்லாம் சரியாக உள்ளவற்றை நாமே ஒரு நினைப்பில் தவறென்று எண்ணிக்கொண்டு பிழைபட எழுதிவிடுவன ஆகும். பொருத்தமாக இருப்பதைத் திருத்தம் எனலாம். இப்படி மிகையாக-வேண்டாமல் செய்வதை (மிகைத்திருத்தம்) என்றுதானே சொல்ல வேண்டும். கள்-விகுதி பிற்காலத்தது. அதனால் 'பொருட்களை' எனப் புணர்த்து விடுகின்றனர். எனினும் பொருள்களால், பொருள்களை, பொருள்களுக்கு என்றே வழங்கவேண்டும்.

## பிழை திருத்தம்

மொழியை வழங்குவதில் தவறு. பிழை, தப்பு, குற்றம் என்று வாதிக்க வேண்டியதில்லை. எப்பொழுதும் கூர்மையாக, ஆற்றலுடன் திறமையைக் காட்டிக் கருத்தை வெளிப்படுத்தவும், அதைப்பிறர் ஏற்குமாறு செய்யவுமே ஒரு மனிதன் இயல்பாக விரும்புகிறான். அவனுக்கு மொழியின் வழக்காறுகளை, இயல்புகளை, போக்குகளை, நடைமுறையைக் காட்டினாலே போதும். தவறு, பிழை, போன்ற சொற்களிலேயே விடுபாடு இருப்பதைத்தான், கவனிக்க வேண்டும்.

சிலர் அச்சேற்றும்போது ஏற்பட்டுவிட்ட எழுத்துப்பிழை, சொற்பிழைகளைப் பட்டியலிட்டு, நூலின் இறுதியில் பிற்சேர்க்கையாகப் போடும்போது, அதைப் 'பிழைத்திருத்தம்' என்று தலைப்பிடுகிறார்கள். சாரைப் பாம்பு சாரையாகிய பாம்பு; 'பிழைத்திருத்தம்' பிழையாகிய திருத்தம். நாம் செய்யும் திருத்தமும் பிழை என்பது பொருள். பிழையைத் திருத்துவது என இரண்டாம் வேற்றுமை உருபு விரியும் போது, மிகும் ஒற்று, பிழை திருத்தம் என்று அவ்வுருபு மறைந்து நிற்குமிடத்தில் மிகாது; சிலை திறப்பு

என்பது போல. பிழை திருத்தத்திலேயே ஒரு பிழைவிடக்கூடாதுதானே!

**நாட்கள் / நாள்கள்**

"நாள் என்பதன் பன்மைச் சொல் நாள்கள் அல்லது நாட்கள் - இதில் எது சரி?", "நாட்கள் என்பது நாட்பட்ட பழைய கள்ளைக் குறிக்கும் என்றும் நாள்கள் என்பதே சரி யென்றும்" பலர் கருதுகின்றனர். முன்பே பெரியவர் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை இதைப் பலமுறை விளக்கியுள்ளார். வாள்கள், தாள்கள், நாள்கள் என்றே வரும். 'கள்' விகுதி பிற்பட்டதாகலின் இலக்கண நூல்களில் அதற்கு விதி கூறப்படவில்லை. வாள் + கண் + வாட்கண். நாள் + குறிப்பு = நாட்குறிப்பு என ஏனைய இடத்தில் திரியும் பழக்கத்தில் இது வந்துவிட்டது. சரியானபடி பயன்படுத்த முயற்சியெடுத்துத் தவறாக எழுதிவிடும் பழக்கத்தை இது காட்டுகிறது "சியோல் ஒலிம்பிக் போட்டிகள் பதினாறு நாள்கள் நடக்கும்" என்பதே முறையாகும். ஆனால் 'நாட்கள் நடக்கும்' என்றால்தான் செவ்விய தமிழ்போல் தோன்றுமளவும் நிலைமை முற்றிவிட்டது.

'நாள்கள்' என்னும்போது ஒலிப்பு ஒருமாதிரியிருத்தலால் நாட்கள் புகுந்து நிலைத்து விட்டது. பொருள் சிதையாவிடத்து, ஒலி இனிமைக்கு இடம் தருவது தமிழ் மரபு. சென்னை எம். ஏ. ராஜசேகரன், தமிழ்அறிஞர் அ.மு.ப. அவர்களது கருத்தைத் தம் மடலில் கீழ்வருமாறு தந்துள்ளமை குறிப்பிடத்தக்க சிந்தனையாகும்.

நாட்கள் என்ற சொல்பற்றி, பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம், தமது 'ஏழு நாட்களில் எழுபது நாடுகள்' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ப நாள்கள் என்பதுதான் இலக்கண முறைப்படி சரியாயினும் நாட்கள் என்று நான் கொண்டதற்குக் காரணம் காட்டல் வேண்டும். நாள்கள் என்னும்போது ஒலியமைப்பில் ஓசை தடைப்படுகின்ற (HIATUS) காரணத்தால், இம்மாற்றம் கையாளப் பெறுகின்றது. 15 ஆண்டுகளுக்கு முன், சென்னைப் ப்ல்கலைக் கழகச் சார்பில், பச்சையப்பன் கல்லூரியில், என் பொறுப்பில் நடைபெற்ற புத்தொளிப் பயிற்சி (Orientation Course) வகுப்பில் பெரும்புலவர் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை உட்படப் பல அறிஞர்களும் 20 கல்லூரிகளின் பேராசிரியர்களும், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறையினரும், இரண்டு மணி நேரம் இச்சொல் பற்றி விவாதித்து.

ஆராய்ந்து நாள்கள் தான் இலக்கண மரபில் எற்றுக்கொள்ள வேண்டியதாயினும். ஓசை இனிமை கருதியும், இடையில் ஓசைத் தடங்கல் இன்றிச் செல்லவேண்டியும், (இலக்கண நெறியும் அந்த வகைக்கே வழி செய்கின்ற ஒன்றாதலானும்) 'நாட்கள்' எனவும் எழுதலாம் என்று முடிவு செய்தனர். பலரும் அச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர். எனினும் தமிழாசிரியனாகிய நான் பயன்படுத்துவது தவறு எனச் சிலர் கருதக்கூடும். எனவே, இக்குறிப்பினை எழுதினேன்."

**வளமோடு, வளமுடன்**

'அளவோடுபெற்று வளமோடு வாழ்க' என்பது அரசு விளம்பரம். 'வாழ்க வளமுடன்' என்று பெரியவர்களும் வாழ்த்த முற்படுகின்றனர். இவை வளத்தோடு வாழ்க, வாழ்க வளத்துடன் என்றுதான் அமையவேண்டும். மகர ஈற்றுச் சொற்களுக்குப் பிறகு, வேற்றுமை உருபு வரும்போது அத்துச் சாரியை அவசியம் வரும். நிலம், நிலத்தை, நிலத்தால், நிலத்திற்கு, நிலத்தின், நிலத்தின்கண் - நிலமை, நிலமால் என வருவதுண்டோ? வடம் - வடத்தை வடத்தால் தானே தவிர வடமை, வடமால் என வருமா? மனத்தை - சரி. மனமை என வராது. மனத்துக்கண் (34), மனத்தொடு (295) என்பன திருக்குறள். சில சமயங்களில் மூன்றாம் வேற்றுமை உருபு சிலவற்றில் மட்டும் (ஓடு, உடன்) வளமோடு, நலமுடன், வளமுடன் என எழுதி விடுகிறோம். பொது அமைப்பைவிட்டு இது விலகிச் செல்கிறது. மொழி அனைவரும் விளங்கிக்கொள்ள அமைந்த கருவி. சாதாரண மக்கள் இயல்பாகப் பேசிக்கொள்ளும் பொழுது அத்துச் சாரியை இல்லாமல் இச் சொற்களைச் சொல்ல மாட்டார்கள். ஒரு பெண் குடத்துடன் வருவாளே தவிரக் குடமுடன் வரமாட்டாள். நாம் தடத்திலேயே போகவேண்டுமே தவிர, தடமிலேயே போகக்கூடாது. நன்றாக எண்ணிப் பாருங்கள்: குடம் + உடன் = குடத்துடன். தடம் + இல் = தடத்தில். வளம் + உடன் = வளத்துடன். வளம் + ஓடு = வளத்தோடு. வளத்துடன் வாழ நலத்துடன் செயற்படும் மனத்துடன் யாவரும் திகழ்ந்தால், இனத்துடன் ஒற்றுமைப் படலாம். பெரும்பான்மை 'அத்துச்' சாரியை வர வேண்டும். மனம் + அத்து + ஐ = மனத்தை. வாழ்க வளமுடன் என்பதா; வாழ்க வளத்துடன் என்பதா? வாழ்க வளமுடன் என்பதில் ஒலி இனிமை உளது. எனவே ஏற்கலாம் என்பர். இதனை 'உறழ்ந்துவரும்' என, அத்துச் சாரியை

இன்றியும் கூறலாம் என்பதற்குப் புதுச்சேரி இரா. திருமுருகன் தக்க காரணங்கள் காட்டியுள்ளார்.

'வளமோடு வாழ்க' என்பது பொது அமைப்பைவிட்டு விலகிச் செல்வதாகத் தமிழண்ணல் குறித்துள்ளார் இவ்விலகல் விலக்கலுக்கு உரியதன்று. காரணம், அதைத் தொடங்கிவைத்தவர் தொல்காப்பியரே. ஆக்கமொடு காலமொடு என்பன போல் பல இடங்களில் அவர் எழுதியிருக்கிறார். இலக்கியங்களிலும் இவ்வழக்கு எப்போதும் இருந்துவருகிறது. வட்டமொடு (திருமுருகு 110), மாடமொடு (மதுரைக் 355), உலகமொடு (புறம் 72), இரவமொடு (புறம் 281). கயமொடு, அயமுடன் (பெரியபு. புகழ்ச்சோழர் 20) என்பன சான்றுகள். இம்முடிவினை, 'உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்' (தொல் எழுத்து 133) என்பதில் அடக்கலாம், அல்லது உடம்பொடு புணர்த்தலாக இதனைத் தொல்காப்பியர் உணர்த்தியதாகக் கொள்ளலாம்.

## சிலவும் செலவும்

கையை விட்டுப் பணம் செலவழிப்பதால் 'செலவு' என்று பெயர். ஊரைவிட்டு வெளியூருக்குச் செல்வதால், பயணத்துக்கும் தமிழில் 'செலவு' என்று முன்பு சொன்னார்கள். 'எனது இலங்கைச் செலவு' என்பது திரு.வி.க. தமது இலங்கைப் பயணம் பற்றி எழுதிய நூலாகும். கணவன் மனைவியைப் பிரிந்து, பொருள் தேடச்செல்வதும் 'செலவு' எனப்படும். "செலவு நீ நயந்தனையாயின்" என்பது சங்கப்பாடல். தலைவனைப் பார்த்து நீ பிரியக் கருதினால் என்று தோழி கேட்பது இது. செங்கோன் தரைச் செலவு என்று ஒரு நூல் முன்பு இருந்ததாம். கைச்செலவுக்குப் பணம் தேவைப்படும். செலவு சிட்டையைப் பல வணிகர்கள் 'சிலவுசிட்டை' என்றே இன்றும் எழுதுகின்றனர். 'வரவு சிலவு' எனப் போடத் தயங்குவதில்லை. கணக்கு நோட்டுப் புத்தகத்தில் வரவு-சிலவு என்றே அச்சிட்டுவிடுகிறார்கள். செலவு சிட்டை, வரவு செலவு என்றுதான் எழுத வேண்டும். 'சிலவு' பெருவழக்காகியிருக்கும் தவறுகளில் ஒன்று. அதைத் திருத்தினால்தான் தமிழுக்கு வரவுண்டாகும். உங்கள் நேரத்தையும் என்னுடைய நேரத்தையும் செலவிட்டு, செலவை விளக்கியிருக்கிறேன். மீண்டும் 'சிலவு' என்று எழுதாதீர்கள். செலவு மீறினால் கையைக் கடித்து விடும்!

**முயல்வோம் — முயற்சிக்கல் ஏன்?**

சிலர் 'முயற்சித்தேன்' என எழுதிவிடுவர் - முயன்றேன் இருக்கவும் 'முயற்சித்தேன்' எதற்காக? முயல் - முயன்றேன் ஆகும். முயற்சி-தொழிற்பெயர். அதனை மீண்டும் முயற்சித்தேன் என வினையாக்க முயல்வது வேண்டாத முயற்சி. பயிற்சி-பயிற்சித்தேன் ஆகுமா? நவில், நவின்றேன், நவிற்சி வரலாம். (நவில்தல் - சொல்லுதல்) 'நவிற்சித்தேன், எனலாமா? எனவே சரியாக எழுதவே முயல்போம்; 'முயற்சிக்க' வேண்டாம். அது மொழியைச் 'சிக்கலில்' கொண்டுபோய் விட்டுவிடும்!

**தவறுக்குமேல் தவறு**

டு, றுக் குற்றியலுகரங்கள் வந்து, தொடராகும்போது அவற்றிலுள்ள மெய்யெழுத்துக்கள் இரட்டிப்பது ஒரு தமிழ் வழக்காறு. நாறு + கால் = நாற்றங்கால். ஆறு + பாசனம் = ஆற்றுப் பாசனம். ஆடு + குட்டி = ஆட்டுக் குட்டி. தேடு + அம் = தேட்டம். அதாவது தேடப்படும் செல்வம். வயிறு + பசி = வயிற்றுப் பசியாகுமே தவிர வயிறுப்பசி ஆகாது, சோறு + பானை சோற்றுப்பானையானால் நல்லது; சோறுப்பானையென்றால் உள்ளே எதுவும் இல்லாததுபோல் இருக்கிறது. பள்ளிக்கூடங்களில் 'நாட்டுத் தொண்டுத் திட்டம்' (N.S.S) உள்ளது. அதை நாடு தொண்டு என்று கூறுவதில்லை.

"சிக்கனம் வீட்டைக் காக்கும், சேமிப்பு நாட்டைக் காக்கும்." என்றுதானே அரசு விளம்பரம் செய்கிறார்கள். வீடைக் காக்கும், நாடைக் காக்கும் என்பதில்லையே? வீடு + ஐ = வீடை ஆகாமல் வீட்டை ஆவதைக் கவனியுங்கள், அதைப்போல் தவறு + ஐ = தவறை ஆகாமல் தவற்றை என்றுதான் வரவேண்டும்.

ஆனால் தவற்றைச் செய்யாதே, தவற்றுக்கு வருந்துகிறோம் என்று எழுதாமல் தவறைச் செய்யாதே, தவறுக்கு வருந்துகிறோம் என்றும் எழுதுகிறார்கள்.

தமிழில் 'உறழ்ச்சி' என ஓர் இலக்கணம் இருப்பது முன்னரும் சொல்லப்பட்டது. பெரும்பான்மையான விதிக்கு மாறாகச் சில இடங்களில் மாறியும் வரும். அங்ஙனம் சிறிய அளவில் மட்டும் மாறி வருவதைப் 'புறனடை' என்பர். சில சொற்கள் இரண்டு விதமாகவும் எழுதப்பட்டு, இரண்டும் தவறல்ல என ஏற்கப்பட்டால்

அதற்கு 'உறழ்ச்சி' என்று பெயர். அப்படியும் வரலாம்; அல்லாவிட்டால் இப்படியும் வரலாம் என ஏற்பது அது. நாடு கிழவோன், காடு கிழாள் (காளி) என்று முற்காலத்திலேயே வழங்கியுள்ளது. விதிப்படி இவை நாட்டுக் கிழவோன். காட்டுக் கிழாள் என்று வரவேண்டும். நாட்டிற்கு உரிமையுடைய தலைமகனை நாடு கிழவோன் என்கிறோம். வீடு + தோட்டம் = வீட்டுத்தோட்டம் ஆதல் போல் நாடு + கிழவோன் நாட்டுக் கிழவோன் ஆகவேண்டுமல்லவா? ஆயினும் உச்சரிப்பதற்கு இனிமை யில்லாததால் நாடு கிழவோன் என்றே ஆளலாயினர். இங்ஙனம் ஒரு சொல்லிற்கு மட்டும் மாறிவருவதால், இதைப் புறனடை என்போம். இதனையே இரண்டு விதமாகவும் வரலாம் என ஏற்கும் போது 'உறழ்ச்சி' ஆகிறது.

'தவறுக்கு', 'தவறால்' என எழுதுவதைப் புறனடை என ஏற்கலாம். அதற்காக ஒருவர் 'தவற்றுக்கு' என எழுதியிருந்தால் அதைத் தவறு எனலாமா? கூடாது. எனவே 'உறழ்ச்சி' விதிப்படி சில இடங்களில் இரண்டுவிதமாகவும் வரலாம் எனக் கொள்ளவேண்டும். அதற்காக எல்லா இடத்திலும் புறனடை வரலாம், உறழ்ச்சி வரலாம் என்று நம் விருப்பம்போல் மாற்றிக் கொண்டிருக்கக்கூடாது. பொருள் சிதையாமல் இருக்குமிடங்களிலும் ஒலி இனிமை தருமிடங்களிலும் மட்டுமே இவை ஏற்கப்படும்.

### காஞ்சிபுரம் வாழ்க

அண்மையில் வந்த ஒரு பல்கலைக் கழக அழைப்பிதழில், காஞ்சீபுரம் என்று, அந் நகரின் பெயர் திரும்பத் திரும்பக் குறிக்கப்பட்டிருந்தது. அது 'காஞ்சிபுரம்' எனக் குறிக்கப்படுவதே பொருத்தமுடையது. பேச்சு வழக்கில் நீட்டி ஒலிக்கும் பழக்கம் ஏற்பட்டுவிடுகிறது. உச்சரிப்பிலுள்ள எளிமையே மனிதரை இங்ஙனம் தூண்டுகிறது. 'எங்கே, காஞ்சீபுரத்துக்கா?' என்று கேட்பவரும் அதை எழுதும் போது 'காஞ்சிபுரம்' என்றுதான் எழுதத் தோன்றும். 'காஞ்சிமாநகர்' எனும் பெயர் சங்க காலத்திலிருந்து பாரதியார் காலம்வரை காணப்படுவதாகும். காஞ்சி என்ற மரத்தின் பெயரால் வந்த பெயர் அது. 'காஞ்சி ஊர' என்பது அகநானூறு (96). 'காஞ்சிமரம் நிறைந்த ஊரனே' என அழைப்பது அது. மணிமேகலை பல இடங்களில் காஞ்சி மாநகர் என்றே சுட்டுகிறது (21-148, 154). தேசியக் கவிஞர் பாரதியார் 'காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான், காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' எனப் பாடுகிறார்.

இதனைக் கச்சி எனவும் அன்றே வழங்கியுள்ளனர். அதுவும் 'காஞ்சி' என்பதன் திரிபேயாகும். முத்தொள்ளாயிரம், பெரும்பாணாற்றுப்படை யாவும் கச்சி என்றே சுட்டும். செய்யுள் நடைக்காக அப்படி ஒரு சொல்லை ஆண்டுள்ளார்கள். வடமொழியில் இந் நகரைக் 'காஞ்சீ' என்று குறிப்பிட்டாலும், தமிழில் எழுதும் போது, 'காஞ்சி'யில் 'காஞ்சீ' என 'ஈ' மொய்க்காம லிருப்பதே நல்லது.

## நாகரிகமா, நாகரீகமா?

நாகரிகம் என்ற சொல்லை நாகரீகமாக்குவதும் நாகரிகம் ஆகாது. இதுவும் பேச்சு முறையால் வந்த திரிபேயாகும். இதன் பழைய ஆட்சிகள் எல்லாம் 'நாகரிகம்' என்றே உள்ளன. திருவள்ளுவரும் 'நயத்தக்க நாகரிகமே' வேண்டும் என்பார் (580). பிற்கால இலக்கியத்தில்தான் 'நாகரீகம்' என்ற சொல்வழக்குக் காணப்படுகிறது. அருணாசலக் கவிராயரின் இராம நாடகத்தில் 'நாகரீக வேடிக்கை' என்று வருகிறது (யுத். 124). அவை பேச்சு வழக்கை ஒட்டி வந்துவிட்டன. எனினும் கட்டளைத் தமிழின்படி 'நாகரிகம்' என்றே சொல்லவும் எழுதவும் வேண்டும்.

## காந்தியம், தேசியம்

இதைப்போல் பேச்சில் நீட்டி உச்சரித்துவிடும் பல சொற்கள் உள்ளன. இகம், இயம் என்பன ஒருவகை இறுதி ஒட்டுகளாகிப் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கவும், புதிய சொற்களை உருவாக்கவும் பயன்படுகின்றன. பாவிகம், நாட்டியம், காப்பியம், கருத்தியம் என்று சொல்லிப் பார்த்தால் உண்மை விளங்கும். காந்தியம் என்று காந்தியடிகளின் கொள்கைகளைக் கூறுவர். அதைக் 'காந்தீயம்' என நீட்டுவது, மங்கலமாகத் தோன்றவில்லை. 'மார்க்சியம்' என்று காரல் மார்க்சின் கோட்பாடுகளைக் குறித்தாலே போதும். மார்க்சீயம் என்று அதில் ஒரு சீயத்தை (சிங்கத்தை) விடவேண்டாம். உடைமைகளைத் 'தேசிய' மயமாக்குவது நல்லது; அதைத் தேசீய மயமாக்க வேண்டாம். தேசீயம் பேச்சில் நீள்கிறது. பாரதியார் பாடல்கள் செவ்விய பதிப்பில் 'தேசிய கீதங்களே' காணப்படுகின்றன. எனவே தேசிய ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு என்றாலே போதும். இங்கெல்லாம் 'தேசீய' என வால் நீட்ட வேண்டாம் தானே? பிறர் கருத்து :

1. தமிழண்ணல் கூறியுள்ளது போல் 'நாகரிகம்', 'காந்தியம்', 'மார்க்சியம்' என்று எழுதுவதே சரி ஆயினும், தற்காலத் தமிழில் தேசியம் என்றும் 'தேசீயம்' என்றும் இரு சொற்கள் வேறுபட்ட பொருள்களுடன் வழங்குவதாகத் தோன்றுகிறது.

தமிழ்ப் பேரகராதியில் தேசியம் (தேசிகம்) என்ற சொல்லுக்கு Provincialism, Local Idiom என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்று நாம், 'தேசீய' என்று எழுதும்போது இச்சொல் நாடு தழுவிய என்ற பொருளைத்தான் குறிக்கிறது. தமிழ்ப் பேரகராதியில் இப் பொருளில்தான் 'தேசீயவியக்கம்' (National Movement) என்ற சொல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகையால் வளரும் தமிழ் தேசிய, தேசீய் என்ற இரு சொற்களுக்குமே இடமளித்திருக்கிறது என்று கொள்ளலாம்.

- தினமணி ஆசிரியர் குறிப்பு

2. இருபதாம் நூற்றாண்டின் உலகச் சிந்தனையில், பல இசங்கள் (Ism) இடம் பெற்றுள்ளன. 1921-ல் மார்க்சிசம் (Marxism) எனும் சொல்லைத் தமிழாக்கம் செய்த திரு.வி.கலியாணசுந்தரனார், இசம், எனும் பிறமொழி விகுதியை, இயம் என்று தமிழாக்கம் செய்தார். அவரே 1923ல் 'நேஷனலிசம்' என்பதைத் தேசியம் எனவும் 1929ல் Gandhism எனும் சொல்லைக் காந்தியம் எனவும், தமிழாக்கம் செய்து முதன்முதல் தமிழில் வழங்கினார். அதுமுதல் பல்வேறு 'இசங்'களைத் தமிழ்ச் சொல்லாக்கம் செய்து வரும் அறிஞர்கள் இயம் எனும் பண்புப் பெயர் விகுதியைப் பயன்படுத்தி வருகின்றனர். மொழியியல் அடிப்படையில் புதியதமிழ்ச் சொல்லாக்கம் செய்கிற பொழுது சீர்மை (Uniformity) கருதி ism என்பதை எல்லோரும் இயம் எனவே வழங்கி வருகின்றனர். காந்தி + இயம் = காந்தியம் எனத்தான் அமையும். காந்தி + ஈயம் என அமையாது. காந்தீயம் என்றும் வழக்கில் ஈயம் இடம்பெறுவது தவறு. இதைப் போன்றதுதான் தேசீயம் என்பதுமாகும். சொல்லாக்க விகுதியின் தன்மை அறியாதவர் தேசீயம் என எழுதி வருகின்றனர். தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்த் தொகுக்கப்பட்டது. அதைத் தொகுத்த அறிஞர் பெருமக்கள் மரபு வழிப்பட்ட இலக்கண இலக்கியப் புலவர்களாவர். புதியதாகத் தமிழாக்கம் செய்யப்பட்டு வரும் சொள்களுக்கோ சொல்லமைப்பிற்கோ அவர்கள் பேரகராதியில் இடம் தரவில்லை

எ.டு...மறுமலர்ச்சி.

இப்பொழுது 'தேசிகம்' எனும் சொல்லைக் காண்போம். தேசிகம் என்னும் சொல்லை அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்கள் பயன்படுத்தியுள்ளனர். 'தேசிகம்' என்பதற்குப் பொருள் 'தேசத்திற்குரியது' (Native) என்பது. கூத்து வகையில் 'தேசிகக்கூத்து' (தமிழ் நாட்டிற்குரியது). ஆரியக் கூத்து என்பதில் இருந்து வேறுபடுகிறது என்பதை அவர்கள் புலப்படுத்தியுள்ளனர்.

வடமொழியில் உள்ள 'ஜ' வைத் தமிழாக்கம் செய்கிறபொழுது 'ய' வாகத் திரித்து வழங்குவது மரபு எ.டு. பங்கஜ-பங்கயம். இதைப்போன்று 'தேசிக' எனும் சொல்லில் உள்ள 'க' வைத் தமிழ்ப்படுத்தும் பொழுது ய வாகக் கொண்டனர். இதனால் 'தேசிகம்' - தேசியம் என ஆயிற்று. தொல்காப்பியனாரின். வடசொற்கிளவி, வடவெழுத்து ஒரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே எனும் விதிப்படியே தேசிகம் தேசியம் என்று உரையாசிரியர்களால் வழங்கப் பெற்றது. இதே விதியைக் கருத்தில்கொண்டு திரு வி.க. அவர்களும் 'தேசியம்' எனும் சொல்லாக்கத்தைச் செய்துள்ளார். ஒரு சொல் வடிவிற்கு இரண்டு, மூன்று பொருள்கள் வழங்குவது தவறா? வளரும் மொழிகள் அனைத்திலும் இப்பண்பினைக் காணலாம்.

எனவே, தேசியம் = (1) நாட்டுப்புறத் தன்மை (2) தேசிய உணர்வு என இரு பொருள் விளக்கம் தருவதில் என்ன தவறு? 'தேசீயம்' எனத்தான் எழுத வேண்டும் என்பது, புதிய தமிழ்ச் சொல்லாக்க விதிகளுக்கு முரணானது. ஆன்மிகம் எனும் தமிழ்ப்படுத்தப்பட்ட சொல்லை, 'ஆன்மீகம்' என அறியாமையால் எழுதுவதைப் போன்றதே, 'தேசீயம்' எனும் வழக்கு. எனவே, பேராசிரியர் தமிழண்ணல் குறிப்பிட்டுள்ள வடிவமே தமிழ் மரபிற்குப் பொருந்துவதாகும்.

- க.த. திருநாவுக்கரசு.

வாசகர் கடிதம்,
தினமணி 1-3-89.

**செல்வரும் தனவந்தரும்**

மொழியில் ஒப்புமையாக்கத்தால் பிழைகள் நேர்வதுண்டு. ஒன்றைச் சொல்லிப் பழகிய பழக்கத்தில் பிறிதொன்றையும் சொல்லிவிடுகிறோம். தனமுடையவர் தனவந்தர். தமிழில் வழங்கும் வடசொல் இது. இதைச் சொல்லிச் சொல்லி ஏற்பட்ட பழக்கத்தில் செல்வர் என்பதைச் செல்வந்தர் என்று கூறிவிடுகிறோம். செல்வர். என்பதுதான் இயல்பாகத் தொன்று தொட்டு வழங்கி வரும் சொல்,

நம்மிடம் செல்வர்களும் தனவந்தர்களும் பலராக இருப்பது நல்லது. அவர்களை நல்லவர்களாக வாழவிடுவது நாட்டுக்குப் பெரிதும் பயன்படும். அதற்காகச் செல்வரைச் செல்வந்தர் ஆக்கி அந்தரத்தில் விடவேண்டாம். செல்வமும் செல்வரும் என்றென்றும் வாழ்க! செல்வர் - என்றே எழுதுவோம்; செல்வந்தர் வேண்டாம்.

## வாய்பாடும் வாய்ப்பாடும்

அந்தக் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அரிச்சுவடி, எண்சுவடி என இரண்டுண்டு. அரிச்சுவடியில் அ, ஆ, என எழுத்து வரிசை இருக்கும். எண் சுவடியில் வாய்பாடு இருக்கும். 2 x 1 = 2, 2 x 2 = 4, 2x3 = 6 என வாய்பாடு 16 அல்லது 20 வரை போகும். எழுத்து வரிசையையும் எ்ண் பெருக்கல் வரிசையையும் காலையில் முறை வைத்து, மனப்பாடமாக எல்லோரும் சொல்வது வழக்கம். வாய்பாடு என்றால் முன்மாதிரி, குறியீடு என்று பொருள். யாப்பு இலக்கணத்தில் நேர், நிரை அசைகள் மற்றும் சீர்களுக்கு நாள், மலர், தேமா, புளிமா என வாய்பாடுகளுண்டு. இன்று ஆங்கிலத்தில் குறிக்கப்படும் கோட்பாட்டு வரையறைகளை 'விதிச்சுருக்கம்' (Formula) என்பர். அதனையும் வாய்பாடு எனலாம்.

வாய்ப்பாடு என்றால் பானை வாயினது மேல் விளிம்பு. குடத்துக்கு வாய்ப்பாடு உண்டு. அண்டாவின் வாய்ப்பாட்டில் நெளிவிருந்தால் எடுக்கவேண்டும். 'சட்டி வா(ய்)ப்பாடில்லாட்டா மொட்டையா இருக்கும்'. காசிச் செம்புக்கு வா(ய்)ப்பாடு உயரமாகவும் அழகாகவும் இருக்கும்.

வாய்பாடு தெரிந்தால் கணக்கை எளிதாகப் போட்டு விடலாம். பொருளாதாரத்தில் கூட, சில சிக்கல்களைக் கண்டு பிடித்துத் தீர்க்க வாய்பாடுகள் உண்டு. வெண்பாவைச் சீர் பிரித்து, வாய்பாடு கூறினால் அதன் செவ்விய வடிவம் விள்ங்கும். வாயால் பாடுவது வாய்ப்பாட்டு. வாய்ப்பாட்டிற்கு வாய்பாடு அமைக்கலாம். ஆனால் பானையின் வா(ய்)ப்பாடு வாய்பாடு ஆக இயலாது.

பிள்ளைகளுக்கு 'வாய்பாடு' என்று கணக்கு வாய்பாடு பற்றிய புத்தகம் முன்பு தரப்பட்டுக் கற்பிக்கப்படும். இன்று அந்தப் புத்தகத் தலைப்பையே சிலர் வாய்ப்பாடு என்று போட்டு விடுகிறார்கள்! இவர்களைத் திருத்துவது நமக்குப் பெரும்பாடாக இருக்கிறது. வாய்பாடு - என்றே சொல்லி, எழுதிக் கற்போம்.

## யாதும் ஊரே யாவரும் கேளிர்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றன் பாட்டிற்கு எல்லாம் நம் ஊரே, யாவரும் நம் உறவினரே, என்பது பொருள். இதில் 'கேளிர்' என்பதற்கு உறவினர் என்ற பொருளிருப்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் 'எல்லோரும் கேளுங்கள், என்று பொருள்கொண்டு, நன்றாகக் கேட்கவேண்டும் என்பதற்காகக் கேளீர் என்று வேறு நீட்டி விடுகிறார்கள். 'யாவரும் கேளிர்' என்று தான் வரும். 'கேளிர்' என்பது நெருங்கிய உறவினரையே குறிக்கும். கணவனைக் 'கேள்வன்' என்று குறிப்பதுண்டு. கிளைவிடுவது போன்ற மிக ஒட்டிய உறவே கேள், கேளிர் எனப்பட்டது. நல்லவேளையாக, சொன்னதைக் கேட்பதால் தான் கணவனுக்குக் 'கேள்வன்' எனப் பெயர் வந்ததென்று இன்னும் யாரும் ஆராயவில்லை! எனவே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' - என்றே எழுதுவோமாக.

## மரியாதைப் பன்மை கேட்கும் ஆறுகள்

ஒரு பொய் மற்றொரு பொய்யைச் சொல்லவைப்பது போல் ஒரு தவறு மற்றொரு தவற்றைச் செய்யவைக்கிறது. று மற்றும் டுக் குற்றியலுகரங்கள் (ஆறு, நாடு, வயிறு, தவிடு) வேற்றுமை உருபு ஏற்கும்போது பெரும்பாலும் இரட்டிக்கும். வயிறு + பசி = வயிற்றுப்பசி, சோறு + பானை = சோற்றுப்பானை, நாடு + பாடல் = நாட்டுப்பாடல், மலடு + பெண் = மலட்டுப்பெண். மஞ்சளாறு, பாலாறு, பெரியாறு, சுருளியாறு என்பன குற்றியலுகரங்களாதலால் இறுதி 'உ' நிறைவாக ஒலிப்பதில்லை. அதனால் நம் ஆங்கில நாளேடுகள் (Manjalar, Palar) (மஞ்சளார், பாலார்) என்றே, ஆங்கில மரபிற்கு எற்ப எழுதிவிடுகின்றன. தமிழ்நாட்டு ஆங்கில ஏடுகளை நடத்துபவர்கள் தமிழர்களே அல்லவா? அவர்கள் ஆங்கிலத்திலும் Manjalaru, Palaru, Adaiyaru என்று தான் போடவேண்டும். 'Tamilnadu' என்றுதான் போடவேண்டும் என்று அறிஞர் அண்ணா சட்டமியற்றவில்லையா? ஆங்கிலத்தைப் பார்த்து, மொழிபெயர்க்க வேண்டிய செய்திகளில் தமிழ்த்தினசரிகளும் மஞ்சளார் அணை, பெரியார் நீர்ப் பாசனத்திட்டம், சுருளியார்ப்பாலம் என்று மிகவும் கௌரவப்படுத்திப் போடுகின்றன. திருவையாற்றில் தியாகய்யருக்கு விழாவே தவிர, திருவையார் என்று ஊருக்குப் போய் மரியாதைப் பன்மை சேர்க்கவேண்டாமே! பெரியார் நீர்ப் பாசனக் கால்வாய்

என்றே தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி நிலைபெறச் செய்துவிட்டால், ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு வரும் வரலாற்றாராய்ச்சியாளர் 'இது பெரியார் பெயரால் செய்யப்பட்ட பணி' என்று முடிவு கட்டிவிடுதலும் கூடும். பெரியாற்றுப் பாசனம், மஞ்சளாற்றுப் பாலம் என்றுதான் போட வேண்டும். ஆற்றங்கரையை, ஆறுகரை என்றாலும் நாட்டுத் தலைவரை, நாடுதலைவர் என்றாலும் ஆட்டுக் 'குட்டியை ஆடுகுட்டி என்'றாலும் பொருள் தவறுபடுகிறதல்லவா?

வாரியப் பெயர், குழுமப் பெயர்களில் 'தமிழ்நாடு நுகர்பொருள் வாணிகக்கழகம். தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் என்று .போடுவதில் தவறில்லை. 'தமிழ்நாட்டு' என்றே வந்தாக வேண்டுமென்பதில்லை, 'காடுகிழாள்' நாடு கிழவோன் என இரட்டிக்காமல் முன்னரும் வழங்கியுள்ளன. தவற்றுக்கு, தவறுக்கு, தவற்றை, தவறை எனப் பொருளுணர்வு சிதையாத இடங்களில் இரு மாதிரியாகவும் வழங்கிவருகின்றனர். அவை போலப் பெயர்சுட்டும் போது ஒற்றுமிகவேண்டுமென்பதில்லை.

### அடையாறு – அடையார்

அடையாறு என்பதை ஆங்கிலப்படுத்தும்போது 'அடையார்' என்று ஆக்குவர். மீண்டும் அந்த ஆங்கிலத்தைத் (Adaiyar) தமிழில் அவ்வாறே எழுதும் பழக்கம் வந்து விட்டது. இதுபோலவே பெரியாறு, பெரியார் ஆகிப் பெருமை பெறுகிறது. கடலுடன் சென்றடையும் ஆற்றினை அடையாறு எனலே தக்கது. பிரெஞ்சுச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுவதுபோல, அடையார் என உச்சரித்தாலும் எழுதும்போது ஆங்கிலத்திலும் Adaiyaru என்றே எழுத வேண்டும் என அரசே இதை மாற்றி அறிவிப்பது நல்லது.

### தமிழக அரசும் தமிழ்நாட்டரசும்

'தமிழ்நாடு அரசு' என்பதா? 'தமிழ் நாட்டரசு' என்பதா?

'தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்' 'தமிழ்நாடு நுகர்பொருள் வாணிகக் கழகம்' என்றெல்லாம் தாளிகைகளில் அரசு விளம்பரம் காண்கிறோம். பெயராகக் குறியீடு செய்யும்போது, 'தமிழ்நாடு அரசு' என ஆள்வதில் குற்றம் இல்லை 'தமிழ்நாட்டரசிற்குச் சில யோசனைகள்', 'தமிழ்நாட்டுத் தொழில் வளர்ச்சி' என்பது போலத் தொடராக ஆளும்போதுதான்

கண்டிப்பாக ஒற்று இரட்டித்தாக வேண்டும். நாடு கிழவோன், காடு கிழாள், காடகம் என ஒற்று இரட்டிக்காமல் முன்பு வந்துள்ளமையை இலக்கண உரையாசிரியர்கள் காட்டியுள்ளனர் (நன். 183)

பெயரிடும் போது 'தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம்' 'தமிழ்நாடு அரசுப் பேருந்து' என்றும் ஆளலாம் என்பதே மூதறிஞர் வ.சுப.மா. அவர்களின் கருத்துமாகும். 'தமிழ்நாடு முதல்வர்க்கு வரவேற்பு', தமிழ்நாட்டு முதல்வருக்கு வரவேற்பு என இருவகையாகவும் ஆளலாம்.

தமிழ்நாட்டைத் தொல்காப்பியர் 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பின் நாற்பெயர் எல்லை அகத்தவர்' (1336) என்பார். "வையக வரைப்பில் தமிழகம் கேட்ப" (168) என்பது புறநானூறு. மேலும் பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பெருநூல்களிலும் 'தமிழகம்' இடம் பெறுகிறது. அறிஞர் அண்ணாவுக்கு முன்னதாகத் 'தமிழ்நாடு' 'தென்தமிழ்நாடு' என ஒரே நாடாகக் குறித்து, அவ்வாறு ஒன்றுபட வேண்டியதைக் குறிப்பால் உணர்த்தியவர் இளங்கோவடிகளேயாகும். (காதை 10.58) தென்தமிழ் நாடு ஒருங்கு காண (இறுதிக் கட்டுரை).

## நினைவு கூர்தல் நல்லது; நினைவு கூற வேண்டியதில்லை

'கூர்தல்' என்ற உரிச்சொல்லுக்கு 'உள்ளது சிறத்தல்' என்பது தொல்காப்பியம் குறிப்பிடும் பொருள். மறந்து போனதைச் சிறிது சிறிதாக நினைவுக்குக் கொண்டு வருவதைக் 'கூர்தல்' என்ற சொல்லால் குறிப்பிட்டார்கள். படர் கூர் மாலை. துயர்கூர் வாடை என்று சங்கப்பாடல்களில் வரும்போதும் இதுபோலவே கொஞ்சம் கொஞ்சமாகக் கூடுவதைக் குறிக்கிறது. இன்று 'நினைவு கூற வேண்டும்' என்று எழுதுவது, பழைய 'கூர்தல்' என்ற சொல்லை நினைவுகூராததால் வந்த வினை. இனியேனும் முன்னைய இலக்கிய வழக்குகளும் - அக்காலப் பேச்சு வழக்குகளும் - இன்றும் நம் நடைமுறையில் இருப்பதால், அத்தகைய முக்கியமானவற்றை மறவாமல் நினைவு கூர்வோமாக!

நினைவு கூர்தல் - பழையதை நினைவுக்குக் கொண்டு வருதல். தமிழ் மொழிக்காக ஈகம் செய்தவர்களை நினைவு கூர்வது நம்கடமை.

## தடைபடாமல் தமிழ்வளர...

தமிழ் தடைபடாமல் வளர வேண்டுமேல், தமிழை வழங்கி - பலமுறை பயன்படுத்தி நடைமுறையில் நீண்ட காலம் பழகிக் கொள்ள வேண்டும். புழக்கத்திலிருக்கும் பொருள் பழுதுபடாது; மூலையில் போட்ட இரும்பும் துருப்பிடித்து விடும். சிலர் 'தடைப்பட்டது' என்றே ஒற்றுமிகுத்து, எழுதுகிறார்கள். அங்கு என்னவோ தடைபடுவது, ஓரினச் சொற்களையும் தொடர்பினச் சொற்களையும் சொல்லிப் பார்க்கும் போது தெளிவுபடும்.

(கல்) உடைபடுதல், (தயிர்) கடைபடுதல், (இசை) தடைபடுதல் என்னும் போது 'படு' என்பது துணை வினையாகும். அணைக்கட்டு உடைபடும்; உடைப்படாது. இது போலவே எடுபடு, விடுபடு, உரிபடு என்பனவும் வரும். 'அவள் எடுபட்டவள்' என்பார்கள். நிலையில் திரிந்தவள், பிறர்க்குக் கைக்கூலி ஆனவள் என்று பொருள். எழுதும் போது இடச்சுருக்கம் காலச்சுருக்கம் கருதிச் சில விடுபடலாம். பலாத்தோல் எளிதில் உரிபடாது.

'கடைப்பட்ட நாயேனை' என 'நாயன்மார் உருகும் போது' அது கடைபடுதலன்று. தலை, இடை, கடை என்ற பெயரடியாகப் பிறக்கும் எச்சங்கள் தலைப்பட்ட, இடைப்பட்ட, கடைப்பட்ட என்றாகும். தலைக்காவிரி, இடைக்காடு, கடைக்கோடு காண்க. கடைப்பட்ட காலம் வேறு; கடைபட்ட தயிர் வேறு. வினையுடன் சேரும் துணைவினையாதலின் தடைபடுதலில் 'ப்' மிகவில்லை.

## தடைபடுதலும் தடைப்படுத்தலும்

வளர்ச்சி தடைபடுகிறது; முன்னேற்றம் தடைப்படுத்தப் படுகிறது. இங்ஙனம் செயப்பாட்டு வினையில் 'ப்' மிகுகிறது. அவன் போக்கைத் தடைப்படுத்தாதீர்கள்; அவள் படிப்பைத் தடைப்படுத்தாதீர்கள். எதையும் நிலைப்படுத்துவது போல், விலைப்படுத்துவது போல் இதையும் சரிப்படுத்த வேண்டியுளது.

அணைதல் அணைத்தல்; இணைதல் இணைத்தல் போலத் தடைபடுதல் பிறவினையில் தடைப்படுத்தல் ஆகிறது. நாட்டு முன்னேற்றம் தடைபடாமல் காப்போம்; யாரும் தடைப்படுத்த வந்தால் அதைக் கடந்து முன்னேறுவோம்.

## திருவளர் செல்வி

பலர் செப்பமாக எழுத வேண்டுமென எண்ணியே, தவறாக எழுதி விடுகிறார்கள். இதுவும் ஒரு மிகைத்திருத்தம். திருவளர்ச் செல்வன் முருகனுக்கும் திருவளர்ச்செல்வி வள்ளியம்மைக்கும் திருமணம் என்று அழைப்பு விடுக்கிறார்கள். இது போலவே திருநிறைச்செல்வன் என்றும் எழுதிவிடுகின்றார்கள். வளர் செல்வி, நிறைசெல்வன் என்பன வினைத் தொகைகள்; ஒற்றுமிகுந்தால் வளர்ச்சி தடைபடும். என்றும் வளர்கிற செல்வியை வளர்செல்வி என்றுதான் கூற வேண்டும். வளர்ச்செல்வி எனல் கூடாது.

'காலங்காட்டும் இடைநிலை, விகுதி முதலியன மறைந்து நிற்றலால், இவை முக்காலத்திற்கும் விரிக்கப்படக் கூடியன. ஓடுகாலி, பாடுபொருள், வளர்தமிழ் என வரும்போது ஓடுகின்ற, ஓடும், ஓடிய என முக்காலத்திற்கும் விரிக்கக்கூடிய வகையில் இவை அமைந்துள்ளன. இவற்றில் வல்லினம் வருமொழி முதலில் வந்தாலும் ஒற்றுமிகாது. வளர்செல்வியே வளர்கின்ற செல்வியாவாள். எறிபந்து, 'அலைகடல்', 'நிகழ்காலம்', 'வரைபடம்', – இங்கு வினையின் முதல்நிலை மட்டும் அடைமொழியாக நின்று அவற்றின் இயல்பைக் காட்டுதல் காணலாம். செல்வம் சிறக்கும் செல்வியாக என்றென்றும் திகழவேண்டுமென்பதாலேயே 'வளர்செல்வி', 'நிறைசெல்வி' என்றெல்லாம் போடுகிறோம். இடையில் ஒற்றெழுத்தைப் போட்டால் எக்காலத்துக்கும் ஏற்படவேண்டிய வளர்ச்சிக்கு இடையில் முட்டுக் கட்டை போட்டதாகும். எனவே இங்கெல்லாம் ஒற்றின்றியே, முறையாகப் போட்டுத் திருமண அழைப்பை அச்சடித்துப் புதுமண மக்களை வாழ வைப்போமாக! திருவளர் செல்விக்கும் திருவளர்செல்வனுக்கும் அல்லது திருநிறை செல்விக்கும் திருநிறை செல்வனுக்கும் இனித் திருமணம் நடக்கட்டும்.

## புனை பெயரா, புனைப்பெயரா?

சிலர் இயற்பெயர் இருக்கவும் புனைபெயரால் கதை முதலியன எழுதுவர். அதனைப் புனைப்பெயர் என்று 'ஒற்று' மிகுத்து எழுதுதல் கூடாது. புனையும் பெயர் என்ற எச்சத்தொடர் வழிப்பட்ட இதனை, புனைபெயர் என வினைத் தொகையாக வழங்குவதே பொருந்தும். தமக்கு இயற்பெயர் ஒன்றிருக்கவும் வேறு ஒரு பெயரைப் புனைந்து

கொள்வது எழுத்தாளர் மரபு. புனையும், புனைந்து கொண்ட என்றெல்லாம் விரிக்கும்படி அமைந்த தொடர் இது. புனைப்பெயர் என ஒற்று மிகுந்தால் 'புனையாகிய பெயர்' எனப் பொருள் விளங்காமல் போய்விடும்.

## கழிவறையா, கழிப்பறையா?

'கழிவறை என்பதா? கழிப்பறை என்பதா? சிலர் கழிப்பகம், கழிப்பிடம் என்றும் வழங்குகின்றனர். இவற்றுள் கழிவறை என்பது சுருங்கிய வடிவமாதல் கருதத்தக்கது. நவீனக் கழிப்பிடம், கட்டணக் கழிப்பிடம் என்றெல்லாம் நகராட்சிகளில் காணலாம்.

ஆங்கிலத்தில் தண்ணீரால் சுத்தப்படுத்தும் இடம் என்ற் பொருளில் 'Water closet' என்பர். தமிழில் அதனை 'நீரடி' எனலாம் என்பர் மு.வ. ரயிலடி, செக்கடி, தேரடி, காரடி என்பது போல நீரடி என்பதும் நாகரிகமாக அமையும்.

விமான நிலையங்களில் 'Toilet' என்ற ஆங்கிலச் சொல்லை மொழிபெயர்த்து 'ஒப்பனை' என அழகாக எழுதிவைத்துள்ளனர். அதுதான் தமிழாக்கம். 'ஒப்பனை' அழகுபடுத்திக் கொள்ளுதல் என்று பொருள்படுகிறது. காலப்போக்கில் இதனினும் பொருந்திய சொற்களைத் தேடவேண்டும்.

கழிவறை, கழிப்பறை, கழிப்பிடம் என்பனவற்றை விட மங்கல வழக்கில் நாகரிகமாகப் புதிய சொற்களைப் பயன்படுத்த முயல வேண்டும்.

## ஆத்திசூடி

ஔவை தந்த அமுத வாசகம் ஆத்திசூடி. பலர் அதை 'ஆத்திச்சூடி' எனச் சரியாக எழுதுவதாக நினைத்துக் கொண்டு தவறாக எழுதி விடுகின்றனர். இறைவன் ஆத்திசூடி - ஆத்தி மாலையைச் சூடியவன், கொன்றை சூடி - கொன்றை மாலையைச் சூடியவன், பிறைசூடி - பிறையைத் தலையில் சூடியவன், ஆத்திச் சூடி, கொன்றைச்சூடி, பிறைச்சூடி என வருவதில்லை. இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து நிற்கும் பொழுது சந்தி மிகுவதில்லை; விரிந்து நிற்கும் பொழுது மிகும் என்பதை இந்த உதாரணங்கள் காட்டும்: ஆத்திசூடி; ஆத்தியைச் சூடியவன். பிறைசூடி; பிறையைச் சூடியவன். இனிமேல் நாமும் 'ஆத்தி சூடி அமர்ந்த தேவனை,

ஏத்தி - ஏத்தித் தொழுவோமாக'. ஆத்திசூடியாகிய சிவபெருமானால் விரும்பப்பட்ட (அமர்ந்த - விரும்பிய), பிள்ளையாரைத் தொழுவோம் என்பதே இதன் பொருள். கொன்றை வேந்தன் செல்வன் அடியினை, என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே - இதிலும் கொன்றை மாலை அணிந்த தலைவனாம் சிவனின் செல்வனாகிய பிள்ளையாரை வணங்குவோம் என்பதே பொருள். ஏனைய மூதுரை, நல்வழி இரண்டிலும் ஔவையார் பிள்ளையாரை வணங்கியிருப்பதை நினைத்துப்பாருங்கள்.

### அங்கயற்கண்ணிதான் காக்கவேண்டும்

. மதுரையில் நான்கு திசைகளிலும் போகின்ற, ஊர்ப்புறத்தே உள்ள நான்கு நெடுஞ்சாலைகளில், மதுரைக்குள் நுழையும்போது மகிழ்ச்சியோடு வரவேண்டும் என்பதற்காக, ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டின் போது, பல இலட்ச ரூபாய் செலவில் மிகப் பெரிய தோரண வாயிலுக்கு 'அங்கயற்கண்ணி தோரணவாயில்' என்று பெயரும் சூட்டப்பட்டது. மேற்கே தேனி போகும் நெடுஞ்சாலையிலுள்ள தோரணவாயிலின் மேல் 'அங்கயர்கண்ணி தோரணவாயில்' என்று பெரிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. அம் கயல் கண்ணி - அழகிய மீன் போன்ற கண்ணை உடையவள். மீனாட்சி என்பதற்கும் அதுவே பொருள். அவள் பெயரை 'அங் கயர் கண்ணி' ஆக்குவது முறையன்று. அரசு அமைத்த தோரணவாயில். அதனால் யாரையும் கேட்காமல் போட்டுவிட்டார்கள் போலும். 'அங்கயற்கண்ணியே அருந்தமிழ் காப்பாய் அம்மா' என்று வேண்டிக்கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

### மனதிலா, மனத்திலா?

மனதில், மனத்தில் - எவ்வாறு எழுத வேண்டும்? 'மனஸ்' என்று வடமொழியிலும் மனம் என்று தமிழிலும் தொன்று தொட்டு வழங்கிவரும் இச்சொல்லை, இன்று எம்மொழிக்குரியது என்று ஆராய்ந்தால் அது தமிழுக்குரியது என்பதே உறுதிப்படும். ஏனைய திராவிட மொழிகள் அனைத்திலும் காணப்படும் இச்சொல் திருவள்ளுவர் போன்ற சான்றோர்களால் மனம் என்றே ஆளப்படுகிறது. தமிழில் மகர ஈற்றுச் சொற்கள் பெரிதும் அத்துச்சாரியை பெறும். 'மனத்துக்கண்', 'மனத்தது மாசாக' என்று

இவ்வாறு திருக்குறளில் வரும் ஆட்சிகள் கருதத்தக்கன. பேச்சு வழக்கில் மனசில் என்றும் வழங்குவதால், அதனையொட்டி மனதுக்கு, மனதில், மனதை என ஆளும் பழக்கங்கள் இக்காலத் தமிழில் ஏறிவிட்டன. எனினும் செவ்விய நடையில் எழுதுவோர் மனத்தில், மனத்தால், மனத்தை, மனத்துக்கு என்றே எழுதுகின்றனர். நான் சொல்வது உங்கள் மனத்தில் பதிந்திருக்குமென்றே கருதுகிறேன்.

## பேருந்தா? பேரூந்தா?

சில கிராமங்களில் பஸ் நிலையங்களில் 'பேரூந்து நிலையம்' என எழுதப்பட்டுள்ளது. வண்டி ஊர்ந்து போவதால் அப்படி எழுத வேண்டும் என்று நினைத்துவிட்டார்கள் போல் தெரிகிறது. கிராமச் சாலைகளில் என்னவோ வண்டிகள் ஊர்ந்து போவது உண்மையே. உந்து (Motion) என்பதன் அடிப்படையில் ஆக்கப்பட்டது இச்சொல். 'பேருந்து நிலையம்', என்றே எழுத வேண்டும். இப்பொழுது சிற்றுந்தும் வந்து விட்டது. மகிழுந்து, சரக்குந்து எல்லாம் முன்பே உள்ளன. தானே இயங்குவது என்று, மனிதன் மிதிக்காமல் ஓடும் 'ரிக்சாவைக் கண்டதும்', 'Auto' (ஆட்டோ) என்று பெயரிட்டனர். அதைத் தானி என்று இன்று அழைக்கின்றனர்.

## மேன்மேலும்

மேன்மேலும் என்பதைச் சிலர் மென்மேலும் என எழுதுவது தவறு. மேலும் மேலும், மேன்மேலும் என்பன அடுக்குத் தொடர்கள்.

'மென்மெல' என்ற அடுக்குத்தொடர் மெல்லமெல்ல நடக்கும் குழந்தையின் நடையைச் சுட்டப்பயன்படும். அடுக்குத் தொடரில் இரண்டு சொற்களும் ஒரே மாதிரியாக இருக்கும் - மென்மேலும் என்றால் அவ்வாறமையவில்லை. எனவே மேலும் மேலும் சிந்தித்து எழுதிப் பழகினால் தமிழ் மொழி மேன்மேலும் வளர்ச்சியுற்றுச் சிறக்கும்.

# 8

# இதுவா, அதுவா?

# ஐயமும் தெளிவும்

**பழனியா, பழநியா?**

பழனியின் பழைய பெயர் பொதினி என்பது. வேளிர், ஓவியர், ஆவியர் போல்வன மிகப் பழைய அரசகுடிகளின் பெயர்களாகும். பேராற்றல் மிக்க நெடுவேளாவி பொதினியை ஆண்டதாக மாமூலனார் அகநானூற்றில் இரண்டு இடங்களில் குறிப்பிடுகிறார் (அகம் 1, 61). வையாவிக்கோப் பெரும்பேகனும் இவ் 'ஆவியர் குடி'யைச் சேர்ந்தவனே (புறம். 147). 'ஆவிநன்குடி' என்பது இவர்களது தலைநகரின் பெயராக விளங்கியது. முருகனுடன் தொடர்பு படுத்தப் பெற்று, அஃதொரு தெய்விகத் தலமான பொழுது திருவாவிநன்குடி ஆயிற்று. திருவாவிநன்குடியைச் சார்ந்திருந்த பொதினிமலை தெய்வமலையாக வழிபடப்பட்டபோது, முருகனை இறைவனும் இறைவியும் 'பழம்நீ' என அழைத்ததால் 'பழநி' என ஆயிற்று என்று புராணக்கதை தோன்றியது. ஆயினும், முதலில் பொதினி என்றிருந்தது தான் காலப்போக்கில் பழனி என மக்களிடையே மருவி வழங்கியது. இதனால் பொதினி பழனியாகிப் பிறகு பழநியாகிய வரலாறு விளங்கும். இன்றைய நிலையில் பழனி, பழநி என இரு வகைகளாகவும் மக்கள் பயன்படுத்துகின்றனர். இவற்றுள் பழனி என்பதே, அதன் பழைய பெயரோடு ஒட்டியதாகும். எல்லோரும் பழனி என்றே எழுதும் காலம் வரலாம்.

**சுவரில், சுவற்றில்**

சுவரொட்டிகள் நம் கண்ணை உறுத்துகிற காலம் இது. Post-இல் ஒட்டுவதால் 'Poster' என்றார்கள். இங்குக் கம்பங்கள் பல சும்மா நிற்கின்றன. சுவர் எல்லாம் பாழாகிறது. நம் பண்பாடும் அதனோடு சேர்ந்து பாழாகிறது. 'அதைத் தடுக்க, சுவற்றில் எழுதாதே' எனத் தடித்த எழுத்தில் எழுதி விடுகிறார்கள். சுவர் வேறு, சுவறு வேறு. 'சுவறு' என்றால் வற்று, காயந்து போ என்று பொருள். சுவற்றில் என்பது தவறாகும். சுவர் என்பதைச் சாதாரணமாகச் 'சுவரு' என்பதுண்டு. (சுவர் – சுவரு, கவர் – கவரு)

அதையே தவறாக நினைத்துக் கொண்டு இந்த வழக்கு வந்துவிட்டது. கயிறு என்பதைக் 'கயிற்றை' என வேற்றுமையுருபுடன் சேர்த்தெழுதாமல், 'கயிறை' என்றே பேசிவிடுகிறோம். ஆனால், 'சுவற்றை' என மாற்றி எழுத மட்டும் மறப்பதில்லை. தமிழனின் புத்திக் கூர்மையை மெச்சாமல் இருக்க முடியவில்லை. இனிமேலாவது சுவரில் எதையும் 'ஒட்டவிடாமல்' பாதுகாப்போமாக! தானாக அறியாமலும் தெரிந்தவர்களிடம் கேட்காமலும் மொழியைத் தான் தோன்றித் தனமாகச் சிதைப்பவர்களுக்கு மதிப்பெண் போட்டால் நூற்றுக்கு நூறு தமிழனுக்கே.

### சீயக்காய், சிகைக்காய்

சீயக்காய், சிகைக்காய் இவற்றுள் எது சரி? எண்ணெய் தேய்த்துத் தலை குளிக்கும் போது சிகைக்காய் தேவைப்படும். சிகை வடசொல், காய் தமிழ்ச் சொல். ஆயினும் இந்தி, முதலிய மொழிகளில் எல்லாம் இது 'சிகைக்காய்' என்றே வழங்குகிறது. நம் சொல்லை மாற்றிச் 'சிகை' ஆக்கினும், அவர்களால் காயை மாற்ற முடியவில்லை. தமிழில் சீயாக்காய், பிறகு சீயக்காய் எனப் பேச்சில் திரிந்தது. கன்னடம், துளு, மலையாளம் போலும் திராவிட மொழிகளில், சிறு சிறு வேறுபாட்டுடன் இது வழங்குகின்றது. சீயக்காய்ச் சடங்கு என்று தமிழகத்தில் சில குலத்தாரிடம் மணமக்களுக்குக் கண்ணேறு கழித்தலுக்கு இது வழக்கத்திலுள்ளது. சீயா - ஒரு மரம் என்று, யாழ்ப்பாணம் கதிரை வேற்பிள்ளை அகராதி கூறுகிறது. அதன் காயை அரைத்து உடலில் தேய்த்துக் குளிப்பர். இதற்கு அரைப்புக்காய் அல்லது அரைப்பு என்றும் பெயர். சீயாவின் காய் சீயாக்காய். அது சீயாக்காய் எனக் கூறப்பட்டுச் சீயக்காய் ஆனது. அதைச் சிகைக்காய் என சமஸ்கிருதமாக்கியவர்கள், ஒருவேளை இதைச் சிகைக்கு மட்டும் பயன்படுத்தி இருக்கலாம். அச்சொல் தப்பானது. சீயக்காய், என்றே நாம் கூறுவோம். நம் சொல் ஒன்றைப் பிறமொழிகள் பலவற்றில் ஏறச் செய்திருப்பதால், இதைத் தலையில் வைத்துக் கொண்டாடலாம் போல் தோன்றுகிறது.

### வெந்நீரா, வென்னீரா?

வெம்மையான நீர் வெந்நீர் தான். சிலர் சூடான வெந்நீர் என்று கேட்பார்கள். அவர்களுக்குக் கொதிக்கிற வெந்நீரை ஊற்ற வேண்டும். தண்மை + நீர் = தண்ணீர். நன்மை + நீர் = நன்னீர்.

பன்னீர் - பல்வகை மலர் மணநீர். இவை பண்புத் தொகைப் புணர்ச்சிகள் எனப்படும். வென்னீர் என்றால் பொருளில்லை. வெந்நீரில் குளிப்போம், தேவைப்பட்டால்.

## ஆர்க்காடுதான், ஆற்காடு அன்று

ஆர் என்பது ஆத்திமரம். இறைவன் ஆத்திப்பூவைச் சூடியிருப்பதால் தான் அக் கடவுளை ஆத்திசூடி என்கிறோம். ஆர் சூழ்ந்த காடு ஆர்க்காடு, மரப்பெயரால் ஊருக்குப் பெயர் வைப்பது ஒரு மரபு. தில்லை, மருதை எல்லாம் மரத்தால் வந்த ஊர்ப் பெயர்களே.

ஆலங்காடு, ஆலங்குளம், ஆலம்பட்டி என ஊர்ப்பெயர்கள் உண்டு. மரத்தால் வந்த ஊர்ப் பெயர்களை ஒருவர் தொகுக்கலாமே!

ஆல மர அடிப்படையில் ஆல்+காடு=ஆற்காடு என வழங்கும் மரபும் இல்லை. 'ஆறு காடு' எனக் கொண்டு, அதுவே ஆற்காடு ஆயிற்று என்பது, சொற்களைக் கற்பனை நயப்படுத்திக் கதைகட்டும் முறை சார்ந்தது. அதில் வரலாற்றுண்மை எதுவுமில்லை. எனவே 'ஆர்க்காட்டு' அழிசி எனச் சங்க காலத்தும் வழங்கிய பெயரை நாம் மாற்றக் கூடாது. அரசு விளம்பரம், ஆவணம் அனைத்திலும் 'ஆற்காடு' எனத் தவறாக வழங்குவதை, அண்மைக் காலமாகத் தினமணி மாற்றி, 'ஆர்க்காடு' என்ற சரியான பெயரை அச்சிட்டு வெளிப்படுத்தி வருகிறது. ஆர்க்காட்டு இரட்டையர் நூற்றாண்டு விழாச் சமயத்திலேனும் இம்மாற்றம் ஏற்பட்டது குறித்து மகிழலாம். ஆர்க்காடு-ஆத்தி மரங்கள் நிறைந்த காடு சூழ்ந்த நாடு. அதனை மாற்றுவது ஏற்காது.

## நம்மைப் பொறுத்தவரை எது சரி?

பொருப்பு - மலை. பொருத்தம்-ஒற்றுமை. 'பொறுப்பு' என்ற சொல் உரிமை, கடமை, ஒருவரின் சார்புடைமை எனப் பொருள்படும். 'என்னைப் பொறுத்தவரை' என்றால், ஒருவர் தம் சார்பான, தமக்குச் சொந்தமான கருத்தைக் கூறப்போகிறார் என்று பொருள். பொருத்து, பொருத்தல், பொருத்தம் முதலிய சொற்கள் உண்டே தவிரப் 'பொருத்தவரை' என்ற சொல் கிடையாது. பெருத்தவரை, பருத்தவரைப் பார்த்துள்ளோம். பொருத்தவரை என்றால் பொருத்த+வரை= பொருந்தியவரை என்று பொருள்படாது.

'நம்மைப் பொறுத்தவரை' 'அவரைப் பொறுத்தவரை' என்றால் அவரவர் சார்பான, அவரவர்க்குச் சொந்தமான - அவரவர் எல்லைக்குட்பட்ட என்றாகும். 'இது உன் பொறுப்பு', 'பாடங்களைப் படித்து முடிக்க வேண்டியது மாணவர் பொறுப்பு' என்கிறோம். மாணவர்களே, உங்களைப் பொறுத்தவரை பாடங்களை ஒழுங்காகப் படியுங்கள்; அது போதும் என்றுதான் கூறுவோம். உடனே ஒரு மாணவன் எழுந்து 'ஐயா' என்னைப் பொறுத்தவரை படிப்பது மட்டுமன்றி எழுதுவதும் எங்கள் கடமையென நினைக்கின்றேன் என்றால் தவறில்லை. 'யாரைப் பொறுத்தது?' யார் 'பொறுப்பு', 'யாரைப் பொறுத்து' இதைக் கூறினீர்கள் 'உன்னைப் பொறுத்தவரை இது சரியன்று' என்ற வழக்குகளை எண்ணிப் பாருங்கள். என்னைப் பொறுத்தவரை என்றால் 'As far as I am concerned' என்பதாகும். இங்குப் 'பொருத்தத்திற்கு' அல்லது 'பொருத்துவதற்கு' எதுவும் இருப்பதாகத் தோற்றவில்லை. 'பொருந்திய வரை' வேறு; பொறுத்தவரை வேறு.

பெருளுணர்ச்சியைப் 'பொறுத்தவரை' இதுவே சரியெனப் படுகிறது. திரு.வி.க., மு.வ., முதலான முன்னைய பேறறிஞர்கள் எல்லோரும் பொறுத்தவரை என வல்லின 'று' - வே போட்டுள்ளனர். இந்தியாவைப் பொறுத்தவரை அணி சேரா நாடு; ஆவின் பாலைப் பொறுத்தவரை, அது தாயின்பாலுக்கு நிகரானதே. இங்கெல்லாம் அஃறிணைகளுக்குப் பொறுப்பு எது எனக் கேட்பது தவறு. இந்தியாவின் உரிமை எல்லையைப் 'பொறுத்தவரை' சுட்டுகிறது; பசும்பாலின் தகுதிச் சிறப்புடைமையை அதன் பொறுப்புச் சுட்டுகிறது. இங்கெல்லாம் பொருத்தவரை என எழுதுவது பொருத்தமில்லை.

### ஒருகால், ஒருக்கால்?

'ஒருக்கால் நீங்கள் வராவிட்டால்' என்கிறோம். 'ஒருக்கா இருக்கா வருவதுண்டு', எனவும் பேசுகிறோம். 'மறுகா வந்தானா' என்று கேட்கிறோம். இவற்றின் திருந்திய வடிவங்களையும் தெரிந்து கொள்வது நல்லது. ஒரு கால், இரு கால் என்பன ஒரு சமயம், இரண்டு சமயம் என்ற பொருளில் இலக்கியங்களில் ஆளப்படுகின்றன. 'இருகால் கேட்பின்', 'முக்கால் கேட்பின்', 'பல்கால் பயின்று' என இவை வழங்குமிடங்களைக் காணலாம். (நன்னூல் - பாயிரம்) 'மறுகால்' என்பது ஒரே வயலில் முதலில் பயிர் செய்த

பின் மீண்டும் ஒரு பயிர் போடுவதைக் குறிக்கிறது. உலக வழக்கில் 'மறுகா வருகிறேன்' என்று மறுபடி வருவதாகக் குறிக்கிறோம். எழுதும் போது ஒருகால், இருகால் என எழுதுவதே செவ்விய வடிவங்களாகும். எதிரே வல்லெழுத்து வருவதால், 'ஒருக்கால், இருக்கால்' மட்டும் இருந்து விட்டுப்போகட்டும். ஒருவேளை என்பதும் இதன் பொருளாகும்.

## சிவப்பா, சிகப்பா?

'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள' என்றும் 'நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப' (855,856) என்றும் தொல்காப்பியம் கூறுகிறது. சிவப்பு கடுங்கோபத்தையும் நிறத் தோற்றத்தையும் சுட்டும் என்பதால் சிவப்பு என்ற சொல்லின் வடிவை அறியலாம். இலக்கிய நூல்களில் சிவந்த, சிவந்தன, சிவப்ப முதலிய சொல்லாட்சிகளைக் காணலாம். சிகப்பு என்பது உலக வழக்குச் சொல். சிவப்பே சிகப்பாக மருவிவிட்டது. 'சிவப்பு நிறப் பெண்', 'சிவப்பு மனிதர்கள்' என இவ்வாறு ஆள்வதே பொருத்தமாகும்.

சிகப்பையும் தள்ளிவிட முடியவில்லை. அதன் தொடர்பான பல சொற்களும் முன்பிருந்தே காணப்படுகின்றன. செம்மையிலிருந்து, சிவப்பைப்போல் செக்கரும் பிறந்துளது.

## சிவப்பும் செக்கரும்

சிவப்பு என்பது தொல் வடிவம். செவலைக் காளை, செம்மண், செங்குன்றம் என சி-செ மாற்றம் பேச்சிலும் எழுத்திலும் காணப்படுகிறது. சிகப்பு, செகப்பு என்பன பேச்சு வழக்கில் ஆட்சி மிகுதி. 'கன்னங் கரேர்', 'வெள்ளை வெளேர்', 'பச்சைப் பசேர்' போலச் 'செக்கச் செவேர்' என்ற மரபுச் சொல் வடிவங்களைக் காண்க. நிறத்தின் மிகுதியை, அழுத்தத்தை இவை குறிக்கின்றன. செக்கரும் 'செம்'மை அடியிலிருந்தே வந்ததை இம் மரபுத் தொடர் காட்டுகிறதல்லவா? செக்கச் சிவக்க வெற்றிலை போட்டுக் கொண்டு, உலகில் பேசுவது சிகப்பு; அதுவே இலக்கிய வழக்கில் சிவப்பு. சரிதானே? 'பெண் சிகப்பா, கருப்பா' என்று கேட்கும் பழக்கம் இன்னும் போகவில்லையே! 'சிகப்பி' என்ற பெயரைச் 'சிவப்பி' என அழைத்தால் ஒரு மாதிரியாக அல்லவா இருக்கிறது! சிகப்பி - திருமகள், இலக்குமி, சிவந்த நிறமுடையவள். வெள்ளைத் தாமரைப்

பூவிலிருப்பவள், வெள்ளைச்சி, வெள்ளையம்மாள், கலை மகள், கருப்பி, கருப்பாயி - உமை, கார்மேக வண்ணனின் தங்கை, உலகத்தாய்)

**கருப்பா, கறுப்பா?**

'கறுப்பின்கண் மிக்குள்ளது அழகு' என்பது இலக்கண உதாரணம். கறுப்பு, சிவப்பு என்பன உரிச்சொல்லாக நின்று கடுங்கோபத்தைக் குறிக்கும் என்றும், அவையே நிறத்தையும் குறிக்கும் என்றும் தொல்காப்பியர் (855, 856) உரியியலில் குறிப்பதால் 'கறுப்பு'ப் பற்றி ஐயம் எழுகிறது. உரியியல் பற்றி இன்னும் சிந்திக்க வேண்டியுளது. அது அருஞ்சொற்கும் அடிச்சொற்கும் பொருள் தருகிறது. பொதுப் பொருளை விட்டு நீண்டு நிழற்பொருளில் வழங்குவதையும் உணர்த்துகிறது. சிவப்பு, கருப்புக்குச் சினம் என்பது நிழற்பொருளே. அது மிகுதியாய் வழங்கியதால் தொல்காப்பியர் இவ்வாறு கூறுகின்றார். அவற்றின் முதற்பொருள் நிறமே; சினப்பொருளிலும் மிகுதியாக வழங்கியது என்பதே உண்மை. 'கரும்' என்ற அடைமொழி முன்பு வலிமையைக் குறித்தது. கருங்கைக் கொல்லன் - வலிய கையையுடைய கொல்லன்; கருந்தொழில் - கொலைத் தொழில் என்பன பண்டைய வழக்குகள். 'கருங்கைச் சனங்கள்' என்ற பேச்சு நடையில் கைவினைஞர் மற்றும் உடலுழைப்புத் தொழிலாளரைக் குறிப்பதுண்டு. கருப்பு என்று நிறத்தைச் சுட்டுமிடங்கள் சங்கப் பாடல்களில் பரக்கக் காணப்படுகின்றன. கரு, கார், கரிய முதலிய துணை வடிவங்களும் உள்ளன. முன்பு கறுப்பு, கருப்பு என்ற இரண்டு வடிவங்களில் முன்னது வெகுளி, கருநிறம் இரண்டையும் குறிக்கவும், பின்னது நிறத்தை மட்டும் குறிக்கவும் வழங்கி வந்துள்ளன. கையில் அரிவாளுடன் நிற்கும் 'கறுப்பணசாமி' கடுங்கோபத்தைக் காட்டுகிறார். கன்னங்கரிய கூந்தலையுடையவள் 'கருங்குழலி' அல்லது 'கார்குழலி' என்று அழைக்கப்படுகிறாள். கருங்குழலி, கார்வண்ணன், கார்முகில், கார்காலம், கரிது, கரி, காரி (கரிய நிறச் சனிக்கோள் - கிரகம்) இவை யாவும் உணர்த்துவது என்ன?

**கோவையும் கோர்வையும்**

'கோ' என்று வினைச்சொல் ஒன்றைக்கோக்கும்படி ஏவுதல். கோத்துத்தரும் மாலை 'கோவை' எனப்படும்.

'திருச்சிற்றம்பலக்கோவை', 'தஞ்சைவாணன் கோவை' எனவரும் கோவை நூல்கள் நானூறு பாடலகள் அடங்கிய அகப்பொருள் மாலைகளே. இறைவனும் மாணிக்கவாசகரிடம் 'பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக' என்றுதான் கூறியதாக மொழிகுவர். பிறகு அதனைக் 'கோர்வை' என்கிறோமே, ஏன்? கோர்த்தல் என்று வேறு சொல்லுகிறோம். பார்வை, தீர்வை போலக் கோர்வை என்று சொல்லாவிட்டால் தப்பு என நினைத்து அவ்வாறு சொல்லி விடுகிறோம்! மிகைத் திருத்தம் தான் காரணம். எனினும் கோர் என்பதே அடிச்சொல்லாக இருந்திருக்கும் என்பதால், கோப்பவர்கள் கோக்கட்டும்; கோர்ப்பவர்கள் கோர்க்கட்டும்.

சொற்கோவை என்னும்போது தொகுப்பு என்பது பொருள். இன்று ஆய்வுக் கோவை - என்பதும் தொகுப்பே. இவை கோக்கப்பட்டதிலிருந்து பொருள் வளர்ச்சியே என்றாலும், பிறிதொரு தொடர்புடைய பொருளுக்குப் போய்விட்டது. இதனால் கோர்ப்பதும் இருப்பது நல்லதல்லவா?

### நடத்துநர், நடத்துனர்

நடத்துனர்-நடத்துநர்: இயக்குனர் - இயக்குநர். இத்தடுமாற்றம் தினமணியில் அண்மையில் வெளிவந்த கட்டுரைகளிலும் காணப்பட்டது. மற்ற இடங்களிலும் இஃதொரு குழப்பமாகவே பின்பற்றப்படுகிறது. வினைச்சொல் அடியிலிருந்து ஒரு பெயரைத் தோற்றுவிக்கும்பொழுது மகிழ்நன், பொருநன், ஆடுநர், பாடுநர் என்றே சங்ககாலம் தொட்டு வழங்கி வருகின்றனர். ஆடுனன் என்றால் ஆடினான் போல வினைத்தன்மை - சாயல் இருக்கிறது. அதைப் பெயராக்கும்போது ஆடுநன் என்றால் பெயர்த் தன்மை - சாயல் படிகிறது. ஆடுனன் என்பதற்கும் ஆடுநன் என்பதற்கும் இன்று உச்சரிப்பில் வேற்றுமை போய்விட்டது தான் இக் குழப்பத்திற்குக் காரணம். எனினும் எழுதும் பொழுது இயக்குநர், ஓட்டுநர், நடத்துநர் என எழுதுவதே வினைச் சொல்லினின்றும் வேறுப்படுத்தித் தெளிவுப்டுத்துவதாகும். வினைத் தன்மையை விட்டுவிட்டுப் பெயர்த் தன்மையை ஏற்று இயக்குநர் என ஆள்வதே, இனித்தமிழைப் பேசுநர், எழுதுநர், பரப்புநர் அனைவர்க்கும் சிறப்புடைய பணியாகும்.

**வேளாங்கன்னியா, வேளாங்கண்ணியா?**

'வேளாங்கன்னி' என்பதுவே பலவகையிலும் பொருத்தமாக இருக்கிறது. வேளாம் என்ற அடைமொழிக்கும் கண்ணி என்ற சொல்லுக்கும் எவ்விதப் பொருத்தமும் இல்லை. பெண் பெயர்களை கருங்கண்ணி, கயற்கண்ணி, குவளைக்கண்ணி என்றெல்லாம் அழைக்கும் பழக்கத்தில் 'ஒப்புமை ஆக்கமாக' வேளாங்கண்ணி என ஒலிக்கும் பழக்கம் புகுந்துவிட்டது.

வேள், வேட்டல் என்பன விருப்பத்தைக் குறித்த பழஞ்சொற்கள். யாகத்தைத் தமிழில் வேள்வி என்றனர். வேட்டல் வேள்வி செய்தல். ஒரு பெண்ணை விரும்பி மணம் செய்து கொள்வதையும் 'வேட்டல்' குறித்தது. 'வேட்ட வேந்தன்' - மணம் செய்து கொள்ள விரும்பிய வேந்தன் (புறம். 336). 'விளங்கிழை பொலிந்த வேளா மெல்லியல் (புறம். 341) - அணிகலன் அணிந்த, வேளாத (மணமாகாத) பெண் - இங்ஙனமே 'வேளாக்கன்னி' என்று கற்றறிந்த தமிழர் ஒருவர் மேரிமாதாவை அழைத்திருக்கிறார். இதுபோல 'வேளா+கண்ணி' என்பதற்கு முன்மரபோ, பொருத்தமோ, தொடர்புடைய ஆட்சியோ காணப்படவில்லை.

வேளாங்கண்ணி என்பது கிராமத்தின் பெயரென்றும் அங்குக் காட்சிதந்த மாதாவுக்கு அப்பெயர் வந்ததென்றும் சிலர் கூறுகின்றனர். பக்கத்தில் கருங்கண்ணி என்ற கிராமம் இருக்கிறதாம். வேளார் அல்லது வேளாருக்கு இப் பெயரைத் தொடர்புபடுத்துவதும் வலிந்து செய்யும் முயற்சியேயாகும்.

சூசையும் மரியாளும் திருமணமானபிறகும் துறவறமே பூண்டு வாழ்ந்தனர். இறைவனே மரியின் கன்னிமைக்குப் பங்கமின்றி அவள் திருவயிற்றில் தோற்றம் கொண்டார். தேவ மாதாவாகிய கன்னித்தாய் தேவ குமாரனை ஈன்றாள். இதிலிருந்து மானிட இச்சைக்கு ஆட்பட்டு, மணம் செய்து கொண்டு, மகவீனும் உலகியலுக்குப் புறம்பாகத் தேவமாதா தன் கன்னிமைக்குப் பங்கமின்றியே தேவகுமாரனை ஈன்றதால் 'வேளாங்கன்னி' என்ற அழகிய தொடரால் அழைக்கப்பட்டதன் உண்மை புலனாகும்.

தேம்பாவணியில் வீர மா முனிவர் இதை அழுத்தந் திருத்தமாகப் பலமுறை திரும்பத் திரும்பக் கூறுகிறார். 'கன்னிமரி' (5:23), 'தாய் ஆக வள்ர்கன்னி' (5:27), 'அருட்கன்னி' (5:30) 'மகப் பெற்றாலும், மண் வணங்கும் தூய்கன்னிமை காப்பதும் அரிதோ' (5:37), 'நீ பயந்து அவற்கு இயேசு நாமம் சாற்றுவாய் கன்னிமாதே' (7:10), 'மகவை ஈன்றும் சீர்உலாம் கன்னி ஆதல் சேர்த்தலே

அறிதென்பாயோ' (7:13) எனவரும் தொடர்களால் இது உறுதிப்படுகிறது.

'வேளா(த)கன்னி' என்றால், ஒருவரால் உலகியல் போலத் திருமணம் பெற்றும், துறவறமாகவே வாழ்ந்து, இறையருளால் தேவகுமாரனைப் பெற்றதால் - உலக இச்சைக்கு ஆட்படாத் தன்மையைச் சுட்டுவதாய் மரியம்மையைச் சிறப்பிப்பதாகிறது. இறைவன் பழி வாராதிருக்கவும் ஒரு துணைக்காகவும் திருமணத்திற்குச் சம்மதிக்குமாறு தூதனுப்பிய செய்தியைக் கொண்டு இதை அறியலாம். அங்ஙனமாயின் வேளாக்கன்னி என்றல்லவா வரவேண்டும் என்பர். ஓசையினிமை கருதி, பூச்செடி பூஞ்செடியும் ஆதல் போல், வேளாக்கன்னி - வேளாங்கன்னியாகியிருத்தல் வேண்டும்.

வேளாம்+கண்ணி என்பதை இவ்வாறு ஒருங்கிணைக்க முடியவில்லை. எதற்கும் முன்னைய மரபும் காரண காரிய இயைபும் வேண்டுமல்லவா?*

---

"வேளாங்கன்னி என்ற சொல்லுக்கும், 'கன்னி மேரி'க்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. வேளாங்கண்ணி என்ற கிராமம் சோழர் காலத்திலிருந்தே உள்ள ஊராகும். தமிழண்ணல் அவர்களே இவ்வூரின் அருகில் கருங்கண்ணி என்றிருப்பதையும் குறித்துள்ளார். நாகைப் பகுதியில் நீர் ஓடும் வாய்க்காலைக் 'கண்ணி' என்பார்கள். 'கண்ணி வாய்க்கால்' என்பது இங்குப் புழக்கத்தில் உள்ள ஒரு சொல். வேளாங்கண்ணி கிராமத்தின் தென்பால் வெள்ளங்கண்ணி என்ற வடிகால் - பெரிய வாய்க்கால் உள்ளது. இந்த வெள்ளங்கண்ணியின் கரையில் உள்ள கிராமம் வெள்ளங்கண்ணி என்றே பண்டு அழைக்கப்பட்டுப் பின்னர் நீட்டல் விகாரம் பெற்று வேளாங்கண்ணியானது."

– நா. காளிங்கராஜ்.

"வேளாங்கண்ணி என்பதே மக்கள் வழக்கில் உள்ள பெயர். இப்பெயரில் நாகப்பட்டினம் வட்டத்திலுள்ள 92-ம் எண்ணுள்ள கிராமப் பெயராக நில வருவாய் ஏடுகளில் இது காணப்படுகிறது. எனவே வேளாங்கண்ணி என்பது இடப் பெயராகும்.

தொல்காப்பிய உரையாசிரியர் தெய்வச்சிலையார் (கி.பி. 14) இடவாகு பெயருக்கு வேளா(ர்) காணி என்ற சொல்லைக் குறிப்பிட்டு வேளார் காணி என்பது. வேளார்காணியிற் பிறந்த ஆடையை அப்பெயரான் வழங்குதலின் ஆகுபெயராயிற்று (தொல்காப்பியம் - சொல்லதிகாரம் 11) என்பார். நேமிநாத உரை (கி.பி. 12-13) வெள்ளாளர் காணியிற் பிறந்ததனை வெள்ளாளர் காணி (சூத்திரம் 47) எனக் கூறும், பிற உரையாசிரியர்கள் இவ்வாகுபெயருக்குக் குழிப்பாடி சீனம் என எடுத்துக்காட்டுத் தருவர். இதிலிருந்து வேளார் காணி என்ற ஊர் இந்நாளில் காஞ்சிபுரம் போல ஆடைநெய்யும் தொழிலுக்குப் பெயர் பெற்ற ஊராக அந்நாளில் இருந்தது தெரிகிறது. இவ்வூர் நாகப்பட்டினத்திற்கு அடுத்திருந்த வேளாங்கண்ணிதானா எனத் தெரியவில்லை. இது பற்றிக் கல்வெட்டுகளிலும், பிறவற்றிலும் (மாதா கோயில் ஆவணங்கள் போன்றவை) ஆராய வேண்டும்.

**கம்பராமாயணமா, கம்பனிராமாயணமா?**

'கம்பன் இராமாயணத்தை இயற்றியதால் கம்பனிராமாயணம் (கம்பன்+இராமாயணம்) என்றுதானே செல்லப்படுதல் வேண்டும். அப்படி அல்லாமல் கம்பராமாயணம் எனப்படுவது ஏன்? சிந்திக்க வேண்டிய கேள்வி. ராமாயணத்துடன் தமிழாக்கத்திற்காக 'இ' சேர்த்து இராமாயணம் என்பது தமிழ்மரபு என அறிவோம். 'கம்பராமாயணம்', 'வால்மீகி ராமாயணம்', 'துளசி ராமாயணம்' என்றெல்லாம் கூறும்போது ஒரு சொல் நீர்மையாகிவிடுவதைக் கவனியுங்கள். இராமாயணம் எழுதியவர்களைக் கொண்டு இவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது. ஒருசொல் போல் உணரும் மனம், முன்னதாகச் சேர்க்க வேண்டிய 'இ'-னய விட்டு விடுகிறது. கம்பராமாயணம் என ஒரு தொடராகும்போது, மொழி முதலில் 'ரா' வராது; 'இ' சேர்க்க வேண்டும் என்ற பிரச்சினை தானே விடுபடுகிறதல்லவா? இதனை யாரும் சொல்லிச் செய்வதில்லை. ஆழ்மனம் முன்னைய பயிற்சித் தொடர்பால், தானே உணர, இவை நிகழ்ந்துவிடுகின்றன.

கம்ப சித்திரம், கம்ப நாடகம் என்னும்போது கம்பர் எழுதிய சித்திரம் எனப் பொருள் கொள்ளக் கிடப்பதுபோல், கம்பராமாயணம் என்பதும் கம்பர் எழுதிய இராமாயணம் எனப் பொருள்படும் தொடராகும். கம்பராமாயணத்தைப் பிரித்தெழுதும் போது கம்பன்+இராமாயணம் என்றுதான் எழுதிக் காட்ட வேண்டும். இணைந்து ஒருசொல் நீர்மை பெறும்போது 'இகரம்' தொகுத்தல் விகாரமாகி விடுகிறது. அங்ஙனம் இகரம் மறையவே, 'கம்பனிராமாயணத்திற்கு' இடமில்லாமல் போய்விடுகிறது.

---

அடுத்து வேளார்காணி என்பது வேளாங்கண்ணி எனத் திரிவது இயல்பானது. காணி என்ற இடப்பெயர் விகுதி கண்ணி எனத் திரிந்தமைக்கு எடுத்துக்காட்டுகள் உண்டு."

– பேரா. கி. நாச்சிமுத்து.

பட்டுக்கோட்டை நா. காளிங்கராஜ், வெள்ளங்கண்ணி வேளாங்கண்ணி ஆயிற்று என்றும் கேரளப் பல்கலைக்கழகப் பேரா.கி.நாச்சிமுத்து வோளர் காணியே வேளாங்கண்ணி ஆயிற்று என்றும் திட்டவட்டமாகக் கூறுகின்றனர். முதலில் ஊர்ப்பெயராக இருந்து, பிறகு மேரிமாதா கோயிலுக்கு ஆனதா, மேரி மாதா கோயில் வந்தபின் இந்தப் பெயர் ஏற்பட்டதா என்பது தெரிந்தால் தான் உண்மை தெரியும். மதுரையிலும், மற்ற இடங்களிலும் கோயில் கட்டி, கிறித்தவர்கள் அதை 'வேளாங்கன்னி மாதா கோயில்' என அழைப்பதாலே தான் ஐயம் வருகிறது.

## கூரு கெட்டவனா, கூறுகெட்டவனா?

'போடா கூரு கெட்டவனே' என்று வசைபாடும் சத்தம் கேட்டது. 'யாரு அந்தக் கூரு கெட்டவன்?' என்று நண்பர்கள் அறைக்கு வெளியே எட்டிப் பார்த்தனர். எனக்கு ஒரு ஐயம் வந்ததனால், அவர்களைத் தடுத்து நிறுத்தி, 'கூரு கெட்டவனா? கூறுகெட்டவனா? இதற்கு விடை சொல்லிவிட்டு அந்த ஆளைப் பாருங்கள்!' என்றேன்.

என் நண்பர் 'கூறுகெட்டவன்' என்பது தான் சரி என வாதிடுகிறார். கூறு போடுதல் - ஒழுங்காகப் பகுத்து வைத்தல். கூடைக்காரி காய்கறியைக் கூறுபோட்டு வைத்து விற்பதைப் பார்த்திருக்கிறோம். அதுபோன்ற ஒழுங்குமுறை கெட்டவனை, நெறி தவறியவனைக் 'கூறு' கெட்டதாகக் கருதுகிறோம் என்பது அவர் தரப்பு வாதம்.

'கூர்த்த மதி' என்கிறோம். திருவள்ளுவர் 'அரம் போலும் கூர்மையரேனும்' என்கிறார் (997) இந்த அறிவுக் கூர்மை மழுங்கிப் போனவர்களையே 'கூரு கெட்டவன்' என்கிறோம். பெரியவருக்கு வரவரப் புத்தி மழுங்கிப் போச்சு என்று வீட்டில் பேசிக் கொள்வதை ஒப்பிட்டுப் பாருங்கள். 'புத்தியைத் தீட்டு, கத்தியைத் தீட்டாதே' என்பார்கள் அல்லவா? 'அறிவு அற்றம் காக்கும் கருவி' அல்லவா? கூர் கெடுமானால் எதனையும் நுட்பமாக அறிய முடிவதில்லை. எனவே புத்தி கெட்டவன், அறிவு கெட்டவன் போலக் 'கூரு' கெட்டவனாதல் கூடும் என்ற ஐயம் பெரிதும் எழுகிறது. ஆயினும் 'கூறுகெட்டவன்' என்பதே பொருந்தும். எவ்வாறு? கூறு-இயல்பு, கூறுபார்த்தல்-இயல்பை அறிதல். 'கூறு கெட்டவன்' என்றால் இயல்பு கெட்டவன், விவரமில்லாதவன், எதுசரி எதுதப்பு எனப் பகுத்தறிய மாட்டாதவன் எனப் பொருள்படுகிறது.

கிராமங்களில் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகி விட்டவர்களைப் பற்றி 'இப்போ கூறு எப்படி இருக்கிறது? பிழைப்பாரா?' என்று கேட்பார்கள். நாடி பார்த்து, முகம் பார்த்து நோயின் தன்மையை அறிவதைக் 'கூறு பார்த்தல்' என்பார்கள். மருத்துவக்கலைச் சொல்லாக உலக வழக்கில் இது காணப்படுகிறது.*

---

* டாக்டர்.ம.திருமலை 'கூறுவைத்தல்' எனக் காய்கறிகளைக் கூறு வைப்பதைக் காட்டியும். கூறுபடுத்தி (பாகுபடுத்தி) அறிந்து நடக்கத் தெரியாதவனே கூறுகெட்டவன் என்று புலவர் கு.தாணுசுப்பிரமணியன் அவர்களும் கருத்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**என்பதன், என்பதின் — எது சரி?**

'என்பதன்' என்பதே சரி. அன், இன் என்பன சாரியைகள். இவை ஒலிப்பை எளிமைப்படுத்தச் சொற்களில் இணைப்பாக வருபவை. சிலசமயம் பொருளுணர்ச்சிக்கும் இடம் தரும். 'அன்' என்பதே இங்கு ஓசையினிமை தருகிறது. 'என்பதின்' என்றால் இலக்கணத் தவறு இல்லை. அதில் 'அன்' சாரியைக்குப் பதிலாக இன்சாரியை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் 'என்பதன் பொருள்' என்பதிலுள்ள ஓசைநயம் மற்றதில் இல்லை. இத்தகைய சொற்களை உச்சரித்துப் பார்த்தாலே உண்மை விளங்கிவிடும்.

'இன்' சாரிய்யை பொருந்துமிடங்களும் வேறுபல உள. இடம் நோக்கிப் பயன்படுத்தினால் தமிழ் என்றால் இனிமை என்பதன் பொருள் காக்கப்படும்.

**அன்றியும் இன்றியும்**

காய்கறி விலையேறியதன்றியும் கிடைப்பதும் அரிதாகிவிட்டது. சிலர் கொச்சை வழக்கைப் புகுத்தித் தமிழைச் சிதைப்பதன்றியும் பிழையாகவும் எழுதித் தொலைக்கிறார்கள். இவ்வாறு யான் எழுதினால் தட்டச்சு செய்பவன் முதல் மெய்ப்புத்திருத்தும் புலவர் வரை 'இன்றியும்' என மாற்றி விடுகின்றனர். இன்றி, இல்லாமையைக் குறிக்கும். அன்றியும் - என்பதே பொருத்தமானது.

**அல்லாமலும் இல்லாமலும்**

ஊடகங்கள், திரைப்படங்கள் மக்கள் மனத்தைப் பாழடிப்பதல்லாமலும் பல புதிய தீமைகளையும் புகுத்துகின்றன. தேன் இனிப்பதல்லாமலும் மருந்துமாகிறது. இங்கெல்லாம் 'இல்லாமலும்' என்று பலர் போடுகின்றனர் பாழடிப்பதில்லாமலும் - என்றால் நேர் எதிரான பொருள் தருகிறது. இவர்களால் கட்டளைத் தமிழ் சீர் கெடுவதல்லாமலும மேன்மேலும் தமிழின் செவ்வியல் தன்மை சீர் குறைக்கவும் படுகின்றது.

**சிலை திறப்பா, சிலைத்திறப்பா?**

ஆங்கிலத்தில் எதையும் வெட்கப்படாமல், தெரிந்தவரிடம் கேட்டுச் செய்வார்கள். தமிழிலும் அந்நடைமுறையைப்

பின்பற்றலாம். 'சிலையைத் திறப்பது' என இரண்டாம் வேற்றுமை உருபு விரிபும் போது, ஒற்றுமிகும். 'சிலை திறப்பு' என உருபு மறைந்து நிற்குமிடங்களில், ஒற்று மிகாது. 'கடையைத் திறக்கும் போது' மிகும் ஒற்று, கடை திறப்பு ஆகும்போது மிகாமை காண்க. கலிங்கத்துப்பரணியில் கடை திறப்பைப் பாருங்கள்.

எனவே 'சிலைத்திறப்பு' என்று இதழ்களில் கொட்டை எழுத்துக்களில் போடாமல், 'சிலைதிறப்பு' என்றே அச்சிட்டுத் தமிழின் மானத்தைக் காப்பாற்றுங்கள்!

# 9

# சொல்லை ஆளும் திறன்

## ஆகிய, முதலிய

'இவற்றைச் சரியாகப் பயன்படுத்துமிடங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த இரண்டு சொற்களும் முற்காலத்திலும் பயன்பட்டன. அன்றைய பொருள் வேறு. அந்தப் பொருள்களிலிருந்து, இன்றைய நிலைக்கு இவை வளர்ந்து மாறியுள்ளதை எண்ணிப் பார்த்தால், வளருந் தமிழ் என்றால் என்ன என்பது நன்கு விளங்கும்.

முன்பு ஆகிய என்றால் உண்டாகிய, அதுவாகிய என்று பொருள். 'அன்னியன் ஆகிய வெள்ளையன்', 'பூமியாகிய கோளம்' என வருவன பழைய முறை. 'உயிர் முதல் ஆகிய மொழியும்' (தொல். 144): 'இலர் பலர் ஆகிய காரணம்' (திருக். 270) : 'கொடியன் ஆகிய குன்றுகெழுநாடன்' (குறு. 252) என்பன எல்லாம் முன்னைய வழக்காறு.

இடைக்காலத்தில் உரையாசிரியர்கள் 'ஆகிய' என்பதைப் பண்புத்தொகை உருபாகக் காட்டினர். செந்தாமரை - செம்மை ஆகிய தாமரை; கருங்குதிரை - கருமை ஆகிய குதிரை. குதிரையோடு சேர்ந்தே இருப்பது கருமை நிறம். பனைமரம், சாரைப்பாம்பிலும் அவ்வாறு தான். பனை - சிறப்புப் பெயர்; மரம் பொதுப்பெயர். இவை இரண்டும் ஒரு பொருளையே குறிப்பதால் பனை ஆகிய மரம் என்று இதனையும் விரிப்பர். பனை+மரம்- இரண்டும் பெயராக இருப்பதால் இரு பெயரொட்டு என்று பெயர்.

ஆங்கிலமொழி நடைப் பழக்கத்திற்குப் பிறகுதான் ஆகிய, முதலிய இரண்டும் ஒரு வகை எண்ணிடைச் சொல்லாகப் பயன்படுகின்றன. மா, பலா, வாழை ஆகிய மூன்றும் முக்கனிகள் எனப்படும். முன்பு 'என்ற, என்னும்' என்பன ஆகிய என்பதற்குப் பதிலாகப் பயன்பட்டன. தொல்காப்பியர் 'அ இ உ எ ஒ, என்னும் ஐந்தும் குற்றெழுத்து' என்று கூறுகிறார். இப்பொழுது இருந்தால் 'ஆகிய ஐந்தும் குற்றெழுத்து' என்றே எழுதியிருப்பார். வரையறை தெரிந்து எண்ணி முடிக்கத் தக்கவற்றுக்கே 'ஆகிய' சேர்க்க வேண்டும். மற்றவற்றுக்கு முதலிய போடலாம். இறை, உயிர், உலகம்

(பதி, பசு, பாசம்) ஆகிய முப்பொருள் உண்மை பகர்வது சிவநெறி; தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை முதலிய மாநகரங்கள் உள்ளன. ஆகிய - முற்றுப் பெற்றது; முதலிய-மேலும் உள எனத் தொடர்வது.

முற்காலத்தில் 'முதலிய' என்பது 'முதலாகக் கொண்ட' என்ற பொருளில் வழங்கியது. 'வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு' (தொல். 114); 'நீலன் முதலிய கஞ்சுக மாக்கள்' (சிலப். 28-80); 'சுவை முதலிய புலன்களை நுகரும்' (மணி-27-196). இங்கெல்லாம் 'முதலாகக் கொண்ட என்பது பொருள். சுவை முதலிய புலன்கள் என்றால் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து புலன்கள் என்பது பொருள். இவற்றுள் 'வல்லெழுத்தை முதலாகக் கொண்ட வேற்றுமை உருபு' என்னும் போது, பிறவற்றை உள்ளடக்கும் எண்ணிக்கை இல்லை. நீலன் முதலிய, சுவை முதலிய என்னும்போது, முதலாகக் கொண்ட என்பதிலிருந்தே எண்ணும் பொருட்கூறும் வளர்ந்திருப்பதைக் கூர்ந்து கவனியுங்கள். சொற்களின் பொருள் வளர்ச்சியை உய்த்துணரலாம்.

ஆங்கிலத்தில் etc. என்பது etcetera என்பதன் சுருக்கம். பொருள் And so on, And others என்பது. ஆங்கில மரபுப்படி ஒன்றற்கு மேற்பட்டவற்றை எழுதியே etc., போடுவர். தமிழ்ச் சொல் வழக்கு ஒன்றைக்கூறி 'முதலிய' எனத் தொடங்கி, மேலும் எண்ணும் பழக்கம் இன்று மிகுந்துவிட்டதைப் பார்த்தோம். இன்று ஆங்கில மரபு, தமிழ் மரபு ஆகிய இரண்டும் ஒற்றுமைப்பட்டுக் கட்டுரை, கதை முதலியவற்றில் இடம் பெறுதலால் இப்பொருள் தமிழுக்குப் பெருவரவென்றும் கூறலாம் அல்லவா?

## என, என்னும், எனப்படும்

இவை நம்பேச்சிலும் எழுத்திலும் அடிக்கடி பயன்படுபவை. பெயரெச்சமாகவும், வினையெச்சமாகவும் நின்று, கருத்தைத் தொடர்புபடுத்திச் சொல்ல இவை மிகவும் பயன்படுகின்றன. 'எனச் சொன்னார், என்ற நூலில் உளது, என்று பேசினார், என்னும் விலையில்' - இவ்வாறு அடிக்கடி பேசுகிறோம். முன்னைய வழக்காறும், இன்றைய நிலையும் பெரிதும் ஒத்துள்ளன.

சுட்டிக்கூறி விளக்க வேண்டிய இடங்களில் என், என்னும், எனப்படும் எனவும் என்ற, என்று, என்றும் ஆள்கிறோம். தொல்காப்பியர் 'தேன் என் கிளவி' (340) 'தமிழ் என் கிளவி' (385)

எனக் குறிக்குமிடங்கள் பல உள்ளன. தேன் என்னும் சொல், தேன் என்ற சொல், தேன் எனப்படும் சொல் என்றெல்லாம் விரித்தால் எளிதாகிவிடும். சொற்செட்டுச் சூத்திரம் எழுத முக்கியம். அதனால் என் என அடிச்சொல் மட்டும் நிற்கிறது. திருவள்ளுவர் 'குணம் என்னும் குன்று' (29), 'கற்பு என்னும் திண்மை' (54) என எளிமைப் படுத்துவார். இதுவே எனும் என்று இடைக்குறைந்தும் வரும், 'என் நோற்றான் கொல் எனும் சொல்' (70). இக்காலத்திற்போல மிக எளிமையாக்கி, 'இன்னான் எனப்படும் சொல்' (453) எனவும் திருவள்ளுவர் கூறுவார்.

**என**

எனக் கூறினார், என முடிவு செய்தனர் - இவ்வாறு வினையெச்ச வடிவில் இயைபுச் சொல்லாக 'என' பயன்படுகிறது. தொல்காப்பியர் 'உறழ் என மொழிப' (368), 'விண் என வருஉம் காயப்பெயர்', (305) என வினையெச்சமாகப் பல இடங்களில் ஆள்வார். 'என என் எச்சம் வினையொடு முடிமே' (921) என்று விதியும் கூறுவார்.

திருவள்ளுவர் 'அழுக்காறு என ஒரு பாவி' (168), 'நாள் என ஒன்றுபோல் காட்டி' (334) என்று எனப்படும் என்னும் என்ற பொருளிலும் இதை ஆள்கிறார்.

**என—எண்ணிடைச் சொல்**

என, எனா, என்று, என்றா என்ற சொற்கள் எண்ணுவதற்குப் பயன்பட்டதும் உண்டு. முன்பு எவ்வாறெல்லாம் எண்ணினார்கள் தெரியுமா? 'வினையே குறிப்பே இசையே பண்பே' (743) என்று தொல்காப்பியர் ஏகாரம் போட்டு எண்ணினார். 'அவர் நிலனும் பொருளும் காலமும் கருவியும்' (719) என இன்று போல உம் போட்டும் எண்ணினார். 'கேட்டை என்றா நின்றை என்றா சுாத்தை என்றா கண்டை என்றா' (909) என என்றா போட்டும் இவ்வாறு பலவிதமாக எண்ணியுள்ளார். இவற்றை எல்லாம் கேட்கக் கேட்க உங்களுக்கு வேடிக்கையாக இருக்கும்.

'மறம் மானம் மாண்டவழிச்செலவு தேற்றம் என நான்கே ஏமம் படைக்கு' (760) என்று எண்ணுகிறது திருக்குறள். 'இதை, மறம் என, மானம் என, செலவு என, தேற்றம் என நான்கு' - என்று எண்ணுவது அக்காலவழக்கு. இதைக் கேட்கும்போது புதுமையாக இருக்கும். ஆனால் இம்முறை இன்றும் நம்

பேச்சிலிருப்பதை, மொழியுடன் நெருங்கிப் பழகுபவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள். 'நமக்கு வீடுன்னு வாசல்னு கூடம்னு குடிசையின்னு என்ன இருக்கு?' எனப் புலம்பும் மனைவி வீடுஎன வாசல் என என்பதைத் தான் அப்படி அழுத்தமாக எண்ணியெண்ணிச் சொல்கிறாள். 'நகையினு பகையினு, தோப்புனுதுரவுனு, சொத்துனு, சுகமினு எதுவும் இல்லையே' என எண்ணி ஏங்கும்போதும் என என்பது இனு, னு ஆகித் திரிந்திசைப்பதைக் கேட்கலாம்.

### என்கிற, என்னும், என்ற

'என்கிற' வடிவம் பழைய இலக்கியங்களில் காணப்பட வில்லை. இடைக்காலத்திலும் அரிதாகவே இடம் பெறுகிறது. இக்காலத்தில் தான் இது பெரு வழக்காகி விட்டது, 'எரிவாயு என்கிற எரிபொருள்', 'என்கிற விவகாரம்', 'சமரசம்' என்கிற பேச்சே கிடையாது - இவ்வாறு வருமிடங்களைக் காணலாம். மேலும் என்கிறான், என்கின்றான் என்றெல்லாம் பேசலாம் என்கிறார்கள்.

என்கிற என்னும் என்ற - மூன்றும் 'என்று சொல்லப்படும்' என்ற பொருளில் ஆளப்படும்போது கால உணர்வு தேவைப்படவில்லை. என்கிற - நிகழ்காலம், என்னும் - எதிர்காலம், என்ற - இறந்தகாலம் - இவ்வாறு தோன்றுவதால் கால உணர்வோடும் ஆளலாம் என்றாலும் 'எனப்படும்' என்னும் பொருள்படும்போது அவ்வுணர்வு படியவில்லை.

பாபு என்ற மணிகண்டனைக் காணவில்லை, அல்லி என்ற பூங்கொடிக்குத் திருமணம் என்றால், என்பது போன்ற பொருளேயாகும். மேற்கண்ட இடங்களில் என்னும், என்கிற - என இணைத்துப் பார்த்தாலும் பொருள் ஒன்று தான். பாபு என்கிற மணிகண்டன், அல்லி என்னும் பூங்கொடி என்பதே, மிகவும் பொருந்துமென்றாலும், இவ் இணைப்பிடைச் சொற்களில் மட்டும் காலவுணர்வு தேவையில்லை என்றே தோன்றுகின்றது.

ஆயினும் சிலர் 'கல்பாக்கம் என்னுமிடத்தில் அணுமின் நிலையம் உளது' என நிகழ்காலத்தையும் 'பாடலிபுத்திரம் என்ற நகரம் சிறப்புற்று விளங்கியது' என இறந்த காலத்தையும் குறிக்க வேண்டும் என்பர். அதனையும் குறை என்றோ குற்றம் என்றோ கூறக் கூடாது.

**தொல்காப்பியர் காட்டும்வழி**

என்னும், என்ற இணைப்பிடைச் சொற்களைத் தொல்காப்பியர் கால வேறுபாடின்றி ஆளும் இடங்கள் பலவுள. 'ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி' (2), 'அ... ஔ என்னும் அப்பால் ஐந்தும்' (3) என அவர் அடுத்தடுத்து ஆளும் இடங்களை ஒப்பிட்டுச் சிந்தியுங்கள்.

'முத்துராமலிங்கம் (21) என்ற தொழிலாளி', 'மன்னாருக்குத் தெற்கே முருங்கன் என்ற இடத்தில்', '4-2 என்ற கோல் கணக்கில்' (இன்றைய நாளிதழில் வந்தவை) இவ்வாறு எனப்படும் என்ற பொதுப் பொருளிலேயே இது வழங்குவதைப் பார்க்கிறோம். தொலைக்காட்சியில் 'ஷோபா என்னும் ஆறு வயதுச் சிறுமியைக் காணவில்லை', 'கந்தசாமி என்ற 23 வயது இளைஞர் பத்து நாளாகக் காணப்படவில்லை' என இவ்வாறுதான் இயல்பாக விளம்பரப்படுத்துகிறார்கள்.

**என்று, என்ற**

இவை கால உணர்வோடும் பொதுவாகக் காலம் காட்டாதும் முறையே வினை எச்சமாகவும் பெயரெச்சமாகவும் அன்றும் இன்றும் வழங்கி வருகின்றன. 'என்று கூறி' (நற். 79), 'என்று இகழ்ந்தனன்' (குறு. 43), 'என்ற தப்பற்கு' (குறு. 79), 'அஞ்சல் என்ற இறை' (நற். 43). இவை காலவுணர்வும் காட்டுகின்றன. தலைமை அமைச்சர் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று ஆணையிட்டார். கைத்தறித் துணிக்குத் தள்ளுபடியை நீடிப்பது என்று தமிழக அரசு முடிவு செய்தது. தேர்தலில் நிற்பது என்ற முடிவில் மாற்றமில்லை. சிறுதொழில்கள் வளர வேண்டும் என்ற ஆளுநர் அதற்கான திட்டங்களை அறிவித்தார். இவற்றில் பொதுவுணர்வே மேலோங்கி நிற்கிறது என்று சொன்னார் என்பதன் செறிவான வடிவம் 'என்றார்' ஆகிறது. என்றதும், என்றலும், என்றதற்குப் பிறகு - இவ்வாறு இவ்வடிவம் பல்குகிறது. எனவே என், என, என்னும் சொற்கள் பல்கி வளர்ந்த வழக்குகள் இவை என்ற என் விளக்கத்தை ஏற்பீர்கள் என்று கருதுகிறேன்.

**என்பது, என்பவர்**

இவையும் சுட்டி விளக்க வருவனவே. 'முளவுமா என்பது முள்ளம் பன்றி'. என்பது, என்பன, என்பவன், என்பவள், என்பவர் எனத் திணை பால் வேறுபாட்டுடன் கூறலாம். முன் தெரியாத

ஒன்றைத் தெரியப்படுத்தும்போது இது பயன்படும். நாம் அறியாத ஒன்றை, பிறர் அறிந்திராத ஒன்றைக் கூறி விளக்கும் போதும் இது தேவைப்படும். 'நாராயணகுரு என்பவர் ஒரு ஞானி' என அவரை அறியாத தமிழருக்கு விளக்கலாம். 'பலராம் என்பவனைப் போலீசார் பிடித்தனர்' எனலாம்; ஏனென்றால் பலராம் யார் என்று பலருக்குத் தெரியாது. 'காந்தி அடிகள் என்பவர்' என்று தொடங்கக் கூடாது; அவர் உலகம் அறிந்தவர். அவ்வாறு சொன்னால், சொல்பவனின் அறியாமையை அது காட்டும். 'இந்தியா நம் நாடு' என்று பாடத்தைத் தொடங்கினால் போதும்; இந்தியா என்பது எனத் தொடங்குவது தவறு. இதுகாறும் என்ன சொல்லப்பட்டது என்பது உங்களுக்கு விளங்கியிருக்கும் அல்லவா?

## வாசிப்பவர் வள்ளிநாயகம்

வானொலியில் 'செய்திகள், வாசிப்பது வள்ளிநாயகம்' என்று நாள்தோறும் முன்பு கூறினர். 'வாசிப்பது செய்தி' என்றால் முறையாகும். அதை 'வாசிப்பவர் வள்ளிநாயகம்' ஆதலே சிறப்பு. 'வாசிப்பது' தொழிற்பெயர், வினையாலணையும் பெயராக வரும் தொடர்களைக் காட்டிச் சிலர் விவாதிப்பது முறையன்று. சுற்றிவளைத்துச் சமாதானம் தேடிவிடலாம். செயல் நிகழ்ச்சியைக் குறிப்பதால் "வாசிப்பவர் வள்ளிநாயகம்" என்றால் தான் பெருமிதமாக இருக்கும். சுற்றித் திரிவது மாடு. சுற்றித் திரிபவர் மனிதர். கொச்சை வழக்கில் வேண்டுமானால் 'எங்க பிள்ளை பேச்சைக் கேக்காது சுத்தித் திரியுது' என்று பேசலாம். வானொலி பல்லாயிரவர் கேட்கும் திருந்திய நடை பயில்வதற்குரிய இடம் என்பதை மறத்தலாகாது. இன்று செய்திகள் வாசிப்பவர் என்றே செய்தி படிக்கின்றனர்.

## உள்ளிட்ட, உள்பட

'உள்ளிட்ட' 'உள்பட' - எது சரி? தங்கள் கருத்து உள்ளிட்ட எதனையும் எழுதும் போது, திருந்திய வழக்கா என்றும் சிந்திக்க வேண்டும். 'உள்பட' என்பது பேச்சு வழக்கு. 'உடைந்த கல் உள்பட எண்ணிச் சொல்'; உடைந்தவை உள்ளிட்ட அனைத்தையும் எண்ண வேண்டும்! இவை ஆளப்படும் வாக்கியச் சூழல் வேறுவேறாகும். இரண்டும் தவறன்று.

"மருத்துவ மனையைச் சேர்ந்த என்றுதானே எழுத வேண்டும்; சார்ந்த ஒன்று எழுதலாமா?" ஒருவரது ஐயம் இது. சார்ந்த என்பது இடச் சார்பைக் குறிக்கும்; சேர்ந்த என்றால் அதனுடன் தொடர்புடைய, உறவுடைய என்றாகும். "மருத்துவமனையைச் சார்ந்த அஞ்சலகம்" என்பதற்கும் அதனைச் சேர்ந்த அஞ்சலகம் என்பதற்கும் வேறுபாடு உண்டு. சேர்ந்த என்றால் மருத்துவமனைக்கு உரிமையுடைய என்றாகிவிடும். "மருத்துவமனையைச் சார்ந்த திடலில் போட்டி நடக்கிறது" எனலாம். "இது மருத்துவமனையைச் சேர்ந்த மருந்தகம்" எனல் வேண்டும். இங்கு நல்ல தமிழ் வழக்கைச் சார்ந்த செய்திகள் கூறப்பட்டன; இப்பணியில் சேர்ந்து நீங்களும் ஒத்துழைக்கலாமல்லவா?

# 10

# மணிமிடை பவளம்

## தமிழில் பிறமொழிச் சொற்கள்

### பிறமொழிச் சொற்கலப்பு

சிலர் தமிழில் ஏற்பட்டுள்ள பிறசொற் கலப்புப் பற்றி மிகவும் கவலை தெரிவிப்பர். அதை ஓர் இழுக்குப் போலவும் குற்றம் போலவும் பாவம் போலவும் கூறி மறுகுகின்றவர்களுமுண்டு. 'தமிழில் என்னய்யா இருக்கிறது. கண்டபடி பிறசொற்கள் கலந்து எல்லாம் மோசம் போய்விட்டது' என்பது போலப் பேசி, இத்தகைய விபத்து நேர்ந்துவிட்டதற்காக மகிழ்ச்சி தெரிவிப்பவர்களுமுண்டு. இவர்கள் அனைவருமே ஒரு பார்வையில், நம் இரக்கத்திற்குரியவர்கள் ஆவர்.

வேறு ஒருவகையில், எதிர்ப்புறமாக எண்ணிப் பார்த்தால் பிறசொற்கலப்பு உயிருள்ள, வழக்காற்றிலுள்ள, வளர்கிற, பல கலைகளையும் துறைகளையும் தன்னுள் கொண்டு வந்து தன் பரப்பையும், ஆழத்தையும் நுட்பத்தையும் பெருக்கிக் கொள்கிற மொழிகளுக்கெல்லாம் இயல்பாக ஏற்படும் ஒரு 'வளர்ச்சி நிலை' தான்! இருக்கிறது போதுமென்றிருந்தால், புதுமையை நாடாதிருந்தால், உலகின் ஓரத்தே ஒருபுறமாக ஒதுங்கித் தேங்கிக் கிடப்பதானால் பிறசொற்கலப்பே ஏற்படாதுதான். உலக வழக்கினின்றும் நீங்கிவிட்டாலும் பிற சொற்கலப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை தான். ஆனால் தமிழ் மொழிக்கு அத்தகைய நிலைகள் ஏற்படாதது குறித்து மகிழ்ச்சியடைய வேண்டும். தமிழ் உயிருள்ள, புதுமையை நாடுகிற, நாளும் வளர்கிற மொழி என்பதற்கு இடைக்காலம் தொட்டு இன்று வரை ஏற்பட்டுள்ள பிறசொற் கலப்பும் ஒரு சான்று - ஓர் அடையாளம்.

### பண்பாட்டுக் கலப்பும் சொற்கலப்பும்

மனிதர்களை மையமாகக் கொண்டவை பண்பாடடுக் கலப்பும் சொற்கலப்பும். மொழி ஒரு கருவியே; எனினும் உயிருள்ள, உணர்வுள்ள கருவி போன்றது அது. பிற நாட்டவரும் ஏற்கும்படியான சில மரபுகளை நாம் தோற்றுவித்து வளர்த்து வந்திருக்கிறோம்.

தொல்காப்பியரும் பவணந்தியாரும் வடசொல் முதலான பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஆளவேண்டாமென மறுக்கவில்லை. அவ்வாறு ஆளுமிடத்து எவ்வாறு நெறி முறையுடன் தமிழியல்புக்கேற்ப ஆளவேண்டுமெனக் கூறியுள்ளார்கள். தொல்காப்பியர் தொகுத்துச் சொன்னதை, பவணந்திமுனிவர் விரித்துச் சொன்னார். தமிழ்ச்சொல் நான்கில் வடசொல்லும் ஒன்றென்றார் தொல்காப்பியர். இன்று அதை வடசொல் என்று மட்டும் சொல்லாமல் 'பிறசொல்' என்று மாற்றிக் கொள்ள வேண்டும். வடமொழி, பாலி, உருது, இந்துஸ்தானி, அராபி, ஆங்கிலம் முதலிய பலமொழிச் சொற்கள் தமிழில் புகுந்துள்ளன.

இவற்றால் தமிழ்ச்சொல் வளத்தை நாம் பெருக்கிக் கொள்ளவேண்டுமே தவிர, அயர்ந்து மயங்குதல் கூடாது. பவணந்தி முனிவர் சொன்ன 'வடமொழி ஆக்கம்' என்பது, தமிழிலுள்ள அல்லது வந்து புகுந்துவிட்ட சமஸ்கிருதச் சொல்லைத் தமிழாக ஆக்கிக் கொள்வது பற்றியது. இதனையே இன்னும் மிக விரிவாக்கித் தனி நூலளவு மேற்கோள்களுடன் நெறிமுறைகளை வகுக்க இன்று வாய்ப்பிருக்கிறது.

தொல்காப்பியர், பவணந்தி முனிவர் போலும் இலக்கணிகளின் கருத்துப்படி வடமொழிச்சொல் என்பது தமிழிலுள்ள - தமிழாகிவிட்ட நான்கு வகைச் சொற்களில் ஒன்று. தொன்று தொட்டுத் தமிழிலேயே உள்ள சொற்கள் வேறு. காலப் போக்கில் தமிழாக ஆக்கிக் கொள்ளப்பட்டவை. 'தமிழாக்கச் சொற்கள்'. இன்று தமிழில் தமிழ்ச் சொற்களும் உள்ளன. தமிழாக்கச் சொற்களும் உள்ளன.

### சமஸ்கிருதமும் வடமொழியும்

சமஸ்கிருதம் என்பது வேற்றுமொழியே; ஆனால் வடமொழி என்பதோ தமிழ் மொழியேயாம். சமஸ்கிருதம், தேவநாகரி என்ற பிறமொழி எழுத்து வடிவத்தைக் கொண்டது; வடமொழி தமிழ் எழுத்து வடிவத்தைக் கொண்டது. தொல்காப்பியர் தமிழ் நூல்களுள் (இலக்கியத்துள்) எடுத்தாளப்படும் சொல் வகைகள் நான்கு என்றும் அவை இயற்சொல், திசைச்சொல், திரிசொல், வடசொல் என்றும் குறிப்பிட்டார். இக்கருத்தின்படி இயற்சொல் எந்த அளவு தமிழ் வகைகளைச் சார்ந்ததோ, அந்த அளவு வடசொல்லும் தமிழ் வகையாகிறது. தமிழில் வந்து வழங்கும் சமஸ்கிருதச் சொல்லுக்கே

வடசொல் என்று பெயர். அது தமிழின் உள்வகைகளுள் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிடுகிறது.

பிறமொழிச் சொல் ஒன்றைத் தமிழ் வடிவப்படுத்தி எடுத்து ஆண்டுவிட்டால் அது தமிழ்ச் சொல்லாகிவிடுகிறது என்பதே உண்மை. 'தமிழாக்கச் சொல்வகை' பற்றித் தெளிவான சிந்தனையின்றியே பலசமயம் தடுமாறுகிறோம், தொல்காப்பியர் முதல் அனைவரும் வற்புறுத்தி வருகிற இலக்கணம் இது. இதனை ஒவ்வொருவரும் மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வகையில் நோக்கும் பொழுது அநுபவம், அநுமன், சந்நதி என்பன பிற மொழி வடிவங்கள் என்றும் அனுபவம்; அனுமன் சன்னதி என்பன தமிழ்ச்சொல் வடிவங்கள் என்றும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். நகர வரிசை மிகச் சில சொற்களில் மட்டுமே மொழியிடையே வரும். கம்பர் அனுமன் என்றே ஆள்வதைக் கருதுங்கள். விநாயகரைவிட நம் வினாயகரே வினை தீர்ப்பவர். இது தமிழாக்கம். இங்ஙனம் தமிழ்ச் சொல் வடிவமாக்கி ஆளும் மரபு தொல்காப்பியம், திருவள்ளுவர், கம்பர் எனத் தொன்று தொட்டுக் காணப்பட்டு வருகிறது. இன்றைய விவிலியச் சொற்களின் தமிழாக்கம் வரை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய தமிழ்ச் சொல்லாக்க மரபுக்கே, ஒரு வரலாறும் இலக்கணமும் தனியே எழுதலாம், எழுத வேண்டும்.

பிறசொல் ஒலிவடிவை நீக்கித் தமிழ்ச்சொல் ஒலி வடிவமைப்புக்களில் கவனம் செலுத்துவதே, வளர்தமிழை மேன்மேலும் வளர வைக்கும் வழியாகும்.

### மாற்றங்களே நிலைபேற்றுக்கு அறிகுறி

தமிழில் இத்தனை பிறமொழிச் சொற்களா? இத்தனை பிறமொழி ஒலிகளா? இத்தனை மாற்றங்களா எனச் சிலர் வருந்துவர்; சிலர் நகைக்க முந்துவர்; சிலர் எதிர்க்கப் புறப்படுவர்.

மொழி, ஒட்டுமொத்தமான மக்கள் மன்பத்தையின் படைப்பு. மக்கள் உளவியலும் அதை விளைவிக்கும் புறச் சூழல்களுமே மாற்றங்களுக்குக் காரணம். ஓடிவருகிற ஆற்றில் கிளை நதிகள் கலக்கும்; அவ் ஆறு அவற்றைத் தன்னகப்படுத்திக் கொள்ளும்.

இருபதாம் நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்வரை தமிழில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறைவே. அவற்றைத் தமிழ் தன்னகப்படுத்திக் கொண்டது. ஹ, ஜ, ஸ, ஷ, க்ஷ என்ற ஐந்து கிரந்த எழுத்துகளைத் தமிழ் ஏற்றுக் கொண்டது மரபுக்கும் மாற்றத்திற்கும் ஏற்பட்ட ஒரு குறிப்பிட்ட காலச் சந்திப்பின் விளைவே. வடமொழிக் காப்பியத்திற்குத் தமிழாக்கம் தந்த கம்பர் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. கம்பரின் தமிழுணர்வு இதிற் புலனாகவில்லையா? தமிழுணர்வே இன்றிக் கம்பர் கழகம் நடத்தும் போலிகளே பருத்தும் பெருத்தும் போய்க் கம்பருக்கே நாளும் ஒவ்வாதவற்றை இழைத்து வருகின்றன. தமிழுணர்வுடையவர்களைப் புறந்தள்ளும் இதுகள் கதையை மட்டுமே கட்டியழுகின்றன.

மாற்றங்கள் நிலைபேறு உடைமைக்கு அறிகுறி; ஓரிடத்தில் நிலைத்துவிட்டால் மாற்றமே இராது. நாம் அதை விரும்புதல் கூடாது. மரபு மாறாத - மரபைத் தழுவிப் போகிற வளர்ச்சி, உயிருடைமைக்கும் எடுத்துக்காட்டு. தமிழில் வளர்ச்சியும் மலர்ச்சியும் ஏற்படுகிற காலம் இது. மேலும் மேலும் சிந்திப்போம்; மேன்மேலும தமிழைப் பழக்கப்படுத்திக் கொள்வோம்.

அறிவியல், கலையியல் அத்தனையும் தமிழில் கொண்டுவர எண்ணுகிறோம்; என்றுமில்லாதபடி இன்றுதான் 'நடைமுறைப் பயன்பாட்டுத் தமிழை'ப் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

### மிஷனரீசும் மிசியோனாரிகளும்

தவத்திரு தனிநாயக அடிகளார் நடத்திய 'Tamil Culture' என்ற இதழில் வந்துள்ள செய்தி இது. ஒருமுறை ஐரோப்பியப் பாதிரியார் யாழ்ப்பாணம் திருச்சபை கோவில் ஒன்றிற்குச் சென்றிருந்தார். அங்கே வழிபாடு சொல்லிக் கொண்டிருந்த பாதிரியார் 'மிசியோனாரிகள்' என்ற சொல்லை எடுத்தாண்டதைக் கேட்டதும் வியப்படைந்தார். ஏனெனில் 'மிஷனரீஸ்' (Missionaries) என்ற ஆங்கிலச் சொல்லை அப்படியே தமிழில் ஆளாமல் மிசியோனாரிகள் என்று தமிழ் வடிவப்படுத்தி ஆள்வதே தமிழர்களுக்கு ஏற்புடையது என்றும் அவர் அதைப் பாராட்டியுள்ளார். மேலும் 'மிசியோனாரிசு' என்ற கிரேக்க மூலச் சொல்லிலிருந்துதான் 'மிஷனரீஸ்' என்ற சொல் ஆங்கிலப்படுத்தி வந்தது என்றும், அதனை மீண்டும் தமிழர்கள் தங்கள் மொழியின்

இயல்புக்கேற்ப 'மிசியோனாரிகள்' என்று தமிழ் வடிவப்படுத்தி வழங்கும்போது மூல வடிவத்தின் சாயலே அதற்கு வந்து விடுகிறது என்றும் விளக்கியுள்ளார். தமிழர்கள் இங்ஙனம் எந்த ஒரு பிறமொழிச் சொல்லையும் தமிழ் வடிவப்படுத்தியே ஆள வேண்டும் என்றும் ஆங்கிலம் இந் நெறியைப் போற்றித் தழைத்தோங்கி இருப்பதைச் சான்று காட்டியும் நன்கு விளக்கியுள்ளார். தமிழில் அறிவியல் கலைச் சொல்லாக்கத்தில் இம்முறைமைக்கு முதலிடம் தரவேண்டும்.

எந்த ஒரு பிறமொழிச் சொல்லையும் இங்ஙனம் கூடுமானவரை, தமிழ் வடிவப்படுத்துதலை முதல் நூலாசான் தொல்காப்பியர் தொட்டுக் கூறிவந்துள்ளமை சிந்திக்கத்தக்கதாகும். தமிழாக்கம் செய்யும் போது பெரிதும் பொருள் விளங்கிவிடும். 'பேசி' என்பதே சிறந்ததாயினும் படைப்பாளிகள் சிலர் கதை உரையாடலில் 'Phone' - ஃபோன் எனத் தமிழ்நூலில் ஆளின் தமிழாக ஒலித்துப் புறனடையாக ஏற்கலாம். ஓரளவு ஒலி ஒற்றுமையுடைய தமிழாக்கத்தால், இவை சொல்பவர்க்கும் கேட்பவர்க்கும் தொடர்பு ஏற்படுத்திவிடும். தொடர்பு தராது என்ற நிலையிலேதான், தமிழ்மொழி போலவே ஒலிக்கக் குறியீடுகள் தேட வேண்டும்.

**அவசியம், அவசியமா?**

'அவசியம், முக்கியம், அதிகம் ஆகியன வடசொல் எனில் அவற்றுக்கு இணையான தமிழ்சொற்கள் எவை?' என்று கேட்கலாம்.

பிறமொழிச்சொல் ஒன்றுக்கு இணையான தமிழ்ச் சொல் ஒன்றைக் கண்டுபிடித்து விட்டால், தமிழ்ச்சொல் நிலை பெறும். சிலசமயம் அந்தப் பிறமொழிச்சொல் ஒரு புதிய சாயலில் வழங்கினால், இரண்டு சொற்களும் புழக்கத்தை விட்டுப் போவதில்லை.

'அவசியம்' தமிழில் இன்றியமையாமை அல்லது கட்டாயம் ஆகும்; முக்கியம் முதன்மை எனலாம்; அதிகம் கூடுதல், மிகுதி என்று பொருள்படும். ஆனால் தமிழ்ச்சொற்கள் தான் கிடைக்கின்றனவே என்று அவசியத்தை அதிகமென்று விடமுடியாத நிலை உளது. எவ்வாறு?

'ஆவஸ்யகம்' என்னும் சமஸ்கிருதச் சொல் அவசியம் என்ற வடசொல்லாகத் தமிழில் வழங்குகிறது, இத் தமிழ் வடிவச்

சொல்லுக்குத் 'தேவையானது' என்பது பொருள். 'இன்றியமையாதது' என்றால் இல்லாமல் முடியாதது; மிக அவசியமானது. வீட்டிற்குக் காற்றோட்டம் அவசியம்; மூச்சுவிடக் காற்று இன்றியமையாதது. சற்றுப் பொருள் வேறுபடுகிறது அல்லவா?

இதுபோலவே முதன்மைக்கும் முக்கியத்திற்கும் வேறுபாடு உண்டு. மொழியில் உயிரொலிகள் முதன்மையானவை; ஒலிப்புமுறை முக்கியமானது அல்லவா?

'பட்டம்பெறத் தேர்வு எழுதவேண்டியது கட்டாயம்; தேர்வு எழுத நன்கு படிப்பது அவசியம்; தேர்வு எழுத நுழைவுச்சீட்டு இன்றியமையாதது. இவ்வாறு இவை சிறிது சிறிது பொருள் வேறுபடுவதைக் காணலாம். இதனால் அவசியமும் சில சமயம் அவசியமாகி விடுகிறது.

### அதிகம் தமிழில் அதிகமா?

வடமொழியில் 'அதி' என்றால் கூடுதல். அதிவேகம், அதிதீவிரம். மிக இனிப்பான ஒன்று அதிரசம் ஆகிறது. திருவள்ளுவர் 'அதிநுட்பம்', (குறள் 636) என்று மிகவும் என்ற பொருளில் ஒரே ஓரிடத்தில் ஆள்கிறார். அதற்கு முந்திய நூல்களில் 'அதி' காணப்படவில்லை. 'அதிகம்' என்பது அதிலிருந்து வந்த வடசொல்; இதற்கும் மிகை, கூடுதல் என்று பொருள். தமிழ்ச் சொற்களிருக்கவும், பிறமொழிச் சொற்கள் தமிழ்வடிவம் பெற்று வழங்குவது, வளரும் தமிழுக்கு ஆக்கமாகுமேயன்றி, 'அதிகம்' என்று தள்ளிவிட முடியாது. ஒரு சொல் புதிதாகச் சேரும்போது அதற்கொரு தனிப்பொருள் - கூடுதல் பொருள் அமைந்துவிடுமானால் அச்சொல் வழக்கை விட்டுப் போவதில்லை.

### தகராறில்லாத 'தகராறு'

தகராறு என்றால் சிறு கூச்சல், குழப்பம், கலகம் என்றாகும். 'தகரார்' என்ற அரபுச் சொல், எவ்விதக் குழப்பமும் இல்லாமல் வந்து தமிழில் வழங்குகிறது. சிலர் 'தகறாரு' என்று இடையில் வல்லின ற போடலாம் என்பதுண்டு. அது தமிழியல்பில் பொருந்தி வரவில்லை. வேறுசிலர், வேடிக்கையாகச் சொல்வது: "தகராறு சிறிதாயிருந்தால் சின்ன 'ர' போடு; அது பெரிதாயிருந்தால் பெரிய 'ற' போடு". தமிழ் அதற்கு இடம் வைக்கவில்லை. முறையாகச் செல்வதைத் தகர்க்கும் போதுதானே - தடை, கூச்சல், குழப்பம்

வருகிறது. எனவே தகர்+ஆறு எனப் பிரிக்கலாம் போலத் தோன்றும் இது. அதை உச்சரிக்கும் பொழுதும் அவ்வாறே ஒலிக்கிறது. தகராறு என இறுதிக் குற்றியலுகரமாக இருப்பதால், இது முன்னைய அரபுச் சொல்லையே நினவூட்டுகிறது. தமிழ் இங்ஙனம் பிறமொழிச் சொற்களை ஏற்றுத் தன்வயப்படுத்திக் கொள்வதில், எவ்விதத் தகராறும் வைத்துக் கொள்வதில்லை.

## 'பரவாயில்லையே'

'பர்வா நஹீ' என்ற உருதுச் சொல்தான். தமிழில் வந்து 'பரவாயில்லை' என்றாகிவிட்டது. 'இப்போது பரவாயில்லையா?' என்றால், முன்பிருந்ததைவிடத் தாவிலை தானே என்று கேட்பதாகப் பொருள். யாராவது, எதையாவது தர முன்வந்தால் கூட 'பரவாயில்லை, இப்போது வேண்டாம்' என்கிறோம். 'தாவிலையா' இருக்கப் 'பரவாயில்லை' ஏன் என்று கேட்கலாம். நோய் முற்றிலும் நீங்கிவிட்டதா என்பதைத் தாவிலையா என்ற தொடரில் வைத்துக் கேட்கிறோம். 'நோய் படிப்படியாகக் குணமாகி வருகிறதா?' என்பதை 'இப்போது பரவாயில்லையா' என்ற கேள்வி வெளிப்படுத்துகிறது. ஒரு மொழியில் இங்ஙனம் சொற்கள் பலவாகும் போது, ஒவ்வொரு சொல்லும் ஒரு தனிக்கூறான பொருளையும் (Shade meaning) பெற்றுக் கொண்டு, மற்றதிருக்கவும் தான் ஒருவிதத்தில் பயன்படக்கூடும் என்பதை இது நமக்கு உணர்த்துகிறதெனலாம். 'கண் கோளாறு தாவிலையா? இப்போது வியாபாரம் பரவாயில்லையா?' என்று கேட்பது தான் சற்றுக்கூடுதல் பொருத்தமாக இருக்கும். 'பரவாயில்லை' என்னும் போது தொந்தரவு முற்றிலும் நீங்கி விடவில்லை என்பதைத்தான் உணர்த்துகிறோம். இவை யாவும் தமிழில் கதைஞர்கள், தமிழை மேலும் சிதைத்து விடாமல் காப்பாற்ற உதவும் சில நெறிமுறைகள்.

## சரளமாகப் பேசிப் பழகுங்கள்

'சரளமாகப்' பேசிப் பழகுவதுதான் திறமை. ஒரு பொருளைப் பற்றிச் 'சரளமாகக் கிடைக்கிறது' என்கிறோம். ஆங்கிலம் சரளமாகப் பேச வருமா? என வினவுகிறோம். 'ஸரல' என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு நன்மை என்று பொருள். தமிழில் அது 'சரளமாக' வந்து வழங்குவதுடன் 'எளிதாக', 'மிகுதியாக', 'நன்றாக' எனப் பொருள்படுகிறது. இங்ஙனம் ஒரு பொருளில் ஒரு மொழியில் வழங்கும் சொல், பிறிதொரு மொழியில் போய்க் கலந்து வழங்கும்

போது, வேறு சில தொடர்புடைய பொருளைப் பெற்று விடுவதும் உண்டு. மொழிகள் கூட ஒற்றுமையை உணர்ந்து பழகினால், மிகச் 'சரள'மாகக் கலந்து பழக வாய்ப்பிருக்கிறது என விளங்குகிறதல்லவா?

## தமிழே என்று தீர்மானிப்போம்

தமிழில் தோன்றிய தமிழ்ச் சொற்களுக்கும் தமிழில் வாழ்வுண்டு; தமிழில் வந்து கலந்து ஒன்றிவிட்ட சொற்களுக்கும், தமிழில் வாழ்வுண்டு. இன்று அறிவியல் தமிழில் உலகளாவிய கலைச் சொற்களை ஏற்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. சீக்குக்கு மருந்து தேடுகிறோம்; நோய் போய்ச் சீக்கும் வந்தது; அது 'சிக்' (Sick) என்ற சொல்லின் ஆக்கமே. பிரயாணம் செய்யும் போது பயணச்சீட்டுக் கேட்கிறோம். ஆங்கில Sheet என்பதே சீட்டு ஆகித் தாளைக் குறித்து, 'டிக்கட்டுக்குத்' தரும் தாளைத் தமிழில் குறிக்க வந்துள்ளது. Receipt என்பது 'இரசீது' - 'ரசீது' ஆகும் போது, அதை வேண்டாம் என்றால், அதாவது இரசீது வேண்டாமென்றால், ஒன்றைப் பெற்றதற்கு ஆதாரம் ஏது?

சிலர் 'தீர்மானம்' என்ற சொல்லே தமிழ் இல்லையோ என எண்ணுகிறார்கள். அதனால் 'முடிவு எடுப்போம்', 'முடிவுகள் எடுக்கப்பட்டன' என்று எழுதுகிறார்கள். 'தீர்' என்பது தமிழ் இல்லையென்றால், திருவள்ளுவர் நம்மைத் தீர்த்துக்கட்டிவிடுவார்.

'பொய் தீர் ஒழுக்க நெறி' பற்றியெல்லாம் பேசுபவர் அவர். பெறுமானம், கட்டுமானம், வருமானம் என வரும் 'மானம்' விகுதி, தீர்மானத்திலும் வருகிறது. பிறகு தீர்மானத்தை ஏன் விட வேண்டும்? நன்கு சிந்தித்துத் தீர்மானமாகச் சொல்லுங்கள்.

## ஆஞ்சநேயர் ஆஞ்ஜநேயராவது அவசியமா?

சிரஞ்சீவி எனப் போற்றப்படும் அனுமானுக்கு தனிக் கோயில்கள் மிகச் சிலவே உள்ளன. ஒருசில கோயில்களில் திருச்சுற்றில் தனிச் சன்னதிகள் உள்ளன. மதுரையிலுள்ள ஒரு சிறு தனிக்கோயிலில் 'ஆஞ்ஜநேயர்' என்று பெரிய எழுத்தில் பெயர்ப் பலகை தொங்குகிறது. ஆஞ்சநேயர் என்றாலே ஜ ஒலி வருவதை அவர்கள் ஏனோ நினைத்துப் பார்க்க வில்லை. தமிழில் க, க்க, (gakka) க, (ga) க்க (gha) என்பன போன்ற சதுர்வருக்கம் இல்லை. எனினும் பொருள் வேறுபடாத மெய்யொலி மாற்றம் மட்டும் உளது.

வல்லெழுத்துக்கள் ஆறும் தாம் சார்ந்து வரும் எழுத்துக்கள் காரணமாக இவ் ஒலிப்பு மாற்றத்திற்கு உட்படும். க ச த ப க்களில் இம்மாற்றத்தைக் கூடுதலாகக் காணலாம். அகம் (ha), கடல் (ka), பக்கம் (Kka), தங்கம் (ga) எனச் சொல்லிப் பாருங்கள். சகரமும் இவ்விதிக்குட்படும். சட்டம் (ca), பசலை (sa), பச்சை (ccha), இஞ்சி, கஞ்சி, செஞ்சி (nji) என ஒலிக்கக் காணலாம். இஞ்ஜி என எழுத வேண்டியதில்லை; முன்னே சார்ந்து நிற்கிற மெய்யொலிகளாலும் முன்பின் நிற்கும் உயிரொலிகளாலும் இவ்வொலிப்பு மாற்றம் ஏற்படுகிறது. வடமொழி, இந்தி முதலியவற்றில் தனித்தனி ஒலிக்குத் தனித்தனி எழுத்து வ்டிவம் இருப்பதுடன், அவை பொருள் மாற்றம் செய்வனவாகும்.

இளஞ்ஜோடிகள்' என்பது ஒரு திரைப்பட விளம்பரமாகக் காணப்படுகிறது. இது தேவை இல்லாதது. இளஞ்சோடிகள் என்றாலே அந்த ஒலிப்பு வந்துவிடும். சோடி என்பது இணை. இளஞ்சோடி என்று எழுதி, உச்சரித்துப் பாருங்கள். சுவடு, சோடு - ஒன்றைப் போலவே இருக்கும், அதன் அடையாளமான பிறிதொன்று. எனவே சுவடுதான் சோடு - சோடி என ஆனது. ஜோடி - வட மொழியில் இப்பொருளில் இல்லை.

### பிரச்சனையில் ஒரு பிரச்சினை

மாணவர் ஒருவர் பிரச்சினையா, பிரச்சனையா என்று கேட்டார். இருவிதமாவும் எழுதுகின்றனர். பிரஸ்னை எனபதைத் தமிழாக்கும் போது அன், இன் சாரியை எதை வேண்டுமானாலும் சேர்க்கலாம். நான்கனுக்கு, நான்கினுக்கு; அதின்படி, அதன்படி என இன், அன் மாறிப் பயன்படுவதைக் காணலாம். எனினும் 'அன்'னுக்கு முதலிடம் தரும் வழக்கமுண்டு.

### ஆகசுட்டு, ஆகஸ்டு — எதைப் பயன்படுத்தலாம்?

தமிழில் 'மெய்யொலி மாற்றம்' உண்டு. அங்ஙனம் ஒலி மாறினாலும் பொருள் மாறுவதில்லை. ஒலி மாறுவதற்கு உடனுள்ள மெய்களே காரணம். அச்சம் - ச வல்லொலிக்கு, அஃது இரட்டிப்பதே காரணம். பசலை - ஸ ஒலிக்கு வருமிடம் காரணம். பஞ்சம் - ஜ ஒலிக்கு முன்னுள்ள மெல்லின 'ஞ' காரணம். க, ச, த, ப என்ற வல்லெழுத்துக்கள் நான்கும் இங்ஙனம் ஒலிப்பு மாறும் தன்மையன. 'ஆகச்ட்' என்பதில் ச்-ஸ் ஆக மாறி ஒலிக்காது. 'ஆகஸ்டு' என்றே

எழுதலாம் என்பர். ஆனால் சாய்வெழுத்தாகவோ, மேற்கோள் கோடிட்டோ இதை எழுத வேண்டும்.

ஸ, ஷ, ஜ, ஹ, க்ஷ என்பன கிரந்த எழுத்துக்கள். தமிழில் அவை இடைக்காலத்தில் ஏற்கப்பட்டன. அவற்றை இடமறிந்து பயன்படுத்தலாம் என்பது மு.வ. கருத்து. இன்று இயற்பெயர்களை மாற்றாமல் ஆளவும், உலகளாவிய கலைச் சொற்களை அவ்வாறே எடுத்துக் கொள்ளவும் இவை உதவும். 'Shakespeare' என்பதைச் 'சேக்குவியர்' என்று மாற்றக்கூடாது என்றே வாதிடுகின்றனர். டிஷ்யூ' என்பதைத் 'திசுக்கள்' எனத் தமிழாக்குவதும் வேண்டும்; 'ஆக்ஸிஜன்' என்றே ஆள வேண்டிய இடம் ஏதும் வந்தாலும், அவ்வாறெழுதவும் வேண்டும். அதனை உயிர்வளி என எழுதுமிடம் வரும்போது அங்ஙனமே எழுதவும் வேண்டும் என அறிந்து கொள்வோமாக! மொழி பொருளை விளங்கிக் கொள்வதற்குத் தானே! 'ஆக்ஸிஜன்' என்ற மூலச் சொல்லும் அஃது உயிர் வளியைக் குறிக்கிறது என்பதும் விளங்கினால் நல்லதன்றோ?

**காபியா? குளம்பியா?**

குதிரைக் குளம்புபோல் இருக்கும் காபிக் கொட்டையை, அதற்குரிய மூலச் சொல்லை நினைவிற்கொண்டு, குளம்பு என்றும் அதனால் ஆன காபியைக் குளம்பி என்றும் குறிக்கலாம் என்பது பாவாணர் கருத்து. பலர் அதை உச்சரிக்கத் தெரியாமால் 'குழம்பி' விடுகின்றனர். சில சமயம் காபியும் குழம்பிப் போவதால் அதைச் சரியென்று கொள்ள முடியாது. காஃபி என ஆய்த எழுத்தை இட்டு ஒலிப்பதும் உண்டு. காப்பி என்னாமல் காபி என்றாலே ஓரளவு மென்மை பெறுவதால், நாம் ஏன் காபி என்றே கூறக் கூடாது. காபியின் மூலச் சொல், குதிரைக் காலின் குளம்பு போல், அதன் கொட்டை இருப்பதால் அவ்வாறு பெயர் சூட்டப்பட்டது.

சில சொற்களைத் தமிழ் மரபு கெடாதபோது அப்படியே ஆள்வதில் தவறில்லை என்பர் அறிஞர். 'அலுமினியம்' என்பதைத் தமிழாக்கம் செய்ய வேண்டுமா? புதிய உலோகம், புதிய பெயர். உலகப் பொதுவான சொல்லும் கூட தமிழ் மரபும் கெடவில்லை. காபி, தேதி, 'அலுமினியம்' எல்லாம் தமிழாக ஒலிக்கவில்லையா? கட்டளைத் தமிழில் - கட்டுரைத் தமிழில் நெகிழ்ச்சியின்றியே எழுத வேண்டும். கதை எழுதுவோர், புதிய மேடை நாடகம் எழுதுவோர்க்கு சில நெகிழ்ச்சிகள் தேவைப்படுகின்றன.

## சேரும் டேபிளும்

இப்போது சேர், டேபிள் கூட பிறநாட்டார் நாகரிகத்தைப் பின்பற்றி, நாம் அமைத்துக் கொண்டனவே. அதனால் அச்சொற்களையும் விட முடியவில்லை. கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். சேர் போட்டு உட்கார்ந்து, டேபிளில் கப், சாசர், பிளேட், டம்ளர் எல்லாம் வைத்துச் சாப்பிடத் தொடங்க வேண்டியிருக்கிறது. இச் சொற்களை நாம் பயன்படுத்துவதற்கு, அப்பொருள்கள் புதிதாக வெளியிலிருந்து பெறப்பட்டமையே காரணம். அந்தப் பழக்கத்தால், நாம் ஏற்கெனவே பழகியவற்றையும், நம்மை மறந்து ஆங்கிலத்தோடு ஆங்கிலமாக்கிப் பேசுகிறோம். ரைஸ் போடச் சொல்லி, சூப் குடித்து, வாட்டர் வேறு கேட்கிறோம். சோறு போட்டுச் சாற்றைப் பருகித் தண்ணீர் குடித்துச் சாப்பிட்டு எழுவது எப்போது? தமிழர்களும் மிகுந்த முயற்சியுடையவர்களாக இருந்திருந்தால், இத்தனைச் சொற்களைக் கடன் வாங்க வேண்டி வந்திராது என்று சொல்லலாம் அல்லவா? நாள் தோறும் புதிய புதிய பொருள்கள், கண்டுபிடிப்புச் சாதனங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவற்றைத் தொடர்ந்து அவை பற்றிய பெயர்களும் நம்மிடம் ஏறிய வண்ணம் உள்ளன. கணினியும் விண்கலமும் போன்ற சொற்களை நாம் கண்டுபிடித்துச் சொன்னாலும் அவற்றின் மூலச் சொல்லுடன் சேர்த்தே அவற்றை விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

சேரை (Chair) நாற்காலி என்றால் நீளமான 'பெஞ்சும்' நாற்காலி எனப்படுகிறது. டேபிளை மேசை என்கிறோம். இருக்கை, சாய்விருக்கை, விசிப்பலகை என்பன அவற்றோடொத்த தமிழ்ச் சொற்கள். எனவே இருக்கையும் மேசையும் இருக்கட்டும் புதிய புதிய பொருள்களாக நாம் நாள்தோறும் ஏற்றுக் கொண்டபடி இருக்கிறோம். அதனால் அவற்றின் பெயர்களாகிய புதிய பெயர்ச் சொற்களையும் நாம் தள்ளமுடியவில்லை. அதனால் பலசமயம் நம் பேச்சில் வினைச் சொற்கள் மட்டுமே தமிழாக உள்ளன!

## பொன்னும் பவுனும்

பவுனாம்பாள், பௌனாம்பாள் இரண்டில் எங்ஙனம் எழுதுவது சரி? 'பௌன்ட்' என்ற ஆங்கில நாணயம் முன்பு பத்தரைமாற்றுத் தங்கக் காசு : 20 'ஷில்லிங்' கொண்டது ஒரு பவுன்(ட்). நம் மக்களுக்கு இந்தப் பவுனில் ஒரு மோகமுண்டு. 'நல்ல பவுன்

பொற்சதங்கை' என்று நாட்டுப்பாடல் கீதமிசைத்தனர். 'பவுனம்மாள்' என்று பெண்களுக்குப் பெயரிட்டனர். தமிழகத்தில் தங்கம்மாள், பொன்னம்மாள் நிலையாக வாழ்ந்து வருகின்றனர். சொர்ணம்மாளும் வந்து நெடுங்காலமாகிறது. ஸ்வர்ண - சொர்ணம் : இவ்வடசொல்லுக்குப் பொன் என்பது பொருள். பவுன் சொக்கத்தங்கமாக இருக்கக் கண்ட தமிழர்கள் சும்மா விடுவார்களா? பொன்னம்மாள், சொர்ணம்மாள் இருந்த இடத்தில் பவுனம்மாளுக்கும் இடங் கொடுத்தனர். இவ்வரலாறு, வெறும் சொல் வரலாறு மட்டும் தானா? எண்ணிப் பாருங்கள். அரசியல் சமூகப் பண்பாட்டு வரலாறும் இதில் அடங்கியிருக்கிறதே! பௌன் என்பதிலும் பவுன் என எழுதுவதே மாற்றுக்குற்றயாமலிருக்கும்!

## அநுபவம், அனுபவம்

அநுபவம், அனுபவம் இவற்றுள் எது சரி?

வடமொழிச் சொற்களைத் தமிழ் மரபுக்கு உட்படுத்தி எடுத்தாளும் பழக்கம் நெடுநாள்களாக இருந்து வருகிறது. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்து வழங்கும் மரபுகள் பல உள. இவ்வாறு தமிழாக்கம் செய்த கம்பர் இம்மரபினை மிகவும் போற்றியுள்ளார்; நன்னூலார் இத் தமிழாக்க மரபுகளைத் தொகுத்துள்ளார்.

தமிழில் 'ந' கரம் பெரும்பாலும் மொழி முதலில் மட்டுமே வரும். 'பொருநன்', 'மகிழ்நன்' என்பன போலப் பெயரிடை நிலையாக வருவது அருகிய வழக்கமாகும். மற்றபடி-மொழியிடையில் 'ன' கரமே அதிகமாக வரும். (வடமொழியிலும், தமிழைத் தவிர ஏனைய தென்னிந்திய மொழிகளிலும் 'ந' கரம் மட்டுமே இருப்பதால், இந்தப் பிரச்சினை அங்கு எழுவதில்லை.)

வடமொழியில் ஒரு சொல்லினிடையே 'ந' கரம் வரும் பொழுது அதன் தமிழ் வடிவத்தில் 'ந' கரம் வருமா; 'ன' கரம் வருமா என்பதைக் கண்டறியச் சில எளிய விதிகள் உள்ளன:

(அ) வடமொழிச் சொல் பகுக்கக்கூடியதாயின், வருமொழியின் முதலிலுள்ள 'ந' கரம் தமிழிலும் 'ந' கரமாக வரும்.

(ஆ) நிலைமொழியின் ஈற்றிலுள்ள 'ந' கரம் தமிழ் மரபின்படி 'ன' கரமாக எழுதப்படவேண்டும்.

(இ) வடமொழிச் சொல் ஒரே பதமாயின் சொல்லின் இடையே வரும் 'ந' கரத்தைத் தமிழில் 'ன' கரமாக எழுதுவதே பெரும்பான்மை வழக்கு.

கீழ்வரும் எடுத்துக்காட்டுகளைக் கவனிக்கவும் :

| வடமொழி | பகுப்பு | தமிழ் |
|---|---|---|
| (அ) | | |
| அந்யாயம் | அ + ந்யாயம் | அநியாயம், அனியாயம் |
| அநீதி | அ + நீதி | அநீதி |
| விநாயக | வி + நாயக | விநாயக(ர்), வினாயகர் |
| (ஆ) | | |
| அநர்த்தம் | அந்+அர்த்தம் | அனர்த்தம் |
| அநாசாரம் | அந்+ஆசாரம் | அனாசாரம் |
| அநுபவம் | அநு+பவம் | அனுபவம் |
| (இ) | | |
| அந்ய | - | அன்னிய(ர்) |
| அந்வயம் | - | அன்வயம் |
| அநுமன் | - | அனுமன் |

மேற்கூறிய விதிகளின்படி, 'அநாதி' (அ+நாதி) என்றால் 'நாதியற்ற' என்றும் அனாதி (அன்+ஆதி) என்றால் ஆதியற்ற என்றும் புரிந்து கொள்ள முடிகிறது. அனாதி காலமாக என எழுதுவர். பதி, பசு, பாசம் மூன்றும் அனாதி என்பது சைவசிந்தாந்தம்.

வடமொழி தெரியாதவர்கள் என்ன செய்வது? இருமொழி வல்லுநர்கள் வகுத்துள்ள நல்மரபுகளைப் பின்பற்றியெழுதி வருவதே சிறந்த முறை. சில சமயங்களில் தமிழ் மரபுப் பழக்கத்தால் விநாயகரும் வினாயகர் என எழுதப்படுகின்றார். 'அந்ய' என்பது 'அந்நிய' என்னும்போது தமிழாக முயல்கிறது; அன்னிய என்றால் அன்னியமாகாமல் தமிழாகவே ஆகிவிடுகிறது. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கும்போது கருத்து வேற்றுமை வரும். எனினும் அவற்றைக் கடப்பது எளிதே.

## தொந்தரவால் வந்த தொந்தரவு

'தொந்தரவு' என்ற சொல்லை விளக்குவது எனக்கு மிகவும் தொந்தரவாகி விட்டது. தமிழ் வேர்ச்சொல் காணப்படவில்லை. 'தொந்தம்' என்ற வடசொல் 'தொடர்பை'க் குறிக்கும். அப்பர் தேவாரத்தில் 'தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என் செய்யும்' என்று நாம் செய்த முன்வினைத் தொந்தம் (தொடர்பு) இப்பிறவியில் வந்து சார்வது குறிக்கப்படுகிறது. பெரிதும் தொடர்புடையவற்றாலேயே தொந்தரவு ஏற்படுகிறது. 'அரவு', 'உரவு', 'இரவு', முதலியன தமிழ்த் தொழிற்பெயர் விகுதிகள் (நல்குரவு, துப்புரவு, தாக்குரவு, தொந்திரவு). தொந்தம்+அரவு = தொந்தரவு. தொந்தரவா?, தொந்திரவா? என்று கேட்டால் அரவு, இரவு என்ற விகுதி வேறுபாடேயாதலால் இரண்டும் சரியே. இதனைத் 'தொந்தரை' (திருப்புகழ், 623) என்றும் வழங்கும் போது 'ஐ' விகுதி பெற்ற தொழிற்பெயராகி விடுகிறது. நாய், நரி போன்ற விலங்குகளாலோ பக்கத்தில் நெருங்குபவர்களாலோ தொந்தரவு வரக்கூடும் என அஞ்சுகின்றோம். வடசொல் ஒன்று தமிழ்ப் பின்னிணைப்போடு ஒன்றாகி உருவாகியதற்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும். இத் 'தொந்தரவு' தமிழுக்கு இடைக்காலத்தில் வந்ததேயாகும். பழந்தமிழ் நூல்களில் இச்சொல் காணப்படவில்லை. பின்னரும் பேச்சு வழக்கிலேயே இது மிகுதி. தமிழ் 'தன்வயப்படுத்திக்' கொண்ட சொற்களில் இதுவும் ஒன்று. அதனால் தமிழுக்குத் தொந்தரவில்லாமல் போய்விட்டது. இருமொழி இணைப்பால் உருவாகிய இச்சொல்லைக் காணும்போது ஒற்றுமையுள்ள இடத்தில் தொந்தரவு இராது என்பதும் புலனாகிறது.*

---

* பேரா. இரா. கோதண்டராமன் தொந்தரவு வடசொல்லுடன் தொடர்புடையதன்று என மறுத்து விட்டு, 'தொந்தரவு' முகலாயர் வருகைக்குப் பின் தமிழில் இடம் பெற்றிருக்கலாம் எனவும் குறிப்பிடுகிறார். மலையாளம் 'தொந்தரம்' கோத்தம் தொந்தர்வ் தொந்தார்ம், கன்னடம் தொந்தரெ தொந்தரு, தெலுங்கு தொந்தர எனத் திராவிட மொழிகள் அனைத்திலும் வழங்குவதை வேர்ச்சொல் அகராதி சுட்டுகிறது எனக் குறித்துள்ளமை கருதுதற்குரியதாகும். (DEA2887) எனினும் இதை அவர் தொந்தரு+அவு எனப் பிரிக்கிறார். ஒரு மொழி ஒரு கட்டமைப்புக்குட்பட்டது என வற்புறுத்தும் அவரே, இயல்பாக வரும் அமைப்புகளை - பிறவற்றோடு ஒத்துவரும் பொது அமைப்பை நாடாமல் அவு என முடிக்கலாம் என்பது வசதிக்கேற்பச் சொல்லிக் கொள்ளலாம் என்றல்லவா எண்ணவைக்கிறது?

**அரசு, அரசாங்கம்**

'அரசு, அரசாங்க' வேறுபாடு என்ன? இரண்டும் ஒன்றே. அரசு+அங்கம்=அரசாங்கம். தமிழும் வடமொழியும் இணைந்த சொல். அங்கம்-உறுப்பு, நிறுவனம். மதுரை நகர், பனை மரம் என்பனபோல் இது இருபெயரொட்டு. அரசாகிய நிறுவனம். இதை அரசு என்றே குறிப்பிட்டால் போதுமே.

**வரதட்சிணை ஒழிப்பு**

வரதட்சிணை-வரதட்சணை, சித்திரிப்பு-சித்தரிப்பு இவற்றுள் முறையான ஆட்சி எது?

வரதக்ஷிணா என்ற வடசொல் தமிழில் வந்து வழங்கும் போது, வரதட்சிணை ஆகும். வரதட்சிணையே பொருத்தமாக உளது. வரனுக்குத் தரப்படும் 'தட்சிணை' - அச் சொல்லுக்கு ஏற்பச் சிறு காணிக்கையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் வலிந்து வசூலிக்கும் அதனை, இன்று தட்சிணை என்று சுட்டுவது தவறு. எனவே தட்சணையோ, தட்சிணையோ இரண்டும் வேண்டாம் எனத் தள்ளுவதே நாட்டுக்கு நல்லது.

சித்திரம் என்ற சொல் (வடமொழியில் சித்ரம்) வினை வடிவாகும்போது 'சித்திரி' என்றாகும். 'இதைச் சித்திரித்துக் காட்டுக' எனலாம். சித்திரம் வரைந்தான் என்பதே பழைய வழக்கு. சித்திரிப்பு, சித்திரித்தான் என்ற சொற்களும் இவ்வாறே இன்று உருவாகிவிட்டன. ஆயினும் 'சித்திரித்தான்' என ஆளும்போது 'திரித்தான்' என்பது ஓங்கி ஒலிப்பதால், சித்தரித்தான், சித்தரிக்க வேண்டும் என மங்கலமாக ஒலிக்கிற நினைப்பில் மாற்றி விட்டனர். முறையான வடிவம் சித்திரிப்பு என்றாலும் சித்தரித்தல் என்பது நன்றாக உள்ளது.

**மிலேச்சர்**

'மிலேச்சர்' என்பதன் சரியான பொருள் அன்னியர். பாரதியார் இச் சொல்லை அன்னியர் என்ற பொருளில் பல இடங்களில் ஆள்கிறார். சத்திரபதி 'சிவாஜி' கூற்றாகத் "தாய்த் திருநாட்டைத் தறுகண் மிலேச்சர், பேய்த்தகை கொண்டோர்" (42-43) இன்னல் செய்ததாகப் பாடுகிறார். சுயசரிதையில் "வீரர் வாழ்ந்த மிலேச்சர்தம் தீயகோல், வீழ்த்தி வென்ற" சிவாஜியின் வீரத்தைப் பாராட்டுகிறார். யவனர்கள் முற்காலத்தில் தமிழகத்தில் அரண்மனைக்

காவலர்களாகப் பணி செய்தனர். அவர்களை அன்னியர் எனும் பொருளில் மிலேச்சர் எனக் குறிக்கும் பழக்கம் காணப்படுகிறது. நெடுநல்வாடை அவர்களை 'முழுவலிமாக்கள்' (32) எனக் குறிக்கிறது. முல்லைப் பாட்டு "உடம்பின் உரைக்கும், உரையா நாவின், படம்புகு மிலேச்சர்" (65-66) என்று அச்சொல்லாலேயே சுட்டுகிறது. சங்கப் பாடல்களில் இந்த ஓரிடத்தில் மட்டுமே 'மிலேச்சர்' வருகிறது. மிலேச்சன், மிலேச்சத்தனம் என்பன கீழ்மகன், கீழ்மை போன்ற பொருள்களில் பின்பு வழங்கியுளது. பிறமொழி பேசுபவராதலின் இவர்கள் உடம்பாலேயே சைகை காட்டிப் பேசினராம். 'படம்புகு' என்றால் குப்பாயம் - மெய்ப்பையாகிச் சட்டை அணிந்தவர் என்பது பொருள். 'குப்பாயம் அணிந்த மிலேச்சன்' என்பது சீவகசிந்தாமணி (431). அன்று அன்னியர்களைத் தரம் தாழ்த்தியே மதிக்கும் பெருமிதவுணர்வு மிக்கிருந்தமையின் - பாரதியைப் போல 'மிலேச்சர்' போன்ற சொற்களால் குறித்தனர். மிலேச்சன் என்ற வடசொல்லுக்கு அறிவிலான், வேடன், கீழ்மகன் என்ற பொருள்கள் உண்டு. அதுவே பின்னர் அன்னியரைப் பொதுவாகக் குறிக்கவும் பயன்பட்டது. 'வெள்ளைப் பரங்கியைத் துரை என்ற காலமும் போச்சே' என்ற பாரதி வாசகத்தை நினைவு கூருங்கள். நம் அடிமையுணர்வு மிகும்போது தான் 'மிலேச்சர்' என எள்ளி இகழத்தக்கவரைத் 'துரை' எனப் போற்றி வணங்கத் தயாராகிறோம்.

### புத்திசாலியும் திறமைசாலியும்

தமிழில் இத்தகைய சொற்கள் மிகுதியாக வழங்குகின்றன. இச்சொற்களில் 'சாலி' எங்கிருந்து வருகிறது?

தமிழில் 'சாலி' என்பது சம்பா நெல்லையும், அருந்ததியையும் முன்பு குறித்தது-கண்ணகி "சாலி ஒருமீன் தகையாள்" என்று பாராட்டப்படுகிறாள். இங்குச் சாலி நட்சத்திரத்தைக் குறிக்கிறது. சிலப்பதிகாரத்தில் வேட்டுவப் பெண்ணிற்குச் சாலினி என்று பெயர் குறிக்கப்படுகிறது. சாலி - சாலினி என்ற மகளிர் பெயர்களைக் காணலாம்.

ஆனால் இன்று, புத்திசாலி, திறமைசாலி, அனுபவசாலி, தந்திரசாலி, பாக்கியசாலி என்றெல்லாம் மிகுதியான சொல் வழக்குகளைக் காண்கின்றோம். 'சாலி என்ற வடசொல்லுக்கு நிறைந்தவன்' என்று பொருள். தந்திரசாலி என்றால் தந்திரம்

நிறைந்தவன்; 'புத்திசாலி' புத்தி நிறைந்தவன். 'திறமைசாலி' என்னும் போது 'திறமை' வடமொழி ஒட்டுடன் சேர்ந்து நிறைவுடையதாகிறது.

இதனை இன்னொரு வகையாகச் சிந்தித்துப் பார்க்கலாம். "புகழ்சால் தோன்றல்", "உரைசால் பத்தினி" (புறம் 21; சிலம்பு. பதிகம்) என்று புகழ் நிறைந்தவர்கள் சுட்டப்படுகிறார்கள். 'சால்' என்ற உரிச்சொல் அடியாகச் சாலி உருவாகியுளதென எண்ணும் அளவு இச்சொல் தமிழ்வடிவம் பெற்றுள்ளது. ஆயினும் பழைய நூல்களில் எங்கும் இது காணப்படவில்லை. முன்னைய வழக்காறு இன்மையால், 'பாக்கியசாலி', 'அனுபவசாலி' போல்வன வடமொழியிலிருந்து வந்து வழங்குகின்றன என்று கொள்வதே புத்திசாலித்தனமாகத். தோன்றுகிறது. 'திறமைசாலி' போன்ற சொற்களில் ஒரு பிறமொழிச் சொல்லையும் தனதாக்கிக் கொள்ளும் தமிழ் மொழியின் திறமையைக் காண்கிறோம். தமிழாக்கம் செய்தல், தனதாக்கிக் கொள்ளுதல் என்ற உத்திகளுக்கு இச்சொற்கள் மிகச் சிறந்த காட்டுகளாகின்றன.

**காரன், காரி**

வேலைக்காரி, அதிகாரி, கடைக்காரன், போலிசுக்காரன் முதலிய சொற்களில் வரும் காரம். காரி பின்னொட்டுகள் தமிழினத்தைச் சேர்ந்தனவா? பாலினத்தையும் அவை குறிக்கின்றனவா?

இப்பின்னொட்டுகள் இடைக்காலத்தில் தமிழில் புகுந்து, தமிழ் வடிவமாகிப் பெருவழக்கமாகிவிட்டவை. இதன் வரலாறு சுவையானது. இந்தியில் கிரு-செயல், கார்-செய்பவன் என்னும் வழக்காறுகளைக் காணலாம். கும்பகார-குடத்தைச் செய்பவர், மாலாகார-மாலையைச் செய்பவர் (கட்டுபவர்) என்ற வடமொழி வழக்காறுகளை ஒட்டியே, முன் காட்டியவாறு 'கார்' என்ற சொல் இந்துஸ்தானி முதலிய மொழிகளில் பெருவழக்கமாயிற்று. இந்துஸ்தானி அல்லது உருதுமொழிகளின் வழி இது தமிழில் புகுந்துள்ளது. புகுந்தவுடனேயே, புக்ககத்திற்கேற்ப இந்த மருமகள் தன் நடை உடை பாவனைகளை மாற்றிக்கொண்டு தமிழ் மகளாகி விட்டபடியால் இப்பெண்ணை யாரெனக முதலில் அடையாளம் காணமுடியவில்லை.

ஏறத்தாழ 13-ம் நூற்றாண்டிலிருந்துதான். இச் சொல் வழக்குத் தமிழில் மிகுதிப்பட்டிருக்கிறது. சோழர் கல்வெட்டுக்களில்

'வேளைக்காரன்' என்ற சொல் வருகிறது. "வேளைக்காரர் ஒரு பணியாளர் தொகுதி. அரசருடைய பணியிலேயே தலைநிற்பவராய், அப்பணியில் வழுவ நேர்ந்தால் உயிரையும் மாய்க்கத் துணிந்தவர்", என்று அறிஞர் மு. அருணாசலம் தன் சொற்சுவை நூலில் குறிப்பிடுகிறார் (ப.144). அருணகிரிநாதர் வேளைக்காரப் பெருமாளாக முருகனைப் பாடும்பொழுது 32 காரரைக் கூறுகிறார். ஆயினும் சிலப்பதிகாரத்தில் 'துன்னகாரர்' (சிலம்பு 5.32) என்பது தையல்காரர் என்ற பொருளில் ஓரிடத்தில் மட்டும் இடம் பெறுவது வியப்பாக உளது. பெரிய புராணத்தில் பரிக் கோல்காரர் இடம் பெறுகின்றனர். சங்க நூல்களிலோ, பிற பழம்பாடல்களிலோ இந்த ஒட்டுக் காணப்படவில்லை. 'எண்பேராயம்' பற்றி விளக்கும் அடியார்க்கு நல்லார், தம் சிலப்பதிகார உரையில் 'கரணத் தியலவர்', கருமகாரர், கனகச் சுற்றம்.... முதலிய எண்மரைச் சுட்டுகிறார் (5-157). இக் கருமகாரர் செயற்படுவோராக (Executive) நினைக்கத் தகுந்தவர். நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டு உரையில் கண்ணுள் வினைஞர் (மதுரைக். 518) என்பதற்குச் 'சித்திரகாரிகள்' என்று உரையெழுதுகிறார். தமிழில் போல் பால்வேறுபாடு காட்டாத 'சித்ரகாரி' வடமொழிச் சாயலை நன்கு வெளிப்படுத்துகிறது.

தமிழில் 'அவர்கள்' என்பது தெலுங்கில் 'காரு' எனத் திரிந்து வழங்குவதாகக் கால்டுவெல் போன்றோர் கருதுவர். ஐயங்காரு (ஐயர் அவர்கள்), ரெட்டிகாரு என்பனபோல், தமிழில் பேச்சுவழக்கில் காரு, காரன், காரி என வந்திருக்கக் கூடும் என எண்ணி ஆராயவும் இடமுளது.

**பணக்காரனும், வேலைக்காரனும்**

வடமொழியில் 'அதிகாரி' அதிகாரத்தைச் செய்பவன். தமிழில் சென்னை வட்டார வழக்கில் தோட்டக்கார், சம்பந்திகார், அண்ணங்கார் என்று நின்றுவிடுவதுண்டு. தெற்கே போகப்போக இவை தோட்டக்காரர், சம்பந்திகாரர், அண்ணங்காரர் ஆகும்.

பணக்காரன், வேலைக்காரன் இவற்றிடையே வேறுபாடு உண்டுதானே? பணத்தை உடையவன் வேறு; வேலையைச் செய்பவன் வேறு. தோட்டக்காரன் தோட்டத்திற்கு உரிமையுடையவன் அல்லன்; தோட்டத்தில் வேலை செய்பவன். பண்ணைக்காரர் பண்ணைக்கு உரிமையுடையவர். சம்பந்திகாரர், அண்ணங்காரர்களில் மரியாதை ஒட்டாக மட்டுமே வருகிறது.

அதிகாரியிலுள்ள 'இகரவிகுதி' தமிழில் உள்ள வினை முதல் விகுதிபோலச் செயற்படுகிறது. சித்திரகாரியிலுள்ள இகர விகுதி வடசொல் வடிவம்; அது பாலைக் குறிக்காது. ஆயினும் வேலைக்காரன், வேலைக்காரி, பணக்காரன், பணக்காரி என இவ்வாறு பால்வேறுபாடு காட்டும் தமிழ்ப் பின்னொட்டுகளுடன் ஆள்வது பெருவழக்காகக் காணப்படுகிறது.

வம்புக்காரர், வழக்குக்காரர்களும் இருப்பதால் 'ரொம்பக்' கெட்டிக்காரனைப் போல் காட்டிக்கொள்ள முடியாது. இருந்தாலும் நீங்கள் எல்லாம் பொறுமைக்காரங்க என்பதால் உங்களுக்குச் சொந்தக்காரர் போல் ஏதோதோ சொல்லி வைத்துள்ளேன். தயவு செய்து 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்' என்றாக்கிவிடாதீர்கள். ஏனெனில் அது பைத்தியக்காரத்தனம் ஆகிவிடும் என்று நீங்களே உணர்வீர்கள். இல்லையா?

## இனி ஒரு விதி செய்வோம்

மரபு மாற்றத்திற்கு ஏற்ப 'இனிஒரு விதி செய்வோம்' என்று கூறி, சில வரன்முறைகளைப் பின்பற்ற வேண்டியுளது. தமிழில் 'உறழ்ந்து வரும்' என ஒருவிதி உண்டு. அதன்படி, தொன்றுதொட்டு இராமன், அரங்கநாதன், இலக்குமணன் என எழுதி வருபவைகளை அவ்வாறே எழுதவும் புதிதாக வருவனவற்றிலும் இடம் தருமிடத்து அம்மரபைப் பின்பற்றவும் இயலாவிடத்து இவற்றை லண்டன், லாகூர், ராவல்பிண்டி, டோக்கியோ, லங்காஷயர் என எழுதவும் வேண்டும். பேராசிரியர் அ.கி.பரந்தாமனார், "டங்கன் துரையை இடங்கன் துரை என்று எழுதலாமா? டயர் என்னும் சொல்லை இடயர் என்று சொன்னால் பொருள் மாறாதா?... ரப்பர் என்னும் சொல்லை இரப்பர் என்று எழுதினால் யாசிப்பர் என்றன்றோ பொருள்படும்? ஆதலால் தொன்று தொட்டு எழுதி வருவதற்கு மட்டும் அகரம் இகரம் பெய்து எழுதுவோம். மற்றவற்றிற்கு அவ்வாறு செய்ய வேண்டுவதின்று" எனக் குறித்தல் காணலாம். (நல்லதமிழ் எழுத வேண்டுமா? பக். (63-64). தில்லி, புவனேசுவர், எடின்பரோ, நியூயார்க்கு, மணிபுரி, கோல்கத்தா, இலங்கை எனத் தமிழ் வடிவப்படுத்தத்தக்கவற்றைத் தமிழ் மரபுப்படி வழங்குகிறோம். மாற்றினால் பொருள் விளங்காது போகுமிடங்களில் என்ன செய்வது? டங்கனை இடங்கனாகவும் ரப்பரை இரப்பரர்கவும் (அழிப்பான்) மாற்றுவதில் தான் சிக்கல் உளது.

## நான்கு படிநிலைகள்

அவரவர் தரத்திற்கு ஏற்பப் படிநிலை அறங்கள், நீதி நூல்களில் சொல்லப்படுகின்றன. 'ஒன்றாக நல்லது கொல்லாமை', 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற செய்ய வேண்டாம்', 'யாகாவாராயினும் நாகாக்க', 'கற்கக் கசடற', 'கற்றிலனாயினும் கேட்க', 'ஏற்பது இகழ்ச்சி', 'ஐயம் இட்டுண்' என வருவன தம்முள் முரண்பட்டனவோ, வேறுபட்டனவோ அல்ல. இவை சமுதாயத்திலுள்ள பல திறத்தார்க்குக் கூறப்பட்ட படிநிலை அறங்கள். பண்பாட்டைக் காக்கும் முயற்சியில் நீதி நூல்கள் பயன்படுவது போல, இலக்கணமும் பல படிநிலை அறங்களை-நெறி முறைகளைக் காட்ட வேண்டும். பிறமொழி ஆக்கத்தில் பிற மொழிச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்குவது முதல் நெறி. கம்பர் யக்ஞவிரோதி என்பானை வேள்விப் பகைஞன் என்றார்: ரத்தாட்சனைக் குருதிக் கண்ணன் என்றார். ராட்சசனை அரக்கன் என்றார்.

இன்று ரேடியோவை வானொலி என்பதும் டெலிவிஷனைத் தொலைக்காட்சி என்பதும் தமிழ்ச்சொல்லால் அவற்றை உணர்த்துவதாகும். பலர் இதை விரும்புகிறார்கள். தமிழ்மொழி சொல்வளம் மிக்கதாகையால், அதில் எந்த ஓர் அறிவியலுக்கும் சொற்கள் கண்டுபிடித்து விடலாம் என்பர். ஸ்குரூ என்பதைத் திருகாணி என்றால் எளிதில் பொருள் விளங்கும் என்றாற் போன்ற வாதங்கள் இவர்களால் வற்புறுத்தப்படுகின்றன.

அதனால் இவர்கள் தொல்காப்பியரையும் பவணந்தி முனிவரையும் கூடத் தமிழுக்குப் புறம்போனவர் எனக் கடிந்து பேசத் தயங்குவதில்லை. ஆனால், நடுநிலையோடு சிந்தித்தால், இதனை முதற்படி என்று மட்டுமே ஏற்கலாம்.

முற்றிலும் தமிழாகவே பயன்படுத்த வேண்டும். எதையும் தனித்தமிழில் மொழிபெயர்த்தே வழங்க வேண்டும் என்பது முதற்படி; முக்கியமானபடி. தமிழுக்கு இப்படி மிக இன்றியமையாதபடி அமைந்த படியாகும்.

## அடுத்த இரண்டு படிகள் அவசியம் தேவை

நான்கு படிகளிலும் ஏறினால் தான் முன்னேற முடியும். இரண்டும் மூன்றாவதுமான படிகள் தமிழ் இலக்கணிகள் பலர்

வகுத்துரைத்தவை. தற்சமம் என்றுகொண்டு பிற மொழிக்கும் தமிழுக்கும் பொதுவான எழுத்தொலிக்ளால் ஆனவற்றை அவ்வாறே தமிழிலும் ஆள்வது. தற்பவம் என்னும் முறையால் பிறமொழிச் சொற்களைத் தமிழில் எடுத்தாளும் போது அப்பிறமொழிகளுக்கே உரிய சிறப்பு ஒலிகள் தமிழுக்குப் பொருந்தாமல் இருக்குமானால் அவற்றை மாற்றித் தமிழ் ஒலி வடிவப்படுத்திக் கொண்டு தமிழில் ஆள்வது.

கமலம், காரணம் என்றாற்போல்வன தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவெழுத்துக்களால் ஆனவை. இவை தற்சமம். இன்று இவற்றைப் 'பொது எழுத்துப் பிறசொல்', 'தமிழ்வடிவப் பிறசொல்' எனக் குறிக்கலாம். மேஷம்-மேடம், ராமன்-இராமன், அஷ்டமி-அட்டமி என்பன தமிழ்மொழியில் காணப்படாத ஒலிகளையுடையனவாய்ப் பிறகு மாற்றம் செய்யப்பட்டுத் தமிழில் ஆளப்படுவன. இவை தற்பவம். இவற்றைத் 'தமிழாக்கச் சொற்கள், தமிழ் வடிவப்படுத்தப்பட்டவை, தன்வயப்படுத்தப் பெற்றவை' என இவ்வாறு குறிப்பிடலாம்.

அலுமினியம், பேப்பர், பார்ட்டி எனப் பொது எழுத்துக்களால் வருவன தமிழிலும் அவ்வாறே ஒலித்து எழுதப்படுதல் இன்று தற்சமமாகவுளது. கோர்ட்டு, சீட்டு, பேனா, பிளாட்டினம் என இவ்வாறு தமிழ் வடிவப்படுத்தப்படுவன தமிழ் ஒலிக்கும் எழுத்துக்கும் பொருந்திவருமாறு மாற்றப்படும் தற்பவங்களாகும். இவ்விரு நிலைகளும் இன்று மிகச் சிந்தித்து வடிவப்படுத்தத்தக்கவையாகும். காபி என்றதும் காஃபியைத் தான் சொல்கிறோம் என்றும் சேரை எடு என்றால் Chair தான் என்றும் உணரத்தக்கவகையில் இம்மாற்றங்கள் அமைவது நல்லது.

டேட் (Date) என்ற ஆங்கிலச் சொல்லைத் தேதி என்றதால், தமிழில் ஒரு புதுச்சொல் தோன்றியது. அரசம்பட்டி என்.எஸ்.ராஜா கோள் நிலையைக் குறிக்கும் ஸ்திதி, திதி, தியதி எனும் சொற்களின் அடிப்படையிலேயே தேதி உருவாயிற்று என எழுதுகிறார். காலந்தோறும் செய்யப்பட்டு வந்த மாற்றங்களை அறிவது நல்லது. 'பாக்யம்' என்ற சமஸ்கிருதத்தைப் 'பாக்கியத்தால்' என மாற்றிப் பாடினார் திருவள்ளுவர். தொல்காப்பியர், சங்கப் புலவர், கம்பர், குமரகுருபரர் எனப் பலரும் தமிழில் பிறமொழிச் சொற்களை

எங்ஙனம் தமிழ் வடிவப்படுத்தினர் என்று ஒருவர் 'டாக்டர்' பட்டத்திற்கு ஆராயலாம். அத்தனை செய்திகள் உள்ளன. ஒருவகையில் இவ்விரண்டு படிகளும் ஒன்றாகவே கருதத்தக்கன. ஏனெனில் தமிழ் போலவே இருப்பன, தமிழாக மாற்றப்பட்டன என்று வேறுபாடு தவிர இரண்டும் தமிழுக்கு ஏற்புடைய ஒலிவடிவம் பெற்றவையேயாம்.

**நான்காம் படி**

இது மட்டும் இக் காலத்திற்கேற்ப நாம் சேர்த்துக் கொள்ள வேண்டிய புதிய படியாகும். உலகளாவிய கலை, அறிவியல் சொற்களை அவ்வாறே ஆள நேர்ந்தால் அதை ஏற்க வேண்டும். லேசர், ரேடியோ, டெலிவிஷன் என்பன மட்டுமன்றிச் ஷேக்ஷ்பியர், ஐன்ஸ்டீன் என இவ்வாறு தமிழில் ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஐந்து கிரந்த எழுத்துக்களுடன் (ஷ, ஸ, ஜ, ஹ, க்ஷ.) உலகளாவிய சொற்களையெல்லாம் ஏற்பதற்கு நாம் ஆயத்தமாக வேண்டும். இடம், சூழலுக்கேற்ப இந் நான்கு படிநிலைகளையும் செயல்படுத்த வேண்டும். ஒன்றற்கு ஒன்று முரண் எனக் கருதித் தயங்குதல் கூடாது.

ஆற்று நீரில் வந்து கலக்கும் சிறிய ஓடைகள், கால்வாய்கள் அந்நீருடன் கலந்து, அதன் தன்மையவாதல் போல ஒரு மொழியில் கலக்கும் பிறமொழிச் சொற்களும் அம்மொழி மயமாதல் வேண்டும். ஆங்கிலமொழிதான் நமக்குச் சிறந்த வழிகாட்டி, உலகச் சொற்களையெல்லாம் ஏற்ற ஆங்கிலம், அவற்றை ஆங்கில வடிவப்படுத்தித் தான் எடுத்துக் கொண்டது.

இந்திய ஊர்ப் பெயர்களே சான்று பகரும். டில்லி, மெட்ராஸ், மெஜூரா, டூடிகோரின் எனச் சொல்லிப் பாருங்கள். கிரேக்க, இலத்தீன் சொற்களையும் கூட ஆங்கிலப்படுத்திக் கொண்டதால் தான் ஆங்கிலம் தழைத்தது. ஆங்கிலம் உலகச் சொற்களையெல்லாம் கடன் பெற்றதாகக் கூறுபவர்கள். அம்மொழி ஆங்கிலப்படுத்திக் கொண்ட விதத்தையும் உடன் கூறினால் நன்றாக இருக்கும் அல்லவா?

தாதா, தாதை என ஆனதால் அது தமிழ் போலவே உள்ளது. தந்தையிலுள்ள ஐ 'தாதை'யிலும் இணையும் போது, இது தமிழன்றி

வேறென்ன என்று அதட்டிக் கேட்கத் தூண்டுகிறது. தாதைதான் தாதா ஆகியிருக்க வேண்டும். நம் தாத்தா - முன்பே இருப்பவர்தானே! தந்தையைத் தாதை என்றது பேச்சுவழக்கு. Confirm என்பதைக் 'கண்புறமாகிவிட்டதா' என்று கேட்கும்போது ஓசையும் பொருளும் தமிழாகி விடுவதைக் கவனியுங்கள்.

இந்தச் சுயசிந்தனை வந்தால் நல்லது. எனவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்காமல் விட்டால் நீங்கள் கேள்விக் குறி போடாமல் விடமாட்டீர்கள் அல்லவா? (கமா-காற்புள்ளி, கோலன்-அரைப்புள்ளி).

# 11

# ஆங்கில நடைத்தாக்கம்

## ஆங்கிலத் தமிழும் அன்னைத் தமிழும்

அன்னைத் தமிழைச் செந்தமிழ், தண்டமிழ், நற்றமிழ் என்று சிறப்பித்த காலம் போய் "ஆங்கிலத் தமிழ்" என்னுமாறு அப்படியே அப்பட்டமாகப் பின்பற்றி நகைப்பிற்கிடமாக்கும் ஒரு நிலையைப் பாரதியாரும், திரு.வி.க.வும் மிக வன்மையாகக் கண்டித்துள்ளனர். அவர்கள் சுட்டிக் கூறிய இழிவை நாம் அகற்றுதல் வேண்டும்.

மறுபுறம் ஆங்கிலச் செல்வாக்கால் நாம் பெற்ற பேறுகள் பல. இன்றைய உரைநடை கட்டுரைக்குரிய உரைநடை; ஆய்வுக்குரிய உரைநடை; ஓர் அமைப்புக்குட்பட்ட உரை நடை.

முன்னைய "உரைநடை" என்பது, நம் உரையாசிரியர்கள் தந்த உரைநடையே. வாய்மொழி உரைநடை, பாடங்கூறும் முறை ஆகியன அவ் 'உரை' தந்த உரைநடைக்குள் அடங்கும்: உரைகாரரின் உரைநடையை வேறுபடுத்திய இன்றைய உரைநடையாக்கத்திற்குரிய பண்புகளையும் மரபுகளையும் ஆங்கில வழிப்பட்டன என்றோ, ஆங்கிலத் தமிழ் என்றோ தள்ள நினைக்கலாமா? எண்ணிப் பாருங்கள். இங்கும் சமனிலைப்பாடு தேவைப்படுகிறது. நடுநிலைப்பட்ட நெறியே தமிழை வளர்க்கும்.

## "ஆங்கிலத் தமிழ்"

தமிழ் மரபை விட்டு விலகிப் போகும்போது, அதனைத் திரு.வி.க. 'ஆங்கிலத் தமிழ்' என்று கூறி வன்மையாகக் கண்டித்தார்.

அவர் தம் தேசபக்தாமிர்தம் என்ற நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"இப்பொழுது ஆங்கிலத்தில் உயர்தரப் பட்டம் பெற்றவர்களில் சிலர் தம்மைத் தமிழ்ப் புலவர்கள் என்று புத்தகங்கள் எழுதுகின்றனர். அவை யாவும் தமிழ் எழுத்துக்களால் எழுதப்படினும், அவைகளின் கருத்துக்களும் வாக்கியப் போக்குகளும் சொற்றொடர்களும் ஆங்கில மயமாகவே இருக்கின்றன. அவர் தம் உள்ளத்தில் கருத்துக்கள் ஆங்கிலத்தில் பரிணமித்துப் பின்னர்த் தமிழ்

ஒலியாகவும், எழுத்துக்களாகவும் வெளிவருகின்றன. ஆங்கிலத்தில் உயர்தரப் பட்டம் பெற்றுத் தமிழ்ப் புலவர்கள் எனத் தலைகாட்டுவாருள் ஒரு சிலரே தமிழ் நடையாக எழுதும் ஆற்றலுடையவர். இது போலத் தமிழ்நாட்டில் ஆங்கிலத் தமிழ் உலவி வருவதைக் காண எமது மனம் புண்படுகிறது." (ப.120)

முன்னர் தேசியக் கவிஞர் சி.சுப்பிரமணிய பாரதியாரும் தமிழன் தன் சொந்த மொழிநடையை விட்டுவிடக் கூடாது என்று வற்புறுத்தியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அவர்தம் கட்டுரை ஒன்றில் "பிரான்ஸ் தேசத்துப் பத்திரிகைகள் ஜெர்மன் பாஷையிலிருந்து பல விஷயங்களை மொழி பெயர்த்து எழுதுகின்றன. ஆனால் அந்த மொழிபெயர்ப்புக்களில் ஸ்வபாஷையின் வழக்கங்களையும் பிரயோகங்களையும் கைவிட்டு அன்னிய பாஷையின் வசன நடையைப் பின்பற்றும் வழக்கம் கிடையாது. ஆனால் தமிழ்நாட்டிலோ முழுதும் தமிழ்நடையை விட்டு, இங்கிலிஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகின்றது" (ப. 251). என்று குறிப்பிட்டு மேலும் இதுபற்றி விரிவாக விளக்குகிறார்.

பிறிதோரிடத்தில் அவர் "பாடசாலைகள் ஸ்தாபிக்கப் பட்டால் அங்கு நூல்களெல்லாம் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுவதுமன்றிப் பலகை, குச்சி எல்லாவற்றிற்கும் தமிழிலேயே பெயர் சொல்ல வேண்டும். 'ஸ்லேட்', 'பென்சில்' என்று சொல்லக் கூடாது", என்று வற்புறுத்துகிறார்.

**நடைக் கலப்பு**

எவ்வளவு முயன்றாலும் ஒரு மொழியின் வாக்கியம், சொற்றொடர் அமைப்பைப் பெரிதும் மாற்றிவிட முடியாது. ஆயினும் நுண்பொருட்போக்கில், சிறு சிறு அளவில் அம் மாற்றமும் ஒரு மொழியில் நிகழக்கூடும்.

வடமொழியுடன் பல நூற்றாண்டுகள் பழகியதாலும் இப்போது ஆங்கிலத்துடன் சென்ற நூற்றாண்டு முதல் நெருங்கிப் பழக நேரிட்டதாலும் தமிழ்த் தொடரமைப்பு இயல்பில் சிற்சில நடைமாற்றங்கள் ஏற்பட்டதில் வியப்பில்லை. வடமொழியுடன் ஏற்பட்ட உறவினால் சொற்கலப்பும் ஒலிக்கலப்புமே மிகுதி; இப்போது ஆங்கிலத்துடன் ஏற்பட்ட உறவினால் நடைக்கலப்புக் கூடிவருகிறது.

ஆங்கில வழியில் சிந்தித்து, அதைப் போலவே சிலசமயம் எழுதும் பழக்கத்திற்கு ஆளாவதற்குச் சில உதாரணங்கள் பார்க்கலாம்:

பயணிகள், வண்டியில் ஏறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - ஆங்கில மரபு.

பயணிகளை வண்டியில் ஏறுமாறு கேட்டுக்கொள்கிறோம் - தமிழ் மரபு.

தலைவருக்கு வரவேற்புக் கொடுத்தார்கள்.

தலைவரை வரவேற்றார்கள் என்பதே இயல்பானது.

பேராசிரியரின் மணி விழாவில் பங்கெடுத்துக் கொண்டேன் - கலந்து கொண்டேன் என்பதே தமிழ் இயல்பாகும்.

நான் எம்.பில். பண்ணுகிறேன்; பிஎச்.டி. பண்ணுகிறேன் என்பன ஆங்கில வழி. எம்.பில். ஆய்வு செய்கிறேன்; பிஎச்.டி. ஆராய்ச்சி செய்கிறேன் என்பவை தமிழ் வழக்கு.

நகரப் பெரியோர்கள் வருகை தந்தார்கள் - வந்திருந்தார்கள் என்றால் போதுமே.

சாமியை அலங்காரம் பண்ணினார்கள் - அலங்கரித்தார்கள் என்றால் அழகாக இருக்கும்.

அரசு விளம்பரம், தனியார் வணிக அறிக்கைகள் போன்றவை ஆங்கிலத்திலிருந்து தமிழ்ப் படுத்தப்படும் பொழுது இத்தகைய ஆங்கில நடை ஊடுருவல்களை நிரம்பக் காணலாம்.

## மொழியும் வாக்கிய அமைப்பும்

ஒரு மொழியில் கலக்கும் பிறமொழி ஒலிகள் பற்றி மிகவும் கவலைப்படுகிறோம்; பிறமொழிச் சொற்கள் பற்றியே பெரிதும் கருத்து வேறுபடுகிறோம்.

ஒலி, சொல் இவற்றைவிட, வாக்கிய அமைப்பில், நடையில் கலக்கும் பிறமொழிச் சாயல்களை நாம் பெரிதும் கண்டுகொள்வதில்லை. அதற்குக் காரணம் நம்மில் பலருக்கு அதை இனங்காண எளிதில் முடிவதில்லை.

உண்மையில் ஒருவனோடு பழகி, அவனுடைய இயல்பை மாற்றுவதுபோல, ஒரு மொழியில் பரவுவது இந்நடையாகும்.

ஒரு மொழியை நாம் இனம் பிரித்தறிய இந்த மொழி நடை - வாக்கிய அமைப்பு ஓர் அடிப்படைக் காரணமாகும், உடலோடும் உயிரோடும் ஒட்டிய இயல்புகள் போல, ஒரு மொழியோடு ஒட்டி உறைவது இது. ஒரு குடும்ப மொழிகளிடையே ஒரு வகையான வாக்கிய அமைப்புக் காணப்படும்.

வடமொழிச் சொற்களை மிகுதியாகக் கொண்ட இந்திய மொழிகள் சிலவற்றில், தமிழ்த் தொடரமைப்புக் காணப்படுவது, இம் மொழிகளிடைேயே ஏற்பட்ட தாக்குரவைக் காட்டுகிறது என டாக்டர் மு.வ. தம் "மொழியியல் கட்டுரைகள்" நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**அறிக்கையும், அறிவிக்கையும்**

அரசும் நிறுவனங்களும் மக்களுக்கு விளம்பரங்கள் மூலம் சில தகவல்களை அறிவிக்கும் போது அறிவிப்பு, அறிக்கை, அறிவிக்கை என வெளியிடுகின்றன. 'Notice, Notification' போன்ற ஆங்கில வாசகங்களே இவ்வாறு மொழிபெயர்க்கப்படுகின்றன. அறிகையிலிருந்து வந்த தொழிற்பெயர் அறிக்கை; அறிவி என்ற பிறவினையிலிருந்து தோன்றும் தொழிற்பெயர் அறிவிக்கை, கற்பிக்கை, படிப்பிக்கை, தருவிக்கை போன்ற பிறவினைத் தொழிற்பெயர்கள் அடிக்கடி புழக்கத்தில் இல்லாததால் புதுமையாய்த் தோன்றும். "அறி" அடிச்சொல்லில் பிறக்கும் "அறிக்கை"த் தொழிற்பெயர் ஆண்டறிக்கை (Annual Report) யாகி, அவைகளில் படிக்கப்படுகிறது. தலைமையாசிரியர் ஆண்டறிக்கை படிக்கும் போது, நடந்த நிகழ்ச்சிகளை அனைவருக்கும் அறிவிக்கிறார். Tender Notice என ஒப்பந்தப் புள்ளி அறிவிக்கும்போது அறிவிப்பு, அறிவிக்கை என்ற சொற்களை ஆள்கின்றனர். "நிலம் கையகப்படுத்துவது பற்றிய அரசு அறிவிப்பு" என்று போட்டால், மறுப்பு, சிக்கலிருப்பின் தெரிவிக்கலாம் என்ற குறிப்புமுள்ளது. ஒப்பந்தப் புள்ளி அறிவிக்கை என்றால் சம்பந்தமுடைய பலரும் அறியச் செய்து, வேண்டுகோள் செயற்பட விடுதல் என்ற சாயல் தொனிக்கிறது. இங்ஙனம் சொற்களை இடமறிந்து

பயன்படுத்துவதால் மேன்மேலும் பொருள் தெளிவுபடும் என்பது "அறிவிக்கை ஆகாது"; "தெரிவிக்கை" என்றால் பொருத்தமாக இருக்கும்.

## முடிவு செய்வது நல்லதா, முடிவு எடுப்பது நல்லதா?

முடிவு எடுக்கிறோம்; முடிவெடுக்கப்பட்டது என்ற தொடர்கள் ஆங்கிலத்தில் சிந்தித்து, ஆங்கில நடையில் எழுதப்படுபவை. பலர் 'நான் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டேன்' என்பதும் 'இதில் பங்கெடுக்குமாறு' கேட்டுக் கொள்ளப்படுகிறது என்பதும் இது போன்ற ஆங்கில நடைகளே, Taking the decisions, to take part in the function என்ற தொடர்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள்; உண்மை விளங்கும்.

முடிவ்ு செய்கிறோம், முடிவு செய்யப்பட்டது என்பன தமிழ் நடையின. 'நான் கூட்டத்தில் கலந்து கொண்டேன்', இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்பனவே தமிழ்ப்பாங்கு உடையன. இன்று பொது நிகழ்ச்சிகளில், உண்மையில் அவரவர் 'பங்கை'த் தான் எடுத்துக் கொள்கிறார்களோ? அதைத்தான் வெளிப்படையாகக் கூறுகிறார்களோ? - என்று சொல்லிச் சிரிக்கத் தோன்றுகிறது. பைந்தமிழ், தண்டமிழ், செந்தமிழ் போல 'ஆங்கிலத் தமிழ், என ஒன்று இருப்பதை நாம் அடிக்கடி இன்றைய நடையில் காணலாம்.

# 12

# இனிய தமிழ்மொழியின் இயல்புகள்

## எழுத்து என்பது என்ன?

நாம் எதை 'எழுத்து' என்று சொல்கிறோம்? எழுது என்பதுடன் தொடர்புடைய எழுத்து, நமக்கு முதலில் வரிவடிவ எழுத்தாகவே படுகிறது. ஒலி எழுத்தை நாம் இரண்டாவதாகவே நினைக்கிறோம்.

உள்நின்று 'எழுகி'ன்ற. காற்றினால் உச்சரிக்கப்படும் எழுத்து ஒலி எழுத்தாகும். ஒலி எழுத்தே முதன்மையானது; உண்மையானது. வரிவடிவம் அதற்குத் தரப்படும் அடையாளமேயாகும். அடையாளம் நீண்ட கால இடைவெளிகளில் சிறிது சிறிது மாறிக் கொள்வதுண்டு.

எதனை எழுத்து எனலாம்? நாம் முனகுவது, இருமுவது, தும்முவது எல்லாம் ஒலி எழுப்பினாலும் எழுத்தெனப்படுவதில்லை. பொருள்தரும் ஒலியே எழுத்தாகும் (அதனை ஒலியன் எனலாம்; சொல்லில் அமைந்து பொருள் தருதலால் உருபொலியன் (Morphophoneme) என்றும் சுட்டலாம்). பொருள் தராத ஒலி எழுத்தாகாது. எனவே ஒரு குறிப்பிட்ட, பொருள் வேறுபாட்டுக்குக் காரணமான அடிப்படை ஒலியை நாம் எழுத்து என்கிறோம். அடை வேறு; உடை வேறு என்னும் போது 'அ' 'உ' இரண்டும் மாறியதும், பொருளே வேறுபடவில்லையா? அலை, அடை என்னும் போது ல் மாறி ட் ஆனால் பொருள் மாறவில்லையா?

அங்ஙனம் பார்த்தால் உயிர் 12ம் மெய் 18மே தமிழில் எழுத்துக்கள் - ஒலியன்கள். பிற எல்லாம் பெரிதும் சார்பொலிகள் - மாற்றொலிகளேயாம்.

## பொருள் வேறுபாடும் புணர்ச்சி வேறுபாடும்

மேலைநாட்டார் பொருள் வேறுபாடுதரும் அடிப்படையான ஒலியன்களையே எழுத்து என ஏற்பர். தமிழில் 'பொருள் வேறுபாடும் புணர்ச்சி வேறுபாடும்' உடையன எழுத்து எனப்பட்டன. அஃதாவது ஓர் ஒலியனின் பொருட் கூறுடன், அதன் செயற்பாடும் சேர்த்துச் சிந்திக்கப்பட்டது.

'மது என்ன' என்பதிலுள்ள 'து' வும் 'சூதென்ன, வாதென்ன' (சூது+என்ன, வாது+என்ன) என்பதிலுள்ள து வும் புணர்ச்சி வேறுபடுவதால், அவை சற்றே வேறுபடுத்தி எண்ணப்பட்டன. முன்னது முற்றியலுகரம்; பின்னது குற்றியலுகரம்.

பத்துக் கட்டுக் கட்டு, இந்தக் கட்டைக் கட்டு என்பனவற்றில் பெயராக நிற்கும் 'கட்டு'வில் குற்றியலுகரமும் ஏவல் வினையாக நிற்கும் 'கட்டு'வில் முற்றியலுகரமும் நிற்பதாக வேறுபடுத்திப் பார்த்துள்ளனர். அதனால் 'குற்றுகரம்' சார்பொலியன் என விதந்து ஓதப்பட்டது.

## 'உயிர்மெய் அல்லன மொழி முதலாகா'

தொல்காப்பியச் சூத்திரம் உயிருடன் கூடிய மெய்யொலியே மொழி முதலாகும் எனக் குறிப்பிடுவது, சராசரி மனிதருக்கும் எளிதாய் விளங்க வேண்டும் என்பதற்காகவேயாம். உயிர்மெய் வடிவம் கண்ணால் பார்க்கப்படுதலுக்கும் இது பொருந்தும். கடல் - Katal இதனை 'க்அட்அல்' என்றும் எழுதலாம். எல்லாம் மனப்பழக்கம்தான் காரணம். ஆனால் தமிழுக்கென உயிர்மெய் வடிவமிருப்பதால், "தமிழில் உயிரும் உயிர்மெய்யுமே மொழி முதலாகும். தனிமெய் மொழி முதலாகாது" என்றவுடன் நடப்பு நிலை விளங்கி விடுகிறது. கடல் என்பதிலும் க் என்ற மெய் ஒலியன் தான் முன்னிற்கிறது என்பது ஆராய்ச்சி நோக்கில் கூறுவது; 'ககரம்' மட்டுமே காணப்படுமென்பது நடைமுறை நோக்கில் கூறப்படுவது, அவ்வளவே. தனிமெய் (க், த், ப்) மொழி முதலில் வராது க்ரியா, ப்ரியா தமிழல்ல; அவை கிரியை, பிரியா ஆகி விடும்.

## சொல்லில் அமையும் எழுத்து நிலைகள்

எந்த மொழியிலும் எழுத்துக்களுடைய (ஒலியன்களுடைய) இணைப்பினாலேதான் சொல்வடிவங்கள் அமைகின்றன. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் இவை, இடையில் ஒன்றுடன் ஒன்று கலந்து மயங்கி வரும் எழுத்துக்கள் இவை, இறுதியில் நிற்கக்கூடியவை இவை என மிக வரையறைப்படுத்திய பாங்கினைத் தமிழில் காண்கிறோம், தமிழின் நடைமுறைப் பயன்பாட்டை முற்காலத்தில் பழகி, நன்கு அறிந்தவர்களால் இவ் வரையறைகள் தரப்பட்டுள்ளன.

எந்த மொழியிலும் இவ்வாறான வரையறைகள் பல தாமே அமைகின்றன. ஆனால் அவை தமிழில் இலக்கணமாக நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சொல்லின் முதலில் தனி மெய்யெழுத்து வாராது என்பது, சாதாரண மக்களுக்கு வரிவடிவ எழுத்து என்பதையே உணர்த்துகிறது. அவர்களுக்குக் குழப்பம் இல்லை. ஸ்பரிசம், ஸ்டேஜ் என மெய்வடிவை முதலிற்காணும்போது, அவை பிறமொழிச் சொற்கள் என்பதை முதலிலுள்ள மெய்களே காட்டிவிடுகின்றன.

சொல்லின் முதலில் தனி மெய் வருவதற்கு, இரு மெய்கள் முதலில் நின்று மயங்கி வருதலே காரணம் என்பது, முற்கூறிய க்ருத்தை மேலும் விளக்க உதவுகிற அளவு போதுமானது, தனிமெய்யாய் இருந்தால் அடுத்து வரும் உயிரொலியுடன் சேர்ந்து, இணைப்பொலியாகி விடுமல்லவா? (Call, Tall) உலக மொழிகளில் உயிர்மெய் ஒலி இணைப்பு இல்லாமலில்லை, தனிவரிவடிவம் தான் இல்லை. இதற்கெல்லாம் மிகக் கடினப்பட வேண்டியதில்லை. கடினப்படுத்தும் போதுதான் இலக்கணம் 'புலி'யாகி விடுகிறது.

## உயிர்மெய் — வரி வடிவமும் ஒலிவடிவமும்

'க' என்பது உயிர்மெய் வடிவம். இஃது ஆங்கில மரபுப் படி KA ஆகும். ஆனால் இந்திய மொழிகளில் இவை தனி வடிவம் பெறுகின்றன. இணைப்பு ஒலியாகிய் இதற்கும் தனி வடிவம் தந்து, சொல்லிப் பழகியதால் 'உயிர்மெய்' சொல்லினுள் அமையும் போது சில வரையறைகளை விளைவித்து விடுகிறது.

தமிழ்ச் சொற்களை உச்சரிக்கும் போக்கை - நடப்பை உயிர்மெய்கள் கட்டுப்படுத்துகின்றன. மேலும் தமிழில், வரி வடிவம் கொடுக்கப்பட்டதால் உயிர்மெய் ஒலிகள் நிலை பேறுடையனவாய்விட்டன.

'உயிர்மெய்' என்பதற்கு எவ்விதச் சிறப்பும் இல்லை; உலகமொழிகள் எதுவும் 'உயிர்மெய்'யைப் போற்றவில்லை என்பதெல்லாம் ஆங்கிலப் புத்தகத்தைப் படித்து விட்டுத் தமிழில் திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளை வாதம். மேலை நாட்டாரை மேற்கோள் காட்டவேதான் நாம் பிறந்திருக்கிறோமா?

'கண்' என்பதில் முதலெழுத்து எது? 'Kan' என ரோமன் எழுத்தில் பார்க்கும் போது, மெய்யொலி முதலென விளங்கும்.

இதை, 'காண்' எனவும் உச்சரித்து விடக் கூடும். தமிழில் உயிர்மெய்யொலி, வரிவடிவிலும் பார்க்கப்படுவதால், 'கண்' வேறு 'காண்' வேறாகவே ஒலிக்கப்படும். Treat-rea ரீ ஆகிறது; Threat-rea ரெ ஆகிறது. தமிழில் ரீ, ரெ தனிவடிவங்களிலிருப்பதால் ஒலிப்பதற்கேற்ப எழுதவும், எழுதுவது போல் ஒலிக்கவும் முடிந்து, உச்சரிப்பு ஓரளவு நிலைபேறுடையதாகிறது. உயிர்க் குறில் நெடில்களுக்குத் தனித்தனி வரிவடிவம் இருப்பதும் உயிர் மெய்களுக்குத் தனி வடிவமிருப்பதும் மொழியின் எளிமைக்கும் உச்சரிப்பு நிலைபேற்றுக்கும் உதவுகின்றன என்பதை மறுக்க இயலாது.

## ஞ ங, எழுத்து வரிசைகள்

ஞ, ங எழுத்து வரிசைகள் பயன்படுகின்றனவா? அவை தேவையா?

நஞ்சு, அஞ்சல், வஞ்சம் என ஞகரமெய் பயன்படுமிடம் பலவுள. உரிஞ் என்ற ஏவல் 'உரிஞ்சு' என இன்று பேசப் படுகிறது. அதை உரிஞு, உரிஞா, உரிஞோ எனப் பலவாறு கூறலாம் என்பர் தொல்காப்பியர். சில அருஞ்சொற்களில் ஞ வரிசை இடம் பெறுகிறது. ஞா, ஞெ, ஞொ என மூன்று இடங்களில் மொழி முதலாவதைத் தொல்காப்பியம் சுட்டும். ஞாயிறு, ஞாழல் (மரம்), ஞாலம் (உலகம்); ஞெகிழி (தீக்கடைகோல்; ஞொள்கிற்று (சுருங்கிற்று). இவற்றுடன் 'ஞ' வருவதை நன்னூல் கூறும். ஞமலி (நாய்). சங்க இலக்கியத்தில் ஞிமிறு - தேன்வண்டு, ஞான்று - பொழுது எனப் பலசொற்கள் வருகின்றன, அஞ் ஞான்று - அப் பொழுது என இன்றும் பலர் எழுதுகின்றனர். மேலும் 'ந' கரத்துடன் 'ஞ' கரம் போலியாக வருமிடமும் பலவுள, நண்டு - ஞண்டு; நாலுதல் - ஞாலுதல் (தொங்குதல்)

'ங' தவிர, அதன் வரிசையில் பிற எல்லாம் பயனின்றி உள்ளன என்பதுதான் உண்மை. ஙனம் - என்பதும் பழந்தமிழில் இல்லை. அங்கனம், ஆங்கனம். யாங்கனம் என்றே முன்பு வழங்கினர் இடைக்காலப் புதிய சொல் இது. ஙனம் - இடம், முறை, நெறி. அங்ஙனம், இங்ஙனம் எங்ஙனம். இங்ஙனம் பயன்படும் ங தவிர ஙா, ஙி எதுவும் பயன்படவில்லை. ஆயினும் ங உயிர் மெய் மட்டுமே கருதி, பிற உயிர்மெய் வடிவங்கள் பதினொன்றையும் அவ்வரிசையில் வைத்திருக்கிறோம். அதனால் தான்

'ஙப்போல்வளை' என்றார் அவ்வையார். ங, தான் மட்டும் பயன்பட்டு, தன்னுடன் கூடிய பிற எழுத்துக்களைக் காப்பது போலச் சுற்றத்தைக் காக்க வேண்டும் என்பது அந்த ஆத்தி சூடிக்குக் கருத்து. பலர் ங வைப் போல வளைந்து வணங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

தமிழில் 12 உயிரும் 18 மெய்யுமே முதல் ஒலிகள்; பிற கூட்டொலிகள், உயிர்மெய் போன்றவற்றில் சில பயன்படாமலிருப்பது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனையவற்றிலும் மிகவும் பயன்படுவன, குறைவாகப் பயன்படுவன என்ற வேறுபாடு வருமல்லவா?

### மரபும் மாற்றமும்

உயிர் பனிரண்டும் மொழி முதலாக வரும். வல்லினம் கசடதபற ஆறில் டறவும் மெல்லினம் ஙஞணநமன ஆறில் ணனவும் இடையினம் யரலவழள ஆறில் ரலழளவும் மொழிக்கு முதலில் வாரா. இவற்றுள் 'ங' ஒரே சொல்லில் ஙனம் என மொழி முதலாக வருகிறது. ஞ, ய வரிசைகள் மிகக் குறைவான சொற்களிலேயே மொழி முதலாகின்றன. உயிர்மெய்யில் கசதபமவ வரிசை எழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்களே தமிழில் மிகுதி. ற, ண, ன, ழ, ள என்பனவற்றை முதலாகக் கொண்ட சொற்கள் இன்றும் தமிழில் காணப்படவில்லை. ஆனால் ட ர ல முதலாகும் பிறசொற்களை அ இ உ சேர்த்து வழங்கிய காலம் உண்டு. இராமன், இலட்சம் என இவ்வாறு ஆளப்பட்டன. ஆனால் இன்று டாக்டர், ரயில், லட்டு என்று வழங்குவன பல சொற்கள் உள. மரபு மாற்றமாக ஏற்கத் தக்க அளவு லட்சியம், லாட்டரி, லோட்டா, லைட்டு என இவ்வாறு பல பெயர்க் குறியீடுகள் தமிழில் புகுந்துள்ளன. அறிவியல் தமிழ்க் கலைச் சொற்களில் இவை தவிர்க்கவொண்ணாதவாறு புகுந்துள்ளன. ரேடியோ, லேசர் என இவ்வாறு பலவுள.

### தனிநிற்கும் எழுத்தும் சொல்லிடைநிற்கும் எழுத்தும்

க, ட, த, அ, இ எனத் தனிநிற்கும் எழுத்துக்களுக்கும் கடல், அணில் என மொழியிடை நிற்கும் எழுத்துக்களுக்கும் பல சமயங்களில் வேறுபாடிருப்பதில்லை; தமிழில் அவை பெரிதும் ஒலிப்பு வேறுபாடு பெறுவதில்லை.

ஆயினும் மொழியிடை நிற்கும் எழுத்து, சில மரபுகளுக்குக் கட்டுப்பட்டதாகிறது. முன்பின் வரும் எழுத்துக்களாலும் பொருளுணர்ச்சியினாலும் தனிநிற்கும் எழுத்தினின்றும் வேறுபடுகிறது.

ஒலிப்பு வேறுபாடு மட்டுமன்றிப் பொருள் வேறுபாடும் ஏற்படுவதுண்டு. தமிழில் சார்பெழுத்துக்கள் என்பன யாவும் மொழியிடை வரும் எழுத்துக்களே.

உயிரும் மெய்யுமாகிய அடிப்படை முதல் எழுத்துக்களே. மொழியிடையே வரும் போது ஒலிமாற்றம், ஒலித்திரிபு-சிலபோது பொருள் மாற்றம் ஏற்படுத்துகின்றன. அப்போது அவை சார்பெழுத்துக்கள் எனப்படுகின்றன. ஆங்கிலத்தில் இங்ஙனம் மொழியிடையே வரும்போது ஏற்படும் ஒலி மாற்றம், ஒலித்திரிபுகள் மிகுதி; அவை அகராதிகளில் நுட்பமாக அங்குச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

தமிழில் மொழியிடை வரும் எழுத்துக்களில் இத்தனை ஒலிமாற்றங்கள் தான் வரும் என்று இலக்கணிகள் முன்பு கணக்கெடுத்து, வரையறைப்படுத்த முயன்ற முயற்சிதான் சார்பெழுத்து என்பதன் வரலாறாகும். தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றை மட்டும் சார்பெழுத்துக்கள் என்றார். நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் பத்து என்றார். மேலும் அவை வரும் இடங்களை எண்ணி 369 என்றார்.

இதற்கு ஓர் அகராதி தயாரித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். மொழியோடு பழக விரும்புவார்க்கு அது நல்ல அறிமுகமாகும். ஆராய்ச்சி அச்சுறுத்தாது அன்புகாட்டுவதாக அமையும்.

### தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை

சார்பெழுத்துக்கள் உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்து என்பார் பவணந்தி முனிவர். இவற்றை நாம் அவ்வப்போது சொல்லாட்சிகளில் வைத்து விளங்கிக் கொள்வதே நல்லது. இவை இடம்பெறும் சொல் வடிவங்களைக் கொண்டு, எத்தனை விதமாகவெல்லாம் பயன்படும் என எண்ணிப் பவணந்தி முனிவர் 369 சார்பெழுத்துக்கள் என்றார். உயிர் 12-ம் மெய் 18-ம் ஆக

30-ம் சேர்த்தால் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை 399 ஆகும். இதைக் கேட்டதும், தமிழில் இத்தனை எழுத்துக்களா என்ற வியப்பன்று, மயக்கம் ஏற்படும்.

எழுத்து என்றதும் வரிவடிவ எழுத்தே நம் நினைவிற்கு வரும். எழுத்து வடிவங்களை நினைவிற்கொண்டு, தமிழ் எழுத்துக்கள் 247 என்று கூறுவதுண்டு உயிர்மெய் வடிவம் 216; உயிர், மெய் வடிவங்கள் 30; ஆய்த வடிவம் 1. ஆக 247 என்பர். பிற சார்பெழுத்துக்களுக்குத் தனி வடிவங்கள் இல்லை. குற்றியலிகரம், குற்றியலுகரத்திற்குத் தனிக் குறியீடுகள் இருந்திருக்குமோ என்ற ஐயப்பாடு உண்டு.

தமிழில் எழுத்தெனத் தக்கன உயிரும் மெய்யுமே'யாம். இவற்றை இலக்கணிகள் முதல் எழுத்துக்கள் என்பர். இவை முப்பதும் தவிர, இன்று ஆய்தம் ஒன்றற்கு மட்டும் தனிவரி வடிவம் அடுப்புக் கூட்டுப் போல இருப்பதால் தமிழ் எழுத்து எண்ணிக்கை 31 என்பர்.

உயிர்மெய் என்பது ஒலி இணைப்பே தவிரத் தனி எழுத்தன்று. உயிர்மெய்க்கு எழுத்து வடிவங்கள் இருப்பினும் அவை தனி 'ஒலியன்கள்' அல்ல. ஆங்கிலத்தில் KA என இரண்டு வடிவமாக எழுதுவதை, தமிழில் க என ஒரே வடிவமாக எழுதுகிறோம். அவ்வளவே அவை தனி எழுத்துக்கள் அல்ல. இக்கூட்டொலியால், வரி வடிவ அடிப்படையில் அவை ஓரெழுத்துப் போலவும் பயன்படுகின்றன.

## தமிழில் மொழிக்கு முதலில் தனிமெய் வராது

'ப்ரோகிராம்' என்னாமல், 'இன்று என்ன புரோகிராம்?' என்று கேட்பவர்களையே பெரிதும் சந்திக்கிறோம். ஸ்தலம் தமிழில் தலமாகிவிடும்: ஸ்கந்தன் கந்தனாகிவிடுவான். உண்மையில் நம் கந்தனையே அவர்கள் ஸ்கந்தனாக்கிக் கொண்டனர். 'ந்யாயா' என்றால் தமிழர்கள் 'நியாயமா' என வினவுவார்கள்.

உலக மொழிகள் பெரும்பான்மையானவற்றில் தனி மெய் மொழி முதலில் நிற்கக் காணலாம். தமிழில் தனிமெய் மொழிக்கு முதலில் வராது; வந்தால் அதைத் தனக்கேற்ப மாற்றிக் கொள்ளவே முந்தும்.

மதுரை ஆங்கிலத்தில் மெஜுரா ஆவதும் திருவையாறு

ட்ருவாடி ஆவதும் தஞ்சாவூர் டாஞ்சோர் ஆவதும் ஆங்கில ஒலிப்புக்கு ஏற்ப - இயல்புக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளுதல் அன்றோ? அதுபோலவே கிறிஸ்து, (Christ), குரோமியம், (Chromium), கிரவுண்டு (Ground) என, மெய் முதன் மொழிகள் தமிழில் உயிர் பெற்று ஒலிக்கின்றமை தமிழுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளும் பண்பாகும்.

தமிழிலுள்ள 'பிராப்ளம்' என்னவென்றால், 'ப்ராப்ளம' என்று மெய் முதலாக உச்சரிக்க- இயல்பாக வாராமைதான்! தமிழர்களாகிய நீங்கள் ஆங்கிலம் பேசுவதாக அழுத்தமுடன் நினைத்துப் பேசும் போதுதான் 'ப்ராப்ளம்' என்பீர்கள். இயல்பான பேச்சில், 'பிராப்ளம்' எனவே நீங்கள் உச்சரிப்பீர்கள்!

**உயிரும் உயிர்மெய்யும்**

தமிழில் உயிரும் உயிர் மெய்யும் மட்டுமே மொழிக்கு முதலில் வரும். கடவுள், காடு என்ற சொற்களில் முதலில் இருப்பது 'க்' தான். (க்+அ=க, க்+ஆ=கா). ஆனால் அது தனித்து 'க்' என நிற்பதில்லை. 'க்ரோத்', 'க்ருபா' என்ற வடசொற்கள் அவ்வாறே நிற்காமல் குரோதம், கிருபை என மாறிக்கொள்கின்றன. தமிழில் உயிரோடு கூடிய மெய்யாகிவிடுகின்றன.

கால் (Call) சோல் (Soul) சோப்பு (Soap) என இவ்வாறு மொழி முதலில் மெய்யை அடுத்து உயிர்வர, அவை உயிர் மெய்யாக ஒலிப்பதை எல்லா மொழிகளிலும் காணலாம். ஆனால் அதே மொழிகளில் க்ரைம், த்ரைவ் எனவும், ஸ்வரம், த்யாகம் எனவும் தனி மெய்கள் முதலில் நிற்கின்றன; தமிழில் அவ்வாறு தனித்து நிற்பதில்லை. 'கிரைம்பிராஞ்சு' 'திரைவு' 'தியாகம்' என இவ்வாறு தமிழில் மாறிக் கொள்ளும். 'தியாகராஜன்' என்பதை த்யாகராஜ் என்று போட்டால், தமிழில் அடிமுடி இல்லாத க்தையாகிவிடுகிறது.

ஸ்ருதியை, சுருதி என்றால், தமிழில் சுருதி பிசிரா்மல் ஒலிக்கிறது. 'ப்ரியாவை' பிரியா என்றால் பிரியாத அன்பு கூடப் புலனாகிறது. சுருதியும் பிரியாவும் தமிழாகிவிடுகின்றன.

**தொல்காப்பியரின் தொலைநோக்கு**

பிற்கால இலக்கணிகளைவிடத் தொல்காப்பியர் மிகுந்த தொலை நோக்குடையவர் என்று பல நிலைகளில் தெரிகிறது. 'பன்னீர்

உயிரும் மொழி முதலாகும்' (59) என்றவர், மெய்களைப் பற்றி அடுத்துச் சொல்ல வேண்டிய நிலையில் 'உயிர்மெய் அல்லன மொழி முதலாகா' (60) என மிக வரையறுத்துச் சொன்னார். உயிருடன் கூடியல்லது மெய், மொழி முதலில் வாராது என்பதே தமிழின் சிறப்பியல்பாகும் என அவர் வரையறையைக் கண்டார்.

அதன்பின்னர் மெய்களில் இவை இவை இன்னஇன்ன உயிர்களுடன் மட்டுமே மொழிமுதலாகும் என நிரலே கூறிச் சென்றவர் 'முதலா ஏன தம்பெயர் முதலும்' (66) என முடித்தார். முதலாகா என்ற ஏனையவையும் தத்தம் பெயர் கூறும் போது மொழிமுதலாதலை அவர் சுட்டிக்காட்டினார். ஙுகரம், டகரம், லகாரம் எனவும், ஙக்களைந்தார், டப் பெரிது, ரச்சிறிது எனவும் வருமென உரைகாரர் உதாரணம் தந்துள்ளனர்.

இதிலிருந்து தனிமெய் வாராது என்பதே மொழியின் அடிப்படை இயல்பாதலை உணரலாம். இன்று சிலபோது லண்டன், லக்னோ, டிக்கன்ஸ், டெட்டால் என இவ்வாறு வரும்போது முதலா ஏன (தம்) பெயர் 'முதலும்' எனப் பெயர்களைச் சிதைக்காது ஆளவேண்டிய இடங்களில் - பிறமொழிச் சொற்களில் அவ்விதியை ஏற்றிப் பார்க்க இடமுளது. எனவேதான் 'உயிர் மொழி முதலாகும்; மெய் உயிருடன் கூடியே மொழிமுதலாகும்' என்பதை அடிப்படைப் பண்பாக எண்ணவேண்டியுளது.

### தனிமெய் எப்போது முதலாகிறது

முதலில் ஒரு மெய்யெழுத்து, அடுத்தது உயிரெழுத்து என வந்தால் எந்த மொழியிலும் அது உயிர்மெய்யாகிவிடும். Call, Heel, Health, Bow என்று மெய்யை அடுத்து உயிர் வரும் சொற்களில் - அவை தமிழ்போல் உயிர்மெய், ஆகி விடுதலை, கால், ஹீல், ஹெல்த், பௌ என உச்சரித்துப் பார்த்தாலே விளங்கி விடும். ஆனால் ஒன்றுக்கு மேற்பட்டு மெய்கள் வருமிடங்களில்தான் முதல் மெய் தனித்து நிற்கிறது. தமிழில் அவ்வாறு வரும் ஒரு சொல்கூட இல்லை என்பதே கவனிக்கத்தக்கது.

Train - TR., Plan - PL., Throat - THR., CHromium - CHR., இவற்றில் இரண்டு, மூன்று மெய்கள் முதலில் வருகின்றன. அதனால் முதல் மெய்கள் தனித்து மெய்யொலியை மட்டுமே தருகின்றன. வடமொழியிலும் க்ரோத என இரு மெய் வரும்போது தான்

முதல்மெய் அவ்வாறே தனித்து நின்று உச்சரிக்கப்படுகிறது. தமிழில் இவை உயிர்மெய்யாகி விடுதல் (டிரெயின், பிளான், குரோதம்) அதன் இயல்பாகும். தனிமெய்யாய் மொழிக்கு முதலில் நிற்கும் சொல் தமிழில் இல்லாமைக்கு அதன் இயல்பு - அம்மொழி தோன்றிய சூழல், தட்பவெப்பநிலை, மக்கள் உடற்கட்டு, மனநிலை என எத்தனையோ காரணங்கள். இதனைப் பரிணாம வளர்ச்சியுள் வைத்துப் (Evolution) பார்க்க வேண்டும்.

மனிதர்களின் இயல்புகள் ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றன. பிறப்பும் சூழலும் என அதற்கான காரணங்கள் பலவாகும். மொழிகளும் அவ்வாறே உருவாகி வழங்குகின்றன

## டிரைவர் பெருமாளின் விடுமுறைக் கடிதம்

காரோட்டியிடமிருந்து விடுமுறைக் கடிதம் வந்திருந்தது. 'டிரைவர் பெருமாள் எழுதிக் கொண்டது. என் மகள் லட்சுமி பிரியா உடம்பு சுகமில்லாமல் கிருபா கிளினிக்கில் சேர்ந்திருப்பதால் இன்று மட்டும் ஒரு நாள் லீவு தரவேண்டுகிறேன்' என்பது அக்கடித வாசகம், Driver என்ற ஆங்கிலச் சொல் D என்ற மெய்யெழுத்தில் தொடங்குகிறது. ட்ரைவர் என்று போடாமல் இவர் ஏன் 'டிரைவர்' என்று போட்டார். அது போலவே ப்ரியா - பிரியா, க்ருபா-கிருபா, க்ளினிக்-கிளினிக் என்ற சொற்களையும் மிக இயல்பாக எழுதியிருக்கக் கண்டேன். இரண்டு 'கிளாஸ்' தண்ணீர் வேண்டும் என்று கேட்கிறோம். Glass என்பதில் முதலில் இரண்டு மெய்கள் உள்ளன. அதை, 'க்ளாஸ்' என்னாமல் கிளாஸ் என்கிறோம். ப்ளாட்பார்ம் என்பதைப் பிளாட்பாரம் என்கிறோம். தமிழில் முயற்சியின்றி இயல்பாகச் சொல்லிப் பாருங்கள், உண்மை விளங்கும். Thrill என்பதைத் திரில் என்றுதானே போடுகிறார்கள். ஸ்நேகம் - சிநேகமாகிறது.

இன்று ஸ்புட்னிக், ஸ்பார்க் என்பது போல மாற்றமுடியாத சொற்களையும் சிலபோது பயன்படுத்த வேண்டியிருக்கிறது என்றாலும், 'டிரேடர்ஸ்' என்று போடும் அதே நபர் தான் ஸ்டோர்ஸ் என்றும் போடுகிறார். ட்ரேடர் என்பது மாற்றமுடிவதால் டிரேடர் ஆகிறது; மாற்றமுடியாத நிலையில் மட்டுமே ஸ்கூல், ஸ்டோர்ஸ் என நிற்கின்றன.

இதிலிருந்து தமிழுக்கென ஓர் இயல்பு இருப்பது புலனாகும்.

## லட்டு, ரயில் என்று டமாரம் அடிக்கலாமா?

லட்சுமண், இலட்சுமணன், இலக்குமணன், இலக்குவன் - இவ்வாறு தமிழ் வடிவங்கள் ஆளப்பட்டன. விபீஷண், விபீடணன், வீடணன் என மாறினான். இராமரை யன்றிக் கம்பர் ராமரை அறியார்.

ஆனால் இன்றைய நிலை என்ன?

லட்டு சாப்பிடுகிறோம். அதில் அ, இ, உ எதைச் சேர்த்தாலும் லட்டு (இலட்டு, அலட்டு) உடைந்துவிடும் போல் இருக்கிறது. ரயிலை, இரயில் என்றாலும் இயல்பாக உச்சரிக்கும் பொழுது ரயிலாகவே ஒலிக்கிறது. ரப்பரை அழிப்பானாகப் பெயர்க்கலாம். அதை அப்படியே பயன்படுத்துகிறவர்கள் அஇஉ சேர்த்தால், வேறுமாதிரியாகி இரப்பர் அரப்பர் எனப் பொருள் வேறுபடுகிறது.

'ராம' வந்தாரா?, 'ராவன்னா மானா' எங்கே? லேனாவை'க் கேட்டேன். 'ரேனா' என்ன சொன்னார்? - என்று பெரிய மனிதர்களை விலாசம் சுட்டிச் சொல்லும் பழக்கம் உண்டு. (ராமன், லெட்சுமணன், ரெங்கன் என்பவற்றின் சுருக்கம் அவை.)

உலகில் பல்வேறு நாட்டுப் பெயர்களும் ஆட்பெயர்களும் மாற்ற இயலாமல் நாளிதழ் போன்றவற்றில் அடிக்கடி அப்படியே ஆளப்படுகின்றன. டோக்கியோ, லாகூர், ராணிப் பேட்டை, ரட்ல்வ், ராஜீவ், ரீகன் என்பன காண்க.

சிலபோது தமிழ்ச் சொற்களே பேச்சில் மருவி வழங்குவதும் காணலாம். அராவுகிறது என்பதை ராவுகிறது என்கிறோம்; கண்+அராவி - கண்ராவி ஆகிறது. அராவுவது 'ரம்பம்' ஆகிறது. இலக்கு என்பதை அந்த லக்கிலே பார்த்தேன், என்கிறோம். நிரம்ப என்பது 'ரொம்ப' ஆகிவிட்டது. இங்கெல்லாம் முதலாகா எனப்பட்டனவும் முதலாகும் இடங்கள் உள என்பதையே கூற வேண்டியுளது.

## புதிய ஆத்திசூடி

மொழி முதலாகும் எழுத்துக்களை வரிசைப்படுத்தி அறம் உரைத்தார் அவ்வையார். அவர் செய்த புதிய முயற்சி அது.

பாரதியார் புதிய ஆத்திசூடியில் கருத்துப்புரட்சி செய்தார். ஊண்மிக விரும்பு, தையலை உயர்வு செய், முனையிலே முகத்து நில் என்று முன்னைய ஆத்திசூடியின் வழியை மாற்றினார். சொல் புரட்சியும் செய்தார் அவர். ரசத்திலே தேர்ச்சி கொள், ரீதி தவறேல், ருசி பலவென்றுணர், ரூபம் செம்மை செய், ரௌத்திரம் பழகு, லாகவம் பயிற்சி செய் என்றிவ்வாறு மொழி முதலானவற்றில் பலவற்றைச் சேர்த்துக் கொண்டார். இன்று பெயர்க் குறியீடுகளில் நாம் இவற்றை முதலாக ஏற்பதில் குற்றமில்லை என்பதற்கு இதனையும் ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

### மீன்குழம்பும் ர கர, ற கர வேறுபாடும்

மறம், மரம் உச்சரிப்பில் வேறுபாடுளது. 'அறம் செய விரும்பு' என்னும்போது, வேறுபட ஒலிப்பதை உணரலாம். நுனி நா, அண்ணத்தின் முன் வளைவை வருடிவிட 'ர' கரம் பிறக்கிறது. நுனி நா அண்பல்லை அழுந்தப் பொருந்திச் சட்டென்று விட 'ற'-கரம் பிறக்கிறது. தமிழில் பேசிப் பழகியவர்கட்கு இஃது எளிது. மலையாளத்தில் 'ற' வை 'ட' கரவொலி போல உச்சரிக்குமிடங்கள் உண்டு. தமிழில் 'ற்ற' என இரட்டிக்குமிடங்களில் அது 'த' கர ஒலி பெற்றுவிடுகிறது. ஒற்றை - ஒத்தை, கற்றை - கத்தை, தொற்றிக் கொண்டது - தொத்திக் கொண்டது. பிற மொழியாளர்க்கு இந்த எழுத்தை உச்சரிப்பது கடினம். கேரளம் - தமிழக எல்லைப் பகுதிகளில் ஒரு கதை வழங்குகிறது. புதிதாக வந்த ஆங்கிலப் பாதிரியார் சமையல் காரியிடம் 'மீன் குழம்பு' வைக்க 'அரிவீர்களா', என்று கேட்டாராம். அவருக்கு ற கரம் வராத குறையால் பொருள் புரியாமல் விழித்த அவள், “அரியாமல் மீனைக் குழம்பு வைப்பது எப்படி?” என்று கேட்டாளாம். பிறர் 'ற' கரத்தை உச்சரிக்க இயலாது திண்டாடுவர் என்பதைக் கிண்டல் செய்ய வந்த கதை இது.

# 13

# வாழ்க்கையும் இலக்கணமும்

## இலக்கணம் மொழிக்கா, வாழ்க்கைக்கா?

இலக்கணம் மொழிக்கு மட்டுமே என்றும் அதற்கும் நமக்கும் தொடர்பில்லை என்றும் படிக்கும் போதே மாணவர்கள் நினைத்து விடுகிறார்கள். அவர்கள் அவ்வாறு எண்ணுமளவு, சரிவரப் போதிக்காததால் தான் இந்தக் குழப்பம். மொழி நம் மனத்தோடும் வாழ்வோடும் தொடர்புடையது. அதனால் இலக்கண விதிகள் பல நம்வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து செயற்படுவதை நன்கு உணர்த்தினால், மாணவர்களும் மற்றும் அனைத்து மக்களும் இலக்கணத்தை விட்டுவிட அஞ்சுவார்கள். அதைப் பின்பற்ற ஆர்வம் காட்டுவார்கள். இலக்கணத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் அதைப் படிக்கவும் துடிப்பார்கள்.

இலக்கியம் வாழ்க்கையில் பிறக்கிறது என்பர் மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர். ["A great Book grows directly out of Life" W.H. Hudson]" "மக்கள் நுதலிய அகன் ஐந்திணை" "உலகியல் வழக்கினும்" என்று இவ்வாறு தொல்காப்பியர் இதைக் குறிப்பிடுவார்.

இலக்கணமும் பெரிதும் மனித வாழ்க்கையுடன் தொடர்பு பட்டுத்தான் பிறக்கிறது. நெறியான வாழக்கைக்குத் துணை நிற்கிறது என்பதை மாணவர்கள் உணரச் செய்தல் வேண்டும்.

## வேற்றுமை எவ்வாறு உணர்த்தப்படுகிறது?

வேற்றுமை எவ்வாறு உணர்த்தப்படுகிறது என்பது பெரிய ஆராய்ச்சி. வேற்றுமைகள் எட்டு என்பர். ஆனால், எத்தனையோ விதமாகப் பெயரின் செயலை - ஒரு பெயர்ச் சொல்லின் தொடர்பான வேறுபாடுகளை உணர்த்துகின்றனர். அதனை எட்டு வேற்றுமைகளுக்குள் அடக்க முயல்வது, ஏதோ ஒரு வகையில் முக்கியமானவற்றை நினைவுபடுத்தும் முயற்சியே. உருபுகளும் அதன் திரிபுகளும் பலவாகும். சில போது விரித்துச் சில சொல் சேர்த்துச் சொன்னால்தான் விளங்கும். கம்பரால் இராமாயணம் என்றால் விளங்காது. கம்பரால் எழுதப்பட்ட இராமாயணம் எனல்

வேண்டும். இதை 'உருபும் பயனும்' என்பர். எவ்வாறு பெயர்ப் பொருளை வேறுபடுத்த முயல்கிறோம் என்பதே அடிப்படையாகும். அந்த உட்கருத்துக்கு ஏற்பவே உருபுகளும் செயற்படும்.

### பேருந்து நிலையத்தில் வேற்றுமை

ஒருவர் திருச்சி நிலையத்தில் உந்து ஒன்று புறப்பட்டு விட்டதைப் பார்க்கிறார். அவசரமாக ஓடுகிறார். அதில் 'சென்னை – திருநெல்வேலி' என்று போட்டிருக்கிறது. உடனே அதைத் தொடர்ந்து ஓடி அது 'சென்னைக்குப் போகிறதா?' சென்னையிலிருந்து வருகிறதா? என் அறிந்து கொள்ள முயல்கிறார். சென்னைக்குப் போகிறதா என்பது நான்காம் வேற்றுமை - 'அங்கிருந்து வருகிறதா' என்பது ஐந்தாம் வேற்றுமை. இப்போது அவருக்கு அந்தப் பேருந்து பற்றி நான்காம் வேற்றுமையா? ஐந்தாம் வேற்றுமையா என்ற ஒரு வேறுபாடு தெரிந்தாக வேண்டும். அவர் 'சென்னைக்குப் போக வேண்டியவர். அந்தப் பேருந்து நான்காம் வேற்றுமை சேர்க்கப்பட்டு, சென்னைக்குப் போகும் வண்டியாக இருந்தால் அவர் அதில் ஏறிக்கொள்ளலாம். சமயங்களில் ஐந்தாம் வேற்றுமையாகச் சென்னையிலிருந்து வருகிற வண்டியாகக் கூட இருக்கலாமே? அவ்வாறெனில் அது திருநெல்வேலிக்குப் போய்க் கொண்டிருக்கும்.

அதில் போய் விவரம் கேட்காமல் இவர் ஏறினால், அதிலுள்ள ஓட்டுநன் ஏன்யா? உமக்கு மூளை இருக்கிறதா?, என்று கேட்கக் கூடும். வழியிலே போகிறவனிடமெல்லாம் நமக்கு மூளை இருக்கிறதா, இல்லையா என்பதை மெய்ப்பித்துக் கொண்டிருக்க முடியுமா என்ன?

இங்கே உந்து போகுமிடம் பற்றி வேற்றுமை தெரிய வேண்டியது அவசியமென்றால், இலக்கண வேற்றுமையை மூளையுள்ள யார்தான் விட்டுவிட முன்வருவார்கள்?

மாணவர்களுக்கு இப்படிப்பட்ட உதாரணங்களை யல்லவா நூற்றுக் கணக்கில் சொல்ல வேண்டும். "மலையின் வீழ் அருவி" "காக்கையிற் கரிது களம் பழம்" என்று பனிரண்டாம் நூற்றாண்டில் சொன்ன எடுத்துக்காட்டுகளையே அல்லவா நாம் இன்னமும் வகுப்பில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதனால் மாணவன் தனக்கும் இந்த இலக்கணங்களுக்கும் எந்தவிதத் தொடர்புமே

இல்லை என்று எண்ணிவிடுகிறான். அதனால் 'இலக்கணப் புறக்கணிப்பு' நம்நாட்டில் வேரூன்றி விட்டது.

**பத்திரமும் வேற்றுமையும்**

பத்திரம் எழுதும் போது இந்த வேற்றுமைகளைப் பயன்படுத்தும் விதத்தை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்? படிக்காத மனிதன் கூட வேற்றுமை உருபுகைள எண்ணிஎண்ணிப் போடுவதைப் பார்க்கலாம்.

"இன்னார்க்கு மகனாகிய யான், இன்னார்க்கு மகனாகிய இவருக்கு ஆலமரத்தின் வடக்கு அனுமார் கோயிலின் தெற்கு வளைவுச் சாலையின் கிழக்கு. தேனீர்க்கடையின் மேற்கு ஆகிய நான்கு எல்லைகட்குட்பட்ட, இன்ன ஊரின்கண் உள்ள எனது வீட்டை, என் ஒப்பமிட்ட இப்பத்திரத்தினால் கிரயம் செய்து கொடுக்கிறேன்".

இதுபோல வாசகங்களைக் கவனியுங்கள். யான் - முதல் வேற்றுமை. வீட்டை - இரண்டாம் வேற்றுமை. இதனால் - மூன்றாம் வேற்றுமை. இன்னாருக்கு - நான்காம் வேற்றுமை. ஆலமரத்தின் - ஐந்தாம் வேற்றுமை. எனது - ஆறாம் வேற்றுமை ஊரின் கண் - ஏழாம் வேற்றுமை. இங்ஙனம் துருவித் துருவிப் பார்த்தால் எல்லா வேற்றுமைகளும் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுவதை அறியலாம்.

ஏன் தெரியுமா? யாருடைய உடைமை, எந்தச் சொத்து, யாருக்கு விற்றது என்பன போன்ற வேற்றுமைகள் எல்லாம் ஐயமறத் தெரிய வேண்டிய இடம் அது. இல்லாவிட்டால் ஒருவர் சொத்து ஒருவருக்குப் போய்விடலாம்; குறிப்பிட்ட சொத்துத்தானா என்பது தெளிவுபடாமல் போகலாம். அதனால் மனிதன் இங்கே வேற்றுமைகளை மிக அழுத்தமாகக் கையாள்கிறான். அவனுக்கு இங்குமட்டும் எவ்வாறு வேற்றுமையில் பிரியம் வந்தது? எல்லாம் செல்வ உடைமையிலேற்படும் பற்றுத்தான் காரணம். யார்தான் தம் சொத்துக்களை விட்டுவிட முன்வருவார்கள்?

**எனது மகனா, எனக்கு மகனா?**

இன்று திருமண அழைப்புகளில் 'எனது மகன் செல்வத்திற்கும், சோமசுந்தரம் அவர்களது மகள் கலைச் செல்விக்கும் திருமணம்'

என எழுதுவது சரியா என்பது பலரது ஐயம். 'எனது மகன்' என்றால் அஃறிணையாகிவிடும் என்பது அவர்கள் கருத்து. 'என் மகன்' என்று உருபு விரிக்காமலே எழுதிவிடுவது நல்லதென அவர்கள் கூறுகிறார்கள். இதிலுள்ள சிக்கல் என்ன? 'அது' என்பது அஃறிணையைச் சுட்டும் உருபு போலக் காணப்படுவதே அதற்குக் காரணம்.

### வேற்றுமை என்றால் என்ன?

"சாதி வேற்றுமை, சமய வேற்றுமை, நிற இன வேற்றுமையெல்லாம் போகவேண்டும் என்று புரட்சிக் கருத்துகள் வெடித்துவரும் இந்தக் காலத்தில், இந்த இலக்கண வேற்றுமை மட்டும் வேண்டுமா? இதையும் ஒழித்துத் தொலைத்தால் என்ன?" என்று கல்லூரி மாணவர்கள் இலக்கண வகுப்பில் வினவியது உண்டு.

ஒழித்து விடலாம்தான். ஆனால் அதனால் ஏற்படும் விளைவுகளையும் எண்ணிப் பார்த்த பிறகு தானே ஒழிக்க முயல வேண்டும். இதுபற்றி இலக்கணம் எல்லாம் விளக்கெண்ணெய் என நினைக்கும் மாணவர்கள் மட்டுமன்றி, மற்றவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

### எனக்கு மகன்

தொல்காப்பியர் காலத்தில் 'எனக்கு மகன்', 'கண்ணனுக்கு மகன்' என்றுதான் கூறினர். அது உருபு அப்போது பயன்படாது என அதை விலக்கினர். 'அது என் உருபு கெடக் குகரம் வருமே' என்பது தொல்காப்பியம். "மாநாய்கனுக்கு மகளாகிய கண்ணகிக்கும் மாசாத்துவானுக்கு மகனாகிய கோவலனுக்கும் நடக்கும் திருமணத்திற்கு வருக" என்பது அன்றைய வாசகம். இன்றும் நாகர் கோயில் வட்டாரத்தில் 'அவர் எனக்கு மாமா', அவள் என் தம்பிக்கு மனைவி என்று இவ்வாறு வழங்குதல் காணலாம். எனது என உடைமைப் பொருளில் சுட்டுவதைவிட, எனக்கு என உறவுப் பொருளில் சுட்டுவது நல்லது என முன்பே நினைத்திருக்க வேண்டும். இது தமிழர் நாகரிக மரபைக் காட்டுகிறது. ஆயினும் இன்று 'எனக்கு மகனாகிய மாணிக்கத்திற்கும், இன்னாருக்கு மகளாகிய கல்யாணிக்கும்' திருமணம் என அழைப்பு எழுதுவதில்லை.

## அது உருபும் அஃறிணையும்

'அது' உருபு அஃறிணையாகச் சொல்லளவில் தோற்றமளிப்பது உண்மையே. ஆயினும் எனது புத்தகம். எனது மகன், எனது நாடு என இவ்வாறு 'அது' உருபாக வரும் போது உடைமைப் பொருளைத் தருகிறது என்பதைத்தான் கவனிக்க வேண்டும். ஒருமை பன்மையையோ, உயர்திணை அஃறிணையையோ 'அது' சுட்டுவதாகக் கொள்வது தவறு எனச் சிலர் வாதிடுவர். ஆறுமுக நாவலர் இடைக் காலத்தும் பிற்காலத்தும் ஏற்பட்ட மாறுதல்களைக் காட்டி, 'அது' உருபு உயர்திணை ஒருமை, பன்மைக்கும் வரலாம் என்று கூறுகிறார். எனவே எனது மகனுக்கும் என்பதைத் தவறு எனக் கருதவேண்டியதில்லை. உருபில் போய் உயர்திணை, அஃறிணை தேட வேண்டாம். இடைக் காலத்தில் எனது கை, என கைகள் என அது உருபு ஒருமைக்கும் அ உருபு பன்மைக்கும் எனக் கொண்டனர். இன்று பன்மை சுட்டும் அ உருபு வழக்கிலில்லை. ஒருமை பன்மை வேறுபாடின்றி 'அது' உருபு பயன்படுகிறது. எனது நூல், எனது நூல்கள், எனது வீடுகள் என வழங்கும்.

# 14

# இலக்கணமும் பொருளுணர்ச்சியும்

### கைமாறும் கைம்மாறும்

"கைம்மாறு கருதாது உதவுங்கள்' என்றுதான் கூற வேண்டும். கைமாறு என்றால், கையிலுள்ள மாறு என்றாகும். 'கைமாறு கருதாமல் உதவுக' என்றால், என் கையில் மாறு இருக்கிறது என அச்சுறுத்தி, வேண்டுவதாக ஆகும். கைம் மாறு என்றால் செய்த உதவிக்கு மறுஉதவி செய்வதாகும். கை - செயல், ஒழுக்கம். கைம்மாறு என்னும் போது புணர்ச்சி பெற்று ஒரு சொன்னீர்மைத்தாய், பதிலுதவி என்றாகிறது.

### செய்ந்நன்றி அறிதல் செய் நன்றிஅறிதல்

'செய்ந்நன்றி அறிதல்' என்பதைப் பலர் 'செய்நன்றி அறிதல்' என்றே எழுதிவிடுகிறார்கள். நன்றாகப் படித்தவர்கள் கூட இவ்வாறு எழுதக் காணலாம். செய்நன்றி என்றால் செய்த நன்மை என்றாகும். செய்ந்நன்றி என்றால்தான், செய்யப்பட்ட நன்றியை நினைவு கொள்வதைக் குறிக்கும். திருவள்ளுவர் 'கைம்மாறு வேண்டா' எனவும் 'செய்ந்நன்றி கொன்ற மகற்கு' எனவும் ஆளக் காணலாம். நாம் பிறர்க்கு நன்றி செய்ய வேண்டும்; பிறர் செய்த நன்மைகளுக்குச் செய்ந்நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும். 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்பது போல் முன்பு நன்றி - நன்மை எனவே பொருள் தந்ததுண்டு. பிறகு 'செய்ந்நன்றி' சுருங்கி 'நன்றி' என்றே ஆகிவிட்டது. கூட்டமுடிவில் 'நன்றியுரை' என்று போடுகிறோமே, அது செய்ந் நன்றியுரையேயாகும். செய்நன்றி இருசொல் தொடர்; வினைத்தொகை. 'செய்ந்நன்றி' - ஒரு சொல் நீர்மைத்தாகி, 'திரும்பச் செய்யும் நன்மை' - 'செய்த உதவிக்கு நன்றி கூறுதல்' எனப் பொருள் வளர்ந்திருக்கிறது.

### மெய்ம்மையும் பொய்ம்மையும்

'மெய்ம்மை' - உண்மை, சத்தியம். மெய்மை என்றால் மெய்யினது - உடம்பினது தன்மை என்பது போல் ஆகும். பொய்யான 'மை' பொய்மை. பொய்யானவற்றைப் பொய்ம்மை

என்று தான் கூற வேண்டும். பொய்ம்மையும் வாய்மை இடத்த (292) என்பது குறள். பொய்ம்மையை மெய்ம்மை வெல்ல வேண்டுமென்றால், அவற்றைப் பெயர்த் தன்மைப்படுத்தும் 'ம்' விரித்தெழுதுவது தான் உண்மையிலேயே நல்லது. மேலும் மெய் - மெய்ம்மை, பொய் - பொய்ம்மை என ஒரு சொல் நீர்மையதாக இந்த 'ம்' ஒற்று மிகுகிறது. பொய்ம்மை - பொய்யாந் தன்மை; மெய்ம்மை - மெய்யாந் தன்மை. பொய், மை, மெய், மை என்றால் விட்டிசைத்துப் பொய்யான பிறிதொன்றைச் சுட்டுகிறது.*

வாய்மை, தாய்மைகளில் மிகாத மகர ஒற்று, பொய்ம்மை மெய்ம்மைகளில் மிகுந்து நிற்பது குறிலைத் தொடரும் அச் சொல்லமைப்பின் விளைவாகும்.

## ஆடு ஆடு! கட்டுக்கட்டு!

என்ன சிரிக்கிறீர்கள்? இதில் ஓர் உண்மை இருக்கிறது. "நீ ஆடு, மேடையில் ஆடு, நாட்டியம் ஆடு" என்று ஏவும் போது, 'டு' வை அழுத்தி ஒலிக்கிறோம். அது முற்றியலுகரம் - ஓசை குறையாத உகரம். 'உ' என்ற உயிரெழுத்துத்தான் அது.

'ஆடெங்கே?' 'ஆடென்றா அதட்டுகிறார்?' - இங்கெல்லாம் 'ஆட்' என்பதுபோல் உகர ஒலி சற்றே குறைந்தொலிக்கிறது. டு+எ=டெ; உயிர் ஏற இடம் கொடுக்கிறது. 'ட்', மெய் போல் நிற்பதைப் பாருங்கள்.

'இதைக் கட்டு. நன்றாக இறுக்கிக் கட்டு' என்னும் போது 'டு' முழுமையாக ஒலிக்கிறது. கட்டெது, கட்டெங்கே - எத்தனை 'கட்' இருக்கிறது. இங்கெல்லாம் உகரம் குறைந்தொலிக்கிறது.

பொதுவாகச் சொன்னால் உகரம் ஏவல் வினையாக இருக்கும் போது முற்றுகரமாகவும் பெயராக மாறும்போது குற்றுகரமாகவும் ஒலிக்கிறது. இங்ஙனம் 'பொருள்' வேறுபாடும் 'புணர்ச்சி' வேறுபாடும் சிற்சில இடங்களில் தருவனவற்றை எழுத்தென்னாமல், எழுத்தாம் தன்மை உடையன என்று 'சார்பெழுத்து' வகைப்படுத்தினார் தொல்காப்பியர்.

---

செய்நன்றிக்கும் செய்ந்நன்றிக்கும் எந்தவிதமான் பொருள் வேறுபாடும் இல்லை :- டாக்டர் இரா. கோதண்டராமன்./ அது தவறு. நகரம் மிகாமல் செய்நன்றி என்று வந்தால் அது வினைத் தொகையாகும். வினைத்தொகையில் ஒற்று மிகாது! - புலவர் ச.மு. விமலானந்தன்.

சார்பெழுத்துப் பல ஒலித்திரிபுகளே; மொழியிடை வரும் ஒலிப்பு மாற்றங்களே. ஆனால் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் மூன்றும் அதற்கு மேம்பட்டுப் பொருளுணர்ச்சியிலும் செயற்பாட்டிலும் சில இடங்களில் வேறுபடுவதை உணர்ந்த தொல்காப்பியர் அவற்றை மட்டும் சார்பெழுத்துக்கள் என்றார். இவை இன்றும் மொழி அறிஞர்களால் ஒலியன்களா, மாற்றொலியன்களா என விவாதிக்கப்படுகின்றன.*

---

டாக்டர் இரா. கோதண்டராமன் மரபிலக்கணிகளின் சிந்தனையிலிருந்து மாறுபட்டு, குற்றுகர முற்றுகரங்களின் நிலைக்களன்களைத் தமிழண்ணல் தினமணி வளர்தமிழ்ப் பகுதியில் ஒரு புதிய கோணத்தில் காணமுற்படுகிறார் என எழுதி, மேலே குறித்த கருத்தை மறுத்து விரிவாக எழுதியுள்ளார். குற்றுகர இறுதி கெடுதலும் முற்றுகர இறுதி கெடாதிருத்தலுமாகிய சந்தி வேறுபாட்டைக் கொண்டே இவை முடிவு செய்யப்படுகின்றன என்று நிறுவுகிறார். இவ் வேறுபாட்டிற்குப் பொருண்மைக் குறிப்பையும் சில சமயங்களில் கருத்தில் கொள்ள வேண்டியதாகிறது என்றும் அதைச் சிறப்பு விதிகள் மூலமே விளக்க வேண்டும் எனவும் முடிக்கிறார்.

நன்னூல் அளவும் தொல்காப்பியத்தை மேற்போக்காகவும் பார்த்தவர்களுக்கு இது நியாயமெனப்படும். மொழியியல் மிகச் சிறந்த அறிவியல். அதன்வழியான ஆய்வுகளும் கற்பனை மேகங்களால் சூழப்பட்டு, உண்மை அறியப்படாமலே போகிறது. எங்ஙனமாயினும் உண்மைகள் கண்டறியப் படுவதற்காக நம் அறியாமையை ஒப்புக் கொள்ளலாம்.

அவருக்கும் டாக்டர் அர. சிங்கார வடிவேலனுக்கும் நெல்லித்தோப்பு சோ. பார்த்தசாரதி, தினமணியில் எழுதிய மறுப்பு மிகவும் பயன்படுமாறு அமைந்திருந்தது. அவர் கடிதம் கீழே தரப்படுகிறது.

உகரம் ஏவல் வினையாக இருக்கும்போது முற்றுகரமாகவும், பெயராக மாறும்போது குற்றுகரமாகவும் ஒலிக்கிறது என்பது சரியான விளக்கமல்ல என்று கூறியுள்ளனர். அது அமைவுடையதன்று, தொல்காப்பியர் முற்றியலுகரமொடு பொருள் வேறுபடாது அப்பெயர் மருங்கின் நிலையியலான என்று கூறியுள்ளார். அதாவது, மொழி முதல் குற்றுகரம் பெயர்ச்சொல்லிலே நிற்றலான் முற்றுகரமாக ஒலிக்கப்படினும் பொருள் வேறுபடாது என்பதாம். இதனால் மொழியிறுதிக் குற்றியலுகரம் முற்றியலுகரமாக ஒலிக்கும் என்பது அவ்வாறு ஒலித்தல் வினைச்சொல்லின் கண்ணே என்பதும் அங்குப் பொருள் வேறுபடும் என்பதும் அறியப்படும். மேலும், தொல்காப்பிய வினையியல் 6-ம் சூத்திரத்தில் தன்மை ஒருமை வினைக்கண்ணும். 20-ம் சூத்திரத்தில் படர்க்கை ஒன்றன்பால்வினைச் சொற்கண்ணும் வரும் உகரம் குற்றியலுகரமே என்று கூறியுள்ளார். முன்னிலைக் கண் குற்றியலுகரம் வராது என்பதைத் தொகை 10-ம் சூத்திரத்தில் கூறியுள்ளார். இதனால் முன்னிலை வினைக்கண் நிற்கும் உகரம் முற்றியலுகரமே என்பது பெறப்படும். டாக்டர் மு.வ. அவர்களும் பொருளுணர்ச்சியில் அமைந்துள்ள சிறுசிறு வேறுபாடுகள் காரணமாகவும்

## செயப்பாட்டு வினையும் செய்வினையும்

தமிழில் செய்வினைக்கே அதிக வழக்காறுண்டு. உணவு சமைத்திருக்கிறது, 'குழம்பு' வைத்திருக்கிறது, வெந்நீர் காய்ந்திருக்கிறது என்ற உலக வழக்குகள் முறையே உணவு சமைக்கப்பட்டிருக்கிறது; குழம்பு வைக்கப்பட்டிருக்கிறது; வெந்நீர் காயவைக்கப்பட்டிருக்கிறது என்று வரவேண்டும். ஆனால், பொதுவாக, 'படுவினை'யைத் தமிழில் அதிகமாக ஆள்வதில்லை. 'மரத்தைக் கோடரி வெட்டியது' என்பார்களே தவிர, 'மரம் கோடரியால் வெட்டப்பட்டது' என்பதில்லை. ஆனால் இதழியல் தமிழில் செயப்பாட்டு வினையை ஏற்க வேண்டிய இடமும் உண்டு.

'கடைகளைப் போராட்டக்காரர்கள் சூறையாடினர்' என்னும் போது, சூறையாடினவர்கள் என்று, போராடியவர்களைத் தெளிவாகக் குறிக்கிறோம். இது 'செய்வினை' வடிவம்.

"திருடர்கள் கொள்ளையடித்தார்கள்" என்று செய்வினையால் கூறுவதில் குற்றமில்லை. போராட்டக் காலங்களில் சில காலிகளும் இடைப்புகுந்து தாக்குவதுண்டு. எனவே இன்னார் என்று சுட்டிக் கூற முடியாதபோது. "கடைகள் சூறையாடப்பட்டன" போராட்டம் தகர்க்கப்பட்டது என்று செயப்பாட்டுவினை வாக்கியமாகவே வெளியிட நேரும்.

தெளிவாகத் தெரியும் போது "கோட்சே காந்திஜியைச் சுட்டான்" என்று செய்வினையில் எழுதலாம். தெளிவாக யார் சுட்டார் என்று கூறமுடியாத நிலையில் "இந்திரா காந்தி சுடப்பட்டார்" என்று செயப்பாட்டு வினையாகவே தான் கூற நேரும். "வண்டியில் ஏறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்" "என்பதை ஆங்கிலத் தமிழ்" என்று குறிப்பிடுவதை மனத்தில் வைத்துக் கொண்டு, இங்கும் அதையே சொல்லிக் கேலி - பேசுவது தவறு. நம் சிந்தனை சமநிலைப்பட்டால்தான், "வளரும் தமிழுக்கு" நல்லது.

---

சொற்களில் ஒலிமுறையில் நுண்ணிய வேறுபாடுகள் உள்ளன எனக் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது. குற்றியலுகர, முற்றியலுகரப் பொருள் வேறுபாட்டிற்கு, காது, கட்டு, கத்து, முறுக்கு என்பன போன்ற சொற்களை எடுத்துக்காட்டி இதழ் குவியாமல் குற்றியலுகரமாய் ஒலிக்குமிடத்தில் பெயர்ச் சொற்கள் என்றும் இதழ் குவிந்து முற்றியலுகரமாய் ஒலிக்குமிடத்தில் வினைச் சொற்கள் என்றும் கூறுவர் நச்சினார்க்கினியர். எனவே உகரம் ஏவல் வினையாக இருக்கும் போது முற்றுகரமாகவும் பெயராக மாறும்போது குற்றுகரமாகவும் ஒலிக்கிறது என்பது சரியான விளக்கமே!

## பிரிக்கமால் பழகிவிட்ட இடங்கள்

எத்தனையோ கூட்டுச் சொற்கள் புணர்ச்சியால் ஒருங்கிணைந்து ஒரு சொல் நீர்மைத்தாகி விட்டன. அவற்றையெல்லாம் பிரிக்கக் கூடாது. 'பதிப்பாசிரியர்' என்பதைப் பதிப்பு ஆசிரியர் என்பது முறையாகாது - பதிப்புக் கலையை அவரிடமிருந்து பிரிப்பது போலிருக்கிறது. பூவரச மரம், கூலியாள், கையெழுத்து - இப்படியே சொல்லிப் பாருங்கள். இவற்றை இனி கூலி ஆள் என்பதுபோல் பிரித்தால் பொருள் தெளிவுபடாது.. என்னிடம் காசில்லை, அவர்கள் பந்தாடுகிறார்கள் என்றுதான் இயல்பாகப் பேசுகிறோம். சிலர் இவற்றையும் பந்து ஆடுகிறார்கள் என்பது போல் பிரிக்க முற்படுகிறார்கள். முட்செடி, விடியற்காலம், நெற்பயிர், தண்ணீர், வெந்நீர், பாற்குடம் இவற்றையெல்லாம் யாரும் பிரிப்பதில்லை. கற்கண்டு தின்றால் இனிக்கும். கல் கண்டு தின்றால் இனிக்குமா? ஆயினும் 'கல்கண்டு' என்று சேர்ந்து ஒலித்தால் - எழுதினால் அது கற்கண்டாகி விடுமென்று கருதுகிறார்கள். பல்பொடி என்பதைவிடப் பற்பொடி என்பதே முறையாகும். 'கல்கோயில்' என்றால் என்னவோ போலுளது; கற்கோயில்களில் செம்பொற்சிலைகளை வைத்து வழிபடுவதே நற்பழக்கமாகும். நல்பழக்கமெனல், பழக்கத்திற்கு மாறானது.

எனவே இன்று இடமறிந்து, பொருளுணர்வுக்குத் தகப்பிரித்தும் சிலபோது பிரிக்காமலும் எழுத வேண்டியுளது. மக்களவையா? மக்கள் அவையா? 'மக்களவை' என்றால்தான் சபையைக் குறிக்கும் ஒரு சொல் நீர்மை அமைகிறது. மக்கள் அவையென்றால், மக்களுக்குப் பிறகு வேறு எவையோ பற்றிக் கூறப் போவது போல் தொனிக்கிறது. 'மாநிலங்களவையும்' ஒரே அவையாக விளங்கட்டும்; அவையைப் பிரித்தால் கலைச் சொல்லாக்கம் நெகிழ்கிறது.

ஒரே தொடரைக் கூட, இடம் நோக்கிச் சிலசமயம் பிரித்தும் சிலசமயம் சேர்த்தும் எழுதினால் அது தவறாகி விடாது. முன்பு அப்படி எழுதினீர்களே என்று கேட்பது தேவையற்றது.

## பண்புத் தொகைகள்; அடைமொழிகள்

பண்புத் தொகைகள், அடைமொழிகள் போல வருமிடங்களில் பிரிக்காமல் சேர்த்தெழுதுவதே பொருள் தெளிவுபட உதவும். சேவடி,

மலரடி, குறும்பலா, வேர்ப்பலா, செந்நெல், செவ்வாய், பாற்கடல், மண்ணுலகம், விண்ணுலகம், சூரர மகளிர், வண்டினம், புள்ளினம், தண்ணம் துறைவன், ஆறிரு தடந்தோள் - இங்கெல்லாம் பிரிக்க வேண்டுமா?

கண்டாங்கு, கண்டாலன்ன, முத்தன்ன வெண்ணகையாய், மெல்லென்று, வருவாராயின், எழுதினாரென்றால், படிப்பானாயின், எழுதுவதனால் என வருமிடங்களிலும் பிரிக்காமல் எழுதுவதே முறையாகப் படுகிறது. வருவார் ஆயின் என்றாலும் எழுதினார் என்றால் என்றாலும் பொருளுணர்ச்சி விட்டிசைக்கிறது.

## பிரித்து உச்சரித்தலும் இடம்விட்டு எழுதுதலும்

அம்மா, அப்பா, அண்ணா யாவும் அம் மா, அப் பா, அண் ணா (நா) எனப் பிரிபடும் பொழுது வேறு பொருள்படும். அம்மணம் என நன்மணம் தருவதைச் சேர்த்தெழுதினால் வேறு ஒரு சொல்லாகிவிடும். இன்றுமுதல் அமைச்சர் பேசினார் என்பதற்கும் இன்று முதலமைச்சர் பேசினார் என்பதற்கும் எத்துணை வேறுபாடுளது! முதலமைச்சர், தலைமையமைச்சர், மக்களவை, சட்டப்பேரவை போன்ற தொடர்களைப் பிரிக்காமல் ஒலிப்பதும், இடம்விடாமல் எழுதுவதுமே பயன் தருவனவாகும்.

## கொழுநன் தொழுது எழலாமா?

பிரித்தெழுதும்போது சில சிக்கல்கள் எழ வாய்ப்புண்டு. 'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்; பெய் யெனப் பெய்யும் மழை' (55) என்ற திருக்குறளில், கொழு நற் றொழுதெழுவாள் என்பது கடினமாக உளது. அதனால் எல்லாப் பதிப்புகளிலும் இன்று 'கொழுநன் தொழுது எழுவாள்' என்றே போடப்பட்டுளது. அவ்வாறாயின் இவள் கொழுநனைத் தொழுவதற்குப் பதிலாக அவன் இவளைக் கும்பிடுவதாக ஆகிவிடும். அவளும் தெய்வம் தொழ மாட்டாள்; தன்னையும் முன்னதாக எழுந்த கணவன் அருகில் வந்து தொழுது அம்மா தாயே எழுந்திரு என்று கெஞ்சிய பிறகே எழுந்திருப்பாள் என்று இது பொருள்படுதலை உணரலாம். 'கொழுநற்றொழுது' என்றால்தான் கொழுநனைத் தொழுது என்று ஆகும். இத்தகைய இடங்களில் புணர்ச்சி கடுமையாக இருப்பதால், கொழுநன், தொழுது என ஆங்கிலத்திற்போல மேற்குறியிட்டு எழுதலாமா என்று சிந்திக்க வேண்டும்.

## பிரித்துப் பழகிவிட்ட இடங்கள்

செய்யுளிலும் உரைநடையிலும் நாம பல சொற்களைப் பிரித்துப் பழகிவிட்டோம். அதுவும் நல்லதுதான். ஒண்டொடியை ஒண்தொடி என்றும், மென்றுகிலை மென்துகில் என்றும் எண்டிசையை எண்திசை என்றும் இவ்வாறே பிரித்துத் தெளிவு பெற்றவை பலவுள.

அதற்காக ஒள்ளெரியை ஒள்எரி எனலும் வள்ளிதழை வள்இதழ் எனலும் வலிந்து பிரிப்பது போல் இல்லையா? உச்சரிக்கும் போது, இயல்பாக ஒரு சொல்போல் ஒலிக்க வில்லையா?

அகனிலம் - அகல் நிலமாகட்டும்; வானிணம் - வால் நிணமாகட்டும். எனவே பிரித்தலும் சேர்த்தலும் காலமும் இடமும் நோக்கி ஊடலும் கூடலும் போல் நிகழ வேண்டியவைகளாக உள்ளன. ஊடலும் பின்பு ஒருகால் கூடுவதற்கே என்ற நிலைமையும் உளது.

## சேர்த்தெழுதுதல்

ஒரு காலத்தில் ஏட்டுச்சுவடி போன்றவற்றில் முதல் எழுத்திலிருந்து தொடங்கி, சொல், சீர், அடி, எதனையும் பிரிக்காமல் நீளமாக எழுதிக் கொண்டே போகும் பழக்கமிருந்தது. ஓர் அடி எங்கு தொடங்குகிறது. எங்கு முடிகிறது என்று தெரியாது; ஒரு சொல் அல்லது சீர் எது எனக் கண்டுபிடிக்க நேரமாகும். இதனால் பெரிதும் செய்யுள் மொழியாகவே பல நூற்றாண்டுகள் வளர்ந்த தமிழில் ஓசை, சந்தம் காரணமாகப் புணர்ச்சி அமைப்புகள் கூடின. சொற்களைக் கூட்டிக்கூட்டிச் சேர்த்துச் சேர்த்துக் கூறும் மரபே - பழக்கமே அன்று மிகுதி. வாழ்நாள் வாணாளாகும்; தோள் நலம் தோணலமாகும். வாழ்நன் வாணன் ஆனான். முள்தீது என்பது முஃடீது; கல்தீது என்பது கஃறீது - இப்படி ஆயின. நாழியும் உரியும் அன்றைய அளவைப் பெயர்கள்; இவை இணையும் போது நாடுரி ஆயின. பனை+அட்டு=பனாட்டு ஆயிற்று. நெடுங்காலப் பேச்சு வழக்கினாலும் செய்யுளுள் சந்தமுறத் தொடுக்கும் பழக்கத்தினாலும் புணர்ச்சி விதிகளின் எண்ணிக்கை கூடிவிட்டது. கம்ப ராமாயணத்தில் கடறாவு படலத்தைப் பார்த்ததும் பலர் திகைத்ததுண்டு. கடல்தாவு படலம் என்றால் அன்று கல்லாதாரும் விரும்புவதில்லை. நக்கீரர் திருமுருகாற்றுப்படையில்

"முட்டாட்டாமரைத் துஞ்சிவைகறைக் கட்கமழ் நெய்தலூதி" (72-74) என்று வண்டினத்தைப் பற்றிக் கூறுகிறார். 'முட்டாள் தாமரை' என்று ஒருவகையுண்டு என்றால் சிலருக்குக் கோபம் வராதா? முள்தாள் தாமரை, கள்கமழ் நெய்தல் என்று கூறினால் உடனே விளங்குகிறது. மாணிக்கவாசகர் 'வாட்டடங்கண் மாதே வளருதியோ' (திருவா.155) என்றார். வாள் தடங்கண் என்றால்தான் இன்று, இவ்வளவு அழகான கண்கள் உறங்குவதற்குத் தானா பயன்பட வேண்டும் என்ற பொருளுணர்ச்சி உடனே மனத்திற்குப் படுகிறது.

உலகில் பேச்சிலும் இப்படி ஒட்டி வழங்கி, ஏட்டிலும் கூட்டி எழுதிச் சொற்களைப் புணர்த்தெழுதும் பழக்கத்தை இன்று நாம் கேலி செய்ய முடியாது. அன்றைய சூழல், பின்னணி, பழக்கம், மரபு, போக்கு அப்படி. இம்மரபுகளுள் பல பழைய இலக்கியப் படிப்பிற்குத் தேவைப்படும்; சிலவற்றை இன்றும் நாம் கைவிட்டு விடுதல் இயலாது. எனவே இன்று இடமறிந்து, காலமறிந்து செயற்படும் கட்டத்தில் நாமிருக்கிறோம்.

இன்று பிரித்தெழுதும் மனப்பான்மை கூடிவரும் காலம். காலப்போக்கைக் கேலி செய்து பயனில்லை. நெறிப்படுத்த வேண்டுமேல் நூற்றுக்கணக்கான உதாரண வாய்பாடுகளுடன் மாணவர்களையும் மக்களையும் தாமே உணருமாறு தூண்ட வேண்டும்.

## பிரித்தெழுதினால் தெளிவுபடும் இடங்கள்

முன்பு சேர்த்து எழுதிய போது சிக்கல்ளே இல்லை என்று கூற இயலாது, 'பொன்னன்று' என்பதைப் பொன் அன்று என்றும் பிரிக்கலாம்; பொன் நன்று என்றும் பிரிக்கலாம். 'மண்ணன்று' என்பதும் அவ்வாறே. மண்+அன்று, மண்+நன்று. இதுபோல் பிரித்தெழுதுவதால் சொல் தெளிவும் பொருள் தெளிவும் ஏற்படுகிறது. எனவே சேர்த்து எழுதுவதே `இலக்கணமெனவும் பிரித்தெழுதுவது தவறெனவும் கருதும் மனப்பான்மை நீங்க வேண்டும். நமக்கு வேண்டியது பொருள்தெளிவே. சொல்வார் சொல்வனவும் எழுதுவார் எழுதுவனவும். அவற்றைக் கேட்பார், படிப்பார்க்குப் போய்ச் சேர வேண்டும். எனவே 'தெளிவு' ஒன்றே அளவுகோலாதல் தக்கது.

'இவ் ஆணை பிறப்பிக்கப்பட்டது' என்று கூறினால் என்ன? இவ்வாணை, இவ்விடம், இவ்வாய்வு, இவ்வறிஞர் என்றே எழுத வேண்டுமெனக் கட்டாயப்படுத்த வேண்டாம் இவ்இடம், இவ்விடம் என இரு பொருள் தருவதால், பிரிப்பது தெளிவு தருகிறது. இவ்வாய்வு வேறு, இவ் ஆய்வு வேறுதானே. இவ் அறிஞர், இவ் வறிஞர் ஆதல் கூடாதன்றோ? எனவே இடம் நோக்கி இவ்வாறு ஆளும் போது சிலசமயம் பிரித்தெழுதுதலையும் இன்று ஏற்கலாம். இவ்வளவு, இவ்வாறு, அவ்வூரில், அவ்வளவு, எவ்வளவு போன்ற அனைத்தையும் பிரிக்க வேண்டுமென முந்துதல் இடரை மிகுவிக்கும். எனவே இடம் நோக்கிப் பிரிப்பதைக் குற்றம் சொல்ல வேண்டாம்; அதற்காக எல்லாவற்றையும் பிரித்துவிடவும் வேண்டாம். ஒருமுறை, இருமுறை சொல்லிப் பார்த்தால் உண்மை விளங்கிவிடும்.

'இவ் அறிஞர்' எனலாம்; அதற்காக 'எவ் ஆறு' எனலாமா? ஆகவே எவ்வாறு பிரிக்க வேண்டும் என்பதை இடம் நோக்கிச் செய்யுமாறு பழக்கப்படுத்துதல் வேண்டும்.

### பிரித்தெழுதுதல்

இன்று அச்சு யந்திரம் வந்தது முதல் நம் நூல்களைப் பதிப்பிக்கும் முறையில் புரட்சிகரமான புதுமை தோன்றி நிலைத்து விட்டது. பாடல்களை அடிபிரித்துப் பதிப்பித்தோம்; அடிகளுள் சீரைப் பிரித்தும் சில சமயம் சொற்களையும் பிரித்தும் பொருள் தெளிவுக்காகப் பதிப்பிக்கலானோம். ஏட்டுச்சுவடியில் அறு சீர் விருத்தம் என்பதைப் படித்துத் தான் கண்டுபிடிக்க முடியும்; இன்றைய அச்சுப் புத்தகத்தில் கண்ணால் பார்த்ததும் கண்டு கொள்ளலாம். பொருள் விளங்காமல், சொல் தெளிவுபடாமல், சீர் பிரிக்க முடியாமல் பதிப்பிக்கும் பழக்கம் இன்று எடுபடுவதில்லை. இதனால் உலக வழக்கில் பேசும்போது கூட்டி உச்சரித்தவற்றைக் கூட இன்று நிறுத்தியும் பிரித்தும் தனித் தனிச் சொற்களாகப் பேசும் மனப்பழக்கம் ஏற்பட்டு விட்டது. செய்யுளுள்ளும் சீர்களைப் பிரித்துப் பாடுதல், சொற்களைத் தெளிவுறப் பிரித்து ஒலித்தல், ஒரு பாடலைக் கேட்டதுமே அதனை இன்ன பா வகையெனப் பிரித்துணமாறு அதனைப் பாடுதல் போன்ற பழக்கங்கள் வளரத் தலைப்பட்டுவிட்டன. ஆயினும் எல்லாவற்றையும் அக்கக்காகப் பிரிக்கும் பழக்கமோ, பொருளுணர்ச்சி கெடுமாறு பிரிப்பதோ வரவேற்கத்தக்கதன்று.

எனவே எதை எவ்வாறு பிரித்தெழுத வேண்டும் அல்லது சேர்த்தெழுத வேண்டும் என்பதற்கே இன்று தனி இலக்கணம் வகுக்கலாம் என்ற நிலை உளது.

நம் முன்னோர்கள் ஒரு சொல்லின் அசைப்பகுதிகளில் நாம் எதற்கு அழுத்தம் கொடுக்கிறோமோ, அதற்கேற்ப அச்சொல் பிரிக்கப்பட்டு, வேறுபட்ட பொருள்களைத் தரும் என்பதை மட்டும் விளக்கிப் போயிருக்கிறார்கள். 'செம்பொன் பதின்தொடி' என்பதில் முதல் அசையில் அழுத்திச் சொன்னால் 'செம்புஒன்பதின் தொடி' எனப் பொருள்படும். முதலீர் அசைகளையும் அழுத்திச் சொன்னால் செம்பொன் பதின்தொடி என்றாகும்.

## 'விளக்குமாற்றால் விளக்குவோம்'

தமிழில் சந்திப் புணர்ச்சி கடினமானது என்பதற்கு ஒரு சான்று காண்போம். பரிதிமாற்கலைஞர் எனப் புகழ் பெற்ற வி.கோ.சூரியநாராயண சாத்திரியார் கல்லூரி மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒரு குறும்புக்கார மாணவன் இடக்கரான கேள்வி யொன்றை வகுப்பில் கேட்டான். ஆசிரியரைப் பார்த்து மாணவர்கள் சிரிப்பார்கள் என அவன் எதிர்பார்த்துக் கேட்ட கேள்வி அது. சாத்திரியாருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அதை அவர் அடக்கிக் கொண்டு, 'உனது வினாவிற்கு இப்போது விடையளிக்க இயலாது. பிறகு உனக்கு அதை விளக்குமாற்றால் விளக்குவோம்' என்றார். மாணவர்கள் கேள்வி கேட்ட மாணவனைப் பார்த்து நகைக்கும்படி ஆயிற்று. அம்மாணவனும் அன்றிலிருந்து அத்தகைய பழக்கத்தை விட்டுவிட்டான், விளக்குமாறு என்பதை விளக்கும்+ஆறு என்றும் பிரிக்கலாம்; விளக்கும்+மாறு என்றும் பிரிக்கலாம்.

ஆங்கிலத்தில் உச்சரிப்பு முறை மிக நுட்பமாகச் செயற்படுகிறது. 'கான்டக்ட்' (Conduct) என ஒலித்தால் 'நடத்தை' என்று பொருள்படும். அதனையே 'கண்டக்ட்' என ஒலிக்கும்போது, வினைவடிவமாகி ஒன்றை நடத்துவதைக் குறிக்கும். தமிழில் புணர்ச்சி அல்லது சந்தி முறை மிக நுட்பமாகச் செயற்படுகிறது. எனவே ஆங்கிலத்தில் உச்சரிப்புக்கு எவ்வளவு முயற்சியெடுத்துப் பழக்கப்படுத்திக் கொள்கிறோமோ, அந்த அளவு தமிழில் சந்திப் புணர்ச்சிகளை முயற்சியெடுத்துப் பழகிக் கொள்ள வேண்டும்.

இவை மொழிகளின் குறையன்று, நிறையென்பது பழகினால் விளங்கிவிடும்.

## 15

# பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும்

### 'வளியும் சூறாவளியும்'

மொழி என்பது ஓடிச்செல்லும் ஆற்றைப் போன்றது. அதன் உயிர் வழக்காறு தான். ஒரு சொல்லைப் பயன்பாட்டு நிலையில், அதனுடைய செலாவணியை வைத்துத்தான் மதிப்பிட முடியும். செல்லுபடியாகிறதா? - அதாவது நாம் சொல்வது கேட்பவருக்குப் போய்ச் சேருகிறதா - விளங்குகிறதா என்பதுதான் முக்கியம். செல்லாத காசையும் செலுத்திவிடுவதுபோல் சிலசமயம் நேர்வதுண்டு. ஆயினும் அனைவர்க்கும் ஏற்புடைய ஒன்றே நிலை பெறுகிறது. தமிழைப் போல் பல நூற்றாண்டுகளில் பல வளர்ச்சிப்படிகளைக் கண்ட மொழியில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. இம் மாற்றங்களைக் கண்டு பலர் வருத்தப்படுவார்கள். வாழும் மொழிக்கு இவையெல்லாம் இயல்பு எனக் கருதி மகிழ வேண்டும். மாற்றங்கள் முன்னேற்றத்திற்கு அறிகுறியாதலும் உண்டு என்பதை மறக்கக்கூடாது.

'வளி என்பது காற்று. 'வளி முதலா எண்ணிய மூன்று' (குறள் 941) என்னும்போது 'வளி' என்பதற்கு, மாணாக்கர்கட்குப் பொருள் சொல்லவேண்டும், ஆனால் அதே குழந்தைகள் 'சூறாவளி' என்று, காற்றின் வேகம் கண்டு கூவிடக் காணலாம். சுழன்றடிக்கும் காற்றைப்போல் பொருள்களை நிலை தடுமாறச் செய்வதைச் 'சூறையாடினர்' என்கிறோம். வளி என்ற. சொல் 'சூறாவளி'யில் இன்றும் செலாவணியிலுளது அல்லவா?

### ஐம்பூதங்களும் உடம்பும்

திருக்குறள் வளி முதலாகக் கூறும் மூன்று 'வளி, நெருப்பு, நீர்' என்பன.

நம் உடம்புக்கும் ஐம்பூதங்களுக்கும் உள்ள தொடர்பை இக்குறள் உணர்த்துகிறது. காற்று, நெருப்பு, நீர், மண், வானம் என்ற ஐம்பூதங்களில் மண்ணாலான இவ்வுடம்பில் வானமாகிய உயிர், உடல் முழுவதுமாய் நிறைந்திருக்கிறது. ஏனைய காற்று, நெருப்பு, நீர் என்பன மிகினும் குறையினும் நோயுண்டாகிறது. அவை

முறையே வாதம், பித்தம், சீதம் (குளிர்ச்சி) என்ற நோய்களாகக் குறிக்கப்படுகின்றன. 'மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர், வளி முதலா எண்ணிய மூன்று' (941) என்றபடி வளி (வாய்வு), நெருப்பு (பித்தம்), நீர் (சீதம்). வளி என்பது வாயு. அதைப் பேச்சில் 'வாய்வு' என்பர். 'வாய்வு முற்றினால் வாதம்' என்பது உலக வழக்கு. 'வளி'க்குப் பொருள் தெரிந்தால் இவை யாவும் விளங்கிவிடும். கைநாடி பார்ப்பது என்பது மூன்று நரம்புகளின் வழி இவற்றின் ஏற்ற இறக்கத்தை ஆராய்வதேயாகும்.

### தாவிலையா?

உடல்நலம் குறைந்தவர்களைப் பார்த்தால் இப்போ 'தாவிலையா?' என்று கேட்பது வழக்கம். இதைச் சிலர் மாற்றித் தேவலையா? என்றும் வழங்குவதுண்டு. தேவலைக்கு மூலச் சொல் எங்கும் காணப்படவில்லை. தா-குற்றம், பழுது, கேடு. இப்போது அவ்வளவு கேடாக இல்லையே? நோயாக இல்லையே? என்று வினவிக் கேட்பதுதான் அது. மலேரியாச் சுரம், காய்ச்சல், சளி, தலைவலி என்று பிணிவாய்ப்பட்டவரைப் பார்த்து 'இப்போ தாவிலையா' என்றால், இப்போது ஒன்றும் பிரச்சினை இல்லையே என்று கேட்பதாகப் பொருள். 'தாவில் ஊழி' (முருகு. 164), தாவில் கொள்கை (தொல் : 73), தாவில் விளக்கம் (குறள் 853), தா இன்று (புறம். 373), தாவின்று கழிக (நற். 271) என இவ்வாறு தா+இன்மை பற்றியே பல தொடராட்சிகள் காணப்படுகின்றன. தாவிலை, தாவிலையா என்ற வழக்காறுகள் தா இன்மை பற்றிய தொடராட்சிகள் காணப்படுகின்றன. தாவிலை, தாவிலையா என்ற வழக்காறுகள் தா இன்மை பற்றிய பழந்தொடர்கள் போலவே புழங்கக் காண்கிறோம். தா-இன்று, தா-இலையா என இரண்டாம் நூற்றாண்டிற்போலவே இருபதாம் நூற்றாண்டிலும் இத் தொடர் வழங்குகிறது. இப்படி ஒரு தொடர் தொன்றுதொட்டு, மாறாமல் வழங்கி வருவதைப் பார்த்தால் தாவிலையே என்று பாராட்டத் தோன்றுகிறது.

### பரிதலும் புரவியும்

'அவன் எங்கே பரிஞ்சிட்டான்' என்பர். 'எங்கேயும் பரிஞ்சிடாதே' என்றால் ஓடிவிடாதே என்று கூறுவதாகும். பரிதல்-விரைந்து ஓடுதல். காலே பரிதப்பினவே என்றால் நடைவேகம் தடுமாறுதல்.

வேகமாக ஓடும் குதிரையும் பரி எனப்பட்டது. ஆனால் ‘பரியறது’ என்றவுடன், ஓடுவதை எண்ணும் நாம், பாடலில் ‘பரி’ என வந்தால் ஒரு கணம் திகைக்கிறோம். மாணவர்களுக்கு, பரி-குதிரை எனப் பொருள் சொல்ல வேண்டியிருக்கிறது.

‘நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்’ என்பது பட்டினப் பாலை (185), கடல் வழியாக இறக்குமதி செய்யப்பட்ட நிமிர்ந்த பெருமிதமான ஓட்டத்தையுடைய குதிரைகள் குறிக்கப்படுகின்றன என்பதை உரையைப் படித்து விளக்க வேண்டியிருக்கிறது. திருவிளையாடல் புராணத்தில் நரி பரியாக்கிய படலம் வருவதால், சிலர் இச்சொற்பொருளை எளிதில் அறிவர். அதுபோல் ‘புரவி எடுப்பு’ நம்முடைய ஒவ்வொரு கிராமத்திலும் அய்யனார் கோயில்களில் நடைபெறத்தான் செய்கின்றது. ஆனால், அங்கே புரவி-குதிரை என யாருக்கும் பொருள் கூறி விளக்குவதில்லை. குதிரைகளை மண்ணால் செய்து எடுத்து விடுவதை அவ்வாறு தம்மை அறியாமலே படிப்பறிவில்லாத கிராமத்து மக்கள் கூறுகின்றனர். உலக வழக்கிற்கும் இலக்கிய வழக்கிற்கும் உள்ள உறவை, நெருக்கத்தை இவ்வாறு நூற்றுக்கணக்கான சான்றுகளின் வழி விளக்கலாம். அதன் மூலம் இவ்விரு வழக்குகளுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கலாம். புதிய இலக்கண நூலில் இதனை ஒரு தனி இயலில் விளக்க வேண்டும்.

## நிரம்பவே ரொம்பி விட்டது!

‘தொட்டியிலே தண்ணி ரொம்பிவிட்டது’ என்கிறோம். ‘ரொம்ப நல்ல பழம்’ என்று கனிகிறோம். நிரம்ப என்பதைப் பேசும்போது இப்படி மாற்றிவிடுகிறோம். மாணிக்கவாசகர், இறைவனை ‘நிரம்ப அழகியர், நித்த மணாளர்’ என்பார். என்னதான் நினைவுபடுத்தினாலும் நீங்கள் ‘ரொம்ப நல்லாயிருக்கு’ என்று தான் மனம் மகிழ்ந்து கூறுவீர்கள். எழுதும் போது ‘நிரம்ப’ என்றே எழுத வேண்டும்.

## அராவு, இரவு

இதைப்போலத்தான் ‘அராவு’ என்பதை ‘ராவு’ என்கிறோம். இரவு, இரா என்பதை ராப்பொழுது போகட்டும் என்று பேச்சில் பயன்படுத்துகிறோம். என்ன இருந்தாலும் இந்த ‘ரா’ முந்திரிக்கொட்டை போல முந்திக் கொள்ளும் பழக்கம் உள்ளது.

கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்களை முன்பு 'ராவுவதாக'க் கிண்டல் செய்தார்கள். இன்று 'அறுப்பதாக'க் கேலி பேசுகிறார்கள். அராவுவதும் அறுப்பதும் அறிவுக்கூர்மைக்காகத் தானே?

**தொட்டி மகிழ்ந்ததைப் பார்த்தீர்களா?**

'தொட்டியிலே தண்ணீர் மகிந்து கொட்டுது' என்கிறோம். 'பால் பொங்கி மகிந்து வழியுது' என்கிறோம். நெய் வாங்கும்போது, ஆழாக்கை நிரப்பியபின், 'மகிர ஊத்து' என்கிறோம். 'என்ன சார், மேலும் மேலும் ஊத்திக்கிட்டே இருக்கீங்க, மகிந்து கொட்டுது' என்று சொல்கிறோம். ஆம் - உயிரற்ற - அஃறிணைப் பொருள் கூட மகி(ழ்)ந்து கொட்டுகிறது.

உணர்ச்சி (இன்பம்) மிகுந்து பொங்கி வழிவதை மகிழ்ந்து என்பதுபோல, உணர்ச்சியனைய நீர்ப்பொருள் - திரவம் நிரம்பி வழிவதையும் 'மகி(ழ்)ந்து வடிவதாகக்' கூறுகிறோம். மனமும் உணர்ச்சிவயப்பட்டு மகிழ்ந்து வடிகிறது; அளக்கும் படியும் நீர் முதலியவை நிரம்பிவிடவே, மகிழ்ந்து வடிகிறது! எவ்வளவு பொருத்தமான சொல்லாட்சியாக உளது எனச் சிந்தித்துப் பார்த்தால் மனம் மகிழும்! குளிர் பானத்தைக் குவளையில் ஊற்றி நிரப்பினால், அதுவும் மகிழும் - மகிழ்ந்து (மகுந்து) வடியும்! பொங்கல் பொங்கி மகிழ்ந்து வடிந்தால்தான் 'பால் பொங்கிற்று' என்று நாமும் மனம் மகிழ்வோம்! உலகவழக்கில் இவ்வளவு அரிய சொல் வழங்குவதைக் கேட்டதும் உங்கள் மனம் பொங்கி மகிழ்ந்திருக்குமே?

**புதிய வழக்கும் பழைய மரபும்**

சிலர் புதுமையை மட்டுமே வரவேற்று, பழைமையை அறவே மறக்கும் - மறுக்கும் கட்சியினர். மற்றும் சிலரோ பழைமையை விட்டு வெளியே வராதவர்கள் - வரமறுப்பவர்கள்.

தமிழ்மொழி இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட வளர்ச்சி நிலை கண்டது. அதில் எத்தனையோ ஏற்ற இறக்கங்கள், மாற்றங்கள். அவை பலவற்றையும் தெரிந்து கொண்டால்தான், தமிழைப் பழகிக் கொண்டதாக ஆகும்.

தமிழ்மீது பற்றுடையவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களில் எத்தனை பேர் ஆர அமர உட்கார்ந்து, தமிழ் வழக்காறுகளைச் சிந்திக்கிறார்கள் என எண்ணினால் மிகச் சிலரே மிஞ்சுவார்கள்.

ஒன்றை எண்ணிப் பார்ப்போம்.

மதுரையிலிருந்து மேற்கே தேனி போகும் வழியில் முதலில் வரும் கிராமம் பிராட்டிபற்று! இன்று அது விராட்டிப் பத்து ஆகிவிட்டது. அடுத்துவரும் சிற்றூர் அச்சன் பற்று. இன்று அது அச்சம்பத்து ஆகியுள்ளது. பற்று என்பது வயலைக் குறிக்கும் பழைய சொல். மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலை மையமாகக் கொண்டது மாமதுரை. இக்கோயிலுக்கு இறையிலி நிலங்களாக விடப்பட்ட கிராமங்களே பிராட்டிபற்றும் அச்சன்பற்றும். பெருமாட்டி, பிராட்டி எனத் திரியும். அச்சன் - அத்தன் - தலைவன். அது சிவபெருமானைக் குறிக்கும்.

மதுரைக்கு வடக்கே தெற்குத் தெரு, கீழத்தெரு, வடக்குத் தெரு, மேலத்தெரு என்ற கிராமங்கள் உள்ளன. அவை மீனாட்சி கோயிலில், தேர்த் திருவிழாவின்போது திசை தோறும் தேரிழுப்பவர்க்கு மானியமளிக்கப்பட்ட ஊர்களின் பெயர்கள். மதுரையிலும் ஆடிவீதி, சித்திரைவீதி, ஆவணிமூலவீதி, மாசி வீதி என்பன திருவிழா நடைபெறும் மாதங்களால் பெற்ற பெயர்கள். இவற்றோடு வைத்துச் சிந்தித்தால் பிராட்டி பற்று, அச்சன்பற்று என்பனவும் அக்கோயிலோடு தொடர்புடையவை என்பது உறுதிப்படும்.

### வாயிலும் வாசலும்

மதுரையைச் சுற்றி முன்பு பெரிய பெரிய கோட்டை வாயில்கள் இருந்திருக்க வேண்டும். "கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன், மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு" (23 : 182-183) என வருந்திக் கொண்டே கண்ணகி சேரநாடு நோக்கி உண்ணாமல் உறங்காமல் நடக்கத் தொடங்குகிறாள். இன்றும் கீழவாசல், மேலவாசல் என்ற பெயர்கள் நிலைபெற்றுள்ளன. அவ்வாறே தெற்குவாசலும் வடக்கு வாசலும் உள்ளன. வாயில் தான் வாசல் ஆகிவிட்டது. நெடுநல்வாடை "வென்றெழு கொடியொடு வேழம் சென்று புக, குன்று குயின்றன்ன ஓங்குநிலை வாயில்" (87-88) என்று குன்றம் போன்று நெடிதோங்கிய வாயில் பற்றிக் கூறுகிறது. இதனால் மதுரைக்கு ஆலவாயில் (மிகப் பெரிய வாயில்) எனப் பெயர் ஏற்பட்டது. பின்னர் அதற்குப் பல்வேறு பொருள் கொண்டு, புராணம் பாடி, அதன் புகழை வளர்த்தமையே அதன் பழைய சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, இந்த இடங்களை அறிந்து, நான்கு வாயில்களை

எழுப்பியிருந்தால் இளங்கோவடிகள் கூறிய வரலாற்றுச் சிறப்பைப் பலரும் நினைவுகூர்ந்து மகிழ்ந்திருப்பர். இன்று நகர்ப்புறத்தே வாயில்கள் எழுப்பப்பட்டு வேறு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. மதுரைக்கும் வாயிலுக்கும் உள்ள தொடர்பு நீங்க வில்லை என்பதை இது காட்டுகிறது.

## யாட்டு — யாண்டு — ஆண்டு

சூரியன் பன்னிரண்டு திங்களில் ஒருமுறை மேடராசியில் (மேஷம் - ஆடு) புகுவதை முன்னிட்டு இளவேனில் - வசந்த விழா கொண்டாடப்பட்டது. இதனை வைத்து ஆண்டுக்குப் பெயரிட்டனர். யாடு, யாட்டு என்றே மிகமிகத் தொன்மையான காலத்தில் குறிக்கப்பட்டது. நம் உரையாசிரியர்கள் ஒரு பெண் பன்னீராட்டைப் பிராயத்தளாக இருக்கும்போது மணம் முடிக்கும் முன்னைய சமூக மரபினைக் குறிப்பிடுவர். யாட்டு என்பதே மூக்கொலி பெற்று யாண்டு என ஆயிற்று. 'யாண்டு' ஆண்டு என மாறியது.

பரத்தை வீடு சென்று அங்கேயே தங்கிவிட்டு, எப்போதோ ஒருநாள் வீடு தேடி வருபவனிடம் தலைவி கூறுவதாக வரும் கலிப்பாடல் ஒன்று 'ஓர் யாட்டு ஒரு கால் வரவு' (71-26) எனக் குறிக்கிறது. ஓர் ஆண்டிற்கு ஒரு முறைமட்டும் வருதல் எனப் பொருள்படும். இதில் 'யாட்டு' என்ற சொல்லாட்சியைக் காணலாம். யாண்டு, ஆண்டு எனவரும் சொற்களையும் இலக்கியத்தில் மிகுதியாகக் காண்கிறோம். ஓராண்டுக்காலம் பொறுப்பிலிருந்த வாரியங்களைக் கல்வெட்டுகள் 'ஆட்டை வாரியம்' என்று அழைக்கின்றன.

இன்று சாதாரணப் பேச்சுவழக்கில் 'ஏழரை நாட்டுச் சனி' என்கிறார்கள். சனி திசைக்குரியன ஏழரை ஆண்டுகள். அதனை மூன்று இரண்டரை ஆண்டுகளாகப் பகுத்துப் பயன் கூறுவர் சோதிடர். 'ஏழரையாட்டைச் சனி' என்பதே இங்ஙனம் மருவி வழங்குகிறது. மிகத் தொன்மையான காலந்தொட்டு வழங்கிவரும் இத்தொடரால் தமிழரின் வான நூற்புலமை, சோதிடப் புலமைகளை அறியலாம். முக்கியமாக 'யாட்டை' என்ற சொல்லாட்சி, இன்றும் உலக வழக்கில் 'நாட்டு' எனத் திரிபுற்று வழங்குவதால், எளிதில் உணரப் படாமல் போகிறது. சனி தன்னைக் குறிக்கும் தொடரையும் இங்ஙனம் பிடித்துக் கொண்டு ஆட்டுகிறது; ஆனாலும் தொடர்

வழக்கிறவாமலும் காப்பாற்றுகிறது. சோதிடம் சரி தானே! ஞாயிற்றின் செலவு அடிப்படையில் தை முதல் நாளே, தமிழாண்டுப் பிறப்பு. ஆயினும் பெயர் இளவேனில் மேட இராசியை வைத்து வழங்கப் பெற்றது. மாதத் தொடக்கம் வேறு ஒரு நாள் மீனாக இருந்தாலும், மதியத்தை வைத்தே மாதம் என்பதை இதனோடு ஒப்பிடலாம்.

## முப்பது — நுப்பது

முப்பது என்ற எண்ணை மக்கள் உச்சரிக்கும்போது 'நுப்பது' என உச்சரிக்கின்றனர்.

தமிழகத்தின் பல பகுதிகளில் 'நுப்பது' என உச்சரிக்கும் பழக்கம் இருக்கிறது. முப்பது என்பதுதான் பொருட் பொருத்தமுள்ள முறையான வழக்கு. மூன்று + பத்து - முப்பதாகிறது. மூன்று+தமிழ் - முத்தமிழ் ஆவதும் மூன்று + மொழித் திட்டம் - மும்மொழித் திட்டம் ஆவதும் காணலாம். ஆனால் மூன்று பொருளை முப்பொருள் என்னும் அதே மக்கள் முப்பதை மட்டும் நுப்பதாக்கி விடுவர். ஒலி மாற்றம் பற்றி இதற்கொரு காரணத்தைச் சொல்லிவிடலாம். என்றாலும் எல்லா இடத்தும் அவ்வாறு நிகழாமையைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## பொருள் விளங்குவதற்கே மொழி

காலப்போக்கில் நம் குழந்தைகள் படிக்கும்போது 'முப்பது' என்றால் எளிதில் பொருள் விளங்கிக் கொள்வார்கள். அவர்களுக்கு முத்தமிழ், முப்பொருள், மும்மொழி என்ற தொடர்கள் எல்லாம் ஓர் அமைப்புடையவையாய்த் தோன்றி, இவை போன்ற பலவற்றைத் தாமே பொருள் உணரும் ஆற்றல் வளரும். முப்பதில் முதலில் நிற்பது மூன்று என்பதன் மாற்றமே எனச் சொல்லி விளக்குமுன், தானே மனம் உணரும். பலவற்றை நமக்கு விளக்கிச் சொல்லத் தெரிவதில்லையே தவிர நம் மனம் உணர்கிறது. மொழியமைப்பே எளிதில் பொருள் விளங்குமாறு அமைந்தவற்றில், தமிழ்மொழியும் ஒன்று.

## ஒரு பெரிய போராட்டம்

மனிதன் இரண்டு அடிப்படைக் காரணங்களால் மொழியைச் சிதைத்து வழங்குகிறான். முதலாவது அறியாமை; மேலும் சோம்பல், சோர்வு, இகழ்ச்சி முதலிய குணங்கள். இரண்டாவது உடலில் உள்ள

ஒலியுறுப்புக்களின் செயற்பாடு. வெட்கத்தை வெக்கம் ஆக்கும்போது, நாவின் முயற்சி குறைவதையும் க கரத்திற்கு ஏற்ப ட கரம் திரிவதால் எளிதாவதையும் ஒலித்துப் பாருங்கள்.

நாம் செந்தமிழாகப் பேசும்போது ஒலியுறுப்புகளுக்கு ஆட்படாமல், பொருள் உணர்ச்சிக்கு முக்கிய இடம் கொடுத்து, சற்று நிதானித்துப் பேச வேண்டியிருக்கிறது. நில் கவனி போ என்று வழித்தடங்களில் எழுதி வைத்திருக்கப் பார்த்திருப்பீர்கள். போகிற போக்கில் போவது வேறு. கண்ணை மூடிக்கொண்டு போய்ச் சில சமயம் விபத்திலும் விழுவது போன்ற பேச்சு வழக்கும் உண்டு. அதை விடுத்து நின்று கவனித்துப் பிறகு போவது போன்ற நல்வழக்கை நாடுவது, மொழிக்கு மட்டுமல்லாமல் நமக்கும் நன்மை தரும்.

ஆனால் தமிழில் அதன் தொடக்க காலத்திலிருந்து பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்கும் ஒரு போராட்டம் - ஓர் ஊடாட்டம் நடந்து வந்திருக்கிறது. அதில் மக்களுக்கும் அறிஞர்களுக்கும் இடையே கூட ஒரு 'இழுபறிப் பந்தயம்' (Tug of War) நடந்து வந்திருக்கிறது. இதற்கு ஒரு பெரிய மொழி வரலாறே எழுதலாம். இதை உடனே பலர் தமிழ் மொழிக்கு ஏற்பட்ட குறை, இழுக்கு என்றெல்லாம் எண்ணத் தொடங்குவார்கள். அஃது உண்மையன்று. தமிழில் 'மொழியுணர்வு' - மொழி பற்றிய மனித உணர்வு நந்தா விளக்குப்போல் அவியாமல் இருப்பதற்கு இப்போராட்டம் ஒரு காரணமாகும். தமிழின் இளமை இங்ஙனம் நினைப்பூட்டப்பட்டவாறு என்றும் இருக்கிறது.

### சமனிலைப்பாடு

தமிழில் பேச்சு வழக்குக்கும் எழுத்து வழக்குக்கும் இடையே இவ்வாறு ஒரு சமநிலைப்பாடு, (Balance), தொன்று தொட்டுப் பேணப்பட்டு வந்திருக்கிறது. நம் இலக்கணத்தில் செம்பாதிக்கு மேற்பட்டவை, இங்ஙனம் சமநிலைப்பாட்டை உறுதிப்படுத்த வந்தனவே. இந்த வகையில் நாம் இன்னும் நிறையப் பார்க்க வேண்டும். ஒருவகையில் நாம் தமிழ்மொழியின் 'வாழ்க்கை வரலாற்றை'ப் படித்துக் கொண்டிருக்கிறோம்.

முகடு என்ற சொல்லைப் பேச்சு வழக்கில் 'மோடு' என ஆளத் தலைப்பட்டார்கள். எழுத்து வழக்கிலிருந்த 'பொழுது', பேச்சில் 'போது' ஆனது. அ+இடை என்பதை அவ்விடை என்னாமல் 'ஆயிடை' என்று, வேண்டுமென நீட்டிப் புணர்த்து எழுதினார்கள். இதனைச் செய்யுளில், இனிமை கருதி நீட்டப்பட்டது என்று கூறுவர். ஆயினும் இவையெல்லாம் பொருள் உணர்ச்சி சிதையாத திரிபுகள் என ஏற்கப்பட்டு, எழுத்திலும் ஆளப்பட்டு, இலக்கணமும் சூட்டப்பட்டுள்ளன. எனவே "பேச்சு வழக்கை ஏற்கவில்லையா, - ஏற்கவே இல்லையா? என்றெல்லாம் விவாதிக்கக் கூடாது. 'ஏன் எற்கப்பட்டது?' எங்கு ஏற்கப்பட்டது? என ஆராய வேண்டும். அப்போதுதான் போராட்ட வரலாறும் சமநிலைப்பாடு பற்றிய முயற்சிகளும் புலனாகும்.

# 16

# மரபும் மாற்றமும்

## மரபா? அறிவா? 'கள்' விகுதி காட்டும் வழி

ஒருவரைப் பார்த்து மற்றவர் அப்படியே தொடர்ந்து செய்யும்பொழுது அது மரபாகிவிடுகிறது. அங்கே அறிவாராய்ச்சி - காரண காரியம் பின்னடைகிறது. மொழி, மரபு வழிப்பட்டது. சில சமயம் அங்கே அறிவு பிற்பட்டுவிடுகிறது. 'கள்' விகுதி பற்றி விடை இதுகாறும் முடிவாகவில்லை என்பர் சிலர். கள் விகுதியாகப் புணரும் போது ஒற்றுமிகுமிடமும் உண்டு, மிகா இடமும் உண்டு, உறழ்ந்து முடியுமிடமும் சிலஉள என்பதே முடிவாகும்.

வழுக்கள், புழுக்கள், தெருக்கள் வடுக்கள் எனக் குறிலிணையின் பின் 'கள்' வரும்போது ஒற்று மிகும். மாடுகள், ஏடுகள், வரலாறுகள், பண்பாடுகள் என நெடிலுடன் கூடிய குறிலுக்குப்பின் வரும்போது ஒற்றுமிகுவதில்லை. பட்டுத்துணி, சுக்குக்காபி என வன்தொடர்க் குற்றிலுகரத்திற்குப் பின் ஒற்றுமிகுவது போல் எழுத்துக்கள், கருத்துக்கள், பொறுப்புக்கள் என ஒற்று மிகுத்து எழுதப்படுதலே தக்கது. கதவுகள், சரிவுகள், காய்கள், தாழ்வுகள், பரிந்துரைகள் என பிற இடங்களில் எல்லாம் ஒற்று மிகுவதில்லை. எழுத்துகள், கருத்துகள் எனவும் சிலர் எழுதலாம் என்பது, கள் விகுதி பிற்காலத்ததாதலின் அதற்கு இலக்கணம் சுட்டப்படாமையால் தான். எனினும் பழையமரபுப்படி அங்கு ஒற்று மிகவே செய்யும். மறுப்புகள், பொறுப்புகள், கருத்துகள் போல் இன்னோசை கருதி வருவன உறழ்ச்சியில் அடங்கும்.

## மரபும் வளர்ச்சியும்

தமிழ் மரபு காக்கப்பட வேண்டும். தமிழ்மரபைக் காக்கும்படியான வளர்ச்சி எங்கிருந்து வரினும் ஏற்க வேண்டும். அதற்கு முன்னதாக எது மரபு என்ற உணர்வுத் தெளிவு வேண்டும். மரபு மாற வேண்டிய காலமும் சூழலும் வரும் போது பெருமை தரும் மாற்றங்களை ஏற்கவும் வேண்டும். நமக்கு வேண்டியதெல்லாம் வளர்ச்சி, முன்னேற்றம், உயிர்மை, சிறப்பு. "மரபுக்காக மரபு" என்பதெல்லாம் மரபையே உணராதவர் பிடிவாதம்.

மரபும் தனிமனிதத் திறனும் போட்டியிடும் போதுதான் புதுமைகள் பிறக்கின்றன

"பழையன கழிதல்" என்ற பவணந்தியார் வாசகத்தைக் கருதுக. எனவே இன்றைய வளருந்தமிழை மேலும் வலுவும் பொலிவும் உடையதாக்கும் திறன்களை ஏற்பதில் தவறில்லை. இன்னும், என்னைக் கேட்டால், வளரும் மொழி நம் தனி ஒருவர் கருத்துரைக்காகக் காத்திருப்பதில்லை.

அதனால் தான் நன்னூலார் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்றார். அவை காலப் போக்கிற் கேற்ப 'நீர் வழிப்படூஉம் புணைபோல்' தாமே அமைகின்றன.

## இலக்கியமா, இலக்கணமா?

இலக்கியம் முந்தியா, இலக்கணம் முந்தியா என்று கேட்டால் எள்முந்தியா, எண்ணெய் முந்தியா என்று கேட்பது போன்றது என முன்பு விளக்கினார்கள். ஆம், இலக்கியம் தான் முற்பட்டது. இலக்கியம் கண்டதற்குத்தான் இலக்கணம் இயம்பு வேண்டும்.

இலக்கியம் மட்டும் முந்தியது என்பதைவிட முன்னைய இலக்கணமும் (மரபும்) ஒரு முன்னோடியாகும்.

வேலியும் பயிரும் என்ற உவமையும் இவற்றுக்கு ஓரளவு பொருந்திவரும். உலகில் நாம் பேசும்போதும் எழுதும் போதும் எத்தனையோ புதிய மாற்றங்கள், வளர்ச்சிகள், திரிபுகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன. அவற்றுக்கு ஏற்ப இலக்கணவிதிகளும் வளரும்; மாறும்; ஆனாலும் பழைய அடிமரமாகிய மரபை எளிதில் விட்டுவிடாது தொடரவும் முயலும். இந்தப் போராட்டம் தான் மொழியின் வாழ்வாகும்: பயிர்தான் முக்கியமே தவிர - பயிருக்காகத்தான் வேலியே தவிர, வேலிக்காகப் பயிர் அன்று. பயிர் வளர்ந்து விட்டால், வேலியை உயர்த்த வேண்டியிருக்கும்; தழைத்து விட்டால் வேலியைச் சற்று விரிவுபடுத்த நேரலாம். மற்றோர் எல்லைக்குச் சென்று பயிர்தான் வேண்டும், வேலியே வேண்டாமென்றாலும் பயிருக்கு ஆபத்து நேரலாம்.

அன்றுமுதல் இன்றுவரை ஏற்பட்டுள்ளவற்றை யெல்லாம் கருதி இன்றைய தமிழுக்கும் புதிய இலக்கணம் எழுத வேண்டும். வளர்தமிழுக்கு இலக்கணம் வகுக்கும்போது முன்பு வளர்ந்த

தமிழுக்கான இலக்கணமும் தெரிந்திருப்பது நல்லது. அப்போது தான் பாதை விலகாமல் பார்த்து நடக்க முடியும்.

### வந்ததும் சென்றதும்

என்னிடம் வந்தான்; உன்னிடம் வந்தானா? வந்தான் என்பது தன்மை முன்னிலையில் மட்டும்தான் வருகிறது. அவனிடம் சென்றான் என்றுதான் கூறுகிறோம். அவனிடம் வந்தான் என்று பொதுவாகக் கூறுவதில்லை. இப்போது முருகனிடம் வள்ளி வந்தாள் என்றால் முருகனைத் தன்மையாக்கி அவனிடம் வந்து சேர்ந்ததைக் குறிப்பது போல் உளது. என்னிடம் அவன் சென்றான்; 'உன்னிடம் அவன் சென்றான்' என்று சொல்லிப் பாருங்கள், பொருள் பொருந்தவில்லை. பட்டணத்திற்கு வந்தான் என்பதிலும் பட்டணத்திற்குச் சென்றான் என்பதிலும் இன்றும் ஒரு வேற்றுமை தொனிப்பதை உணரலாம். முன்னதில் நாம் இருக்குமிடத்திற்கு வந்தான் என்பது போலவும் பின்னதில் நம்மை விட்டுப் போனது போலவும் கருத்துளது. இப்படிப்பட்ட நுட்பமான வேறுபாடுகள் கூட எண்ணிப் பார்க்கத் தக்கனவே. இல்லையா?

நம் முன்னோர் இவ்வாறு பல நுண்ணிய மரபுகளை எண்ணிப் பார்த்துள்ளார்கள்.

### ஈ என இரத்தல்

ஒருவரிடம் ஒன்றைக் கேட்கும் போது, கெஞ்சிக் கேட்கிறோம். 'அம்மாதாயீ' என்று நீட்டுகிறோம். பிச்சை எடுக்கும் போது பல்லைக்காட்டித்தான் கேட்க வேண்டியுளது. அதனால் தாழ்ந்தவன் தான் 'ஈ' என்று பல்லைக் காட்டிக் கெஞ்சுவான் என்றார்கள். தம்மைப் போன்றவர்களிடம் கேட்கும் போது அரிசிதா 'பழத்தைத் தா' என்று கேட்போம். அதைச் சமமானவரிடம் பேசும் முறை என்றார்கள். நாம் முதலாளி என்றால், வேலைக்காரனைப் பார்த்து அதைக் 'கொடு' என்று கேட்க வேண்டும். ஆசிரியர் மாணவனிடம் 'புத்தகத்தைக் கொடு' என்று கேட்பதே மரபாம்.

'ஈ' இழிந்தோன் கூற்று, 'தா' ஒப்போன் கூற்று, கொடு உயர்ந்தோன் கூற்று என்று வகைப்படுத்திய காலம் ஒன்று உண்டு. மன்பதையில் உள்ளதை எழுதுவதே இலக்கணம். இது அன்று சமுதாய ஏற்றத்தாழ்வு இருந்ததைக் காட்டுவதாய்ச் சிலர் குறைபடுவர். இன்று அவ்வேற்றுமை அறவே போய்விட்டதாம்!

நம்மைவிட உயர்ந்தவர்களிடம் 'ஈ' எனக் கேட்க வேண்டும் - பல்லைக் காட்டி, "தாயீ, அம்மா, ஐயா" என்று கெஞ்சிக் கேட்க வேண்டும்.

சமமானவர்களிடம் 'தருவீர்களா' தா, தருக, தர வேண்டுகிறேன் என்று கேட்கலாம். கீழ்நிலையிலுள்ளாரிடம் 'அந்தப் புத்தகத்தைக் கொடு, அதைக் கொடு, இதைக் கொடு' என ஏவ வேண்டும். 'சமத்துவ உணர்வு' பெருகும் காலத்தில் இம்மரபு மாறிவிடுகிறது. என்றாலும் 'கருத்து நுண்ணிழைகள்' இவற்றின் பொருளுணர்ச்சியில் இழையோடாமல் இருப்பதில்லை. மொழி வரலாறும் மொழியின் ஆற்றலை உணர்த்த வல்லதன்றோ?

## ஒருவனும் ஒருத்தியும்

மொழியில் ஏற்படும் பல வழக்குகளுக்கு நாம் காரணம் கண்டுபிடிக்க முடிவதில்லை. அதற்காக மரபை விட்டுவிடக் கூடாது. மொழி இடைத் தொடர்புக்கு (Communication) உரியது. அதை நம் விருப்பம் போல் மாற்றக்கூடாது. I Come. You Come போலவே சொன்னால் 'He come' தான். ஏன் 'He Comes' என இங்கு மட்டும் 'எஸ்'? அதுதான் மரபு. ஒருவன் என்பதன் பெண்பால் 'ஒருவள்' ஆகுமா? ஒருத்தி என்று தான் வரும். ஒருத்தன், ஒருவன் வரலாம். ஒருத்தி வரலாம். 'ஒருவள்' மட்டும் வரக்கூடாது. ஒருவனும் ஒருத்தியும் நெஞ்சங்கலப்பதே காதல் 'ஒருவனும் ஒருவளும்' என்று தமிழில் மரபு இல்லை. ஒருத்தி வேறு இருக்கும்போது 'ஒருவள்' எதற்கு?

ஒருவளுக்கு இடம் கொடுத்தால் இருவள், மூவளும் வந்து விடுவார்கள்.

## ஆருயிரும் அருஞ்செல்வமும்

உயிர் முதன்மொழி வந்தால் 'ஆர்' என்றும் உயிர்மெய் முதன்மொழி வந்தால் 'அரும்' என்றும் அடை சேர்ப்பது கூட இயல்பாக நம் வழக்கத்திலிருக்கிறது. 'ஆருயிரே' என்று அழைக்கும் நாம் ''அரும்பொருளே, அருஞ்செல்வமே' என்றுதான் சொல்லி அன்பைப் பொழிகிறோம். பின்னையவற்றில் ஆர் அடைமொழி பொருந்துவதில்லை. ஆர், அரு, அரிய; பேர், பெரு, பெரிய; கார், கரு, கரிய - இத்தகைய சொல் வடிவங்களை ஒப்பிட்டுப் பாருங்கள் அரிய, பெரிய, கரிய என்பனவும் அடைகளே என்றாலும் குறிப்புப்

பெயரெச்சங்கள் ஆகிவிடுவதால் பெரிய இன்பம், பெரிய செல்வம் என எப்படி வேண்டுமானாலும் ஆளலாம்.

ஆர், அரு, அரிய

| | | |
|---|---|---|
| | | அரிய இடர் |
| ஆர்+இடர்: ஆரிடர் - | அரும்பொருள் - | அரிய பொருள் |
| | | அரிய அஞர் |
| ஆர்+அஞர்: ஆரஞர்- | அருஞ்செல்வம் - | அரிய செல்வம் |
| | | அரிய உயிர் |
| ஆர்+உயிர்:ஆருயிர் - | அருந்துயர் - | அரிய துயர் |
| | | அரிய எயில் |
| ஆர்+எயில்:ஆரெயில் - | அருநலம்- | அரிய நலம் |

உயிர் முதன் மொழிவந்தால் 'ஆர்' மட்டுமே வருகிறது; மெய் முதன்மொழி வந்தால் (பொருள், செல்வம்) 'அரும்' மட்டுமே அடையாக இணைகிறது. 'அரிய' என்ற பெயரெச்சம் இரண்டிலும் அடையாகிறது.

பேர், பெரு

| | | |
|---|---|---|
| பேராசிரியர் | - | பெரும்பொருள் |
| பேராதரவு | - | பெருங்கடல் |
| பேருலகம் | - | பெருந்துணை |
| பேரணி | - | பெருந்தலைவர் |
| பேரிடர் | - | பெருவழித்துறை |
| பேரின்பம் | - | பெருஞ்செல்வம் |

இவ்வாறு எத்தனை தொடர்களை எண்ணிப் பார்த்தாலும் உயிர் முதன் மொழிக்கு, 'பேர்' அடையும், மெய் முதன் மொழிக்கு, 'பெரும்' அடையுமே வருகின்றன.

**பேரணியும் பெருந்தலைவரும்**

நாட்டில் இன்று அடிக்கடி பேரணிகள் நடைபெறுகின்றன.

பேர்+அணி. எதிரே உயிரெழுத்து வருவதால் 'பேரணி' என்றுதான் மக்கள் வழங்குகின்றார்கள். 'பெருந்தலைவர் காமராசர்' என்று அடிக்கடி கேள்விப் பட்டிருப்பீர்கள். 'த-லைவர்' என உயிர்மெய்யெழுத்து முதலில் வருவதால் 'பெரும்' என்ற அடையே இடம்பெறுகிறது. இரண்டையும் மாற்றிச் சொல்லிப்பாருங்கள். 'பெரு அணி', 'பேர் தலைவர்' என்று வழக்கத்தில் இல்லை. இப்படிச் சில பண்புகள் மொழியில் படிகின்றன. அவற்றை அடிக்கடி பயன்படுத்தினாலும் அப்பயன்பாட்டு நடைமுறை நம் கவனத்தில் படுவதில்லை, இப்படி பலவற்றை அவ்வப்போது நினைவுபடுத்திப் பார்த்தால் நமக்கு மொழிப்பழக்கம் ஏற்பட்டு, அம்மொழியோடு நட்புறவு வளரும்.

### சீரணியும் சீருடையும்

சீர்+அணி, சீர்+உடை, கூர்+உகிர். இச் சொல்லடைகள் உயிர் நீண்டு, 'ஓர்' போல அமைந்தவை. 'ஒரு' போல இவற்றிற்கு மாற்றுவடிவம் இல்லை. அதனால் உயிர்மெய் முதன் மொழிகளில் சீரிய பேச்சு, சீரிய கட்டடம், சிறந்த பேச்சு, சிறந்த கட்டடம் என்று கூறுகிறோம். சீரணி அரங்கைத் தெரிந்தவர்கட்கு இச் சீரணிச் சொல் அமைப்பும் தெரியலாம் தானே!

### ஓர், ஒரு

ஓர், ஒரு அடைமொழிகளும் முன்புபல நூற்றாண்டுகள் இவ்வாறே வழங்கி வந்துள்ளன. உயிர் முதன் மொழி வந்தால் ஓருடல், ஓருயிர், ஓரினம், ஓராடு என்றும், உயிர் மெய் முதன்மொழி வந்தால் ஒரு பகல், ஒரு சொல், ஒரு பொருள், ஒரு தாய் என்றும் பயன்பட்டுள்ளன. ஆனால் திருக்குறளில் 'ஓர் நோய்' (429, 848) என இரண்டு இடங்களில் காணப்படுகிறது. இங்கு 'ஒப்பற்ற' என்று பொருள் கொள்ள வேண்டும் என்பர். 'அதிர வருவதோர் நோய்' என்று குறள்வெண்பாவில் சீர்கள் பிரிந்து நிற்பதால் ஓர் முன்னைய சீருடன் ஒட்டிக் கொண்டிருக்கிறது. நற்றிணையிலும் என்பதோர் வாய்ச் சொல் (32) என்று இடம்பெறுகிறது. 'ஒப்பற்ற' என்று தான் இங்கும் உரையெழுதப்படுகிறது. இங்கும் 'ஓர்' முன்சீரில் ஒட்டி நிற்கிறது.

இவ்வாறே நூற்றுக்கணக்கான உதாரணங்களைப் பார்த்தால் ஓர் உண்மை புலனாகிறது. முன்பு பெரும்பாலும் 'ஓர்' உயிர் முதன் மொழிக்கும் 'ஒரு' உயிர்மெய் முதன் மொழிக்கும் பயன்பட்டன.

செய்யுளில் சீர் அமைப்பாலும், ஒப்பற்ற எனப் பொருள் படுவதாலும் 'ஓர் நோய்', 'ஓர் வாய்ச் சொல்' என இவ்வாறு வருமிடங்களும் உள்ளன. செய்யுள் நடை தனிவிதிகளுக்குட் படக் கூடியது.

### ஈருடல் ஓருயிர்

'ஈருடல் ஓருயிர்' என்னும் போதுதான் காதல் சங்கமம் கருத்துக்குப் புலப்படுகிறது. ஈரிதழ், ஈரேழுலகம், ஈரைங் குற்றம், ஈரிரண்டு, ஈர் ஐம்பதின்மர் (கவுரவர்கள் நூற்றுவர்) என உயிர் முதன் மொழிகளிலும் இருவகை, இருமொழி, இருபெருவேந்தர், இருநோக்கு, இருதாள் என மெய் முதன் மொழிகளிலும் வருகிற இடங்கள் பல சாதாரணமாக வழங்கப் படுகின்றன. (இரு நிலம் - பெரிய நிலம் (குறள்-990) என இரும்-'பெரிய' எனப் பொருள்படுமிடம் இதனின் வேறுபட்டதாகும். அங்கு எண் குறிப்பு இல்லை.) எனவே ஒரு, ஓர் போலவே இரு, ஈர் என்பனவும் தொடர்களில் வைத்து ஆளப்பட்டு வந்திருக்கின்றன.

இதனால் தொல்காப்பியர் ஒரு, இரு, என்று முதலிரண்டு எண்கள் மட்டும் உயிர் வருமொழி முதலாக வரும்போது, ஓர் ஈர் என மாறிக்கொள்ளுமென்று, வழக்கிலே கண்ட உதாரணங்கட்கு ஒரு வரன்முறையை வகுத்துச் சொன்னார்.

### மூவுலகும் முத்தமிழும்

இவ்வாறே ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். மூவாறு, முப்பொருள் என்றும் ஆறறி அந்தணர், ஆறாறு, ஆறைங்காதம், அறுசுவை, அறுகாற்பறவை, அறுதொழிலோர் என்றும் ஏழ் எயில், ஏழ் ஏழு; எழு பிறப்பு, எழு திணை என்றும் வழங்கும் சொல் தொடர்களும் பல உள்ளன. உயிர் வரும்போது, நிலைமொழி உயிர் நீளுதலும், மெய் வரும்போது நீளாதிருத்தலும் ஓரியல்பு என்று தெரிகிறது. ஆயினும் ஆறு தொழில், ஏழ்மணி என இவ்வை இலக்கியங்களிலேயே செய்யுள் நடைநோக்கி மாறியும் காணப்படுகின்றன. அதனால் எல்லாவற்றுக்கும் வரன்முறை அமையாது; அமைக்க இயலாது. அதனால் தான் முதல் இரண்டு எண்களுக்குச் சுட்டிக்காட்டியது போல், மற்ற எண்களுக்கு இவ்விதியைத் தொல்காப்பியர் வற்புறுத்தவில்லை. மூவகல், மூவுழக்கு, ஆறகல், ஆறுழக்கு என்று சில சொல் வழக்குகளை

மட்டும் கூறிப் பிறவற்றை அவரும் உரையாசிரியர்களும் குறிப்பிடாமல் விட்டுவிட்டார்கள்.

இப்போது மிக விரிவான உதாரணங்களால் இவை விளக்கப்பட இடமுளது. அன்று சூத்திரமாக எழுதியதால், பல உண்மைகள் முடக்கப்பட்டுவிட்டன. உரையாசிரியர்களுக்கும் முழுச் சுதந்திரம் கிடைக்கவில்லை. இன்று உதாரணங்கள், சான்றுகள், எடுத்துக்காட்டுகளை எண்ணி எண்ணிச் சொல்லிச் சொல்லி வரன்முறைக்குப் போக, புதிய முறை வாய்ப்பிருப்பதால் அதை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

### ஆங்கில மரபும் தமிழ் மரபும்

ஆங்கிலத்தில் உயிர் முதன் மொழிகளில் (An animal) எனவும், உயிர் மெய் முதல் மொழியில் A Book என்றும் பெரிதும் வரன்முறைப் படுத்தப்பட்டிருப்பதைக் காண்கின்றோம்.

தமிழில் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் என இரண்டு இருப்பதால், பேச்சில் நேரும் சிறு மாற்றங்கள் எழுத்தைப் பாதிக்கின்றன. செய்யுளில் யாப்பு வடிவத்தால் சில மாற்றங்கள் அங்கீகரிக்கப்பட்டு, அவை பொதுத் தமிழைப் பாதிக்குமிடங்களும் உள்ளன.

மொழியின் வழக்காறுகள், மரபுகள் தாமாக அமைகின்றன. யாரும் கட்டாயப்படுத்தி, விதித்து, ஆணையிட்டு நடப்பதில்லை. எந்த எழுத்திற்கும் பேச்சிற்கும் கற்றறிந்தவர்களின் அங்கீகாரம் - இசைவு பெருமை சேர்க்கும் என்பது உண்மையே. இவற்றுக்கெல்லாம் துணையாக அடிப்படையாக நாம் செய்யக்கூடியது மொழியோடு பழக வேண்டும்; பிறரையும் பழகவிட வேண்டும். ஆங்கிலத்தில் நடைமுறைப் பழக்கம் அதிகம்; அதனால் அங்கு 'மாறி வழங்குதல்' எளிதில் நேர்வதில்லை.

புதிய உதாரணங்களை ஆயிரக் கணக்கில் குவிப்பதன் மூலமே மாணவர்களை மொழியுடன் பழக்க முடியும். நம் தொல்காப்பிய, நன்னூல்களில் காட்டப்படும் உதாரணங்கள் எல்லாம் முற்கால, இடைக்காலச் சான்றுகள். இக்கால உதாரணங்களே இல்லாததால், அதைப் படிக்கும் மாணவர்கள் தமக்கும் இந்த இலக்கணத்திற்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை என்று, பள்ளிப் படிப்பின் போதே முடிவு கட்டி விடுகிறார்கள். இன்றைய மொழி அறிவியலைக் கற்ற

மொழியியலாருக்கும் ஆக்கப் பணிகளில் நாட்டமே இல்லை. ஏனைய மரபுவழி இலக்கணிகளையும் புலவர்களையும் கேலிபேசத் தயங்காத அவர்களும் 'பழைய குட்டையில் ஊறியவர்களாகவே' காட்சி தருகிறார்கள் என்றால், கொஞ்சமேனும் 'உறைக்கும்' என்றுதான் அவ்வாறு குறிப்பிடப்படுகிறது.

பிறகு, எப்போதுதான் தமிழை நாம் உருப்படுத்துவது? உயர்வு தாழ்வு பேசி உழலாது, இக்காலத் தமிழிற்கு இலக்கணம் வகுக்க முன்வரவேண்டும்.

### கருப்பஞ் சாறும் இருப்புப் பாதையும்

'சிலம்பினைக் கருப் பொருளாகக் கொண்டு இயற்றப்பட்ட காப்பியத்தைச் சிலம்பதிகாரம் என்று சொல்லாமல் சிலப்பதிகாரம் எனப்படுவது ஏன்? கரும்பிலிருந்து எடுக்கப்படுகிறது சாறு. அதைக் கரும்பஞ் சாறு என்னாமல் கருப்பஞ்சாறு என்றே கூறுகின்றனர். இரும்புத் தண்டவாளங்களால் போடப்பட்ட பாதையை இருப்புப் பாதை என்றது ஏன்? இரும்புச் சட்டி என்னாமல் இருப்புச் சட்டி என்றே கூறுகிறோமல்லவா? இவையும் பேச்சு வழக்கில் தான் மிகுந்து காணப்பட்டு, இலக்கிய வழக்கிலும் ஏற்கப்பட்டுள்ளன. அதற்காக, வலித்தல் விகாரம் என்று இலக்கணத்திலும் ஒரு விதி கூறி வைத்தனர். இப்படி மாறுவதற்கு இது சமாதானமா அல்லது மாறலாம் என்ற விதியா என்பது ஆராய்ச்சிக்குரியது. எப்படிப் பார்த்தாலும் சிலம்பதிகாரம் என்றால் சிறப்பாக இல்லை; 'ம்' என்ற மெல்லெழுத்தை 'ப்' என்ற வல்லெழுத்தாக மாற்றி உச்சரிக்கும் போதுதான் சிலப்பதிகாரம் எளிதாகப் பிறக்கிறது. இங்ஙனம் உச்சரிப்பு இயைபு கருதி ஓரளவு நெறிமுறை சுட்டுமாறு மாறுவனவற்றை இலக்கணத்தில் சேர்த்துக் கொண்டே வந்துள்ளார்கள்.

### மாமல்லபுரம் — பழைய பெயரும் புதிய பெயரும்

மகேந்திரப் போத்தரையனின் மகன் நரசிம்மவர்மன், மாமல்லன் எனப் போற்றப்பட்டான். புறநானூற்றில் ஆமூர் மல்லனைப் பற்றிய குறிப்பு உளது. அதுபோல் மற்போரிலும் பெரு வீரனாக நரசிம்மன் விளங்கியிருக்கக்கூடும். இம் மாமல்லன் பெயராலேயே, இக்கடற்கரை நகரம் முன்பு மல்லை, மாமல்லை என்றெல்லாம் அழைக்கப்பட்டது. திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் 'கலங்கள்' இயங்கும்

கடல் மல்லை' (2,6) பற்றிப் பாடியுள்ளார். இம் மல்லையே பின்பு மாமல்லபுரம் என வழங்கலாயிற்று. இக்காலத்தில் இங்குள்ள சிற்பங்களை வைத்து எழுந்த புராணக் கதையினடிப்படையில் உலக வழக்கில் 'மகாபலிபுரம்' எனக் கூறப்படுகிறது. எனினும் மாமல்லபுரம் அல்லது 'மாமல்லை' என்பதே இதன் தொல் பெயர் என அறிதல் வேண்டும்.

### திருக்கடவூர் – பழைய பெயரும் மாறிய பெயரும்

பேச்சு வழக்கில் சொற்களைச் சிதைத்து வழங்குவது போலவே, நாம் பல அருமையான ஊர்ப் பெயர்களையும் சிதைத்து வழங்குகிறோம். மயிலாடுதுறை அருகேயுள்ள திருக்கடவூர், மார்க்கண்டேயனை எமனிடமிருந்து சிவபெருமான் காப்பாற்றிய தலமென்று போற்றப்படுகிறது. ஆனால் அவ்வூரை இன்று 'திருக்கடையூர்' ஆக்கிவிட்டார்கள். கடைகள் நிறைந்த ஊரா; மனிதன் கடைசி காலத்தில் போகுமிடத்தைக் குறிக்கும் ஊரா என்று ஆராயும்படி ஆகிவிட்டது. ஆனால் உண்மை அதுவன்று. திருக்கடவூர் என்பதே அதன் பெயர். தேவாரம் பாடிய சம்பந்தர், அப்பர். சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பட்ட தலமாகிய இதனைத் திருக் கடவூர் என அவர்கள் பாடியவாறே ஏற்றல் வேண்டும். 'கரிதரு காலனைச் சாடினானும் கடவூர்தனுள்' வீரட்டானத்து அரனே, என்பது சம்பந்தர் திருவாக்கு. யமவாதனையைக் கடத்தற்கு உதவும் ஊர் என்று இதற்கொரு காரணம் கூறுவர். கடவுதல், கடத்தல் என்பன செலுத்துதல், கடத்தல், வெற்றி கொள்ளுதல் எனப் பொருள்படும். அவ்வகையில் காலனையும் கடத்தற்குரிய ஊர் எனச் சிறப்பித்து அழைக்கப்பட்டிருக்கக் கூடும். எனவே திருக்கடவூர் எனப் பொருந்திய வடிவத்தையே ஆள வேண்டும். அதைக் 'கடையூராக்குவது' எமனைச் சென்று அடைவது போலத் தொனிக்கிறது.

### புல்லும் கல்லும்

புல்லின் பன்மை புற்கள், கல்லின் பன்மை கற்கள். நெடிலின் பின் வரும்போது தான் கால்கள், வேல்கள், நூல்கள், சால்கள் என்கிறோம். ஆனால், குறிலின் பின் வரும்போது புல்+கள்=புற்கள், கல்+கள்=கற்கள், பல்+கள்=பற்கள் என்கிறோம். கள் விகுதி பிற்காலத்தது. பழைய சான்றுகள் அதனால் ஏதும்

கிடைக்கப்பெறவில்லை. மரபு தான் நமக்கு வழிகாட்டி. காற்கள், நூற்கள் என்று தனி ஒருவர் அடம்பிடிக்க இயலாது. சேல்கள் போன்ற கண்களையுடைய பெண்களைச் சேற்கள் போலென அழவைக்கலாமா? மொழியில் அறிவை விட, மரபுக்கே ஆட்சி அதிகம். அந்த மரபும் ஏதேனும் காரணம் பற்றியே தோன்றியிருக்கும். காரணம் தெரியாமலிருக்கலாம்; அல்லது நமக்குச் சொல்லத் தெரியாதிருக்கலாம்.

### தந்தையும் தாயும்

தமிழில் பெற்றவனைக் குறிக்கத் 'தந்தை' என்ற சொல்லை வழங்குகிறோம். "எங்கள் தந்தையர் நாடு" என்புது பாரதிவாக்கு. அவரே "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய நாடு" என்றும் பாடியுள்ளார். தன்மையில் எந்தை என்றும் முன்னிலையில் நுந்தை என்றும் படர்க்கையில் மட்டுமே தந்தை என்றும் மூன்று இடங்களுக்கும் தனித்தனியே வழங்கிய காலங்கள் உண்டு. இன்று என் தந்தை, உன் தந்தை, தன் தந்தை என்று தந்தையைப் பொதுவாக்கியே வழங்குகிறோம். யாய் (என் தாய்), ஞாய் (உன் தாய்), தாய் (அவன்தாய்) எனத் தனித்தனியே வழங்கிய நிலை மாறி, தாய் பொதுவாகியிருப்பதும் இதுபோன்ற மாற்றமேயாகும். "யாயும் ஞாயும் (என் தாயும் உன் தாயும்) யாராகியரோ, எந்தையும் நுந்தையும் (என் தந்தையும் உன் தந்தையும்) எம்முறைக் கேளிர்?" என்ற குறுந்தொகை வழக்கு (4) இன்று மாறியிருப்பதை நாம் தெரிந்து வைப்பது நல்லது தானே?

### பைந்தமிழும் பலவகைத்தமிழும்

தமிழின் பலதுறைப் பயன்பாடுபற்றி நன்கு சிந்திக்க வேண்டும். நாம் மொழியைப் பயன்படுத்துவதற்கான துறைகள் நாள்தோறும் வளர்ந்த வண்ணம் உள்ளன. அறிவியல் தமிழ், சட்டத் தமிழ், கதை இலக்கியத் தமிழ், இதழியல் தமிழ், கலைத் தமிழ், தொழில் துறைத் தமிழ் என இனங்காணுமளவு இவை கிளை பிரிந்து போகின்றன. "கணினித் தமிழ்" என்று ஒன்றை வளர்க்க வேண்டிய சூழல் வந்து கொண்டிருக்கிறது.

ஆங்கிலத்தில் இயற்பியல், வேதியியல் எனவும் பொருளியல், வணிகவியல் எனவும் இவ்வாறு ஒவ்வொரு துறைக்கும் தனித்தனிக் கலைச்சொல் அகராதிகள் உண்டு. அறிவியலுக்கு ஆங்கிலம்,

சட்டத்திற்கு ஆங்கிலம் (English for Science, English for Law) என இவ்வாறு அவ்வத்துறைக்கேற்ப ஆங்கில மொழி நெளிவு சுளிவுகளுடன் வளர்க்கப்பட்டு வந்துள்ள வரலாறு வளருந்தமிழுக்கு வழிகாட்டக் கூடியதே.

## துறைச் சொற்கள், கலைச் சொற்கள்

இலக்கியத் தமிழும் இலக்கணத் தமிழும் மட்டும் வளர்ந்த காலங்கள் உண்டு. தமிழில் இலக்கணக் கலைச் சொற்கள் மிகுதி. தமிழைக் கவிதை மொழி என்று கூறக்கூடிய அளவு, படைப்பிலக்கியப் பாங்கு அதில் படிந்துள்ளது. ஆனால் அவை மட்டும் இன்று போதவில்லை.

ஒருமுறை மொழியறிஞர் ஞா. தேவநேயப் பாவாணரிடம் ஓர் அன்பர் "ஐயா காக்கை விடுவதும் எச்சம் தானே" என்று சிரித்தார். அன்று பாவாணர் திருக்குறளில் எச்சம் என்ற சொல்லாட்சி பற்றிப் பேச இருந்த சமயம் அது. பாவாணரிடம் வினா எழுப்பியவர் ஒரு நீதிபதி; அடுத்து நின்றவர் ஒரு வணிகர்; மற்றொருவர் மருத்துவர், "ஆமாம் ஆங்கிலத்திற்போல 'Case' என்ற சொல்லை எடுத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் வந்தால் (நீதிபதி) ஒரு பொருள்; இவரிடம் போனால் (மருத்துவர்) ஒரு பொருள்; அவரிடம் சென்றால் (வணிகர்) ஒரு பொருள். இல்லையா?" என அவர் எதிர்வினா விடுத்ததும் கேட்டவர் அமைதியானார்.

மொழியின் பலதுறைப் பயன்பாடு பெருகப் பெருகச் சொற்கள் பெருகுதலுக்கும் சொல்லின் பொருட்பரப்பு மிகுவதற்கும் இது நல்ல எடுத்துக்காட்டாகும்.

*"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி*
*ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று; ஏனையது*
*தன்னேரிலாத தமிழ்"*

# கற்கும் நெறிமுறைகள்

மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர் வளர்த்த தனித்தமிழியக்கமே நம் குறிக்கோள். இந்நூல் அன்றாடம் பொதுமக்கள், பல துறையினர், அறிவியலார் ஆகியோர் தமிழை ஆளும் திறமையை வளர்க்கும் நோக்கில் எழுதப்பட்டது.

சிலவற்றில் கருத்து வேறுபாடு வரலாம். படிக்கப் படிக்க, எழுத எழுத எல்லோரும் மேன்மேலும் தூய நெறி, செறிவு, இனிமை நோக்கி வளர்வர்.

## கட்டுரையாக எழுதிப் பழகுதல்

1. தமிழின் அடிப்படை இலக்கணம் - விளக்குக.
2. மொழியுடன் பழகுதல் - எவ்வாறு?
3. சொற்களுக்கு எவ்வாறு பொருள் காண்பது? சில எடுத்துக் காட்டுக்கள் தருக.
4. சொற்சுவை - தமிழில் மரபுத் தொடர்கள் - காட்டுக்கள் தந்து விளக்குக.
5. தமிழ்ச் சொற்களின் சொல் நுட்பத்தை ஆராய்க.
6. நல்ல தமிழில் எழுதுவோம் - பிழைகளைக் காட்டித் திருத்தமுற எழுதுவதை விளக்குக.
7. இன்றைய நடைமுறைத் தமிழில், ஐயம் ஏற்படும் இடங்கள் யாவை? அவற்றின் திருந்திய வடிவம் யாது?
8. தமிழில் பிறமொழிச் சொற்களை எவ்வெவ்வாறு எடுத்தாளலாம், விளக்குக.
9. தமிழின் தனித்தன்மைகளை விளக்குக.
10. தமிழின் இருவகை வழக்குப் பற்றியும் மரபு பற்றியும் எழுதுக.

## குறுவினாக்களுக்கு விடையெழுதிப் பழகுக :

1. ஒவ்வொரு மொழிக்கும் தனி இயல்பு உண்டு - இரண்டு காட்டுக்கள் தருக.
2. எத்தனை, எத்துணை - பொருள் வேறுபாடு என்ன?

3. ஒரே சொல்லுக்கு எதிரெதிரான இருபொருள் - உதாரணம் காட்டி விளக்குக.

4. மட்டந்தட்டுவதும் பூசிமெழுகுவதும் யார் வேலை? மரபுத் தொடர்ப் பொருளை விளக்குக?

5. சங்கீதம் படிக்காத இசைக் கலைஞர்கள் - விளக்குக.

6. குறுக்குச்சால் ஓட்டாதீர் - ஏன்? யாருக்குச் சொன்னது இது?

7. பதற்றமா - பதட்டமா, விளக்குக.

8. தப்பு, தவறு, பிழை - விளக்குக.

9. மினுக்கிடுதல் - பற்றி. ஆராய்க.

10. துப்பு - துலக்கப்படுகிறது - விளக்குக.

11. புலன் விசாரிக்கப்படுகிறது - விளக்குக.

12. நாட்களா, நாள்களா - ஆராய்க.

13. காஞ்சிபுரம், நாகரிகம், காந்தியம் - இதில் தவறுநேர்வது எவ்வாறு? திருந்திய வடிவம் எது?

14. தமிழக அரசு, தமிழ்நாட்டரசு - வேறுபாடு காட்டுக.

15. நினைவு கூர்தல் வேறு; நினைவு கூறுதல் வேறு - விளக்குக.

16. ஆத்தி சூடி, அங்கயற் கண்ணி - இவற்றில் நேரும் தவறுகள் யாவை?

17. மனதிலா? மனத்திலா? - ஏன்?

18. பழனியா? பழநியா? - ஏன்?

19. நம்மைப் பொறுத்தவரை; பொருத்தவரை - எது சரியானது?

20. சிவப்பும் கருப்பும் பற்றி நன்கு ஆராய்க. எது சரியான சொல்?

21. கறுப்பு, சிகப்பு, - வழங்குவது ஏன்?

22. நடத்துநர், இயக்குநர் சரியா?
நடத்துனர், இயக்குனர் சரியா?
ஆராய்க.

23. கூறுகெட்டவனை - விளக்குக?

24. சிலைத்திறப்பு - தவறு, ஏன்?

25. ஆகிய, முதலிய வேறுபாடு காட்டுக.

26. மிசியோனாரிகள் - விளக்குக.

27. அவசியம் - அவசியமா? ஏன்?

28. ஆஞ்ஜநேயர் - தவறு. ஏன்?

29. அனுபவமா? அநுபவமா? ஏன் என விளக்குக.

30. காரன், காரி - ஆராய்க.

31. ஆங்கிலத் தமிழ் - விளக்குக.

32. அறிக்கை, அறிவிக்கை - விளக்குக.

33. தனியே நிற்கும் எழுத்து, சொல்லின் இடையே வரும் எழுத்து - வேறுபாடு என்ன?

34. தமிழில் தனிமெய் மொழிக்கு முதலில் வருமா? காட்டுத் தந்து விளக்குக.

35. உயிர்மொய் - மொழி முதலாக வரும் போது, முதலில் நிற்கும் எழுத்து எது?

36. தமிழில் எழுத்து முப்பதா? முப்பத்து ஒன்றா? 247 எழுத்தா? - எது சரி?

37. இலக்கணம் மொழிக்கா? வாழ்க்கைக்கா? ஆராய்க.

38. கைம்மாறு மெய்ம்மை, பொய்ம்மை - விளக்குக.

39. பத்திரம் எழுதுவதில் வேற்றுமை விளக்குக.

40. பேருந்து நிலையத்தில் வேற்றுமை விளக்குக.

41. என் மகனா? எனக்கு மகனா? எனது மகனா? - ஆராய்க.

42. திருவளர் செல்வன், திருவளர்ச்செல்வன் இவ்வாறான சொற்களை எழுதி விளக்குக.

43. பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல்- இரண்டுக்கும் காட்டுக்கள் தருக.

44. பிரித்து எழுதக் கூடாத இடங்கள் எவை?

45. பிரித்து எழுதினால் தெளிவு தரும் இடங்கள் எவை?

46. உலக வழக்கிலும் அருஞ்சொற்கள் பயன்படுகின்றன - சில உதாரணங்கள் காட்டுக.

47. ரொம்பி விட்டது, ராவுகின்றான், மகிந்து கொட்டுது - விளக்குக.

48. ஒரு, ஓர் - இவை பயன்படும் இடங்களை ஆராய்க

49. சில தவறான பிழைகளைச் சுட்டிக்காட்டி அவற்றின் திருந்திய வடிவங்களைத் தருக.

50. தமிழுக்கே உரிய தனிமரபுகள் பலவுள - இரண்டு மூன்று காட்டுக்கள் தந்து விளக்குக.

இவை போன்ற வினாக்களுக்கு, வீட்டில் புத்தகத்தைப் பார்த்து, விடை தேடி, தம் சொந்தக் கையெழுத்தில் எழுதி, வரச்செய்க. அது மிகவும் பயன்படும்.

மாதிரிக்காகத் தரப்பட்ட இவ்வினாக்களைப்போல, மேலும் பல வினாக்களைக் கேட்டு, விடை கூறப்பழக்குக.

செந்தமிழும் மனப்பழக்கமாக இவை பயன்படும்.!

# நடைமுறைப் பயன்பாட்டுத் தமிழ் இலக்கணம்

**பிழையற்ற, நல்ல தமிழில் எழுத எல்லோர்க்கும் பயன்படும் நூல்**

*சிறுகதை போல் படிக்க வைக்கும் செந்தமிழை வளர்க்க வைக்கும்!*

- பள்ளி இறுதிவரை படித்து முடித்தவர்களுக்கு தமிழ் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணம் பற்றிய அடிப்படைகள் கற்பிக்கப்பட்டு விடுகின்றன.
- மேலே தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படிப்பவர்களுக்கு நன்னூல் முதலான பாட நூல்களும் தொல்காப்பியமும் கற்பிக்கப் படுகின்றன.
- பிறகலையியல், அறிவியல் துறைகளில் இளநிலை (B.A., B.Sc., B.Com.,) பயிலும் மாணவர்களுக்கு, நடைமுறைப் பயன்பாட்டுத் தமிழைக் கற்பிப்பதே பயனுடையதாகும்.
- அத்தகைய பிற துறைகளில் பயிலும் அனைத்து மாணவர்களும், கணினியில் அச்சிடுவோரும், தமிழறிஞராக விரும்பும் பொது ஆர்வலர்களும் இந் நூலைப் படித்தால் இலக்கணம் இனிமையானது, எளிமையானது, தேவையானது என்பதை உணர்வர்.
- பிழையின்றி எழுதும் மனப்பழக்கத்தை உண்டாக்கும் இந்நூலைத் தமிழ்ப் படைப்பாளிகளும் படித்தால், எதிர் காலத்தில் பிழையற்ற, நல்ல தமிழில் எழுதும் நெறி முறைகள் வளரும்.

அமிழ்தினும் இனிய நம் தமிழின் இளமை காக்கப் படும்!

மீனாட்சி புத்தக நிலையம்